Tamil Nadu

Legislative Council

Debates

Official Report

1986

Vol: 222

No: 3-5

D
V211,321N86
N86.222.5-6.
143547

1031/88

234

# தமிழ் நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# செயலக வெளியீடு
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 2, 1986-தொகுதி 222 எண் 3.
Wednesday, 2nd April 1986-Volume 222 No. 3.

சட்டமன்ற மேலவைச் செயலகம்.
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரூ. 2.00]

பொருளடக்கம்.


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் .. .. .. | 193—221 |
| 2. தகவல் கோரல்— | |
| மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சி சுந்தரம் அவர்கள் பேசிய கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் கூறியதாக "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையில் பிரசுரித்தது குறித்து .. | 1— |
| 3. அறிவிப்பு— | |
| அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து .. | 222—224 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| கடலூர் மௌலானா அபுல் கலாம் ஆசாத் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிலும் 26 மாணவர்கள் தேர்வு எழுத முடியாத நிலை குறித்து .. .. .. .. .. | 225—226 |
| 5 1986–87-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி .. .. .. .. | 226—296 |
| 6 அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. | 297—298 |

143547
V211,32 IN86
N74.222-3-5

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

புதன்கிழமை, 1986 ஏப்ரல் 2.
பங்குனி 19, குரோதன, திருவள்ளுவராண்டு 2017.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10.00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள் 139 மற்றும் 140 முதலில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

### நவீன அரிசி ஆலைகள்.

* 139 வினா—திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) தமிழகத்தில் உள்ள நவீன அரிசி ஆலைகளை மூட, இந்திய உணவு கார்ப்பரேஷன் எண்ணியுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அவற்றை தமிழக அரசு ஏற்று நடத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் இந்த ஆலைகளை ஏற்று நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மைய அரசு என்ன காரணத்திற்காக இப்படிப்பட்ட ஒரு திட்டம் கொண்டு வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, இந்தியா முழுவதும் உள்ள இந்திய உணவுக் கழகத்தினர் (Food Co-operation of India) மூலம் நடத்தப்படுகின்ற நவீன அரிசி ஆலைகள் (Modern rice mills) அத்தனையும் அவர்கள் விற்க விரும்புவதாக ஓர் அறிவிப்பு வந்தது. அதற்கு என்ன காரணங்கள் என்று மைய அரசு வெளியே சொல்ல விரும்பவில்லை. நாமும் அதுபற்றிக் கேட்கவில்லை. அது மைய அரசுக்குத் தான் தெரியும். ஆனால் மத்திய அரசினர் இப்படி விற்க விரும்புகிறார்கள் என்று தெரிந்தவுடன், நமக்கு அதிகமான ஆலைகள் தேவைப்படுகிற காரணத்தினால், நாம் அவற்றை வாங்க முன்வந்திருக்கிறோம். இப்போது நாம் நம் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் (Civil Supplies Corporation) மூலம் 13 நவீன அரிசி ஆலைகளை நடத்திக்கொண்டு வருகிறோம். மேலும் நமக்கு அதிக ஆலைகள் தேவைப்பட்டதால், நாம் அவற்றைப் புதிதாக வாங்குவதைவிட இவைகளை வாங்கினால் இலாபகரமாக இருக்கும் என்ற அடிப்படையில் இவ்வாறு முன்வந்திருக்கிறோம். அதன் அடிப்படையில் நம் அரசு அதிகாரிகள் மைய அரசு அதிகாரிகளோடு பேசிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் அவற்றின் விலை மற்றும் விவரங்களைப் பொறுத்து பேச்சுவார்த்தை முடியவில்லை. பேச்சுவார்த்தை அதிகாரிகள் மட்டத்திலே நடந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிற இதே சமயத்தில் இந்திய உணவுக் கழகத்தில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் எல்லாம், இவற்றை தமிழக அரசு எடுத்துக்கொண்டால், தாங்கள் வேறு மாநிலத்திற்கு மாற்றப்படும் சூழ்நிலை ஏற்படும் என்று கருதி, சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட பணியாளர்கள்—தஞ்சாவூர் மற்றும் பல இடங்களில் பணியாற்றுபவர்கள்—மேற்படி ஆலைகளை மாநில அரசு எடுக்கக் கூடாது என்றும், மைய அரசே இவற்றைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்றும் 'ரெப்ரசன்டேஷன்' கொடுத்திருக்கிறார்கள். இந்த அளவிலே பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். டி. சித்தாபதி :** தலைவர் அவர்களே, விலை பற்றி பேச்சுவார்த்தை நடைபெறுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எந்த விலைக்கு நவீன அரிசி ஆலைகளை விற்பதாக மைய அரசு அறிவித்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, மைய அரசு விலை ஏதும் நிர்ணயித்துச் சொல்லவில்லை. அவர்கள் விற்க விரும்புகிறார்கள் என்று நமக்குத் தெரிய வந்தது. நாம் அவற்றை வாங்கலாம் என்று முன் வந்தோம். நாம் அவற்றை அவற்றின் 'புக் வேல்யு' விலைக்கு வாங்கலாம்





ன்று முடிவு செய்தோம். ஆனால் அதற்கு மைய அரசு ஒத்துக்கொள்ளவில்லை. அதனால் இன்னும் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, மைய அரசு நவீன அரிசி ஆலைகளை மூடுவதற்கு அல்லது விற்பதற்கு முன்வந்திருப்பதற்குக் காரணம், அந்த அரிசி ஆலைகள் நட்டத்தில் இயங்குவதால் இருக்குமா? அவ்வாறு நட்டம் ஏற்பட்டு மைய அரசு மூடவோ அல்லது விற்கவோ முன்வரும்போது அவற்றை நம்முடைய அரசு வாங்குவது சரியாக இருக்குமா? நட்டத்தில் ஓடும் அவற்றை வாங்கி இலாபகரமாக நடத்த நம் அரசு முயற்சிக்கிறதா? கூடுமானவரையில் அவற்றை மைய அரசே நடத்துவதற்கு, ஊழியர் நலன் கருதி இந்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா? இவ்வாறு நாமும் நட்டம் அடையாமல் இருக்கவும், இப்போது அங்கே பணியாற்றும் ஊழியர் நலன் கருதியும் அரசு இந்நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, இந்திய நாடு முழுவதும் உள்ள நவீன அரிசி ஆலைகளை மைய அரசு விற்பதற்கு முடிவு எடுத்திருக்கிறது. அதற்குக் காரணம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போலவும் இருக்கலாம்; அல்லது வேறு விதமான காரணமாகவும் இருக்கலாம். ஆனால் நம்மைப் பொறுத்தவரையில், அவற்றை நாம் அவற்றின் 'புக் வேல்யூ'-விற்கே வாங்கினால், அவற்றை இலாபகரமாக நடத்த முடியும் என்ற காரணத்தினால்தான், அவற்றை வாங்க முன்வந்திருக்கிறோம். அவர்கள் நட்டத்தில் நடத்துவதால், அவர்கள் விற்க முன்வந்து, நாமும் அவற்றை வாங்கி நட்டத்திலேயே நடத்துவதற்காக நாம் அவற்றை வாங்க முற்படவில்லை. வாங்கினால் இலாபம் கிடைக்கும் என்பதனால்தான் 'புக்-வேல்யு'-விற்கு நாம் அவற்றைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவர் அவர்களே, நாள் ஒன்றுக்கு 30 டன்னுக்கு மேல் அரைக்கப்படுகிற ஒரு கோதுமை அறவை ஆலையை தமிழ்நாட்டில் துவங்க அரசு முனைந்து கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-05)

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** தலைவரவர்களே, இந்தக் கேள்விக்கும், மூலக் கேள்விக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பத்திரிக்கையில் வந்த செய்தியைப் பார்த்துக் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். 'கோதுமை மாவு ஆலைகளை'

ஆரம்பிக்கலாமென்று மத்திய அரசு முடிவு செய்து பத்திரிக்கையில் விளம்பர செய்திருக்கிறது. அதற்கு பலபேர் மனு செய்திருக்கிறார்கள். நாம் பரிந்துரை தான் செய்யலாம். அவர்களுக்கு மத்திய அரசுதான் அனுமதி தர வேண்டும் அதுபற்றி தனியாகக் கேள்வி கேட்டால், பதில் அளிக்கப்படும்.

### உணவகங்கள்.

* 140 வினா—திரு. சி. இராமலிங்கம் (டாக்டர் இரா. சனார்த்தனம் சார்பில்): மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) உணவகங்களில், சிற்றுண்டிகள் அரசு அறிவித்துள்ள விலைகளில் வழங்கப்பட, எடுத்துள்ள நடவடிக்கை யாது?

(இ) அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள விலைகளில் வழங்காத உணவகங்கள் மீது, அரசு, 1-9-1985 வரை, எடுத்துள்ள நடவடிக்கை யாது?

(உ) மாதிரி உணவகங்களை நடத்த அரசு திட்டமிட்டுள்ளதா?

(எ) ஆம் எனில், சமையல்கலை படித்த மாணவர்கள், அவ்வுணவகங்களை நடத்த, அரசு ஊக்குவிக்குமா?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** (அ) மற்றும் (இ)—ஓட்டல் பண்டங்களின் விலையுயர்வு குறித்து உணவு அமைச்சர் என்கிற முறையில் நான் தலைமைச் செயலகத்தில் ஓட்டல் உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகளோடு பேச்சுவார்த்தை நடத்தினேன். அப்பேச்சு வார்த்தைகளின் பலனாக சென்னை நகரத்தில் சாதாரணமாக மக்கள் விரும்பிச் சாப்பிடுகிற, அவர்களுக்குத் தேவையாக இருக்கிற இட்லி, சாதா தோசை, காபி, டீ, அளவுச் சாப்பாடு போன்ற 5 உணவுப் பண்டங்களுக்கு அரசு அறிவித்துள்ள விலைகளில் விற்பதற்கு ஓட்டல் உரிமையாளர்கள் சங்கம் அதனுடைய பிரதிநிதிகள் தாமாக முன்வந்து ஒப்புக்கொண்டனர். மாவட்டங்களில் இவ்வாறு சென்னையில் விலை நிர்ணயம் செய்தது போல் அந்தந்த மாவட்டங்களில் இருக்கிற விலைவாசிக்கு ஏற்றவாறு விலைகளை நிர்ணயம் செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். அந்தந்த மாவட்டங்களில் இருக்கிற ஓட்டல் உரிமையாளர் சங்கங்களிடையே அந்தந்த மாவட்டத்தில் இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி சென்னையில் விலை



நிர்ணயம் செய்தது போல் விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். எனவே இப்படி எல்லா மாவட்டங்களிலும் விலை நிர்ணயம் இந்த ஐந்து வகையான உணவுப் பண்டங்களுக்குச் செய்யப்பட்டிருக்கின்றது.

(உ) மாதிரி உணவகங்கள் நடத்தும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(எ) இக் கேள்விக்கு இடமில்லை.

### *Diesel Generators.*

* 131 *Q.*—Thiru K. SUBBU: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the TANCEM has proposed to purchase Diesel Generators, to combat power cut; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) டான்செம், அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு மூன்றும் மற்றும் ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலைக்கு இரண்டும் என்ற வீதத்தில் ஐந்து டீசல் ஜெனரேட்டர் இயந்திரங்களை நிறுவ எண்ணியுள்ளது.

**திரு. க. சுப்பு:** தலைவரவர்களே, டீசல் ஜெனரேட்டர் இயந்திரங்களை வாங்குவதற்கு ஏதாவது கமிட்டி போடப்பட்டிருக்கிறதா? அவைகள் வாங்குவதற்கு விவரங்கள் ஏதாவது இருக்கின்றனவா? அவைகளை எங்கிருந்து வாங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது? அவைகளை வாங்க 'ஓபன் டெண்டர்' கேட்கப்பட்டிருக்கிறதா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, கமிட்டி போடப்பட்டதாகத் தெரியவில்லை. 'ஓபன் டெண்டர்' கேட்டுத்தான் வாங்குகிறார்கள். ஏற்கெனவே பல 2500 கே.வி. டீசல் ஜெனரேட்டர்கள் இறக்குமதி செய்யப்பட்டு நிறுவப்பட்டு வருகின்றன. வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட ஒரு இயந்திரம் சமீபத்தில் அரியலூரில் வேலையை ஆரம்பித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு:** தலைவரவர்களே, அவைகள் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்டன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவைகள் எந்த நாட்டிலிருந்து எந்தக் கம்பெனியிலிருந்து, என்ன விலைக்கு வாங்கப்பட்டது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, அதுபற்றி தனிக் கேள்வி போட்டால், விடையளிக்கப்படும்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** அந்த ஒரு சர்க்கரை ஆலை மட்டுமே மத்திய அரசால் நடத்தப்பட்டு வந்தது. இதைக் குறித்துத் தனியாகக் கேள்வி கேட்டால், விடை அளிப்பதற்கு நலமாக இருக்கும்.

### அறிஞர் அண்ணா ஆய்வு மையம்.

* 133. *வினா*—**திரு. அ. ப. சிவராமன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னைப் பல்கலைக் கழகத்தில், அறிஞர் அண்ணா ஆய்வு மையம் துவக்கும் பணி, எந்த நிலையில் உள்ளது ?

(இ) இந்த மையம் துவக்கப்பட, யார் யாரிடமிருந்து, எவ்வளவு நிதி உதவிகள் பெறப்பட்டுள்ளன ?

(உ) இந்த மையம் ஆற்ற இருக்கும் பணிகள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ), (இ) மற்றும் (உ) விவர அறிக்கை ஒன்று @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. அ. ப. சிவராமன் :** சென்னைப் பல்கலைக் கழகம் அண்ணா ஆய்வு மையம் துவங்க எந்தத் தேதியில் இந்தப் பெருந்தொகையை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தந்தது என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதுபற்றிய விவரம் இங்கே இல்லை. ஒரு விழாவின்போது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் மூலமாக அந்தப் பணம் தரப்பட்டது.

**திரு. அ. ப. சிவராமன் :** அதுபற்றிய விவரம் இல்லை என்ற பதிலைக் கேட்டு, நான் மிகவும் வருத்தப்படுகிறேன். ஏறத்தாழ 1½ ஆண்டுகளுக்கு முன்பாக இந்த வினா எழுப்பப்பட்டது. இப்போது தரப்பட்டுள்ள பதிலில் "மேற்கண்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுவதற்காக மையத்தை நிறுவும் பொருட்டு, ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோரை விரைவில் நியமனம் செய்யத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் எப்போது நியமனம் செய்யப்படுவார்கள் ? இதிலே இந்த அளவுக்குக் காலதாமதம் எதனாலே ஏற்பட்டது என்று அறிய விரும்பு

@ 299-300 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



கிறேன். காரணம் ஒரு நல்ல பணி இது என்று தமிழகத்தில் படித்தவர்களாலே பாராட்டப்படுகிற பணி. இதற்காக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மிகப் பெரிய தொகையைத் தந்திருக்கிறது. அந்த வகையில் இனியும் அநாவசியமான காலதாமதம் இல்லாத வகையில் அண்ணா கல்வி மையம் அமைக்கப்படுவதற்கு உரிய நடவடிக்கையை விரைவில் மேற்கொள்ள முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** சென்னைப் பல்கலைக் கழகம் என்பது ஒரு தன்னாட்சி அமைப்பு. அவர்கள்தான் அதைப்பற்றிய முடிவை எடுக்க வேண்டும். கேள்வி கேட்கப்பட்டதாலே இங்கே பதில் அளிக்கிறோம். எனவே அரசின் சார்பில் இத்தகைய காரியங்களை விரைவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளலாமே தவிர, நாம் ஒன்றும் செய்ய முடியாது. அது ஒரு தன்னாட்சி நிறுவனம் என்கிற உண்மையை நாம் மறந்துவிடலாகாது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அண்ணா கல்வி மையம் அமைப்பது சம்பந்தமான கோரிக்கையை சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழு, செனட் போன்ற அவைகள் ஏற்றுக்கொண்டுவிட்டனவா? அப்படி அது ஏற்றுக் கொள்ளப்படாத வகையில் அதற்கு ஏதேனும் தடை இருந்தால், அதைப் பற்றிய விவரங்களை நாங்கள் அறியலாமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதுபற்றிய விவரம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால், பதில் சொல்லலாம்.

### மேல்நிலைப் பள்ளிகள்.

* 134. *வினா*—**செல்வி ஆ. லீலாவதி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டில், 1985-86 ஆம் கல்வியாண்டில், மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் கருத்துரு ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதில் பெண்களுக்கென்றும், ஆண்களுக்கென்றும் தனித் தனியாக அதிகப்படுத்தவிருக்கும் மேல்நிலைப் பள்ளிகள் எத்தனை ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) 1985-86 ஆம் கல்வி ஆண்டில் 49 அரசு மற்றும் உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன.

(இ) மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்ட அரசு மற்றும் உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகள் :

| | |
|---|---|
| ஆண் உயர்நிலைப் பள்ளிகள் | 42 |
| பெண் உயர்நிலைப் பள்ளிகள் | 7 |

**செல்வி ஆ. லீலாவதி :** தலைவர் அவர்களே, புதிய கல்விக் கொள்கையைப் புகுத்துவதால், சில குறிப்பிட்ட பாடங்களைப் பொறுத்த வரையில், மாணவர்களின் சேர்க்கை இல்லாமல் போய்விடும் நிலை ஏற்படுகிறது என்றும் இதனால் மேல்நிலைப் பள்ளிகளில் சில வகுப்புகள் மூடப்படும் என்ற அச்சம் ஆசிரியர்கள் மத்தியில் இருப்பதை அரசு அறியுமா ? அவ்வாறு வகுப்புகள் மூடப்படாமல் இருக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

(முற்பகல் 10-15)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** புதிய கல்விக் கொள்கையின் காரணமாக மூடப்படக்கூடிய ஆபத்து இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அப்படி ஏதேனும் வந்தால், ஆசிரியர்களைப் பாதுகாக்க அரசு தக்க நடவடிக்கையை எடுக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** 1985-86 ஆம் கல்வி ஆண்டில் தொடங்க அனுமதி வழங்கப்பட்ட 42 ஆண்கள் பள்ளிகள், 7 பெண்கள் பள்ளிகள் ஆகியவற்றுக்கெல்லாம் போதிய கட்டிட வசதிகள், ஆய்வுக்கூட வசதிகள் ஏற்படுத்தப்பட்ட பிறகு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதா அல்லது இனிதான் அத்தகைய வசதிகள் ஏற்படுத்தப்படவிருக்கின்றனவா என்பதையும் இவ்வாண்டு எத்தனை மேல்நிலைப் பள்ளிகள் துவங்க அனுமதி வழங்க அரசு உத்தேசித்திருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஏற்கெனவே இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகள்தான் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படுகின்றன. அப்பள்ளிகளில் இருக்கின்ற வசதிகளைத்தான் பயன்படுத்துகிறோம். புதிதாகத் துவங்கப்படும் அரசுப் பள்ளிகளுக்கு விஞ்ஞான ஆய்வுக் கூடங்களைக் கட்டித் தருகிறோம். அதற்கு மேலும் தேவையிருக்குமானால், அதற்குப் பிறகுதான் யோசிக்க வேண்டும். எல்லாவித வசதிகளையும் செய்துவிட்டுத்தான் புதிதாக மேல்நிலைப் பள்ளிகளை ஆரம்பிக்க வேண்டும் என்ற முறை எந்தக் காலத்திலும் இல்லை. அப்படியொரு நிலை ஏற்படுவது நல்லதுதான்.





**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** 1986-87 ஆம் கல்வியாண்டில் தேவைக்கேற்ப உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்துகின்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறதா? அப்படி அரசு முடிவு எடுக்கும்போது, 1985-86 ஆம் கல்வியாண்டில் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நவம்பர்-டிசம்பர் மாதங்களில் உயர்த்தப்பட்டதால், காலதாமதத்தின் காரணமாக பல பாதிப்புகள் ஏற்பட்டன என்பதைக் கருத்திற்கொண்டு அத்தகைய காலதாமதத்தை 1986-87 ஆம் ஆண்டில் தவிர்க்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இப்போது நாம் புதிதாகத் துவங்குகிற உத்தேசமில்லை. சட்டமன்ற உறுப்பினர்களைப் போன்ற மக்கள் பிரதிநிதிகள் தங்களுடைய பகுதிகளில் வேண்டுமென்று சொல்லுகிற போது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்த்து முடிவு எடுக்க வேண்டிய ஒன்று. அரசைப் பொறுத்தவரையில், இதுவரையில், இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையில், புதிதாக மேல்நிலைப் பள்ளிகளை ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. மயில்சாமி:** புதிதாகத் துவங்கப்படுகிற மேல்நிலைப் பள்ளிகளைக் குறித்த ஆணைகள் கிட்டத்தட்ட கல்வியாண்டு முடிகிற நேரத்திலேதான் வருகின்றன. இதனால் மாணவர்கள் பல தொல்லைகளுக்குள்ளாகிறார்கள். கடந்த சில ஆண்டுகளாக அப்படித்தான் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே 1986-87 ஆம் ஆண்டில் ஜூன், ஜூலைத் திங்களில் புதிய பள்ளிகளைத் துவங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்கள் கவனத்திலே எடுத்துக்கொள்ளப்படும்.

**செல்வி ஆ. லீலாவதி:** இந்தக் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளிகளைத் திறக்கும் உத்தேசம் ஏதுமில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதற்காக தனியார் யாராவது வேண்டுகோள் விடுத்திருக்கிறார்களா? அதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அரசுப் பள்ளிகள் சார்பாகவும், தனியார் பள்ளிகள் சார்பாகவும் பல்வேறு பகுதிகளில் இருந்து மனுக்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். எல்லாப் பள்ளிகளையும் உயர்த்தும் உத்தேசமில்லை. புதிதாக உயர்த்தும் உத்தேசம் இப்போதில்லை. பொது மக்களுடைய பிரதிநிதிகளுடைய வற்புறுத்தலின் காரணமாக ஏதாவது ஏற்படுத்தக்கூடிய நிலைமைகள் வந்தாலும் வரலாம். அது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது.

பாடநூல்கள் அச்சிடுதல்.

*135 வினா—**திரு. ஆர். டி. சீத்தாபதி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், புத்தகங்கள் அச்சிட்டுத் தரும் பணியை, தனியார் அச்சகங்களிடம் அளிக்கிறதா?

(இ) ஆம் எனில், எத்தனை அச்சகங்களில் அச்சிடப்படுகின்றன?

(உ) தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனமே, அச்சகத்தை ஆரம்பிக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(இ) 175 அச்சகங்கள்.

(உ) ஆம்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** இப்படி தனியாரிடத்தில் அச்சடிக்கத் தந்திருக்கின்ற பாட நூல்கள் உரிய நேரத்தில் வருவதில்லை என்ற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படி புகார் வந்ததால், அரசு அவர்களுக்கு அச்சடிக்கத் தரும் பணியை நிறுத்தியிருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அச்சடிக்கத் தருகிறபோது குறிப்பிட்ட காலத்திலே நூல்களைத் தர வேண்டுமென்றுதான் தருகிறோம். அதிலே காலதாமதம் ஏற்படும்போது, அதற்குரிய நடவடிக்கையை தமிழ் நாடு பாடநூல் நிறுவனம் எடுத்து வருகிறது.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** 'தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனமே அச்சகத்தை ஆரம்பிக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?' என்று மூலக் கேள்வியில் நான் கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஏற்கனவே நான் 'ஆம்' என்று பதில் சொல்லியிருக்கிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** எனக்குச் சரியாக காதில் விழவில்லை என்பதால் திருப்பிக் கேட்டுவிட்டேன். அப்படி ஆரம்பிக்கும் எண்ணம் இருக்கிறது என்றால், அதற்கு ஆர்ஜிதம் செய்யக்கூடிய நிலம் சென்னை மாநகரத்திற்குள்ளே வருகிறதா அல்லது சென்னையையடுத்த புறநகர்ப் பகுதியிலே வருகிறதா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, அடையாறிலுள்ள தொழில் நுட்பக் கல்வி வளாகத்தில் 3 ஏக்கர் ஒதுக்க ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இன்னும் 2 ஏக்கர் நிலம் வேண்டும் என்று தமிழ் நாடு பாட நூல் நிறுவனம் கேட்டுக்கொண்டிருக்கின்றது. நிலம் கையகப்படுத்துகின்ற நிலை ஏறத்தாழ முடிகின்ற தருவாயில் இருக்கின்றது. மேற்கொண்டு கட்டிடங்கள் கட்டுவது, மெஷின்கள் வாங்குவது போன்ற பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. க. சுப்பு:** தலைவர் அவர்களே, மெஷின்கள் வாங்குவதுபற்றிய பேச்சுவார்த்தைகள் முடியும் நிலையில் இருக்கின்றன என்று சொல்கின்றார்கள். அதைப்பற்றிய விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, மெஷின்கள் வாங்குவதைப் பொறுத்தமட்டில், கிழக்கு ஜெர்மனியிலே இருக்கின்ற அச்சு இயந்திரத் தயாரிப்பாளர்களோடு பேசிக்கொண்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் முடிவு எடுக்கப்படவில்லை. முடிவு எடுத்தபிறகுதான், அதைப்பற்றி முடிவாகச் சொல்ல முடியும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் அச்சகத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அந்தத் திட்டத்திற்காக அரசு எவ்வளவு நிதி ஒதுக்கியுள்ளது? அந்த இடத்தில், அந்த அச்சகத்தை உருவாக்குவதற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி எவ்வளவு? இந்தத் திட்டம் எப்போது தொடங்கப்படும் என்று அரசு எதிர்பார்க்கிறது? தனியார் துறையிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற வேலைகளை கூடுமானவரையில் அரசு அச்சகத்திலேயே முடிக்க அரசு முன்வருமா?

1031/86

234

தமிழ் நாடு
சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# செயலக வெளியீடு
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 2, 1986-தொகுதி 222 எண் 3.
Wednesday, 2nd April 1986-Volume 222 No. 3.

சட்டமன்ற மேலவைச் செயலகம்.
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரூ. 2.00]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, 2 கோடி புத்தகங்கள் அச்சடிக்க அச்சு இயந்திரங்கள் மற்றவைகளுக்கு ரூ. 9 கோடி அளவுக்கு முதலீடு வேண்டும். 3 கோடி புத்தகங்கள் அச்சடிக்க ரூ. 11 கோடி அளவுக்கு முதலீடு செய்ய வேண்டும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதற்குள் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். பணத்தைப் பொறுத்த மட்டில், தமிழ் நாடு பாட நூல் நிறுவனம் தங்களுக்கு வருகின்ற லாபப் பணத்திலே முதலீடு செய்வது என்ற அடிப்படையிலேதான் அணுகுகிறோம். தேவையானால் அரசிடமிருந்து கடன் வாங்கிக்கொள்ள வேண்டும்.

## உதகமண்டலம் அரசு பல்தொழில் நுட்பப் பயிலகம்.

*136 வினா—திரு. அ. மயில்சாமி (டாக்டர் இரா. சனார்த்தனம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உதகமண்டலத்தில் உள்ள அரசு பல்தொழில் நுட்பப் பயிலகத்தை, பொறியியல் கல்லூரியாக உயர்த்தும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (இ) இல்லை.

திரு. அ. மயில்சாமி: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி ஏதுவும் புதியதாக அரசுத் தரப்பில் ஆரம்பிக்க கருதியிருக்கின்றதா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அரசின் சார்பில் பொறியியல் கல்லூரி திறக்கின்ற எண்ணம் அரசுக்கு இப்போது இல்லை.

## *Acupuncture Treatment.*

*137 Q.—Selvi A. LEELAVATHI: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether it has been proved that treatment through acupuncture reduces paid of the patients; and

(b) if so, the action taken by the Government to introduce acupuncture treatment in Government Hospitals?



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) அக்குபஞ்சர் முறைப்படி பலபேர் குணமடைந்ததாகவும், அதேபோல் பலர் குணம் காணவில்லை என்றும் கூறப்படுகிறது.

(இ) அரசு மருத்துவமனைகளில் இச்சிகிச்சை முறையை ஆரம்பிக்க நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

செல்வி ஆ. லீலாவதி: தலைவர் அவர்களே, அக்குபஞ்சர், என்பது சீன முறையிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றது என்று அறிகிறேன். இதனால் பல பலன்கள் கிடைத்திருக்கின்றன என்றும் நான் அறிகிறேன். முக்கியமாக மூட்டு வலிகள் இந்த முறையினால் நல்ல முறையிலே குணம் ஆகின்றன என்றும் அறிகிறேன். அதனை நமது அரசு மருத்துவ மனைகளிலும் தொடங்கி அதை நல்ல முறையிலே நடத்த அரசு முன்வருமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இந்த அக்குபஞ்சரைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மாதிரி, இதுவரை சீனமருத்துவ முறையை மருத்துவப் பாடத் திட்டத்தில் டைரக்டர் ஆஃப் மெடிகல் எஜுகேஷன், யூனிவர்சிடி ஆஃப் மெட்ராஸ் ஆகியோர் இந்திய மருத்துவ முறையாகக் கருதிப் புகுத்தவில்லை. இந்த முறையைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக நாம் சென்னையிலேயிருந்து இரண்டு மருத்துவர்களை அனுப்பியிருக்கிறோம். அவர்கள் பயிற்சி பெற்று வந்திருக்கின்றார்கள். இனிமேல் அவர்களிடம் கலந்து பேசி, நம்முடைய சென்னைப் பல்கலைக்கழகத்திலே இந்த சிலபசைப் புகுத்தலாமா என்பதைப் பிறகு பரிசீலிக்கலாம்.

(முற்பகல் 10.25)

செல்வி ஆ. லீலாவதி: தலைவரவர்களே, நம் நாட்டிலே இருந்து பல டாக்டர்கள் இந்த முறையை சீனாவில் பயிலச் சென்றிருக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த மருத்துவ முறை மூலம் எந்தெந்த நோய்கள் குணமடைகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, அக்குபஞ்சரைப் பொறுத்தவரையில், இதிலே பல்வேறு வகையான முறைகள் இருக்கின்றன. manual free-based technique, rectified placing the needles and connecting it to electrical low-wattage stimulator, acu-pressure என்றெல்லாம் இருக்கின்றன. முக்கியமாக 'பெயின் கில்லர்'—உடலிலே

[1986 ஏப்ரல் 2

இருக்கக்கூடிய தலைவலி போன்ற அல்லது நரம்புகளால் ஏற்படுகின்ற வலிகளை எடுக்கும் சக்தி இந்த முறைக்கு இருக்கிறது. பல மருந்துகளால் குணமடையாத வலிகளுக்கு, இந்த சிகிச்சை அளித்தால், அதைக் குணப்படுத்தும்.

*திரு. க. சுப்பு:* தலைவரவர்களே, பல வழிகளில் ஒன்றும் செய்ய முடியாததற்கு, இந்த முறையை அளித்து குணப்படுத்தலாம் என்னும்போது, இந்த முறையைக் கற்றறிய 2 பேர்களை அனுப்பியதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இது யானைப் பசிக்கு சோளப் பொறி போல இருக்கிறது. இதை அதிகமாக அபிவிருத்தி செய்ய வேண்டும். இது நல்ல மருத்துவ முறை. இது இப்போது நல்ல முறையில் பரவி வரும்போது, இதைப்பற்றித் தெரிந்துகொண்டு, அதை அமுல்படுத்த நிறைய பேர் வர வேண்டும். இதற்காக ஒருவர் அல்லது இருவரை அனுப்புவது சரியல்ல. இந்த மருத்துவ முறையை அதிக முறையில் பயன்படுத்த, அரசு முயற்சிகளை எடுக்குமா?

***மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:*** தலைவரவர்களே, மூலக் கேள்விக்கு பதில் அளிக்கும்போது, பல பேருக்கு குணம் அடைந்ததாகச் சொல்கிறார்கள் என்றும், இன்னொரு சாரார் குணமில்லை என்றும் சொல்லுகிறார்கள் என்றும் சொன்னேன். Therefore, there are two opinions on one subject அந்த வகையில் இரண்டு பேர்களை அனுப்பி, அவர்கள் அந்த மருத்துவ முறையில் அறிவு பெற்று, அதற்கான எக்குவிப்மென்ட்ஸ் எல்லாம் ஏற்படுத்தி, அதற்கான புள்ளி விவரங்களை எல்லாம் சேகரித்து வருகிறோம். We have to collect our own statistics. Only on the basis of the statistics collected by our own Department can we quantify the improvement made in all these diseases.

*திரு. ஆர். டி. சீத்தாபதி:* தலைவரவர்களே, 2 டாக்டர்கள் சென்று, பயிற்சி பெற்று வந்தார்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர்கள் பெயர்களை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிக்க முன்வருவார்களா? அப்படிச் சென்று வந்தவர்கள், அரசு மருத்துவ மனைகளிலேயே இருப்பார்களா அல்லது அவர்கள் கற்று வந்த மருத்துவத்தைச் செய்ய வெளியே தனியாக நர்சிங் ஹோம் வைத்துக்கொண்டு போய்விடுவார்களா? அவர்கள் அரசு மருத்துவ மனைகளில்தான் பணியாற்ற வேண்டுமென்ற உறுதிமொழியைப் பெற்றுக்கொண்டு, அவர்களை நாம் பயிற்சிக்கு அனுப்பி இருக்கிறோமா?



1986 ஏப்ரல் 2]

***மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:*** தலைவரவர்களே, 2 டாக்டர்களின் பெயர்கள் என்னிடம் இல்லை. நியூராலஜி துறையிலிருந்து அனுப்பியிருக்கிறோம். அரசாங்கத்திலிருந்துகொண்டு வேலை செய்ய வேண்டுமென்ற நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். அது முக்கியமாக நியூராலஜியுடன் இணைக்கப்படும் பகுதியாகும். சாதாரணமாக, தலைவலி என்றால் பல மருந்துகளைச் சாப்பிட்டு குணப்படுத்தலாம். அதற்கு என்ன காரணம் என்று தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. சில நேரங்களில் 'ஆஸ்பிரின் சாப்பிட்டாலும் குணமடையாது. 'அப்படிப்பட்ட தலைவலிகளுக்கு இந்த மருத்துவ முறை பயன்படுகிறது என்று சீனாவில் உள்ளவர்கள் 'க்ளெயிம்' பண்ணுகிறார்கள். அந்த வகையில் இதை நியூராலஜி டிப்பார்ட்மென்டோடு இணைத்து வைத்திருக்கிறோம். அவர்கள் அரசாங்க மருத்துவ மனைகளில் வேலை செய்வதோடு, கூடுதலாக இதையும் செய்வார்கள். அவர்கள் அல்லோபதி மருத்துவ முறையைக் கையாளுவார்கள், இதையும் செய்வார்கள்.

*திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:* தலைவரவர்களே, அரசாங்கத்தின் சார்பாக 2 மருத்துவர்களை பயிற்சிக்கு அனுப்பியது ஒரு புறமிருந்தாலும், இந்த அக்குபஞ்சர் முறையில் தேர்ச்சி பெற்றவர்கள், பயிற்சி பெற்றவர்கள் பலர் நம் நாட்டில் இருக்கிறார்கள். அவ்வாறு தேர்ச்சி பெற்றவர்கள், கல்வித் தகுதி பெற்றவர்கள் வெளி நாட்டவர்களாக இருந்தாலும், அவர்களை நம்முடைய 'பொது மருத்துவ மனைகளில் பணி புரியச் செய்து, அவர்கள் மூலமாக நம்முடைய டாக்டர்களுக்குப் பரவலாகப் பயிற்சி அளிக்கலாமல்லவா. அதனை ஏன் பரிசீலிக்கக்கூடாது? அடுத்து, மெடிகல் கவுன்சில் ஆஃப் இந்தியா இதைப்பற்றி என்ன கருதுகிறது?

***மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:*** தலைவரவர்களே, 'மெடிகல் கவுன்சில் ஆஃப் இந்தியா' இதனை அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய சிகிச்சையாகத் தெரிவிக்கவில்லை. நம் நாட்டைப் பொறுத்தவரையில், வெஸ்டர்ன் ஓர்ல்டைப் பொறுத்தவரையில், ஏற்றுக் கொள்ளப்படாத விஷயமாக இது இருக்கிறது.

Acupuncture has been used for all kinds of known diseases from time to time. But, at present, as per the recent WHO report, it is used successfully for conditions which have general and muscle spasm. According to WHO, acupuncture does not alter organic changes occurring in osteo arthritic joints.

[1986 ஏப்ரல் 2

(முற்பகல் 10-30)

இரண்டு வகையான கருத்துக்களை உலக சுகாதார நிறுவனம் சொல்லியிருக்கிறது. ஆகவே, அதிகாரபூர்வமாக நாம் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. நம்முடைய நாட்டிலே சித்தா, ஆயுர்வேதம் போன்ற மருத்துவங்கள் இருக்கின்றனவே, அந்த எல்லைக்குள்ளே இது வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு:** அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, சில பேர் குணம் அடைவதாகவும் சில பேர் இந்த முறையினால் குணம் அடையவில்லை என்றும் சொன்னார்கள். சிலர் சில வேளைகளில் மரணம் கூட அடைகிறார்கள். எல்லா முறையிலும் சில வேளைகளில் மரணம் ஏற்படுவதும், குணம் அடையாமல் இருப்பதும் தவிர்க்க முடியாததுதான். அக்குபஞ்சர் சிகிச்சை முறை ஏன் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதற்கான காரணங்களையும் இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இங்கே இருப்பவர்களுக்கு இந்த முறை பழக்கமில்லாத முறை, ஆகவே இது ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று நான் கருதுகிறேன். இப்பொழுது கூட ஆங்கில மருத்துவப்படிப்பு படித்தவர்கள் தமிழ் மருத்துவ முறையை வரவேற்பதில்லை. ஆகவே இவர்களுடைய கருத்துக்களை கேட்டுக்கொண்டிருப்பதை விடுத்து, அக்குபஞ்சர் சிகிச்சை முறையானது சீனா போன்ற பெரிய நாடுகளில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது என்கிற உண்மையை உணர்ந்து, டபிள்யூ.எச்.ஓ. என்ன காரணங்களைச் சொல்லியிருக்கிறதோ அதனை ஏற்று தமிழ் நாட்டிலே இதை தீவிரமாக நடைமுறைப்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தமிழக அரசைப் பொறுத்தவரையில், இதுபற்றிச் சொல்ல வேண்டுமென்றால், உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்வேன். இந்திய மருத்துவ முறைகளான சித்தா, யுனானி, ஆயுர்வேதா போன்ற மருத்துவத்தில் பணியாற்றுகின்ற மருத்துவர்களின் கருத்துக்களைக் கேட்டுக்கொண்டு இதுபற்றி நாங்கள் முடிவு செய்வது கிடையாது. நாம் என்ன கருதுகின்றோமோ அந்த அடிப்படையில், அந்தந்தத் துறைகளில் பணியாற்றும் சம்பந்தப்பட்ட துறையினர் என்ன சொல்கிறார்களோ அதாவது எத்தனை நோயாளிகள் இந்த முறையினால் குணம் அடைந்திருக்கிறார்கள் என்பது போன்றவற்றின் அடிப்படையில் நாம் இதனை முடிவு செய்கிறோம். 80 லட்சம் ரூபாயிலிருந்து இன்றைக்கு 3½ கோடி ரூபாய் ஒதுக்கும் அளவுக்கு இதிலே நாம் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். மற்ற மாநிலங்கள் இந்த



1986 ஏப்ரல் 2]

சிகிச்சை முறையை இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், இதுபற்றி சென்று பார்த்து வாருங்கள் என்று சொல்லி 2 பேரை அனுப்பியிருக்கிறோம். ஆனால் இந்த முறையை பெரிய அளவில் பின்பற்றி 'ரிஸ்க்' எடுக்கக் கூடாது.

Unless we quantify the cure, unless we know exactly where the pitfalls are and unless we are absolutely certain that there is no other sequellant, we cannot take a risk.

மேலும் இந்த முறையைப் பின்பற்றுவதன் காரணமாக, மற்ற நோய்கள் வராமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும் இருக்கிறது. அதுதான் இதிலுள்ள பிரச்சினை. ரொம்பவும் இந்த முறையின் மூலம் குணம் அடைய முடியும் என்றும் சொல்ல முடியாது. இதனைப் புறக்கணிக்கக் கூடாது என்ற அடிப்படையில்தான், இரண்டு பேரை அனுப்பியிருக்கிறோம். ஆனால் உள்ளபடியே நல்ல ரிசல்ட் இந்த முறையின்மூலம் கிடைக்கிறது என்று தெரிந்தால், குணம் அடைகிற நோயாளிகளின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து, புள்ளிவிவரத்தை அடிப்படையாக வைத்து, அதன் பிறகு இதனை நல்ல முறையில் நடைமுறைப்படுத்துவதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

## அரசு மருத்துவமனைகள்.

*138 வினா.—**செல்வி ஆ. லீலாவதி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—6—1985 அன்றுள்ளபடி, தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள் எத்தனை?

(இ) அவற்றில், எத்தனை மருத்துவமனைகளில், ஊடுகதிர்ப்படம் எடுக்கும் (X-Ray) உபகரணங்கள் உள்ளன?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** (அ) 489.

(இ) 148.

**செல்வி ஆ. லீலாவதி:** இந்த எக்ஸ்ரே கருவியை மற்ற மருத்துவமனைகளிலும் விஸ்தரிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** 17 ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவமனைகள், மாவட்டங்களைப் பொறுத்தவரையில் இருக்கின்றன. இந்த 17-லும் எக்ஸ்ரே பிரிவுகள் இருக்கின்றன. 121 தாலுக்கா மருத்துவமனைகளில் 88

இடங்களில் எக்ஸ்ரே பிரிவுகள் இருக்கின்றன. அதுபோல் நான்-தாலுக்கா மருத்துவமனைகள் 123-ல் 13 இடங்களில் இந்த வசதி இருக்கிறது. படிப்படியாக நோயாளிகள் வருவதை அடிப்படையாக வைத்தும், நிதி நிலைமையை அடிப்படையாக வைத்தும் உறுப்பினர் சொல்வதுபோல் பேஸ்ட் புரோகிராம் என்ற அடிப்படையில் இதனை நடைமுறைப்படுத்த அரசு ஏற்பாடு செய்யும்.

**செல்வி ஆ. லீலாவதி:** பல மருத்துவமனைகளில் எக்ஸ்ரே எக்யூப்மென்ட் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றது என்று சொல்கிறார்கள். அது உண்மைதானா? 'லேப் டெக்னிசியன்ஸ்' எண்ணிக்கை குறைவாக இருப்பதனால் இப்படி அவைகள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அப்படி என்றால், எத்தனை மருத்துவமனைகளில் இவ்வாறு எக்ஸ்ரே எக்யூப்மென்ட் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றது.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** எந்த ஒரு துறையாக இருந்தாலும், 100 இடங்களில் வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்துகிறோம் என்றால், அவைகளில் ஒன்றிரண்டு இடங்களில் இம்மாதிரி உபகரணங்கள் பழுதடைவது போன்ற காரணங்களால் பணிகள் தடைபடுவது மாதிரி நிலைமைகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாக ஆகிவிடுகிறது.

(முற்பகல் 10-35)

நம்முடைய துறையும் அவ்வப்போது ஆட்களை அனுப்பி கண்காணித்து வருகிறது. மாவட்டத் தலைமையிடங்களில் உள்ள அதிகாரிகளும் மாவட்டங்களில் உள்ள மருத்துவ மனைகளைக் கண்காணித்து அறிக்கை தர வேண்டும். இவர்களைக் கண்காணிக்க துறையில் இயக்குநர் இருக்கிறார். அவர் திடீர் சோதனைகள் நடத்துகிறார். அதுபோல, அமைச்சரும் சென்று பார்க்கிறார். இதில் லாப் டெக்னிசியனுக்கும் இதற்கும் சம்பந்தம் கிடையாது. லாபைப் பொறுத்தவரையில், யூரின், பிளட் போன்றவைகளைச் சோதனை செய்கிறார்கள். எக்ஸ்ரே-டெக்னிசியன்கள் என்பவர்கள் வேறு. அவர்கள் இல்லாவிட்டால் அந்த வேலையை டாக்டர்களும் கூட செய்வார்கள். பல இடங்களில் அவைகள் நன்றாக நடைபெறுகின்றன. கடந்த ஆண்டு இந்துஸ்தான் போட்டோ பிலிம் கிடைக்காமல் சில இடங்களில் எக்ஸ்ரே பிலிம் தட்டுப்பாடு இருந்தது. அதனால் கஷ்டம் ஏற்பட்டது. இந்த ஆண்டு அதுகூட சரியாகி விட்டது. ஏதாவது ஒரு இடத்தில் இம்மாதிரி குறைகள் இருந்து அவை கவனத்திற்குக் கொண்டு வரப்படும்போது, உடனடியாக நடவடிக்கை எடுத்து வருகிறோம்.





**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, 1986-87லே ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்றவைகளை அரசு மருத்துவமனைகளாக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்ததா? அதை ஏற்று இந்த ஆண்டு எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களை மருத்துவமனைகளாக மாற்றம் செய்ய அரசு உத்தேசம் செய்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாடர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே இப்படியொரு திட்டம் போடப்பட்டு, அது இப்போது நிறைவேற்றப்படுகிறது. ஆரம்ப சுகாதார மருத்துவமனைகள் அவற்றின் லொக்கேஷன், விஸ்தரிப்பு நிலை போன்றவைகளைக் கருத்தில் கொண்டு, மேம்படுத்தப்பட வேண்டுமென்பது திட்டம். அதன் அடிப்படையில் தாலுக்கா மருத்துவமனை ரொம்ப தூரத்தில் இருந்தால், இருக்கிற 4, 5 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒன்றை மேம்படுத்த வேண்டுமென்பது திட்டம். எப்போதோ போடப்பட்ட இந்தத் திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்தான் செயல்படுகிறது. மூன்றாண்டுகளுக்கு முன்பு 15 இடங்களும், அடுத்த ஆண்டு 15 இடங்களும், சென்ற ஆண்டு 12 இடங்களும் என்று சொல்லி, அவைகள் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன. இந்த மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை, எக்ஸ்ரே டிபார்ட்மெண்ட், லாபரெட்டரி போன்றவைகள் வைக்கப்பட்டு வருகின்றன. இதுபோல் 42 இடங்களில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இன்னொரு திட்டத்தை இந்த ஆண்டு கொண்டு வருகிறோம். பல கிராம ஆஸ்பத்திரிகளை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்ற வேண்டுமென்று மத்திய அரசும், பிளானிங் கமிஷனும், மருத்துவத் துறை அமைச்சர்கள் மாநாடுகள் மூலமாக மத்திய நல்வாழ்வுத் துறையும் சொல்லி வருகின்றன.

The importance should be shifted. Presently, the existing Primary Health Centres are improved to the standard of Taluk Headquarters Hospitals. Instead of that, the importance should be shifted to going in for more P.H.Cs. இன்னும் ஆரம்ப சுகாதார நிலையங்களை அதிக எண்ணிக்கையில் கொண்டு வரவேண்டுமென்று சொல்லப்படுகிறது. கிராம மருத்துவ மனைகளையும் ஆரம்ப சுகாதார நிலையங்களாக ஆக்கி, பிறகு அவற்றை விஸ்தரிக்க வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. அகில இந்தியாவிலும் உள்ள நிதி நிலைமைக்கு ஏற்ப இவைகளைச் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கேற்றபடி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

[1986 ஏப்ரல் 2

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, டிஸ்பென்சரிகளை ஆரம்ப சுகாதார நிலையங்களாக ஆக்கி, பிறகு அவற்றை விஸ்தரிக்க வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். அந்த வகையில் எத்தனை மருத்துவமனைகள் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன? இந்த ஆண்டு அந்தத் திட்டம் செயல்படாதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, இதிலே ஆரம்ப சுகாதார நிலையங்களாக எப்படி மாற்றுகிறோம் என்று சொல்கிறேன். லொக்கேஷன் பற்றி மாவட்ட சுகாதார அதிகாரியிடம் அறிக்கை கேட்டிருக்கிறோம். அதன் அடிப்படையில் 110 நிலையங்கள் ஏற்படுத்தலாம் என்று தகவல் வந்திருக்கிறது. இன்னும் கூடுதலாகச் செய்ய வேண்டுமென்று விபரங்கள் கேட்டிருக்கிறோம். இந்த ஆண்டு 100 இடங்களில் ஆரம்பிக்க வாய்ப்பு இருக்கிறது. அதைச் செய்யப் போகிறோம். அடுத்தபடியாக, இந்த ஆண்டு விஸ்தரிக்கக்கூடிய திட்டம் இல்லையென்றாலும், இதில் வெற்றி கண்டதற்குப் பிறகு அதைக்கூட கவனிக்க இருக்கிறோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஒத்திப்போடப்பட்ட வினாக்கள் 99 மற்றும் 100 எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

## விதவைகள் மறுவாழ்வு.

* 99 வினா—**திரு. அ. ப. சிவராமன் :** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விதவைகள் மறுவாழ்விற்கு, 1983-84 ஆம் நிதியாண்டில் அரசு ஒதுக்கிய தொகை எவ்வளவு ?

(இ) தென்னாற்காடு மாவட்டத்தில், 1984 ஆம் ஆண்டில் விதவைகள் மறுவாழ்வு திட்டத்தின்கீழ் உதவி கோரி, மனு செய்துள்ளவர்கள் எத்தனை பேர் ?

(உ) அவர்களுக்கு எந்தெந்த வழிகளில், மறுவாழ்வுப் பணிகளை அரசு மேற்கொள்கிறது ?



1986 ஏப்ரல் 2]

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) 1983-84 ஆம் ஆண்டில் விதவைகளின் மறுவாழ்வு திட்டங்களுக்காக ரூபாய் 268 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

(இ) தென்னாற்காடு மாவட்டத்தில் 1983-84 ஆம் ஆண்டில் விதவைகள் மறுவாழ்வு திட்டத்தின்கீழ் உதவி கோரி மனு செய்தவர்களின் எண்ணிக்கை 2,046.

(உ) விதவைகளின் மகளின் திருமணத்திற்கு ரூபாய் 1,000 நிதி உதவியும், விதவையை மறுமணம் செய்து கொண்டால் ஊக்கத்தொகை ரூபாய் 5,000-க்கான 7 ஆண்டு தேசிய சேமிப்பு பத்திரமும், ஏழை விதவைகளுக்கு இலவச தையல் இயந்திரமும், தகுதியின் அடிப்படையிலும், விதவைகளின் குழந்தைகளுக்கு பாடநூல் மற்றும் குறிப்பேடுகள் வாங்க முறையே ரூபாய் 15, ரூபாய் 40, ரூபாய் 60 மற்றும் ரூபாய் 100 என வகுப்பிற்குத் தகுந்தபடி வழங்கப்பட்டு வருகிறது. ஆதரவற்ற விதவைகளுக்கு மாதந்தோறும் ரூபாய் 35 உதவித் தொகையும் வழங்கப்படுகிறது.

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவர் அவர்களே, விதவைகள் மறுவாழ்விற்காக அவர்கள் சிற்றுண்டி விடுதிகள் நடத்தும் திட்டம் சமூக நலத் துறையினரால் கொண்டுவரப்பட்டு அவை வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே அவற்றை மேலும் விரிவுபடுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, விதவைகளின் மறுவாழ்விற்காக ஏற்படுத்தப்பட்ட விதவைகளால் நடத்தப்படும் சிற்றுண்டி விடுதிகள் மிகவும் சிறப்பான முறையில் நடந்து கொண்டிருக்கின்றன. அந்தத் திட்டத்தை விரிவுபடுத்துகின்ற ஆலோசனை இப்போது எதுமில்லை.

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவர் அவர்களே, ஆதரவற்ற விதவைகளின் நலன் கருதி, அவர்களின் கல்வித் தகுதியைக் கருத்திற்கொண்டு, அவர்களுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை அளிக்கப்படுமா ? அவர்களது குழந்தைகளுக்கும் அதுபோல் அரசுப் பணிகளில் முன்னுரிமை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, ஆதரவற்ற விதவைகளுக்கு அரசு நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்கள், அரசு உதவி பெறும் நிறுவனங்கள் முதலிய நிறுவனங்களில் பணி புரிவதற்கு அவர்களுக்குத் தகுதி இருந்தால், நிச்சயமாக அவர்களுக்கு அந்தச் சலுகை அளிக்கப்படும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்திலே 2,046 விண்ணப்பங்கள் வந்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவற்றில் எத்தனை பேர் அந்த உதவியைப் பெற்றார்கள். எத்தனை பேருக்கு அந்த உதவிகள் மறுக்கப்பட்டிருக்கின்றன ? இந்த உதவிகளைப் பெறுவதற்கு உரிய விதிமுறைகள் என்ன என்ன என்பவைகளை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் 2,046 பேர் விண்ணப்பங்கள் கொடுத்திருந்தார்கள். அவற்றில் 474 பேர் பயன் அடைந்திருக்கின்றார்கள். இவ்வாறு உதவித் தொகை அளிப்பதற்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தொகைகள் குறிப்பிட்டு ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கும். அந்தத் தொகைக்குள், வருகின்ற விண்ணப்பங்களைப் பரிசீலித்து உதவித்தொகை வழங்கப்படும். அவ்வாறுதான் மொத்தமாக தென்னாற்காடு மாவட்டத்தில் 474 பேர் பயன் அடைந்திருக்கின்றார்கள்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தமிழக அரசு நிறைவேற்றுகின்ற நல்லபல திட்டங்களில் விதவைகள் மறுவாழ்வுத் திட்டமும் நல்லதொரு திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் 1985-86 ஆம் ஆண்டு நிதியாண்டிற்குரிய உதவித்தொகை அளிக்கும் நிகழ்ச்சி கடந்த இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாக கடலூரில் நடைபெற்றது. அதற்கு நானும் சென்றிருந்தேன். இவ்வாறு அங்கே 1985-86 ஆம் ஆண்டிற்கான உதவித்தொகை அளிக்கும் நிகழ்ச்சி அவ்வாண்டின் கடைசி நாளன்றுதான் அவசரம் அவசரமாக நடைபெற்று, உதவித்தொகைகள் வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. இவ்வாறு கடைசி நாளன்று வழங்குவதற்கு மாறாக அவ்விண்ணப்பங்களை நன்கு பரிசீலித்து அதற்கு முன்னதாகவே வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்திருந்தால், நன்றாக இருந்திருக்கும். அவ்வுதவிகளைப் பெறுவோரின் தகுதிகளை நன்கு பரிசீலித்து அவற்றைக் கொடுப்பதற்கு வழிவகைகள் நன்கு அமைந்திருக்கும். அவ்வாறில்லாமல் கடைசி நாளன்று அவசரம் அவசரமாகக் கொடுக்கப்பட்டது போல் தெரிகின்றது. எனவே, இனிமேலாவது இவ்வாறு அவசரம் அவசரமாகக் கொடுக்கப்படாமல், நன்கு பரிசீலித்து உதவிகளைத் தேவைப்படுகிறவர்களுக்குப் போய்ச் சேருகிற வகையில் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் அவற்றைக் காலத்திற்குள் கொடுக்க வேண்டும் என்று ஒரு நியதியை அரசு ஏற்படுத்தியிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். மாண்பு





மிகு உறுப்பினர் அவர்கள் அவசரம் அவசரமாக இந்த உதவிகளை விதவைகளுக்குக் கொடுத்தார்கள் என்பது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கான காரணம் எனக்குத் தெரியவில்லை. இந்த ஆண்டு காலத்திற்குள் கொடுக்க வேண்டுமென்று அரசு தொகைகளை ஒதுக்கியிருக்கிறது. அதற்கு ஏற்றாற்போல் உதவிகளைச் செய்ய வேண்டுமென்றும் அதிகாரிகளிடம் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குத் தகுந்தவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-45)

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பணம் ஒதுக்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். சென்னை மாவட்டத்திற்கு எந்த அளவிற்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பணம் ஒதுக்கியதைப்பற்றிக் கேட்டு, பிறகு சென்னை மாவட்டத்திற்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்தக் குறிப்பு என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த மூலக் கேள்வி தென்னாற்காடு மாவட்டத்தைப் பற்றியது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலில் ஆதரவற்ற விதவைகள், அவர்களுடைய குழந்தைகளுக்கு அரசுப் பணிகளிலும், அரசு நிதிவசதி பெறுகின்ற நிறுவனங்களிலுள்ள பணிகளிலும் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். அந்தச் சலுகைகள் பெற குறிப்பிட்ட சதவீத இடங்கள் ஒதுக்கி, அந்த வகையில் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறதா? எந்தவகையான சலுகைகள் கொடுக்கப்படுகின்றன? அவர்கள் அதற்கெல்லாம் எப்படி விண்ணப்பிக்க வேண்டும்? அதற்கான அரசு ஆணை இருந்தால், அதனுடைய எண், தேதி ஆகியவைகளை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவரவர்களே, அரசுப் பள்ளிகளுக்கு மற்றும் உள்ளாட்சி மன்றங்களுக்கு, அரசு உதவி பெறும் நிறுவனங்களுக்கு என்று அவர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற சதவீதம் என்று நான் குறிப்பிடவில்லை, விதவைகளுக்குத் தனிச் சலுகை கொடுக்க வேண்டும். தனிச் சலுகை என்றால் ஒரு பணிக்குப் போட்டியிடும் விதவைகள் மற்றும்

போட்டியாளர்கள் ஆகியோர்களில், அந்த விதவைகள் நல்ல தகுதி பெற்றிருந்தால், மற்ற போட்டியாளர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சலுகைகளிலிருந்து விதவைகளுக்கு தனிச் சலுகை கொடுக்கப்படும்.

### உடல் ஊனமுற்றோர் பள்ளிகள்.

100 வினா.—திரு. எல். ஜெயச்சந்திரன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தென் ஆற்காடு மாவட்டம், கடலூரில் உள்ள பார்வையற்றோர் பள்ளி மற்றும் சிதம்பரத்தில் உள்ள பேச முடியாதோர் மற்றும் காது கேளாதோர் பள்ளி ஆகியவற்றை, விரிவுபடுத்தும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரத்திலுள்ள அரசு காது கேளாதோர் பள்ளியில் புதிதாக ஏழாம் வகுப்பு நடப்பு கல்வியாண்டில் துவங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. கடலூரிலுள்ள அரசு பார்வையற்றோர் பள்ளியை விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் இல்லை.

**திரு. எல். ஜெயச்சந்திரன்:** தலைவரவர்களே, கடலூரில் பார்வையிழந்தோர் பள்ளியும், சிதம்பரத்தில் காது கேளாதோர் பேச முடியாதோர் பள்ளியும் இருக்கின்றன. கடலூரில் பார்வையற்றோர் பள்ளியில் 23 மாணவர்களும், சிதம்பரத்தில் காது கேளாதோர் மற்றும் பேசமுடியாதோர் பள்ளியில் 35 மாணவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்காக முக்கிய கேள்வியாகக் கேட்கப்பட்டது. அவர்களுக்குக் கட்டிட வசதி கிடையாது. அமைச்சர் அவர்கள் அதற்கு கடலூரில் இப்போது விஸ்தரிப்பு இல்லையென்று கூறினார்கள். அந்த மாணவர்களுக்குக் கட்டிட வசதிகளை இந்த நடப்பாண்டிலாவது கடலூரிலும் சிதம்பரத்திலும் ஏற்படுத்திக் கொடுத்தால், அவர்களுக்கு வசதியாக இருக்கும். அந்த இரண்டு ஊர்களுக்கும் அந்த வசதியை அரசு செய்து கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, கடலூரிலுள்ள பார்வையற்றோர் பள்ளியிலும், சிதம்பரத்திலுள்ள காது கேளாதோர் பள்ளியிலும் படிக்கின்ற மாணவர்களுக்குச் சரியான முறையில் இடவசதி அமைத்துக் கொடுக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் எல்லாம் நல்ல இடவசதியோடு படிக்க வேண்டு



மென்ற எண்ணம்தான் அரசினுடைய கொள்கையாக இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு நல்ல இடவசதி அமைத்துக் கொடுக்கப்படவில்லையென்றால், மாற்றுக் கட்டிடமோ அல்லது அந்த இடத்தை விரிவுபடுத்துகின்ற நிலையையோ அரசு ஏற்று நடத்தும்.

திரு. எல். ஜெயச்சந்திரன்: தலைவரவர்களே, அரசு கடலூர் மற்றும் சிதம்பரத்திலுள்ள பள்ளிகளிலுள்ள மாணவர்களுக்கு உணவுத் தொகைக்காக ஒரு மாணவருக்கு ஒரு நாளைக்கு ரூபாய் 3 கொடுக்கிறது. அந்த மூன்று ரூபாய் ஒரு மாணவருக்கு எந்த அளவுக்குப் போதுமென்று தெரியவில்லை. குறைந்தது அவர்களுக்கு ஒரு நாளைக்கு 7 ரூபாயாவது உயர்த்திக் கொடுக்கும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதே சமயத்தில் தமிழக அரசினுடைய நல்ல திட்டமான சத்துணவுத் திட்டம் அனைத்துப் பள்ளிகளுக்கும் இருக்கிறது. ஆனால் இந்தப் பள்ளிகளுக்கு மட்டும் அந்தச் சத்துணவுத் திட்டம் இல்லை. இந்த இரு பள்ளிகளுக்கும் அந்தச் சத்துணவுத் திட்டத்தை விஸ்தரிக்கும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, பார்வையற்றோர் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுக்கும், காது கேளாதோர் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுக்கும் இன்றைக்கு அரசு சத்தான உணவைத்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கும் உணவுத் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அரசு இப்போதுதான் அந்தப் பள்ளிகளுக்கு அந்தத் தொகையை உயர்த்திக் கொடுத்திருக்கிறது. இனிமேல் தேவை ஏற்பட்டால் அரசு உயர்த்திக் கொடுக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவரவர்களே, பார்வையற்றோர், பேச முடியாதோர், காது கேளாதோர் ஆகியோருக்கெல்லாம், அவர்களைத் தனிமைப் படுத்தி தனிப் பள்ளிக் கூடங்களில் வைத்து அவர்களுக்குக் கல்வி அளிப்பதை விட பொதுவாக எல்லோருக்கும் இருக்கும் பள்ளிக்கூடங்களில்—இவர்களுக்குத் தனிப் பயிற்சி கொடுக்க வேண்டியிருக்கின்ற காரணத்திற்காக தனியாக ஆசிரியர்கள் நியமிக்கவேண்டியது அவசியம்—வகுப்பறைகளை இணைத்து பாடம் கற்பித்தால், சமுதாயத்தில் மாணவர்கள் எல்லோரும் சிறு வயதிலேயே ஒன்று சேர்ந்து நல்ல முறையில் பழகி ஒருவருக்கொருவர் உதவி செய்கிற மனப்பான்மை ஏற்பட ஏதுவாக இருக்கும். ஆகவே, அவர்களது பள்ளிக்கூடங்களைத் தனிமைப்படுத்துவதைவிட, பொதுப் பள்ளிக்கூடங்களோடு இணைத்து அவர்களுக்குக் கல்வி கொடுக்கக்கூடிய ஒரு கருத்தை அரசு ஏன் பரிசீலனை செய்யக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, எல்லாப் பொதுப் பள்ளிகளிலும் இந்த மாணவர்களும் படிக்க வேண்டுமென்றுதான் அரசு விரும்புகிறது. இருந்தாலும் அவர்களுக்கு என்று தனியாகப் பள்ளிக் கூடங்களை வைத்திருப்பதற்குச் சில காரணங்களும் இருக்கின்றன. எல்லா வசதிகளும் அவர்கள் ஒருங்கே பெற்று நல்ல முறையில் கல்வி பெற வேண்டும் என்றுதான் தனியாக அவர்களுக்கு என்றே பள்ளிக்கூடங்கள் அமைக்கப்பட் டிருக்கின்றன. பார்வையற்ற மாணவர்களைப் பொறுத்தவரையில், பிரெய்லி எழுத்துக்களின் மூலமாகக் கல்வி போதிக்கப்படுகிறது. அதைப் போலவே காது கேளாத மாணவர்களுக்குத் தேவையான வகையில் ஆசிரியர்களை நியமித்து, அதற்கு ஏற்றவாறு அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து கல்வி போதிக் கப்படுகிறது. இதன் காரணமாகத்தான் பொதுப் பள்ளிகளில் அவர்களுக்கு தற்போது பாடம் கற்பிக்க முடியவில்லை.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தலைவர் அவர்களே, கடலூர் பார்வையற் றோர் பள்ளியைப் பொறுத்தவரையில், 23 மாணவர்கள் பயிலுகிறார்கள். அவர் களெல்லாம் முழுமையாகவே பார்வையற்றவர்கள் என்று சொல்லிவிட முடியாது. காரணம் முன்பிருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நெய்வேலியில் பணியாற்றும் கண் மருத்துவர்களை அழைத்து வந்து, இந்த மாணவர்களைப் பரிசோதிக்க ஏற்பாடு செய்ததன் அடிப்படையில் 5 அல்லது 6 மாணவர்களுக்கு கண்ணில் அறுவை சிகிச்சை செய்தால், அவர்கள் மீண்டும் பார்வையைத் திரும்பப் பெறலாம் என்று சொல்லப்பட்டதால், அவர்கள் அனை வரும் சென்னைக்கு அனுப்பப்பட்டு அவர்களின் கண்ணில் அறுவை கிசிச்சை மேற்கொள்ளப்பட்டது. அதன் காரணமாக 2 அல்லது 3 மாணவர்களுக்கு தற் போது பார்வை வந்திருக்கிறது. எனவே அதே போன்று சமூக நலத் துறை யின் சார்பிலும் இதுபோன்று தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் உள்ள மாணவர்களையும் ஏன் பரிசோதிக்கக் கூடாது என்று கேட்க விரும்பு கிறேன். இதுவரை இதைச் செயல்படுத்தாதது வேதனையாக இருக்கிறது. எனவே இனியாவது தமிழகத்தில் உள்ள அனைத்துப் பார்வையற்றோர் பள்ளி களிலும் இத்தகைய மருத்துவர்களை அனுப்பி அவர்களையெல்லாம் பரிசோதனை செய்து அவர்களில் சிலருக்காவது பார்வை கிடைக்க வழிவகை செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கண்பார்வையற்ற மாணவர்களைப் பொறுத்த வரையில், ஆங்காங்கே மருத்துவர்களை அனுப்பி அவர்களின் பார்வையைக் குறித்து



கண் சிகிச்சை முகாம் தற்போது நடத்தப்பட்டு வருகிறது. அந்த அடிப்படை யில்தான் கடலூரில் உள்ள பார்வையற்றோர் பள்ளியைச் சார்ந்த 2 அல்லது 3 மாணவர்கள் பார்வையைத் திரும்பப் பெற்றுள்ளார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களே குறிப்பிட்டார்கள்.

அப்படி பார்வை பெறுகிற அளவுக்கு மாணவர்கள் இருந்தால், அறுவை சிகிச்சை மூலம் பார்வை பெற உதவி செய்யலாம். ஆனால் பிறவியிலேயே கண் பார்வை அற்றவர்களாக இருந்தால், அறுவை சிகிச்சை மூலம் பார்வை அளிக்க முடியாது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி ( * ) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

**மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசிய கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் கூறியதாக 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிக்கையில் பிரசுரித்தது குறித்து.**

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கம் கோர விரும்புகிறேன்—

கடந்த 25—3—1986 அன்று 1985-86 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீட்டின் மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசும்போது நான் ஒரு கருத்தைத் தெரிவித்தேன். 1986 ஆம் ஆண்டு பிப்ரவரியில் ஒரே நாளில் கடலை எண்ணெய் வியாபாரம் செய்திருப்பதில் அன்றைக்கு இருந்த மார்க்கெட் விலையைவிட டீலர்களுக்குக் குறைத்து விற்றதன் காரணமாக ஒரே நாளில் ரூபாய் 12 லட்சம் நட்டம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டேன். அதைக் குறித்து அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இது குறித்து 'என்கொயரி' செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இந்தச் செய்தியை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' என்கிற ஆங்கில நாளேட்டில் வேறு மாதிரியாகப் பிரசுரித்திருக்கிறார்கள். அதாவது—

Referring to the charge levelled by the Leader of the opposition Mr. M. P. Subramaniam that the State Oil Seeds Growers Federation had incurred a loss of Rs. 12 lakhs on a single day in a transaction, the Minister stated that the matter would be enquired into.

## 2. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசிய கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் கூறியதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் பிரசுரித்தது குறித்து

[1986 ஏப்ரல் 2

அதாவது நான் பேசிய பேச்சை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் பேசியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது என்னுடைய பணிக்கு வேறு யாரையோ உரியவராக ஆக்கியிருக்கிறது அந்தப் பத்திரிகை. அப்படிப்பட்ட தவறுதலான செய்திகள் இனி யாவது வராத அளவுக்குத் தாங்கள் அதுபற்றி ஒரு விளக்கமோ தீர்ப்போ அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பத்திரிகையின் செய்தி நிருபர் இங்கே அவையில் இருக்கிறார் என்று நினைக்கிறேன். இனியும் எச்சரிக்கையாக இருப்பார்கள் என்றும் நம்புகிறேன். சில நேரங்களில் ஆங்கிலப் பத்திரிகைகளில் எம். பி. என்று எழுத்துக்களைப் பார்த்தாலேயே நம்மைப்பற்றித்தான் குறிப்பிட்டிருக்கிறார்களோ என்று நானே ஐயப்படுவதுண்டு. அந்த வகையில் உரிய பத்திரிகை நிருபர் அவர்கள் இதற்குத் திருத்தம் போடுவார் என்று நம்புகிறேன்.

## 3. அறிவிப்பு.

### அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்டவாறு நிகழ்ச்சிகள் விவரம் முடிவு செய்யப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

| | | |
|---|---|---|
| 3—4—1986 (வியாழக்கிழமை) | — | 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீதான பொது விவாதமும், பதிலுரையும். |
| 4—4—1986 (வெள்ளிக்கிழமை) | — | 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவினை ஆய்வு செய்தல். |
| 5—4—1986 (சனிக்கிழமை) முதல் 15—4—1986 (செவ்வாய்க்கிழமை) | — | கூட்டம் இல்லை. |



| | | |
|---|---|---|
| 16—4—1986 (புதன்கிழமை) | — | வேளாண்மை மற்றும் குடிநீர் வழங்கல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம். |
| 17—4—1986 (வியாழக்கிழமை) | — | நுகர் பொருள் வழங்கல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம். |
| 18—4—1986 (வெள்ளிக்கிழமை) | — | வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம் |
| 19—4—1986 (சனிக்கிழமை) | — | 1. தொழிலாளர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.<br>2. 20—4—1986 அன்று ஓய்வு பெறவிருக்கும் உறுப்பினர்களுக்கு பாராட்டுரை பகர்தல். |
| 20—4—1986 (ஞாயிற்றுக்கிழமை) | — | விடுமுறை. |
| 21—4—1986 (திங்கட்கிழமை) | — | கூட்டம் இல்லை. |
| 22—4—1986 (செவ்வாய்க்கிழமை) | — | மகாவீர் ஜெயந்தி—விடுமுறை. |
| 23—4—1986 (புதன்கிழமை) | — | 1. புதிய உறுப்பினர்கள் பதவி ஏற்பு.<br>2. மருத்துவமும், மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம். |

24—4—1986 (வியாழக்கிழமை) — சாலைகளும், பாலங்களும் மற்றும் சாலை போக்குவரத்து குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.

25—4—1986 (வெள்ளிக்கிழமை) — கூட்டுறவுத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.

26—4—1986 (சனிக்கிழமை) — சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.

27—4—1986 (ஞாயிற்றுக்கிழமை) மற்றும் 28—4—1986 (திங்கட்கிழமை) — விடுமுறை.

29—4—1986 (செவ்வாய்க்கிழமை) — கல்வி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.

(புதன்கிழமை) காலை — தொழில்கள் மற்றும் ஊரகத் தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம்.

மாலை — பிற்பட்டோர், பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம்.

3—4—1986 மற்றும் 30—4—1986 ஆகிய நாட்களில் கேள்வி நேரம் இல்லை. மேலவை வழக்கம்போல் காலை 10-00 மணிக்குக் கூடும். மேற்கொண்டு நிகழ்ச்சி விபரம் பின்னர் முடிவு செய்யப்படும்.



(முற்பகல் 10-55)

## 4. கவன ஈர்ப்பு.

கடலூர் மௌலானா அபுல் கலாம் ஆசாத் உசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிலும் 26 மாணவர்கள் தேர்வு எழுத முடியாத நிலை குறித்து.

திரு. மு. செ. சங்கரலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"கடலூர் மௌலானா அபுல் கலாம் ஆசாத் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிலும் 26 மாணவர்கள் தேர்வு எழுத முடியாத நிலை குறித்து".

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை@ அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. மு. செ. சங்கரலிங்கம்: இதுபோன்ற கல்லூரிகள் பல்கலைக் கழகத்தின் அங்கீகாரம் இல்லாமலும், அரசின் அனுமதி இல்லாமலும் வியாபாரம் போல நாடு முழுவதும் நடந்து கொண்டிருக்கின்றன. நெல்லையிலும் இத்தகைய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி நடத்து கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். மாணவர்களிடம் பணம் வாங்கிக்கொண்டும் அவர்கள் தேர்வு எழுத முடியவில்லை என்பதால், அவர்களுக்கு இழப்பு வருகிறது. எந்த வியாபாரத்தைத் தொடங்குவதாக இருந்தாலும், ஆசிரியர்கள் சங்கம் நடத்துவதாக இருந்தாலும், சாராயக் கடைகளை வைப்பதாக இருந்தாலும், அரசாங்கத்தின் அனுமதி வாங்க வேண்டியிருக்கிறது. ஆனால் எத்தவித அனுமதியும், அங்கீகாரமும் இல்லாமல் இப்படி கல்வி நிறுவனங்கள் நடந்துவரும் நிலையை அரசு தடுத்து நிறுத்த முன்வருமா? மௌலானா அபுல் கலாம் ஆசாத் கல்லூரி மாவட்ட ஆட்சித் தலைவரின் வீட்டுக்கு முன்பாகவே நடத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவரே அதைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம். ஆகவே அரசு உத்தரவு போட்டு அதை நிறுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

---

@ 301 ஆக அச்சிடப்பட்டுள்ளது. ஆம் பக்கத்தில் இணைப்பு

Tamil Nadu

Legislative Council

Debates

Official Report

1986

Vol: 222

No: 3-5

D
V211,32'N86
N86.222.5-6.
143547

[1986 ஏப்ரல் 2

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: சட்டப்படி நாம் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையைப்பற்றி ஆலோசித்து வருகிறோம். இதுபோன்ற அனுமதி இல்லாமல் ஆரம்பிப்பது, அனுமதி இல்லாமல் மாணவர்களைச் சேர்த்து நிர்வாகத்தை நடத்துவது என்பது யாராலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்றாகும். இவைகளைத் தடுக்கின்ற விதத்தில் நல்ல நடவடிக்கையை அரசு எடுக்கும்.

5. 1986-87 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின் மீது எனது கருத்துக்களைச் சொல்வதற்காக வாய்ப்பு அளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை 'பாலன்ஸ்ட் பட்ஜெட்' என்ற அடிப்படையில் வரவு-செலவு சமமாக உள்ள ஒரு நிதிநிலை அறிக்கையாக அமைக்கப்பட்டிருப்பது எல்லோராலும் பாராட்டப்படக்கூடிய ஒன்றாகும். வரவு ரூபாய் 3,275 கோடியும், செலவு ரூபாய் 3,287 கோடியும், பற்றாக்குறை 12 கோடி ரூபாய் என்றும் சொல்லப்பட்டாலும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பற்றாக்குறை இல்லாத அளவிற்கு இந்த நிதிநிலை அறிக்கை இருக்கும் என்ற கருத்தை வெளிப்படுத்தியிருப்பதை அறிந்து, நாம் இது ஒரு பாலன்ஸ்ட் பட்ஜெட் என்ற அளவிலே பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிக்கிறோம்.

மொத்த வரவு-செலவுத் திட்டத்தில் ஓரளவு பற்றாக்குறை இருப்பது போல தெரிந்தாலும், வருவாய்க் கணக்கை வைத்துப் பார்க்கும்போது, வரவு ரூ. 2,673 கோடியும், செலவு ரூ. 2,450 கோடியும் என்று பார்க்கும்போது, உபரியாக 223 கோடி இருக்கிறது. மூலதனக் கணக்கு என்பது ஓரளவிற்குச் சொத்தாகவும், நிரந்தரமாக வருவாய் வரக்கூடிய காரியங்களுக்காகச்

(முற்பகல் 11-00)

செலவிடுவது என்ற அடிப்படையில் வருவதாகும். அந்த அடிப்படையில் பார்க்கின்றபோது, 14.17 அளவுக்கு குறைவான செலவு செய்யப்பட்டிருச் ஆண்டுகளிலே செய்திருந்தாலும், அந்தச் செலவுகள் சொத்துக்களாக அமைவதோடு, அதிலிருந்து வருவாய் வருவதற்கான அளவில்தான் நிதிநிலை



1986 ஏப்ரல் 2] [திரு. ஜி. சுவாமிநாதன்]

அறிக்கையிலே ஓரளவுக்கு செலவு செய்யப்பட்டிருக்கின்றதே தவிர வேறல்ல. வரவு-செலவுக் கணக்கில் வருவாய் அதிகமாக வருகின்ற ஒரு நல்ல வரவு-செலவுத் திட்டத்தைத்தான் நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அளித்திருக்கின்றார்கள். அது பாராட்டுக்குரியதாக இருக்கின்றது.

வரவு-செலவுத் திட்டத்தைப் பார்க்கின்றபோது, 'இந்து' பத்திரிகையிலே ஒரு பகுதியில் 'The Budget at a glance' என்று போடுவார்கள். அதிலிருந்து கடந்த நான்கு ஆண்டுகளாகவே ஒவ்வொரு ஆண்டும் செலவைவிட வருவாய் அதிகமாக இருக்கக்கூடிய நிலைமைகளைப் பார்க்கிறோம். ரெவின்யூ அக்கவுண்ட் என்று பார்த்தால், இந்த ஆண்டு 223 கோடி ரூபாய் அதிகமாக வருவாய் இருக்கின்றது. 1984-85-ல் ரூ. 221 கோடி ரூபாய் குறைவாகச் செலவு, 1985-86-ல் பட்ஜெட் எஸ்டிமேட்டில் 53.60 அளவிலே செலவு குறைக்கப்பட்டிருக்கிறது. 1984-85 அக்கவுண்ட் என்று பார்க்கின்றபோது, ஓரளவுக்குக் கூடுதலான செலவுகள் கடந்த சில கின்றது. இப்படி கடந்த நான்கு, ஐந்து ஆண்டுகளாக செலவு குறைவாகவும் வருவாய் அதிகமாகவும் இருக்கின்றது. அந்த அளவிலே சிறந்த ஒரு நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்திருக்கின்றார்கள் என்பது பாராட்டுதலுக்கு உரியதாகும்.

இதிலே நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 'இந்து' பத்திரிகையில் யாரையும் சாதாரணமாகப் பாராட்டி எழுத மாட்டார்கள். வசிஷ்டர் வாயால் 'பிரம்மரிஷி' என்று கேட்பது கடினம் என்பார்கள். அதுபோல குறைபாடுகள் இருந்தால், 'இந்து' பத்திரிகை அந்தக் குறைபாடுகளை எடுத்துச்சொல்லத் தயங்குவதில்லை. அப்படிப்பட்ட 'இந்து' பத்திரிக்கையில் மார்ச் மாதம் 18 ஆம் தேதி மிகச் சிறப்பாகச் சொல்லி எழுதியிருக்கிறார்கள்.

The economic and welfare performance of Tamil Nadu during 1985-86 clearly establishes the State as one of the pace-makers in the country.

என்று எழுதினார்கள். மற்ற மாநிலங்கள் எல்லாம் இதை ஒரு முன் மாதிரியாகக் கொள்ளக்கூடிய அளவுக்கு மிகச்சிறந்த பட்ஜெட்டை நமது அமைச்சர் அவர்கள் அளித்திருப்பதாகப் பாராட்டினார்கள். அது மட்டுமல்ல. இன்னொன்றும் எழுதியிருக்கின்றார்கள்.

The State has earned appreciation at the national level for its lead in 20-point programme, family planning, handloom, khadi and

village industries, public distribution of essential commodities, vocational education, child nutrition and health programme.

இப்படிப் பார்க்கின்றபோது, 'இந்து' பத்திரிகையிலேயே மிகச்சிறந்த பாராட்டைத் தெரிவித்திருக்கின்றார்கள். அந்த அளவிலே நானும் நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கை சிறப்பாக அமைந்திருப்பதால் அதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். அடுத்து. நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் செலவு குறைவாகவும். வரவு அதிகமாகவும் இருப்பது மட்டுமல்ல. இந்த ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முதலீடும் நல்லமுறையிலே செய்யப்பட்டிருக்கின்றது. அந்த அளவிலே ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் நல்ல முதலீடு செய்யவும் திட்டமிடப் பட்டிருக்கின்றது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 3,675 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டது; ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 5,750 கோடி ரூபாய் என்ற அளவில் 2,075 கோடி ரூபாய் அதிகமாக முதலீடு செய்யப் பட்டிருக்கிறது. அதிலே நம்முடைய மத்திய திட்டக்குழு திட்டத்தில் ரூ. 1,153 கோடிக்கு ஒப்புதல் அளித்திருக்கின்றது. நம்முடைய மாநில அரசு ரூ. 47 கோடி, அதனுடைய பணத்தைச் செலவு செய்து, ரூ. 1,200 கோடிக்கு ஒரு நல்ல முறையிலே ஒரு திட்டத்தை வகுத்து ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முதலீடு செய்திருப்பதையும் அபிவிருத்தித் திட்டத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறந்த முறையில் பணத்தை ஒதுக்கீடு செய்திருப்பதையும் பார்த்து மகிழ்ச்சி அடைகிறேன்.

அடுத்து, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மிசா ஆர். கணேசன் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அதற்கு பதிலாக ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர் பேசுகின்றபோது, வீடு கட்டும் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். இந்தத் திட்டத்திற்கு ரூ. 26 கோடி தானே ஒதுக்கியிருக்கின்றார்கள். "26 கோடி ரூபாயிலே ஒரு ஆண்டில் 10 லட்சம் வீடுகள் கட்டி, அடுத்து மூன்று ஆண்டுகளில் 30 லட்சம் வீடுகள் கட்டவேண்டுமென்றால், அதற்கு கோடிக்கணக்கான ரூபாய் செலவாகுமே, அதை எப்படி ஈடுகட்டப் போகின்றார்கள்?" என்று அவர்கள் கேள்வியாகக் கேட்டிருக்கின்றார்கள். அந்த சந்தேகம் மற்றவர்களுக்கும் வரவேண்டும் என்ற நிலையிலே அவர்கள் பேசியிருக்கின்றார்கள். அவர் சொன்ன மாதிரியிலிருந்து, ஏதோ அரசினர் சொல்லிவிட்டு செய்யமாட்டார்கள் என்ற உணர்ச்சியில் அல்லது அபிப்பிராயத்தில் சொல்லியிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட அபிப்பிராயம் ஏன் வரவேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய கருத்துக்களைச்



சொல்லும்போது, அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். ரூ. 26 கோடி அல்ல. முதல் கட்டமாக அரசின் நேரடி உதவியாக ரூ. 14 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. அது தவிர, வரவு-செலவுத் திட்டத்தில் 26 கோடி நிதி ஒதுக்கீடு என்று தரப்பட்டுள்ளது. அந்த அடிப்படையிலேதான் சொல்லியிருக்கின்றார்கள். இது ஒரு 'சீட் கேபிடல்' என்ற அடிப்படையிலே

(முற்பகல் 11-05)

சொல்லியிருக்கின்றார்கள். இதற்கு மத்திய அரசால் அமைக்கப்பட இருக்கும் நிறுவனம், ஹட்கோ, எச்.டி.எஃப்.சி., ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் போன்ற நிறுவனங்களின் மூலம் நிதி ஆதாரங்களைப் பெருக்க முயற்சிகள் செய்யப் படுமென்று சொன்னார்கள். தொடர்ந்து பத்திரிகைகளைப் படித்திருந்தால், தெரிந்திருக்கும். நம்முடைய நிதி அமைச்சரவர்கள், பிளானிங் கமிஷனிடம் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 12—2—1986 டில்லியிலிருந்து வெளியான இந்துப் பத்திரிகையில் வந்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சரவர்களும், மதிப்பிற்குரிய மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் டெல்லிக்குப் போயிருந்தபோது, இந்தத் திட்டங்களை எப்படிச் செய்யப் போகிறார்கள் என்பது பற்றி திட்டக் கமிஷனில் பேசியிருக்கிறார்கள். டெல்லியிலே போய் பேசியிருக்கிறார்கள்.

It was suggested that the Government of India could provide a larger outlay for the proposed housing programme through institutional finance channels like HUDCO and the Bank for Rural Housing (being considered) as well as by way of direct assistance to the Centrally sponsored programme like, NREP, RLEGP and special component plan which has an emphasis on housing. In the proposed programme, 30 lakhs houses are to be constructed to shelter the homeless in a three-year period. Beginning from the coming financial year, 10 lakh houses are to be built in a year—5 lakh houses for the Adi-Dravidars, Scheduled Tribes and Nari Koravars and another 5 lakh houses for other families living below the poverty line. Though specific designs are yet to be drawn up, official sources say, the cost of construction will be around Rs. 10,000 a house at the prevailing rates. The total financial commitment will be Rs. 3,000 crores, Rs. 1,000 crores a year.

என்று சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சிபற்றிப் பேசப்பட்டிருக்கிறது. மேலவையிலே பேசினார்கள், பேரவையிலும் பேசினார்கள். வெளியிலும் பலர் பேசியிருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே தொழில் வளர்ச்சிக்கான காரியங்களைச் செய்யவில்லை என்ற கருத்தை எல்லாப் பக்கங்களிலும் சொல்லுவது வருத்தத்திற்குரியதாகும். தொழிற் துறையைப் பொறுத்த வரையில், நம்முடைய தொழில் வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரையில், 8 ஆண்டுகளில் 11,000 சிறு தொழில்களாக இருந்தது, 65,000 சிறு தொழில்களாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்ற கருத்தை, புள்ளி விவரத்தோடு நம்முடைய நிதி அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. இது 211 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது என்றும், ஓராண்டுக்கு 32.6 சதவிகிதம் தொழில் வளர்ச்சி நம்முடைய மாநிலத்தில் அதிகரித்திருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. எஸ். ஆர். சுப்பிரமணியம்: தலைவரவர்களே, சிறிது நேரத்திற்கு முன்பு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் இந்துப் பத்திரிகையின் தலையங்கத்தைப் படித்துவிட்டு, 'வசிஷ்டர் வாயால் பிரும்ம ரிஷி' என்று சொன்னார்கள். தலையங்கத்தின் இறுதி இரண்டு வாக்கியங்களைப் படித்தால், அவர் சொல்லுவதற்கு மாறாக இருக்குமென்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

திரு. ஜி. சுவாமிநாதன்: குறைபாடுகள் ஏதாவது இருந்தால் அவற்றை எடுத்துச் சொல்லக்கூடிய பத்திரிகை என்று தான் நான் சொன்னேன். ஒரு தலையங்கம் பத்திரிகையில் எழுதுகிறார்கள் என்றால், முதலிலிருந்து கடைசி வரை பாராட்டியே எழுதுவதாக இருக்காது. ஆக, அந்த வகையில் தொழில் வளர்ச்சியில் தமிழ் நாடு முன்னேற இன்னின்ன முறைகளில் மேலும் கவனிக்க வேண்டுமென்ற கருத்தினை 'இந்து' பத்திரிகையில் சொல்லியிருக்கிறார்கள். அதை தவறு என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் இங்கே தமிழ் நாடு தொழில் வளர்ச்சியில் முன்னேறவில்லை என்று சொல்லும் போது, அதற்கான ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். தமிழ் நாடு 7 வது அல்லது 12 வது இடத்தில் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டே போனால், அதில் அர்த்தமில்லை. இங்கேயிருக்கும் பாராளுமன்றத்தில் இடம் பெற்றிருக்கிற எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அவர்கள் [illegible] நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பி, தமிழ் நாடு தொழில் வளர்ச்சியில் எத்தனாவது இடத்தில்

இருக்கிறது என்று கேட்க வேண்டும். அதற்கு மத்திய அரசு தமிழ் நாடு 11 வது இடத்தில் இருக்கிறது என்று சொல்கிறது என்று வைத்துக்கொள்வோம், அப்போது இப்படி 11 வது இடத்தில் இருப்பதற்கு என்ன காரணம் என்று ஆராய்ச்சி செய்யலாம். ஆனால் எந்த ஒரு ஆதாரமும் இல்லாமல், தமிழ் நாடு தொழில் வளர்ச்சியில் தாழ்ந்திருக்கிறது என்று சொல்வதில் பயனில்லை. அடிப்படைக் காரணங்கள் எதுவும் இல்லாமல் அப்படிச் சொல்லக்கூடாது.

இதுபற்றி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்லும்போது, இரண்டு காரணங்களை தகுந்த ஆதாரங்களுடன் சொல்கின்ற நிலைமை இருப்பதைப் பார்க்கிறோம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வருவதற்கு முன்பு இருந்த தொழில் நிலைமை என்ன, இப்போது அதில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி என்ன என்பதுபற்றி அவர்கள் புள்ளிவிவரத்துடன் பதில் அளிப்பதைப் பார்க்கிறோம். 18 ஆயிரம் தொழில்கள் இருந்த நிலைமை மாறி 65 ஆயிரம் தொழில்களாக வளர்ந்திருக்கின்றன என்கிற புள்ளிவிவரத்தை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இது அவர்கள் கூறுகின்ற முதல் காரணம். அடுத்து, வங்கிகளிலிருந்து இதற்காக வாங்கிய கடன் தொகையைப் பார்க்கும்போது, மகாராஷ்டிராவிற்கு அடுத்தபடியாக தமிழ் நாடு இதனை அதிகமாகப் பயன்படுத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆக, இந்த இரண்டு கிரைட்டேரியாக்களை வைத்துப் பார்க்கும்போது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்ததற்குப் பிறகு, தொழில் வளர்ச்சி அதிக அளவில் ஏற்பட்டிருக்கிறது என்கிற புள்ளிவிவரத்தைச் சொல்கிற நிலைமையை நாம் பார்க்கிறோம். அந்த அடிப்படையில் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழ் நாடு தொழில் வளர்ச்சியில் பின்தங்கியிருக்கிறது என்கிற விவரத்தைச் சொல்லும்போது, அதற்கான காரண காரியங்களை ஆதாரத்துடன் சொல்ல வேண்டும்.

அதுபோல் 'லெட்டர் ஆப் இன்டென்ட்' பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி அவர்கள் குறிப்பிட்டார்கள். தொழில் முனைவோர்கள் மத்திய அரசுக்கு லெட்டர் ஆப் இன்டென்ட் வேண்டி விண்ணப்பிக்கிறார்கள். ஆனால் இங்கிருந்து அவ்வாறு விண்ணப்பிக்கிறவர்களுக்கு ஆண்டுக்கணக்கில் லைசென்ஸ் மத்திய அரசிலிருந்து வரவில்லை என்று சொல்கிறார்கள். அது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, எந்ததில் எத்தனை தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று இங்கே கேட்டார்கள். ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்காக லைசென்ஸ்





வேண்டி விண்ணப்பித்து 2, 3 ஆண்டுகள் கழித்து அது வந்தால், அப்போது நிலைமை மாறியிருக்கும். 4 வருடம், 5 வருடம் அலைந்த பிறகு, தொழிலுக்கான லைசன்ஸ் வருகிறது என்றால், இந்த 5 வருடத்திற்குப் பிறகு எதற்காக அந்தத் தொழில் முனைவோர் தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்று எண்ணியிருந்தாரோ அந்தத் தொழிலின் நிலைமை அப்போது மாறியிருப்பதால், இவ்வளவு நாட்களுக்குப் பிறகு அந்தக் குறிப்பிட்ட தொழிலை ஆரம்பித்தால் நஷ்டம் வரும். உதாரணத்திற்குச் சொல்வதென்றால், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பாலிதீன் பை தயாரிப்பதில் எல்லோரும் முனைப்பாக இருந்தார்கள். ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது. இப்போது சணல் பை தயாரிப்பது தான் சௌகரியம் என்ற எண்ணத்தில் சணல் பை தயாரிக்கப் போய்விட்டார்கள். இப்போது பாலிதீன் பை தயாரிப்பது சௌகரியமாக இல்லை. யாரும் நஷ்டத்தில் தொழிலை நடத்த முன்வரமாட்டார்கள். இப்படி லைசன்ஸ் வேண்டுமென்று கேட்டு காலதாமதமாக அனுமதி வருவதால், நஷ்டம் ஏற்படும் என்ற எண்ணத்தில், தொழிலை ஆரம்பிக்கின்ற திட்டத்தையே விட்டுவிட்டார்கள்.

திருமதி வி. ஜெயலட்சுமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, இப்போது சணல் பை தயாரிப்பது சௌகரியம் என்பதால், அந்தத் தொழிலுக்கு எல்லோரும் போயிருக்கிறார்கள் என்று சொன்னார். அதே சமயம் இப்போது பாலிதீன் பை தயாரிப்பது நஷ்டம் என்றும் சொன்னார்கள். கைத்தறித் தொழிலை நம்பியிருப்பவர்களுக்கு மேலும் நிவாரணம் அளித்துத் தான் அவர்களுடைய வாழ்வை முன்னேற்ற முடியும் என்ற அடிப்படையில், மத்திய அரசு அவர்களை ஊக்குவித்தது. அதே சமயத்தில் சில ரக துணிகளை அவர்களிடமிருந்து இவர்களுக்காக முடக்கி வைத்து ஊக்குவித்தது. அந்த அடிப்படையில்தான் மத்திய அரசு சணல் பயிரிடுகிறவர்களுக்காகவும், அவர்களுடைய நலனுக்காகவும் இதனைச் செய்திருக்கிறது. அதனால் நிச்சயமாக இனிமேல் சணல் பை தயாரிக்கிறவர்களுக்கு பிளாஸ்டிக் பை தயாரிப்பவர்களை விட கூடுதலாக லாபம் கிடைக்கும். எப்படி கைத்தறி நலிந்துவிடாமல் காப்பாற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுத்ததோ அதுபோல் சணல் தொழிலும் நலிந்துவிடாமல் இருப்பதற்காகத்தான், அவர்களைக் காப்பாற்றத்தான், இந்த நடவடிக்கையை மத்திய அரசு எடுத்ததாக நான் கேள்விப்பட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-15)

திரு. ஜி. சுவாமிநாதன்: அதை தவறு என்று நான் சொல்லவில்லை. ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு மாதிரியான தேவை இருக்கிறது. ஒரு சமயத்தில் பிளாஸ்டிக் பைகளைத் தயாரிப்பது லாபமுடையது என்கிற நிலைமை இருந்தது. அதுபோல் ஒருசமயத்தில் சணல் தொழில் லாபமுடையது என்கிற நிலைமை இருந்தது. உரத்தைப் போடலாம் என்று சொன்னார்கள். விலை மலிவாக இருந்தது. ஆனால் பிளாஸ்டிக் தொழில் அதிகமாகிவிட்டால், சணல் உற்பத்தியை வைத்துக் கொண்டு என்ன செய்வது, வங்காளத்திலிருப்பவர்கள் பிழைப்பு என்ன ஆவது என்று அவர்கள் மத்திய அரசைக் கேட்டார்கள். மத்திய அரசு அவர்களுக்கும் பதில் சொல்லியாக வேண்டிய நிலையில் இருக்கிறது. ஏதாவது ஒரு வகையில் மத்திய அரசு 'பாலன்ஸ்' செய்ய வேண்டும். அதில் தப்பு இல்லை. ஆனால் என்ன நடக்கிறது என்றால், இரண்டாண்டுகளுக்கு முன்பு ஒரு தொழிலுக்கு லைசன்ஸ் கொடுத்து அது ஆரம்பிக்கப்படும்போது, மீண்டும் லைசன்ஸ் முறை மாறி விடுகிறது. 'லெட்டர் ஆப் இண்டண்ட்' வருவதற்குள் நிலைமை மாறிவிடுகிறது. அதன் பிறகு முறையும் மாறிவிடுகிறது. ஆகவே அது சரியாக இல்லை. இன்னொரு விஷயம், நமது அரசியல் சட்டத்தில் ஏழாவது ஷெட்யூலில் மத்திய அரசுக்கான அதிகாரம், மாநில அரசுக்கான அதிகாரம், இரண்டுக்கும் பொதுவான அதிகாரம் என்று இருப்பதில், மத்திய அரசின் 52 வது அயிட்டம்,

Industries the control of which by the union is desired by Parliament by law to be expedient in public interest

என்பதாக இருக்கிறது. 52-வது அயிட்டத்தை வைத்துக்கொண்டுதான் அவர்கள் பேசுகிறார்கள். எந்தவொரு பெரிய தொழில் ஆரம்பிக்க வேண்டுமென்றாலும், மத்திய அரசின் லைசன்ஸ் பெற்றாக வேண்டும். அது எதற்காக வைக்கப்பட்டது என்றால், இராணுவம் போன்ற துறைகளுக்கான பொருட்களைத் தயாரிக்கும் பெரிய தொழில்களுக்கு வேண்டுமானால் அது பொருந்தலாம். ஆனால் பொது மக்களின் நன்மைக்காக ஆரம்பிக்கப்படும் எந்தப் பெரிய தொழிலுக்கும் மத்திய அரசின் லைசன்ஸ் தேவையென்றால், அது சரியாக இருக்குமா என்று பார்க்க வேண்டும். இதன் அடிப்படை புரியவில்லை. இதன் காரணமாக எல்லா லைசன்ஸ் முறைகளையும் டெல்லியில் வைத்துக்கொண்டிருப்பதால், நாம் அலைய வேண்டியிருக்கிறது. இதன் காரணமாக சிகப்பு நாடா முறை அதிகரிக்கிறது. வேண்டுமானால் வெளிநாட்டு உதவியுடன் நடத்தப்படும் தொழில்களுக்கும் இராணுவப் பொருட்கள் தயாரிப்புக்கும் வேண்டுமானால் மத்திய அரசின் லைசன்ஸ் முறை இருக்கலாம்



என்று கொண்டு வர வேண்டும். மற்ற தொழில்களுக்கு மாநில அரசே லைசன்ஸ் கொடுக்கும் முறை வர வேண்டும். ஆனால் எல்லாத தொழில்களுக்கும் மத்திய அரசு 'இன்டஸ்டிரீஸ (டெவலப்மெண்ட் அண்டு ரெகுலேஷன்) ஆக்ட்' 1951 இல் உள்ள சட்டப் பிரிவுகளை வைத்துக்கொண்டு அந்தச் சட்டத்தின் அடிப்படையில் எதற்கெடுத்தாலும் 'டெல்லிக்குப் போ' என்று சொல்வது தேவையில்லை என்று கருதுகிறேன். ஒவ்வொரு மாநிலத்திலும் மாநில அரசுகள் இருக்கின்றன. அவைகளே கொடுக்கலாம். indicative என்ற அடிப்படையில் மாநில அரசே கொடுக்கலாம். அதனால் விரைவில் லைசன்ஸ் கிடைக்கும். இந்தக் கருத்து இந்தியாவிலே மட்டுமல்ல, மற்ற நாடுகளிலும் உள்ளது. எவ்வளவுக்கெவ்வளவு மேலே லைசன்ஸ் கொடுக்கும் முறை இருக்கிறதோ அந்த நாட்டின் நிர்வாகம் ஸ்தம்பிக்கும். பியூராகிரசி அதிகரிக்கும் என்று சொல்கிறார்கள்.

ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. கோர்ப்பசேவ் அவர்கள்கூட இதே கருத்தை கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் மாநாட்டில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். கம்யூனிஸ்ட் நாட்டில் உள்ளவர்களுக்கே இதை டிசென்ட்ரலைஸ் செய்ய வேண்டுமென்ற அபிப்பிராயம் இருக்கிறது.

it was their task to break conservatism of earlier years and modernize the economy to better and more flexible management.

என்று கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் 27-வது கம்யூனிஸ்ட் கட்சியின் காங்கிரசில் மாஸ்கோவில் சொல்லியிருக்கிறார். ஆகவே எல்லா லைசன்ஸ் முறைகளையும் டெல்லியில் வைத்துக்கொண்டு, தமிழ் நாட்டில் தொழில் ஆரம்பிக்கவில்லையென்று சொன்னால், எதற்காக லைசன்ஸ் கொடுக்கிறார்கள் என்ற நிலைமையே மாறிவிடுகிறது. லிஸ்டில் 52-வது வரிசையில் உள்ள அதிகாரத்தில் உள்ள இன்டஸ்டிரீஸ் (டெவலப்மெண்ட் அண்டு ரெகுலேஷன்) ஆக்ட், 1951-ல் கண்டுள்ளபடி, வெளிநாட்டு உதவியுடன் நடக்கும் தொழில்கள் தவிர மற்ற தொழில்களுக்கு மாநில அரசுகளே லைசன்ஸ் கொடுக்கலாம் என்று வைத்தால், தமிழ் நாட்டிலும் மற்ற மாநிலங்களிலும் தொழில்கள் வளர ஆரம்பிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தனி நபர் வருமானத்தைப்பற்றிப் பேசுகிறோம். வெளியிலும், பேரவையிலும் மேலவையிலும் கூட பலர் பேசுகிறார்கள். பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களைப் பார்த்தால், தமிழ் நாட்டில் தனி நபர் வருமானம் பாதியாக இருக்கிறது என்பது ஒரு பிரச்சினையாக இருக்கிறது. தனி நபர் வருமானம் அங்கே அதிகமாகவும், இங்கே மிகக் குறைவாகவும் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இங்கே திராவிட முன்னேற்றக் கழகம்

(முற்பகல் 11-20)

ஆட்சியில் இருந்தபோது, எதிர்க் கட்சி உறுப்பினராக நான் இருந்து, அப்போது இருந்த அமைச்சர் பெருமக்களையும், முதலமைச்சரையும் இதே கேள்வியைத் தான் கேட்டேன். பஞ்சாப், அரியானாவை விட தமிழ் நாட்டில் தனி நபர் வருமானம் ஏன் குறைவாக இருக்கிறது என்று கேட்டேன். இப்போது அவர்கள் எதிரில் இருந்துகொண்டு அதே கேள்வியைக் கேட்கிறார்கள். அதற்கு முக்கியமான காரணங்கள் இரண்டாகும். இரண்டு விதத்திலும் அவர்களுக்கு வளர்ச்சி இருக்கிறது. விவசாயத்திலே நல்ல வளர்ச்சி இருக்கிறது. விவசாய வளர்ச்சி அதிக அளவில் அவர்களுக்கு ஏற்பட்டதற்குக் காரணம் அங்கே நல்ல பாசன வசதி இருக்கிறது. நல்ல பாசன வசதி அவர்களுக்கு இருப்பதன் காரணமாக நல்ல விளைச்சல் விளைந்தது. அதனால் டெக்னலாஜிகல் டெவலப்மென்ட்டும் அதிகமாக அவர்களால் செய்ய முடிந்தது. அதனால் அரிசியும் அதிகம் விளைவிக்க முடிந்தது. கோதுமையும் அவர்களால் அதிக அளவு விளைவிக்க முடிந்தது. கோதுமையின் விளைச்சலை பல மடங்கு அவர்களால் அதிகமாக்க முடிந்தது. மத்திய அரசும் கோதுமைக்குத்தான் விலையை பல மடங்கு அடிக்கடி கூட்டிக்கூட்டிக் கொடுத்தார்கள். எனவே அங்கே இருக்கும் விவசாயப் பெருமக்கள் பொருளாதாரத் துறையில் சிறந்தவர்களாக மாறினார்கள். இவ்வாறு இவர்கள் பொருளாதாரத் துறையில் மேன்மை அடைய அடைய இவர்கள் வாங்கும் சாமான்கள் consumer market develop ஆனது. அதனால் நிறைய தொழில்கள் (Industries) பெருகின. எனவேதான் அவர்களால் இந்த அளவுக்கு வளர்ச்சி அடைய முடிந்தது.

ஆனால் தமிழ் நாட்டின் நிலைமை என்ன? இங்கே இருவிதத்திலும் குறைபாடுகள் இருக்கின்றன. இங்கே நாம் விளைவிக்கும் விவசாயப்பொருள் அரிசியாகும். இதற்கு மத்திய அரசு குறைந்த விலைதான் கொடுத்துக் கொண்டிருக்கிறது. நாம் அதிகப் பணம் கொடுப்பதற்கும் அனுமதி தர மறுக்கிறது. இப்போதுதான் குவின்டாலுக்கு ரூ. 35 அதிகமாக்கிக் கொடுப்பதற்கு மத்திய அரசு அனுமதித்திருக்கிறது. இதற்கு முன் ரிசர்வ் வங்கியிடம் கேட்டால், "நீங்கள் கொள் முதலுக்கே அதிகப் பணம் கொடுத்துவிட்டீர்கள். எனவே பணம் கொடுக்க மாட்டோம்" என்று மறுக்கிறது. இவ்வாறு இங்கே நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. இரண்டாவதாக, காவிரி நீர்ப் பாசன வசதி மிகவும்



மோசமான நிலைமைக்குச் சென்று கொண்டிருக்கிறது. சரியான நேரத்தில் தேவையான அளவுக்கு காவிரியின்மூலம் பாசனத்திற்கு நீர் வந்து சேர்வதில்லை. இதுபோன்று பலவிதமான பிரச்சினைகள் நமக்கு இருந்து கொண்டிருக்கின்றன.

மாநிலங்களுக்கு இடையே நல்ல போட்டி இருக்க வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசின் ஐந்தாண்டுத் திட்டங்களின் நிதிக் கொள்கைகளை வைத்துப் பார்க்கும்போது, எல்லா மாநிலத்திற்கும் ஒரே சீரான அளவில் நிதி உதவிகளைச் செய்ய வேண்டும். தற்சமயம் மத்திய அரசு அட்மினிஸ்ட்ரேடிவ் ஆர்டர் மூலம் மண்ணெண்ணெய், கரி, பெட்ரோல் முதலிய இன்றியமையாப் பொருள்களின் விலைகளை ஏற்றிவிட்டது. இவ்வாறு மத்திய அரசின் கையில் பொருளாதாரம் சிக்கிக்கொண்டிருக்கும் நிலைமையில், மாநில சர்க்கார் அதன் வளர்ச்சியில் ஒன்றும் செய்ய முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு நம் நாட்டில் 'Planning' decentralize செய்யப்படவில்லை. ஒரு மாநிலம், இன்னொரு மாநிலத்தோடு போட்டி போடக்கூடிய அளவிற்கு பொருளாதாரத் திட்டங்களை மாநிலங்களுக்கு 'decentralize' செய்தால், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மாநிலங்கள் போட்டி போட்டுக்கொண்டு உதவிட முடியும். ஐரோப்பாவில் சின்ன சின்ன நாடுகள் அதிகம். பிரெஞ்சு நாடு ஜெர்மன் நாட்டோடு போட்டி போடுகிறது. ஸ்விட்ஜர்லாந்து, பெல்ஜியத்தோடு போட்டிபோடுகிறது. இவ்வாறு நம் நாட்டிலும் ஒவ்வொரு மாநிலமும், அவர்களுக்கு ஒதுக்கப்படுகிற தொகை சீரான அளவில் இருந்தால், போட்டிபோட்டுக்கொண்டு பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த முடியும்.

திரு. ப. மாணிக்கம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மத்திய அரசு அளவிலே " 'Technical Planning" வேண்டாம் என்று சொல்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: இப்போது அவர்கள் என்ன சொல்கிறார்கள்? இங்கே இருக்கும் ஒரு தொழிற்சாலைக்கு ஒரு நட்டு வாங்க வேண்டுமானால், நாம் அவர்களிடம் அனுமதி வாங்க வேண்டும். இதுதான் "Central Planning" என்றால், இதனால் நிறைய பிரச்சினைகள் ஏற்படும். விரைவில் வேலைகளைச் செய்ய முடியாது. எனவேதான் கம்யூனிஸ்ட் கட்சியில்கூட Planning process ஐ decentralize செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1986 ஏப்ரல் 2

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்று நினைக்கிறேன். மத்திய அரசு, அதிகப் பொறியாளர்கள், பொறியியல் வல்லுநர்கள் தேவைப்படுவார்கள் என்று கருதி அதிக அளவில் பொறியியல் கல்லூரிகளை உருவாக்கியது. பொறியியல் வல்லுநர்களை அவற்றின் மூலம் உற்பத்தியைச் செய்தார்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ எதிர்பார்த்த அளவுக்கு தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை. எனவே இன்றைக்கு அவர்களில் பலருக்கு வேலை வாய்ப்பு இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு மத்திய அரசு திட்ட அமைப்பின்கீழ்தான் மாநிலங்கள் இயங்க வேண்டுமென்கிற நிலை ஏற்படுகிறபோது, மாநிலங்களுக்கு அதிக அளவில் 'இனிஷியேடிவ்' இல்லாமல் போய்விடுகிறது. அவர்களிடம் அதிகப் பணம் கோரி கையேந்துகிற நிலைமை ஏற்படுகிறது. எனவேதான் " devaluation " செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் போன்றவர்களுக்கு நன்கு தெரியும். மத்திய அரசு நமக்குப் பணம் கொடுக்கும்போது, அரசியல் அமைப்புச் சட்டம் 275 ஆவது பிரிவு மற்றும் 280 ஆவது பிரிவின்கீழ் நிதிக் கமிஷன் மூலம் பணம் கொடுக்கிறது. மேலும் மேற்படி சட்டம் 282 ஆம் பிரிவின்கீழ் Aid- -ஐ தன்னிச்சையாகக் கொடுக்கக்கூடிய பணத்தை மத்திய அரசு தன்னிச்சையாக அவர்கள் நினைத்தவர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்

(முற்பகல் 11-25)

கிறார்கள். நாம் சென்ற ஆண்டு தோராயமாகப் பார்க்கும்போது, பைனான்ஸ் கமிஷனிலிருந்து வருகின்ற பணம் 18 சதவீதத்திலிருந்து தன்னிச்சையாகக் கொடுக்கப்படும் பணம் 12 சதவீதமாக இருக்கிறது. அவர்கள் என்ன சொல்கிறார்களோ, அது நமக்குப் பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும், அந்த நிலைமைகளுக்குப் போகக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அதை இத்தனை ஆண்டுக் காலமாகச் செய்துகொண்டிருக்கிறோம். 7 ஐந்தாண்டுத் திட்ட காலமாகப் பண்ணிக்கொண்டிருக்கிறோம். இதனால் என்ன ஆயிற்று என்று சொன்னால், நினைத்த அளவுக்கு நாட்டில் முன்னேற்றம் ஏற்படவில்லை. அதை மனதிலே வைத்துப் பார்த்தோமென்று சொன்னால், 'இன்டிகேட்டிங் பிளான்' என்ற அடிப்படையிலே, நீங்கள் ஓரளவுக்கு இன்னின்ன செய்யலாமென்ற ஆலோசனை செய்யும் அளவுக்கு, 'மாநில அரசு பிளான் போடட்டும், மத்திய அரசு அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்லுங்கள்; இதில் எவ்வளவு பணம் கொடுக்கப்பட வேண்டுமோ அதை 'பைனான்ஸ் கமிஷன்' மூலமாக பார்லிமென்டினுடைய 'அத்தாரிட்டி' யோடு நாங்கள் கொடுக்கிறோமென்ற அளவில் வைத்து ஒரு மாநிலத்திற்கு இன்னொரு மாநிலம் போட்டி என்று வைத்தால், நாளைக்கு "அந்த மாநிலம் சரியாகச் செயல்படவில்லை; அவர்களுடைய 'பெர்



1986 ஏப்ரல் 2] [திரு. ஜி. சுவாமிநாதன்]

காப்பிட்டா இன்கம்' குறைவாக இருக்கிறது" என்று சொன்னால், அந்த மாநிலத்தில் இருப்பவர்களே அந்த மாநில முதலமைச்சர் அவர்களைக் கேட்க முடியும். இப்போது மாநில முதலமைச்சர் அவர்களை, நிதியமைச்சர் அவர்களைக் கேட்டால், என்ன சொல்வார்கள்? "மத்திய அரசு நமக்கு இவ்வளவுதான் பணம் கொடுத்தது. மத்திய திட்டக் கமிஷனுடைய பார்வைதான் நமக்கு ஒத்துவரவில்லை" என்று ஏதாவது ஒரு காரணத்தை நாமே சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஒரு 'ரெஸ்பான்ஸிபிலிடி' மாநிலத்திற்கு வரவில்லை. ஆகவே இன்றைக்கு மாநிலத்திற்கு மாநிலம் 'ரெஸ்பான்ஸிபிலிடி' வரவேண்டுமென்று சொன்னால், அவர்களை மற்றவர்கள் கேட்க வேண்டும். பக்கத்தில் இருக்கிற ஆந்திரா வளர்ச்சியடைந்திருக்கிறது, கேரளா வளர்ச்சியடைந்திருக்கிறது, பஞ்சாப் வளர்ச்சியடைந்திருக்கிறது, ஹரியானா வளர்ச்சியடைந்திருக்கிறது. இவர்களுக்கெல்லாம் பணம் எப்படி வந்தது?" என்று கேட்டால், அதற்கு அந்த மாநிலத்தைப் பொறுப்பாக்க முடியும். இன்றைக்கிருக்கிற மத்திய அரசின் நிதிக் கொள்கையிலே, மத்திய அரசு பட்ஜெட்டிலே எந்த மாநிலத்திற்கும் பொறுப்பு கிடையாது. அவர்கள் என்ன சொல்வார்கள், மத்திய அரசு சொன்னபடி நாங்கள் செய்தோம்; மத்திய அரசு கொடுத்த திட்டத்தை நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்; அந்த நிலைமையில் நாம் போய்க் கொண்டிருக்கிறோமென்று சொல்வார்கள். யாருக்கும் பொறுப்பு கிடையாது என்ற நிலைமைதான் கடந்த 7 ஐந்தாண்டுத் திட்டகாலமாக இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலை நீடித்துக்கொண்டே போனால், நன்மை தராது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு பணம் வருகிறதோ அதை ஒதுக்கீடு செய்து அந்தப் பணத்தை அந்த மாநிலம் எந்த நிலைமையிலே செலவு செய்ய வேண்டுமென்றால், அதனுடைய திட்டக் கமிஷன், அதனுடைய அபிவிருத்திப் பணிகள் இவைகளுக்காகச் செலவு செய்ய வைத்து ஒரு மாநிலத்திற்கு ஒரு மாநிலம் போட்டியிடச் செய்தால், நிச்சயமாக தொழிற் போட்டி மாதிரி மாநிலங்களுக்கிடையே போட்டி வந்து, மாநிலங்கள் நல்லமுறையில் அபிவிருத்தியடைவதற்கான வாய்ப்புகள் ஏற்படுமென்பதைச் சிந்தனை செய்து பார்க்க வேண்டும். இதையெல்லாம் நாளைக்கே செய்துவிட முடியுமென்று நான் சொல்லவில்லை. சிந்தனை செய்து பார்க்க வேண்டுமென்று மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்,

இன்னொன்று, மத்திய அரசினுடைய கொள்கையிலே நாம் உட்கார்ந்து கொண்டிருந்ததால், நம்முடைய நாட்டிலே விலைவாசி ஏறிப் போய்விட்டது. மாநில அரசைக் கேட்டால், நாம் என்ன சொல்கிறோம், "மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கையால் விலைவாசி ஏறிவிட்டது" என்கிறோம். ஏதோ நாம் பார்த்துக்கொள்கிறோம் என்று சொன்னால், நாளைக்கு மத்திய அரசு 'டெபிசிட் பட்ஜெட்' போடும் மத்திய அரசு உபரி பட்ஜெட் போட வேண்டும்; ரிசர்வ் வங்கியில் கடன் வாங்கக் கூடாது என்றெல்லாம் சொல்கிறது. ரிசர்வ் பாங்கு என்பது ஒரு அரசினுடைய வங்கி. அது மத்திய அரசினுடைய வங்கியல்ல. அரசு வங்கி. மத்திய அரசு போய் அதில் 'நோட்டு' அடித்து பணம் வாங்கினால், நாங்கள் போய் 'ஓவர் டிராப்ட்' வாங்குவதற்கு எங்களுக்கு உரிமை இருக்க வேண்டும். நாம் மட்டும் 'ஓவர்டிராப்ட்' வாங்கக் கூடாது என்று சொல்கிறார்கள். மத்திய அரசு மட்டும் பற்றாக்குறை பட்ஜெட் போடுகிறார்கள். சென்ற ஆண்டு பற்றாக்குறை பட்ஜெட் போட்டபோது, 1985-86-ல் பற்றாக்குறை பட்ஜெட் ரூ. 4,490 கோடி மத்திய அரசு போட்டது. இந்த ஆண்டு 1986-87-ல் 3,550 கோடி ரூபாய் பற்றாக்குறை பட்ஜெட் மத்திய அரசு போட்டிருக்கிறது. இந்த டெபிசிட் in terms of net R.D. and other Bank Credit to Government என்று ஒரு பெரிய பொருளாதார நிபுணர் கணக்கு போடுகிறார். இவர் Institute of Finance Management Research-ல் ஒரு Director பெரிய பொருளாதாரத் துறையில் அவர் ஒரு கணக்குப் போட்டுச் சொல்கிறார். இதனுடைய அடிப்படையில் பார்க்கும்போது, மத்திய அரசின் டெபிசிட் பட்ஜெட் 1985-86-ல் 3,550 கோடி ரூபாய் அல்ல; அதனுடைய டெபிசிட் பட்ஜெட் 8 ஆயிரம் கோடி; 1986-87-ல் 10 ஆயிரம் ரூபாய் டெபிசிட் பட்ஜெட் என்கிறார். ஆக இப்படிப் பற்றாக்குறை பட்ஜெட் போட்டுவிட்டு நாட்டில் விலை ஏறினால், இங்கிருக்கிற மாநில முதலமைச்சரைப் பார்த்து, 'விலை ஏறியது, விலை ஏறியது' என்று சொன்னால், நாங்கள் என்ன செய்ய முடியும்? இதற்கு எந்த விதமான கொள்கை அடிப்படையும் இல்லை. மத்திய அரசு யாரையும் கேட்பது கிடையாது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். எஸ்டேட் டியூட்டியை மத்திய அரசு எடுக்கிறது. எஸ்டேட் டியூட்டியால்தான் நமக்குப் பணம் வருகிறது. நமக்கு சென்ற 7 ஆண்டுகளில் இரண்டு அல்லது நான்கு கோடி ரூபாய் அதன் மூலம் வந்திருக்கும். அது திடீரென்று நமக்குக் கிடையாது என்று மத்திய அரசு கூறுகிறது. அப்போது நமக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இதை யாரைக் கேட்டு மத்திய அரசு செய்தது? முன்பெல்லாம் இன்கம் டாக்ஸ் கம்பெனிகளுக்கு மத்திய அரசு போட்டிருந்தது. 1961-ல் அதை 'கார்ப்பரேஷன் டாக்ஸ்' என்று மாற்றி, அதில் எங்களுக்குப் பங்கு கிடையாது என்று மத்திய





அரசு சொன்னது. இதை யாரைக் கேட்டு மத்திய அரசு செய்தது? மத்திய அரசு திடீரென்று இன்கம் டாக்ஸை 60 அல்லது 65 சதவீதத்திலிருந்து 55 சதவீதமாகக் குறைத்தது. நமக்கு டெபிசிட்டில் இருந்துவருகிற வரவு இன்கம் டாக்ஸ்-ல் இருந்து வருகிறது. இதைத் திடீரென்று குறைத்துவிட்டால், நமக்குப் பணம் குறைந்துவிட்டால், நமக்குக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே நமக்குப் பணம் அதிகமாக வருகிறதா, குறைய வருகிறதா, மத்திய அரசு என்ன செய்கிறது என்பதைப் பார்த்துத்தான் மாநில அரசு செய்யும். எனவே

(முற்பகல் 11-30)

தன்னிச்சையாக மத்திய அரசு எந்த மாநில அரசின் முதலமைச்சரையும் கலந்து பேசிடாமல் ஏதேனுமொரு முடிவை எடுத்தால், அதனால் ஏற்படுகிற சங்கடங்களுக்கு மாநிலங்களின் அரசுகள் எப்படிப் பொறுப்பாக முடியும்? அப்படிப்பட்ட காரியங்களால் ஏற்படுகிற விளைவுகளுக்கு மத்திய அரசுதான் பொறுப்பு என்றால், யாரும் அதைத் தவறு என்று சொல்ல மாட்டார்கள் என்றுதான் நம்புகிறேன்.

அடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையில் 41 வகையான மருந்துகளுக்கு இதுவரை இருந்த விற்பனை வரியைக் குறைத்திருக்கிறார்கள். அதாவது ஏற்கெனவே அவற்றின்மீது விதிக்கப்பட்ட 8 சதவீத விற்பனை வரியை 4 சதவீத விற்பனை வரியாகக் குறைத்திருக்கிறார்கள். அண்மையில் மத்திய அரசும் இதைப் போலவே 41 வகையான மருந்துகளுக்கு ஒரு சலுகை அளித்தது. அதாவது 41 வகையான மருந்துகளின்மீது விதிக்கப்பட்டு வந்த 10 சதவீத எக்சைஸ் டியூட்டியை அறவே எடுத்துவிட்டது. அதாவது 'எசென்ஷியல் டிரக்ஸ்' என்று உலகச் சுகாதார நிறுவனம் சொல்லிய 41 வகையான மருந்துகள், அதாவது சாதாரண ஏழை எளிய மக்கள் அதிகமாக வாங்கிப் பயன்படுத்துகிற மருந்துகள் மீதான 10 சதவீத எக்சைஸ் டியூட்டி நீக்கப்பட்டது. மத்திய அரசைப் பொறுத்தவரையில், அந்த 41 வகையான மருந்துகள் மீதிருந்த எக்சைஸ் டியூட்டி 10 சதவீதத்தை 5 சதவீதமாகக் குறைக்கவில்லை. மாறாக முழுமையாகவே நீக்கிவிட்டது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்த 41 வகையான மருந்துகள் மீது இதுவரை விதிக்கப்பட்டு வந்த விற்பனை வரியான 8 சதவீத வரி தற்போது 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இதில் நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், மத்திய அரசு செய்ததைப் போலவே மாநில அரசும் விற்பனை வரி முழுவதையும் நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் . . . . . .

தமிழ்நாடு ... சென்னை-600 008.
143547
D
V2:1,32 1986
222-285

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

புதன்கிழமை, 1986 ஏப்ரல் 2.
பங்குனி 19, குரோதன, திருவள்ளுவராண்டு 2017.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10.00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள் 139 மற்றும் 140 முதலில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

### நவீன அரிசி ஆலைகள்.

* 139 வினா—திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) தமிழகத்தில் உள்ள நவீன அரிசி ஆலைகளை மூட, இந்திய உணவு கார்ப்பரேஷன் எண்ணியுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அவற்றை தமிழக அரசு ஏற்று நடத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் இந்த ஆலைகளை ஏற்று நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மைய அரசு என்ன காரணத்திற்காக இப்படிப்பட்ட ஒரு திட்டம் கொண்டு வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

திரு. க. சுப்பு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களின் மருந்து உற்பத்தி நிறுவனத்தில் தயாரிக்கப்படும் மருந்துகளும் இந்த 41 வகையான மருந்துகளில் அடங்குகிறதா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு).

திரு. ஜி. சுவாமிநாதன்: எங்கள் கம்பெனியில் தயாரிக்கும் மருந்துகளும் இருக்கின்றன. ஆனால் எங்களைப் பொறுத்தவரையில், எங்களுக்கு ஒன்றும் இதனால் நட்டமும் இல்லை, லாபமும் இல்லை. விற்பனை வரியை நாங்கள் பொதுமக்களிடமிருந்து வசூல் செய்து கொடுக்கிறோம். பொதுமக்கள்தான் கொடுக்கிறார்கள் . . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அனுபவஸ்தர்தானே இதையெல்லாம் சொல்ல முடியும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: ஆக விற்பனை வரி போடுவதால் எங்களுக்கு ஒன்றும் நட்டமில்லை. நாங்கள் பொதுமக்கள் வாங்கும்போது, அவர்களிடமிருந்து வசூல் செய்து கொடுத்துவிடுகிறோம். இந்த மருந்துகள் எல்லாம் மக்களுக்குப் பயன்தரக் கூடிய மருந்துகள். அதனாலேதான் சொல்லுகிறேன்.

அதுமட்டுமல்ல. இதற்கு முன்பு மத்திய அரசு ஒரு 31 வகையான மருந்துகளின் மீதான எக்சைஸ் டியூட்டியையும்கூட எடுத்துவிட்டது. அதாவது தற்போது 41 வகையான மருந்துகள் மீது எடுத்ததல்லாமல், ஏற்கெனவே ஒரு 31 வகையான மருந்துகள் மீதும் எக்சைஸ் டியூட்டியை எடுத்து விட்டது. 'எசென்ஷியல் டிரக்ஸ்' என்று அதுதான் முதல் பட்டியலாக வந்தது. பல 'ஆன்டி-பயாடிக்' மருந்துகளான ஆம்பிசிலின், பெனிசிலின் போன்ற மருந்துகள் மீதிருந்த எக்சைஸ் டியூட்டியை நீக்கினார்கள். அந்த வகையில் தற்போது பாதியாக விற்பனை வரியைக் குறைத்தது மட்டும் போதாது என்று சொல்லி இந்த 41 வகையான மருந்துகள் மீதும் முழுமையான அளவுக்கு விற்பனை வரியை அறவே நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு முதலில் வெளியிட்ட 31 வகையான மருந்துகளின் மீதிருந்த வரியை நீக்கியது குறித்த நோட்டிபிகேஷன்கூட என்னிடம்தான் இருக்கிறது. வேண்டுமானால் அதையும் நான் அமைச்சர் அவர்களிடம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, காவிரிப் பிரச்சினையைப் பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். காவிரிப் பிரச்சினையைப்பற்றி நாம் நிறைய பேசியாகிவிட்டது. பேரவையிலும் பேசிவிட்டோம், மேலவையிலும் பேசிவிட்டோம். பொதுவாக இந்தப் பிரச்சினையைப் பேசித் தீர்க்க வேண்டும் என்றுதான் எல்லோரும்





சொல்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலிருந்து வருகிறவன் என்ற அடிப்படையில், ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். காவிரிப் பிரச்சினையைப் பொறுத்த வரையிலும், பல ஆண்டுகளாகவே நாம் பேசிப் பேசிப் பார்த்தும் எந்தப் பயனும் ஏற்படவில்லை. எனவே இன்னும் அதைப் பேசிக் கொண்டிருப்பதாலே எந்தப் பயனும் ஏற்படாது. எனவேதான் இனியும் பேச்சு வார்த்தையில் ஈடுபடாமல் காவிரி நீர்ப் பிரச்சினையில் பேச்சுவார்த்தை முறிந்துவிட்டது என்று நமது மாநில அரசு சொல்ல வேண்டும். அவ்வாறு பேச்சு வார்த்தை முறிந்துவிட்டது என்று சொல்லிவிட்டு இன்டர்-ஸ்டேட் ரிவர் வாட்டர் டிரிப்யூனலுக்கு நாம் போக வேண்டும். 1956 ஆம் ஆண்டு இன்டர் ஸ்டேட் வாட்டர் டிஸ்பியூட்ஸ் ஆக்ட்டின் அப்படிடையில் ஒரு டிரிப்யூனலுக்கு இதை அனுப்ப வேண்டுமென்று நாம் மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள். அவரும் காவிரி பிரச்சினை சம்பந்தமாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பேசுகிறார்கள், இதையெல்லாம் ஓரளவுக்கு நாம் ஒப்புக்கொண்டாலும்கூட, அந்தந்த மாநிலத்தினுடைய இன்ட்டரஸ்ட் என்று வருகிறபோது, யாரும் ஒத்துப் போக முடியாது. நாளைக்கு மாண்புமிகு திரு. ஹெக்டே அவர்கள் அவருடைய மாநிலத்திற்கு பாதகமான ஒன்றைச் செய்தார் என்று அங்கே உள்ள எதிர்க் கட்சிகளால் பேசப்பட்டால், அது அவருடைய பதவிக்கே ஆபத்தாகிவிடும். எந்த ஒரு முதலமைச்சரும் தன்னுடைய பதவிக்கு ஆபத்து வரும் நிலையில் எதையும் செய்ய முன்வரமாட்டார். நாமும் 1974 ஆம் ஆண்டிலிருந்தே நம் உரிமையைப் பற்றிப் பேசி வருகிறோம் . . .

* மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கருநாடக மாநிலத்தைப் பொறுத்த வரையில், மாண்புமிகு திரு. ஹெக்டே அவர்கள் முதலமைச்சராக இருந்தாலும், அங்கே எதிர்க் கட்சியாக இருக்கிற, மத்திய அரசில் ஆளும் கட்சியாக இருக்கிற, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியும் சேர்ந்து தமிழகத்திற்கு ஆதரவாக, அதற்குச் சேர வேண்டிய உரிமைகளைப் பெறக் கூடிய அளவுக்கு காவிரிப் பிரச்சினையில் ஒரு திருப்பம் உருவாக்கும் என்ற நம்பிக்கையில் அரசு தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** அமைச்சர் அவர்கள் மிகவும் 'ஆப்டிமிஸட்டிக்' ஆக இருக்கிறார். நான் 'பெசிமிஸ்ட்' ஆக இருக்கிறேன். ஆங்கிலத்தில் சொல்லு வார்களே அதைப் போல் நமது அமைச்சர் 'இன்கியூரபிளி ஆப்டிமிஸ்ட்டிக்' ஆக இருக்கிறார். நான் சொல்வது பேசுவதற்கு ஒரு முடிவு வேண்டும். 1974 ஆம் ஆண்டிலிருந்து பேசி வருகிறோம். ஒவ்வொரு கட்டத்திலும் பேசி வருகிறோம். இன்னும் ஒரு முடிவு ஏற்படவில்லை . . . . பல்லாண்டுக் காலமாகப் பேசியும் முடிவுக்கு வரவில்லை. முடிவு இல்லாமல் எப்படிப் போக முடியும்? இதற்காகத்தான் 'வாட்டர் டிஸ்ப்யூட் ஆக்ட்' இருக்கிறது. நம்முடைய பேச்சு வார்த்தை முறிந்து போய்விட்டது என்று மத்திய அரசாங்கத்திடம் சொன்னால்தான், மத்திய அரசாங்கம் தலையிட முடியும். மத்திய அரசாங்கத்தில் உள்ள கட்சி கர்நாடகத்திலே எதிர்க் கட்சியாக இருக்கிறது.

(முற்பகல் 11-35)

ஆகவே அவர்கள் நம்முடன் ஒத்துழைப்பார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கே எதிர்க் கட்சியாக உள்ள காங்கிரஸ் கட்சி, ஹெக்டே அமைச்சரவையின் காலை இழுக்கலாமா என்றுதான் பார்க்கும். எதிர்க் கட்சியின் வேலையே அதுதான். 'மேஸ் பார்லிமெண்டரி பிராக்டிஸ்'-ன் படி எதிர்க் கட்சியின் வேலையெல்லாம் ஆளும் கட்சியைக் கவிழ்ப்பதுதான்.

**திரு. ப. மாணிக்கம்:** தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி ஏற்கெனவே காலை இழுத்துவிட்டது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** எதிர்க் கட்சியினுடைய வேலை எல்லாம் ஆளும் கட்சியைக் கவிழ்ப்பதுதான்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியவில்லை என்று சொன்னதற்குப் பிறகு நாம் டிரிபியூனலுக்குப் போகலாம். சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்த பிறகும், அன்றைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், சமரசமாகத் தீர்த்து வைப்பதாகச் சொன்னதால்தான், வழக்கு வாபஸ் பெறப் பட்டது. . மத்திய சர்க்கார் இது முறிந்துவிட்டது என்று சொன்னதற்குப் பிறகுதான், டிரிபியூனலுக்குப் போக வாய்ப்பு இருப்பதாகச் சொல்கிறார்கள்.





**திரு. ஜி. சுவாமிநாதன்:** சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு போட்ட வழக்கை ஏன் வாபஸ் பெற்றார்கள் என்று தெரியவில்லை. இண்டர்-ஸ்டேட் வாட்டர் டிஸ்ப்யூட்டைப் பொறுத்தவரையில் — ஒரு மாநிலத்திற்கும் மற்றொரு மாநிலத்திற்கும் இடையே உள்ள வழக்குகளை அல்லது மத்திய அரசுக்கும் ஒரு மாநில அரசுக்கும் இடையே உள்ள பிரச்சினைகளையெல்லாம் — ஆர்ட்டிக்கிள் 132-ன் அடிப்படையில் சுப்ரீம் கோர்ட் விசாரணை செய்ய உரிமை இருக்கிறது. இண்டர்-ஸ்டேட் வாட்டர் டிஸ்பியூட்டைப் பொறுத்த வரையில், தனக்கிருந்த அதிகாரத்தை மத்திய அரசாங்கம் மாற்றி, இண்டர்-ஸ்டேட் வாட்டர் டிஸ்பியூட் சட்டத்தின் கீழ் கொண்டு வந்தது. அதன் அடிப் படையில்தானே வழக்கைப் போட்டார்கள். ஏதாவது ஒரு நியாயமான காலத்திற்குள் முடித்து வைக்க வேண்டுமென்று கேட்டு சுப்ரீம் கோர்ட்டுக்குப் போக நமக்கு உரிமை இருக்கிறது. சட்ட நிபுணர்களைக் கலந்துகொண்டு தானே சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றார்கள். தெரியாமலா சென்றார்கள்? திரு. முரசொலி மாறன் போனார். தெரியாமலா சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனார்? இந்த இன்டர்-ஸ்டேட் வாட்டர் டிஸ்பியூட் ஆக்டின் கீழ் உள்ள பிரச்சினைகள் இரண்டு மாநிலங்களுக்கிடையே பேசப்பட்டு அந்தப் பிரச்சினை முறிந்துவிட்டது என்று மத்திய அரசுக்குச் சொல்லி, மத்திய அரசு மத்தியஸ்தம் செய்து பார்த்தும் முடியவில்லை என்ற அளவிற்கு வந்த பிறகு தான், டிரிபியூனலுக்கு விட வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரிந்து விட்டது. ஆகவே இவ்வளவும் தெரிந்துகொண்டு, சட்ட நிபுணர்களைக் கலந்துகொண்டு, டில்லியிலே இருக்கக்கூடிய சட்ட நிபுணர்களைக் கலந்து கொண்டுதானே வழக்குப் போட்டார்கள்? இதற்காக ஆயிரக்கணக்கான, பல்லாயிரக்கணக்கான ரூபாய் வசூல் செய்யப்பட்டது. ஏக்கருக்கு இவ்வளவு ரூபாய் என்று வசூல் செய்யப்பட்டது. அப்போது திரு. மன்னை நாராயண சாமி அவர்கள் விவசாய அமைச்சராக இருந்தார்கள். தஞ்சை மாவட்டத்திலே இருந்த நாங்கள் எல்லோரும் இலட்சக்கணக்கான ரூபாயைக் கொடுத்தோம். வழக்குப் போட செலவிற்கான பணம் கொடுத்தது என்னவாயிற்று, அதனுடைய கணக்கு என்ன என்பது தெரியவில்லை. அந்தப் பணத்தை என்ன செய்திருக்கிறார்கள் என்று கேட்டபோது, அதை திரு. மூப்பனாரிடம் கொடுத்துவிட்டேன் என்று திரு. மன்னை நாராயணசாமி அவர்கள் அமைச்சராக இருக்கும்போது சொன்னார். என்னிடத்திலே அந்தப் பணம் வரவில்லை என்று திரு. மூப்பனார் பத்திரிகைகளிலே அறிக்கை விட்டார். அந்தப் பணம் யாரிடத்திலே இருந்தது, எங்கே போயிற்று என்பது தெரியாது. அது வேறு விஷயம். ஒன்றுமே தெரியாமலே எப்படி சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனார்கள்? ஒரு காலத்திற்குள்ளாக முடிக்கவில்லை என்றால், அதை

மத்திய அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்ல நமக்கு உரிமை இருக்கிறது. மத்திய அரசாலும் முடியவில்லையென்றால், கோர்ட்டுக்குப் போகலாம்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மாதிரிதான் கோர்ட்டுக்குப் போனோம். அன்றைக்கு இருந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், சுமுகமாகத் தீர்த்து வைப்பதாகச் சொன்னதால்தான், வழக்கு வாபஸ் வாங்கப்பட்டது. அது பற்றிய மற்ற விவரங்கள் என்னிடத்திலே இல்லை, இருந்தால் சொல்லலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: ஒன்றும் தெரியாமலா கோர்ட்டுக்குப் போனார்கள்? திருமதி இந்திரா காந்தி அவர்கள் சொன்னால், ஏன் வாபஸ் வாங்கினார்கள்? அப்போது டாக்டர் கே. எல். ராவுடன்கூட பேசினார்கள். திருமதி இந்திரா காந்தி அவர்கள் பிரதம அமைச்சராக இருந்தபோது, திரு. ஜெகஜீவன்ராம் அவர்களோடுகூட பேசினார்கள். அது முடியவில்லை என்றுதானே வழக்குக்குப் போனார்கள்? திருமதி இந்திரா காந்தி கூப்பிட்டுச் சொன்னார் என்றாலும், அதிலே மாநிலத்திற்கு நஷ்டம் இருப்பதாகக் கருதினால், எதற்காக வழக்கை வாபஸ் பெற வேண்டும்? அப்போது வழக்கை வாபஸ் பெறாமல் இருந்திருந்தால், இன்று வழக்கு முடிந்திருக்கும். 1972 ஆம் ஆண்டிலேயே வழக்கு போட்டிருந்தால், இந்த 14 வருஷத்தில் அந்த வழக்கே முடிந்திருக்கும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரே கூட சுப்ரீம் கோர்ட்டுக்குப் போயிருக்கலாமே. மாநில அரசு செய்தது தவறு என்று அவர் கோர்ட்டுக்குப் போனதாகத் தெரியவில்லை. அன்றைய சூழ்நிலையில், கோர்ட்டுக்குப் போக வேண்டிய சூழ்நிலையில் போனோம். அது நாவலர் அவர்களுக்கும் தெரியும். அன்றைக்குச் சுமுகமாகத் தீர்ப்பதாக அன்றைய பிரதமர் சொன்னதால்தான், வழக்கு வாபஸ் வாங்கப்பட்டது. அது இன்னும் முடியவில்லை, காலம் ஆகிறது.

(முற்பகல் 11-40)

திரு. ஜி. சுவாமிநாதன்: அந்தக் காரணமாகத்தான் அது இழுத்துக் கொண்டிருக்கிறது. சுப்ரீம் கோர்ட் வரையில் சென்று அது முடிந்துவிட்டது. அதைத்தான் நான் இப்போது சொல்கிறேன். ஆக ரீசனபிள் டைம்க்குள்ளாக அந்த ரிவர் வாட்டர் டிஸ்ப்பியூட்டைத் தீர்க்க வேண்டும் என்று மத்திய



அரசுக்குச் சொல்லியிருந்தால், ஒரு காலத்திற்குள் முடிவு வந்திருக்கும். 3 மாதத்திற்குள் அல்லது 6 மாதத்திற்குள்ளே நீங்கள் முடித்துவிடுங்கள் என்று சுப்ரீம் கோர்ட்டில் சொல்லியிருப்பார்கள். அந்த 6 மாதத்திற்குள்ளாக, அவர்கள் அந்த டிஸ்பியூட்டுக்குப் போகவில்லை என்று சொன்னால், நிச்சயமாக இதற்கு ஒரு தீர்வு வந்திருக்கும். நல்ல தீர்வோ அல்லது கெட்ட தீர்வோ, ஏதாவது ஒரு தீர்வு ஏற்பட்டிருக்கும்.

நான் இன்று சொல்கிறேன். ரவி, பியாஸ் ஒப்பந்தம், லோங்கோவால் ஒப்பந்தம் என்று இரண்டு நாட்களாகப் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதை மத்திய அரசாங்கம் டிரிபியூனலுக்கு விட்டு 6 மாதத்திற்குள்ளாகத் தீர்வு சொல்ல வேண்டும் என்று சொல்லும் சூழ்நிலை இருக்கின்றது. ஆக ஒப்பந்தம் என்று சொல்கின்றபோது அதை மீறவேண்டிய அவசியம் இல்லை. இன்று ஒரு அமெண்ட்மெண்ட் ஆக்ட் கூட பாஸ் பண்ணியிருக்கிறார்கள். 6 மாதத்திற்குள்ளாக முடிவு செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்த மாதிரியாவது முடிவு பண்ணவேண்டியதுதானே. அந்த நிலைமைதான் இதற்கும் இருக்கின்றது. காலத்தை வரையறுக்க வேண்டும். நான் எதற்குச் சொல்கின்றேன் என்றால், ஏதாவது ஒரு நிலைமையை உற்பத்தி செய்ய வேண்டும். ஓராண்டு காலம் 6 மாத காலம் பொறுத்திருங்கள் என்று சொன்னால், அந்த ஒரு ஆண்டு அல்லது 6 மாத காலத்திற்குள் முடியவில்லை என்று சொன்னால், ஏதாவது ஒரு முடிவிற்கு வர முடியும். முடிவே இல்லாமல் போய்க்கொண்டிருந்தால், நாட்டிலே உள்ள மக்களுடைய பிரச்சினையை மத்திய அரசாங்கம் தீர்க்க முடியாது. இதில் மாநில அரசுகள் எப்படித் தீர்க்க முடியும்? இதையெல்லாம் மத்திய அரசுதான் தீர்க்க வேண்டும். மத்திய அரசுக்கு பிரச்சினையைத் தீர்க்கின்ற உணர்ச்சி இல்லை. அந்த நிலைமைகள்தான் இருக்கின்றன என்று சொல்லிக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால் மாநிலத்திற்கு மாநிலம் பிரச்சினையாக இருக்கின்றது. அப்போது திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களிடம் பேசினோம். பிறகு திரு. மொரார்ஜி தேசாய் அவர்களிடம் பேசினோம். எந்தப் பிரதமராக இருந்தாலும், மாநிலத்திற்கு மாநிலம் பிரச்சினை என்று வரும்போது, அதில் முடிவுக்கு வரக் கஷ்டப்படுகின்றார்கள். ஆகவே தான் பேரவையிலே ரிவர் வாட்டர்களை 'நேஷனலைஸ்' பண்ண வேண்டும் என்று சொல்கின்றார்கள். ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு ரிவர்ஸ் போகின்ற நிலைமை இருந்து அரசுகளுக்கிடையில் சங்கடம் ஏற்பட்டால், தாவா ஏற்பட்டால், இன்றைக்கு மத்திய அரசுக்குத் தீர்ப்பதற்கு அதிகாரம் இருக்கின்றது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1986 ஏப்ரல் 2

மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் நேரம் ஆகிவிட்டது என்பது போல் பார்க்கின்றார். நான் முடிவாக ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நிதிநிலை அறிக்கையிலே பல பேர் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றார்கள். அதிலே அன்றையதினம் நம்முடைய நிதிநிலை அறிக்கை வந்த பிறகு ஒன்றைச் சொன்னார்கள். கள்ளுக்கடைகள், அரசு ஷாப்ஸ், அதாவது சாராயக் கடைகளை மூடுவதுபற்றிச் சொன்னார்கள். இதிலே நமது அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். இதற்கும் மேலே தெளிவாகச் சொல்ல முடியாது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்னும் தெளிவாக வேறு யாரும் சொல்ல முடியும் என்று நான் கருதவில்லை. வரும் ஆண்டு ஜனவரித் திங்களில் இருந்து என்று சொல்லியிருக்கின்றார்கள். 21-வது பாராவில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜெட் உரையில் சொல்லியிருக்கின்றார்கள். அதுவும் அவர்கள் ஆணித்தரமாகவே சொல்லியிருக்கின்றார்கள். இதைக் கொண்டுவருவார்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். அவர்கள் படித்திருக்கின்றார்கள். வரும் ஆண்டு ஜனவரி திங்களிலிருந்து என்று, மேதகு ஆளுநர் அவர்களின் உரை மீதான விவாதத்திற்கு சட்ட மன்றத்தில் பதில் அளிக்கும்போது சொல்லியிருக்கின்றார்கள்.

"இந்த ஆண்டு சனவரித் திங்களில் மேதகு ஆளுநர் அவர்களின் உரைமீது நடந்த விவாதத்திற்குச் சட்டமன்றத்தில் நான் பதில் அளிக்கும்போது 1987 சனவரித் திங்கள் முதல் நாள் முதற்கொண்டு, தமிழ்நாடு முழுவதிலும் கள்-சாராய விற்பனை அறவே நிறுத்தப்பட்டு, மதுவிலக்கு மீண்டும் கொண்டு வரப்படும் என்ற அரசின் முடிவு அறிவிக்கப்பட்டது. இவ்வாறு மதுவிலக்கை நடைமுறைக்குக் கொண்டுவருவதன் மூலம், 1986-87 ஆம் நிதி ஆண்டில், ரூ. 60 கோடி அளவுக்கு அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும். இந்த இழப்பைக் கருத்தில் கொண்டுதான் 1986-87 ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

எனினும், 1987-88 ஆம் நிதி ஆண்டில், மதுவிலக்கின் மூலம் வருவாய் இழப்பு ரூபாய் 250 கோடியாக இருக்கும் என்று கணக்கிட வேண்டிவரும்".

இதைவிட என்ன சொல்ல முடியும்? திருப்பித் திருப்பிச் சொல்கின்றார்கள். அதைக் கொண்டுவருவார்களா என்று கேட்கின்றார்கள். சூசகமாகத்தான் சொல்லியிருக்கின்றார்கள் என்று சொல்கின்றார்கள். இதைவிட எப்படி நேரடியாகச் சொல்வது? 'இந்து' பத்திரிகையிலேகூட வந்திருக்கின்றது. பட்ஜெட் என்ன என்பது பற்றி போட்டிருக்கின்றார்கள். பிரோகிபிஷன்



1986 ஏப்ரல் 2] [திரு. ஜி. சுவாமிநாதன்]

பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் கருத்தைக் கேட்டுப் போட்டிருக்கின்றார்கள். அவர் என்ன சொல்லியிருக்கின்றார்.

Mr. M. Karunanidhi. M.L.C. and President of the D.M.K. regretted that there was no categorical announcement about the re-introduction of total Prohibition from January 1, 1987. The Finance Minister has only spoken of the revenue loss that the Government would incur by closing down the arrack shops. Instead of letting the people infer, the much awaited and happy announcement could have been made more clearly.

என்று சொல்லியிருக்கின்றார். தெளிவாகச் சொல்லவில்லை என்ற கருத்தில் சொல்லியிருக்கின்றார்கள்.

அதே நேரத்திலே மதிப்பிற்குரிய முன்னாள் முதல்வர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் அதைப்பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள். அதை நான் நன்றாகப் படிக்கிறேன், கேட்டுக்கொள்ளுங்கள்.

Mr. M. Bhaktavatsalam, a former Chief Minister, congratulated the Chief Minister on his firm decision to re-introduce Prohibition from January next and the Finance Minister on lowering taxes on certain essential commodities.

இதைத்தான் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இது 'கன்பர்ம்ட் டெசிஷன்'. தீர்க்கமாகவே சொல்லியிருக்கின்றார். ஆனால் அவர் தெளிவாகச் சொல்லவில்லை என்று சொல்கின்றார்கள். காரணம் என்ன? அந்தக் காலத்திலே சொல்வார்கள். ஐன்ஸ்டீன் அவர்களிடம் போய் ரிலேடிவிடி தியரி பற்றி கேட்டார்களாம். காலம் என்று சொல்கின்றார்களே அது எப்படி என்று கேட்டார்களாம். மனிதர்கள் மனம் எப்படி மாறும் என்று ஐன்ஸ்டின் அவர்களிடம் கேட்டார்களாம். அவர் சொன்னார்: "ஒரு அழகான இளம் பெண்ணோடு ஒரு மனிதன் அமர்ந்திருக்க வேண்டும். இன்னொருவன் நெருப்புக்குப் பக்கத்திலே 5 நிமிடம் உட்கார்ந்திருக்க வேண்டும். இளம் பெண்ணோடு உட்கார்ந்திருந்த மனிதனுக்கு அது 5 நிமிடமாகத் தெரியும். ஆனால் நெருப்புக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தவனுக்கு அதே காலம் ஒரு மணி நேரமாகத் தெரியும்'' என்றாராம். அதாவது காலம் என்பது மனிதனுடைய எண்ணத்தைப் பொறுத்ததாகும் என்று சொன்னாராம். அதுபோலத்தான் நிதிநிலை அறிக்கையும் தெரியும். அதிலே குறை காண வேண்டும் என்ற நினைப்போடு பார்த்தால், அது குறையாகத் தான் தெரியும். முதிர்ந்த அரசியல்வாதிகளாக இருப்பவர்கள் அப்படிப் பார்க்கக்

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1986 ஏப்ரல் 2

கூடாது என்று சொல்லிக்கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி மிகச்சிறந்த நிதிநிலை அறிக்கையை வைத்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்து விடைபெற்றுக்கொள்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-45)

திரு. மு. செ. சங்கரலிங்கம்: தலைவரவர்களே, 1986-87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் முன்னாலே நடந்த திட்டங்களின் பயன்கள் மக்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கின்றனவா என்று சுட்டிக் காட்டாமல், இப்போது துறைவாரியாக ஒதுக்கப்பட்ட நிதி நிலை அறிக்கை என்பதைவிட, சிறந்த கணக்குப் பத்திரமாகத் தோன்றுகிறது. இந்த நிதிநிலை அறிக்கையிலே இந்த ஆண்டு 10 இலட்சம் வீடுகள் கட்டித் தருவதாக அரசு தெளிவாக அறிவித்திருந்தாலும், அதற்குப் போதிய நிதி ஒதுக்கீடு இல்லை. 40 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் திரும்பவும் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆயிரம் கோடி ரூபாய் செலவாகும் அந்த இடத்தில், மத்திய அரசு வழங்குமென்ற நம்பிக்கை இருந்தாலும், எனக்கு வந்த ஐயப்பாடு, ஓராண்டுக்கு முன்னால் ஆசிரியர் வீட்டு வசதி வாரியம் ஒன்று அமைக்கப்பட்டு, அதற்கு வாரியத் தலைவர் நியமிக்கப்பட்டு, அவருக்கு வாகனங்கள் கொடுக்கப்பட்டு, அவருக்கு வீட்டு வசதியும் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது ; ஆனால் ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்படவில்லை; ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்திருக்கிறார்களா என்றால் இல்லை.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

அதற்கு நிதி ஒதுக்கீடுகூட செய்யவில்லை. அப்படி நிதி ஒதுக்கீடு செய்யாததோடு, அரசு அனுமதி பெற்றோ, பெறாமலோ தெரியவில்லை, 20 ரூபாய் ஒவ்வொரு ஆசிரியரும் தர வேண்டுமென்று தாக்கீது அனுப்பியிருக்கிறார்கள். அரசு நிதி ஒதுக்காமல், ஆசிரியர்களிடம் நிதி பெற்று, வீடு கட்டித் தர முடியுமா என்ற சந்தேகம் அந்தத் திட்டத்தில் இருக்கும்போது, இந்தத் திட்டத்திலும் சந்தேகம் வருகிறது. ஆயிரம் கோடி ரூபாய் வீடு கட்டும் திட்டத்திற்குத் தேவைப்படும்போது, 40 கோடி ரூபாயில் வீடு கட்டிக் கொடுக்க முடியுமா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. மத்திய அரசின் நிதி உதவி பெற்று



1986 ஏப்ரல் 2] [திரு. மு. செ. சங்கரலிங்கம்]

செய்வோம் என்று சொல்லுகிறார்கள். ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படும் இடத்தில் 40 கோடி ரூபாயை ஒதுக்கிவிட்டு, மிச்சமுள்ள 960 கோடி பெற்று, வீடுகளைக் கட்ட வாய்ப்பு இருக்கிறதா என்ற சந்தேகத்திலேதான் கேட்கிறோம். வறுமைக் கோட்டுக்குள்ளே உள்ளவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தர வேண்டும். அதில் எந்தக் கருத்து மாறுபாடுமில்லை. ஆனால் நிதி இல்லாமல் வீடு கட்டிக் கொடுக்க முடியுமா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, அரசு போட்டுள்ள திட்டங்களில் சிறந்த திட்டமாகப் பேசப்படுவது முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம். ஆனால் அந்தத் திட்டத்தின் கீழ் ஒதுக்கியுள்ள நிதி முழுவதும், மக்களின் வரிப் பணத்தில் ஒதுக்கியுள்ள நிதி முழுவதும் மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதை உறுப்பினர் என்ற முறையிலே மாத்திரம் சொல்லவில்லை; ஆடிட்டர்-ஜெனரல் அவர்களின் 1983-84 ஆம் ஆண்டு அறிக்கையில் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சத்துணவு மையங்களில் வழங்கப்பட்ட உணவால் அரசுக்கு நிதி இழப்பு; அவை மக்களுக்குப் போய்ச் சேராமல் இடையிலேயே யாரோ ஒருவருக்குப் போய்ச் சேர்ந்துகொண்டிருக்கிறது. உதாரணமாக ஒரு 12 பக்க அளவில் சொல்லியிருப்பதை ஒருசில வரிகளில் நான் சுட்டிக்காட்டக் காரணம், 1983-84 ஆம் ஆண்டு ஆடிட்டர்-ஜெனரல் அறிக்கையில் கூறியுள்ளதற்கு, யார் மேலாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? கிட்டத்தட்ட 30 கோடி ரூபாய்க்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அரசுக்கு இழப்பு; மக்களுக்கு அது போய்ச் சேரவில்லை. ஆடிட்டர்-ஜெனரல் அறிக்கையில் செங்கற்பட்டு, வட ஆற்காடு, சேலம், மதுரை நகராட்சி, சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் குழந்தைகள் நலத் திட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட அதிகமான உணவு அளித்த கணக்கு 4,256 பேர்கள். 20 வட்டாரங்களில் மட்டும் இந்த இழப்பு, 8 இலட்சம் ரூபாய் என்ற கணக்கு கொடுத்திருக்கிறார்கள். 20 வட்டாரங்களில் 8 இலட்சம் என்றால், தமிழகத்திலே 354 பிளாக்குகள், முனிசிபாலிட்டிகள், கார்ப்பரேஷன்கள் இருக்கின்றன. இவைகளில் சென்று பார்த்தால், நஷ்டம் கோடிக் கணக்கில் வருகிறது. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? சத்துணவு மக்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறதா அல்லது இடையிலேயே நின்று விட்டதா என்று அறிய விரும்புகிறேன். திட்டம் போடும்போது, திட்டத்தின் பலன் மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதற்காகத்தான் ஒரு கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-50)

சில இடங்களில் கண்காணிப்புக் குழு அமைக்கப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன். அந்தக் குழுவும் கூடவே இல்லை. கூடியதும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே, அரசுக்கும் மக்களுக்கும் இடையே உள்ளவர்களிடம் ஏதோ விவகாரம் நடந்திருக்கிறது என்று நினைக்கிறார்கள். பல்வேறு விதமாக மக்கள் மத்தியிலே இதுபற்றிப் பேசப்படுகிறது. யாராக இருந்தாலும், "சீசரின் மனைவி கூட சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும்". அதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். அரசாங்கத்தில் ஒரு சட்டம் கொண்டு வருகிறார்கள் என்றால், அமைச்சர் உட்பட அது விசாரிக்கப்படக்கூடிய ஒன்றாக இருக்க வேண்டும். மத்திய அரசு கொண்டு வந்ததுபோல், லோக் பால் சட்டம் என்று நினைக்கிறேன், ஒரிசா, மகாராஷ்டிரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில்கூட சட்டம் கொண்டு வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஆனால் தமிழ்நாட்டிலே இது சம்பந்தமாக ஏற்கெனவே இருந்த சட்டத்தைக்கூட ரத்து செய்திருக்கிறார்கள். அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து தவறு செய்பவர்கள் குறித்து மக்கள் குற்றம் சாட்டுகின்ற உரிமை கொடுக்கப்பட வேண்டும். * * *

திரு. எஸ். ஆர். இராதா : * * * வாய்ப்பாக அம்மாதிரி செய்கிறார்கள். அதை இங்கே உறுப்பினர் அவர்கள் குற்றச்சாட்டாகச் சொல்வது சரியல்ல. * * *

திரு. மு. செ. சங்கரலிங்கம்: அதுபற்றிய சட்டம் இருந்திருந்தால், இம்மாதிரி வந்திருக்காது. குற்றச்சாட்டுகள் குறித்து நீதிமன்றத்திற்குச் செல்கின்ற நிலைமையும், பத்திரிகைகளில் விமர்சனம் செய்யப்படுகின்ற நிலைமையும் அப்போது வந்திருக்காது.

திரு. எஸ். ஆர். இராதா: ஊழல் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காகத்தான் அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அச்சட்டம் இருக்கும்போதே ஊழல் குற்றச்சாட்டுகள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்தார்கள். சட்டத்தையும் எதிர்த்தார்கள். அதற்குப் பின்னால்தான் அதனால் பலனில்லை என்பதால் அதை எடுத்துவிட்டார்கள்.

*** தலைவர் ஆணைப்படி நீக்கப்பட்டது.



திரு. மு. செ. சங்கரலிங்கம்: அதனால்தான் சட்டத்திலுள்ள குறைகளை நீக்கி மக்களும் கலந்துகொள்ளும் வகையில் சட்டம் இருந்தால் * * * நிலைமையும் வராது. * * * நிலைமையும் வராது என்பதனை நான் இந்த அரசு ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : உறுப்பினர் குறிப்பிட்ட * * * என்கிற பகுதியை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): பத்திரிகைச் செய்தியை வைத்து இங்கே பேசக்கூடாது. அந்த அடிப்படையில் உறுப்பினர் குறிப்பிட்ட அந்தப் பகுதி அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. மு. செ. சங்கரலிங்கம்: நான் பத்திரிகையில் வந்தது என்ற அடிப்படையில் மட்டும் கூறி நிறுத்தவில்லை. இப்படி இனிமேல் நடக்கக் கூடாது என்பதற்காகவும் நான் அதனைச் சுட்டிக்காட்டினேன். * * *

டாக்டர் இரா. சனார்த்தனம்: * * * என்று சொல்வது தலைவருடைய தீர்ப்பையே விமர்சனம் செய்வதுமாதிரி உள்ளது. இது முறைதானா ?

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): உறுப்பினர் தலைவருடைய தீர்ப்பைப் பற்றி * * *என்று விமர்சனம் செய்தது முறையல்ல என்பதால், அந்தச் சொற்களையும் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியிலே எடுக்கின்ற முடிவின் அடிப்படையில் யார் யாருக்கு என்னென்ன பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டும் என்பது பற்றி முடிவு செய்ய வேண்டியது கட்சியின் தலைவராகவும் முதல்வராகவும் இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொறுப்பு. காமராஜ் அவர்கள் முதல்வர் பொறுப்பை விட்டுவிட்டு கட்சிப் பொறுப்புக்குப் போனார் என்றால் * * * 'கே' பிளான்படி பல்வேறு அமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள் உட்பட அமைச்சர் பொறுப்பிலிருந்து கட்சிப் பணிக்குப் போனார்கள் என்றால், * * * என்பதல்ல. மத்திய

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

அரசாங்கம்கூட ஒவ்வொரு தடவையும் பல்வேறு அமைச்சர்களை கட்சிப் பொறுப்புக்கு மாற்றுகிறது என்றால், அது அந்தக் கட்சியின் தலைவர் எடுக்கின்ற முடிவு. அதுபோல் அந்தந்த மாநிலங்களில் கட்சியின் முதல்வர் அவர்கள் எடுக்கின்ற முடிவு.

(முற்பகல் 11-55)

அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வைப் பொறுத்தவரையில், அதன் தலைவர், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்திருக்கின்ற முடிவு * * * சொல்வது பொருந்தி வராது. கட்சியின் தலைவர், ஆட்சியின் தலைவர் எடுக்கின்ற ஒரு தன்மையே தவிர வேறல்ல. திரு. திவாரியை மத்திய அமைச்சர் பொறுப்பிலிருந்து மாற்றினார்கள் என்றால் * * * பின்பு அவர் உத்தரப் பிரதேசத்தின் முதலமைச்சராக ஆனார். மறுபடியும் மத்திய அமைச்சராக அவரை இழுத்துக் கொண்டார்கள். திரு. அர்ஜுன்சிங் முதல் அமைச்சராக ஆனார். இப்படி ஏராளமான உதாரணங்களைக் காட்டலாம். எங்கு பார்த்தாலும் நடக்கத்தான் செய்கிறது. அது கட்சியைப் பொறுத்த நிலைமை, ஆட்சியைப் பொறுத்த சூழ்நிலை. அப்படி * * * அவசியமும் இல்லை. அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வைப் பொறுத்த வரையில், அப்படியில்லை என்பதைத் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, நானும் அந்த அடிப்படையில்தான் பேசினேன். * * * அதற்கான சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று சொன்னேன். சத்துணவுத் திட்டத்தில் மாணவர்களுக்குத் தட்டும் டம்ளரும் வழங்க வேண்டுமென்று ஆணை இருந்தாலும், பல்வேறு இடங்களில் அவைகள் வழங்கப்படவில்லை. இதுபோக, தமிழ் நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலிருந்து அரிசி மூட்டையோடு சாக்கும் சேர்ந்து கொடுக்கப்படுகிறது. அந்தச் சாக்குப் பைகள் கணக்கில் காட்டப்படுவதில்லை. சத்துணவுக்கூடத்திலும் அதற்கான ஸ்டாக் கணக்கு இல்லை. இப்படி ஒரு கோடிக்குக் கணக்கு இல்லை என்கிறார்கள். இங்கே அறிக்கையில் அவற்றில் சில சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன. ஏன் இத்தனை நாளும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்க விரும்புகிறேன். ஒதுக்குகிற பணமெல்லாம் சரியாக நிர்வகிக்காமல் மக்களுக்குப் போய்ச் சேரவில்லையென்று இந்த அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே சிறப்புத் திட்டம் இது என்றாலும், மக்களுக்குப் போய்ச் சேருகிற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன். அடுத்ததாக, ஐ.ஆர்.டி.பி. . . .

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** இந்த சிஸ்டத்தில் ஆடிட் ரிப்போர்ட் என்பது பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. அதில் வரக்கூடிய குறிப்புகள்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதைத் தவிர இங்கே பி.ஏ.சி. இருக்கிறது. அவர்கள் நன்கு ஆராய்ந்து, அதனுடைய தலைவராக இருக்கும் எதிர்க் கட்சித் தலைவரும் நன்கு ஆராய்ந்து குறைகளை பாரா பாராவாக எடுத்துக்கொண்டு, பின்பாயிண்ட் பண்ணி, யார் குற்றவாளிகள், எங்கே தவறுகள் நடந்தன என்று சொல்கிறார்கள்.

It fixes up the responsibilities of the errant or erring officials. அதற்குப் பிறகு பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை சட்டமன்றத்தில் வைக்கப்படும். அது அங்கீகரிக்கப்பட வேண்டும். அதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்படும். இதுதான் நடைமுறை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம்:** அடுத்தபடியாக, ஐ.ஆர்.டி.பி. கடனுக்காக 13,192 லட்ச ரூபாய் ஒதுக்கியிருந்தும், 259 லட்ச ரூபாய் செலவழிக்காமல் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. அது செலவழிக்கப்பட்டிருக்கவேண்டும். அதுபோக, அங்கே வேலை வாய்ப்புக்காக 39,396 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டும், 5,529 நபர்களுக்குத்தான் வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. பயிற்சி கொடுக்கும்போதே வேலை வாய்ப்பு இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். சரியான கணக்குகள் இல்லாததால், பயிற்சி கிடைத்தும் வேலை கிடைக்கவில்லை. தையல் பயிற்சி 4,024 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டு, 5,371 தையல் மிசின்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் 3,000 பேருக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. காரணம் போதுமான தையல் கடைகள் இல்லை. முன்பே இதற்கான வேலை வாய்ப்புக்கு வழி இருக்கிறதா என்று பார்த்து நடவடிக்கை எடுக்காமல், இருக்கிறவர்களுக்கு எல்லாம் பணத்தைக் கொடுத்து பயிற்சியையும் கொடுத்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் இப்போது திண்டாடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை கிராமங்களில் இருப்பதால், நிலைமை சீர்கேடு அடைந்திருக்கிறது.

(நண்பகல் 12-00)

இவைகளையெல்லாம் களைந்தால்தான் இத்திட்டங்களின் பலன்கள் மக்க

ளுக்குப் போய்ச் சேரும். அந்த அடிப்படையில் இவற்றைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந் நிதிநிலை அறிக்கையில் அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும், மேல்நிலைப் பள்ளிகளுக்கும் கட்டிடங்கள் கட்டுவதற்காகத் தனியாக ரூபாய் ஒரு கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கண்டிருக்கிறது. ஒரு கோடி ரூபாய் என்பது மிகவும் குறைவான தொகை என்று குறிப்பிட விரும்புகிறேன். இச் சமயத்தில் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மதுரையில் பேருந்து நிலையத்திற்கு அருகேயிருந்த ஒரு பள்ளிக்கூடத்தை இடித்திருக்கிறார்கள். மேல் நிலைப் பள்ளி இயங்கிவந்த பெரிய கட்டிடம் சுமார் பத்தாயிரம் ரூபாய் செலவு செய்து அதை இடித்திருக்கிறார்கள். தற்சமயம் அப்பள்ளி வேறொரு இடத்தில் வீட்டில் நடந்து கொண்டிருக்கிறது. அதை இடித்தபோது அங்கே அண்ணா அறிவாலயம் கட்ட இருப்பதாகக் காரணம் கூறப்பட்டது. ஆனால் இப்போது அங்கே ஒரு 'ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்'தான் இருந்து வருகிறது. அப்பள்ளியோ, இடவசதியின்மையால் தற்சமயம் 3 ஷிப்ட்டுகளாக நடை பெற்று வருகிறது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அக் கட்டிடம் மிகப் பழைய கட்டிடம். அதில் பள்ளிக்கூடம் நடத்துவது சரியாக இருக்காதென்பதால், பள்ளிக்கூடம் மாற்றப்பட்டிருக் கிறது.

**திரு. மு. செ. சங்கரலிங்கம்:** அக்கட்டிடத்தைச் சீர்படுத்தியிருந்தால் மாணவ மாணவியர்க்கு மிகவும் வசதியாக இருந்திருக்கும். இப்போது அங்கே கடைகள் இருக்கின்றன. பள்ளிக்கூடம் மிகவும் சிறிய இடத்தில் வைக்கப்பட்டு, மூன்று ஷிப்டுகளாக நடந்து கொண்டிருக்கின்றது. இதனால் மாணவ மாணவியர் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்நிலைமையை மாற்றியமைத்திருக்கலாம். அப்பள்ளிக்கூடத்தை இடித்து விட்டு, புதிதாகக் கட்டி கடைகளுக்கு விட்டுவிட்டு, பள்ளிக்கூடத்திற்கு வேறொரு இடத்தைக் கொடுப்பதென்பது நியாயமாக இருக்காது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** "பள்ளிக்கூடத்தை இடித்து பள்ளிக்கூடத்தை இடித்து" என்று சொல்வதைவிட, "பழைய கட்டிடத்தை இடித்து" என்று சொல்வதுதான் சரியாக இருக்கும்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம்:** பள்ளிக்கூடத்தின் பழைய கட்டிடத்தை ,

(மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா எழுந்தார்.)





**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** சந்தேகம் இருந்தால் கேட்க ... அடிக்கடி குறுக்கிட்டால், குறுக்கிடு அதிகமாகப் போய், பேசுபவர் ... நேரம் குறைவாகிவிடும். இன்னும் நான்கு பேர் பேசவேண்டியிருக் ... கிறது.

**திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களுக்கு ஒரு விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். பள்ளிக்கூடத்தை இடிப்பதற்கு முன்னாலே பொதுப் பணித் துறையின் பொறியாளர்களிடம் கேட்டு, இடிக்கப்பட வேண்டிய கட்டிடம் என்று அவர்கள் சான்றிதழ்கள் கொடுத்தால்தான், இடிப்பார்கள். இல்லாவிட்டால் மதுரையில் பள்ளிக்கூடக் கட்டிடம் இடிந்து மாணவர்கள் சாகிற நிலைமைதான் வரும். எனவே ஆசிரி யராக இருக்கும் மாண்புமிகு உறுப்பினர் இதை ஆதரிக்கக்கூடாது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறுக்கிடும்போது விளக்கம் கேட்கலாம். பேசுபவருக்கு விளக்கம் சொல்ல மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் விளக்கம் சொன்னால் சரியாக இருக்காது.

**திரு. மு. செ. சங்கரலிங்கம்:** பழைய பள்ளிக் கட்டிடத்தை இடித்துக் கட்டியபின் பள்ளிக்கூடத்திற்கே விட்டிருந்தால் அது வரவேற்கத்தக்கதாகும். ஆனால் இப்போது பள்ளிக்கூடத்தை வேறொரு இடத்திற்கு மாற்றி, அதனால் மாணவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவேதான் இப்போது ஒதுக்கியிருக்கும் இந்த ஒரு கோடி ரூபாயில் பள்ளிக்கூடக் கட்டிடங் களைத் தேவையான அளவிற்குக் கட்டுவதென்பது முடியாது. மேலும் இப்போது புதிய கல்விக் கொள்கையை வேறு நிறைவேற்ற இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு செய்தியை இந்த அவைக்குச் சொல்லி ஒரு தவறான அடிப்படையை அல்லது தகவலை மக்களுக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பள்ளிக்கூடம் எந்தக் கட்டிடத்தில் நடைபெற்றது? அக்கட்டிடம் அரசுக்குச் சொந்தமான கட்டிடமா? அல்லது வாடகைக் கட்டிடமா? அந்தக் கட்டிடம் தனியாருக்குச் சொந்தமானதாக இருந்தால், அது மிகவும் பழுதடைந்திருந் தால், அதனால் மற்றவர்களுக்கு ஆபத்தானது என்று பொறியாளர்கள் தெரி வித்திருந்தால், அதன் பிறகு கட்டிடச் சொந்தக்காரர்கள் அக்கட்டிடத்தை இடித்து, புதிதாகக் கட்டி, கட்டியபின் வேறு உபயோகத்திற்குப் பயன்படுத்த

விரும்புவார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது அங்கே கடைகள் கட்டிவிட்டார்கள் என்று கூறுகிறார்கள். இந்தச் செய்தி அவர்களுக்குத் தெரியும். தெரிந்தும் அதைச் சொல்லாமல் பள்ளிக்கூடத்தை இடித்து, அங்கே கடைகள் கட்டிவிட்டார்கள் என்ற தவறான தகவலை இங்கே தந்துகொண்டிருக்கிறார்கள்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் தவறான தகவலைக் கொடுக்கவில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன் . . .

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தவறான தகவல்தான். முதலில் அக்கட்டிடம் மாநகராட்சியின் அலுவலகமாக இருந்தது. பின் அது மருத்துவமனையாக இருந்தது. பின் சிறைச்சாலையாக இருந்தது. அது வெள்ளைக்காரன் காலத்திலே கட்டப்பட்ட கட்டிடம்.

(முற்பகல் 12-05)

**திரு. மு. செ. சங்கரலிங்கம்:** துணைத் தலைவரவர்களே, அந்தக் கட்டிடத்தின் சொந்தக்காரர் தனிப்பட்டவர் அல்ல; மாநகராட்சியும் அல்ல . .

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** துணைத் தலைவரவர்களே, இதைப் போன்ற ஒரு பொறுப்புமிக்க அவையிலே பேசும்போது, உறுப்பினர் அவர்கள் சரியான பொறுப்பை ஏற்றுக்கொண்டு மக்களுக்குச் சரியான தகவலைத் தரவேண்டும். குறைகள் ஏற்பட்டால், அரசுக்கு அதை முறையாக எடுத்துச் சொல்ல வேண்டும். வேறு பல்வேறு கட்டிடங்கள் பள்ளிக்கூடங்களுக்காக வாடகைக்கு அமர்த்தப்படுகின்றன. அது தனியார் கட்டிடமாக இருக்கலாம்; அல்லது பல துறைகளைச் சார்ந்த கட்டிடமாகவும் இருக்கலாம். ஆகவே மாநகராட்சிக் கட்டிடம் இருக்கிறது; நகராட்சி கட்டிடம் இருக்கிறது; வேறு துறைகளுக்குச் சொந்தமான கட்டிடங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் பள்ளிக் கட்டிடம் வாடகைக்குத் தரப்பட்டிருக்கலாம். ஆகவே அப்படி அந்தக் கட்டிடம் பழுதடைந்துவிட்டது, அதை மாற்றியாக வேண்டும், புதிதாகக் கட்டப்பட வேண்டும்; இல்லையானால் ஆபத்து என்று தெரிந்ததற்குப் பிறகு கட்ட வருகிறார்கள். கல்வித் துறையைச் சார்ந்த கட்டிடமாக இருந்தால்தான், அதை மீண்டும் கல்வித் துறைக்கே பயன்படுத்துவார்கள். தவிர வேறு துறையைச் சார்ந்த கட்டிடமாக இருந்தாலும் அது அரசுத் துறையாக இருந்தாலும், வேறு துறையைச் சார்ந்த அவர்களுக்குரிய கட்டிடங்களாக இருந்தாலும், மீண்டும் பள்ளிக்கூடம் கட்டு



வதற்குத்தான் தரவேண்டுமென்று வற்புறுத்த முடியாது. அதுவும் மக்களுடைய நன்மைக்காக, மக்களுக்காக, மக்களுடைய வரிப் பணத்திற்கு நன்மை செய்வதற்காக, வரி போடுவதற்காகத்தான், வருமானத்தைப் பெருக்குவதற்காகத்தான் அந்தக் காரியங்களும் செய்யப்படுகின்றன. இங்கே பள்ளிக்கூடத்திற்குக் கட்டிடம் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் வற்புறுத்துவதை எங்களால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் வேறு பிரச்சினையில் தவறான தகவலோடு இணைத்துக் குழப்பக்கூடாது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவரவர்களே, அதில் மாற்றுவதற்கு இன்னொரு காரணம் கூட உண்டு. அது போக்குவரத்துக்கு மிக மிக நெரிசலான இடம். அப்படிப்பட்ட இடத்தில் ஒரு பெண்கள் கல்விக்கூடம் இருப்பது என்பது சரியாக வராது என்ற பல்வேறு விதமான சூழ்நிலைகள் ஏற்பட்ட காரணத்தாலேதான் அது மாற்றப்பட்டது.

**திரு. மு. செ. சங்கரலிங்கம்:** துணைத் தலைவரவர்களே, அரசுக்கு அந்தப் பொறுப்பு இருக்கிறது என்ற காரணத்தாலேதான் சொல்கிறேன். யார் கட்டிடமாக இருந்தாலும், மாணவர்களை நன்றாகப் படிக்க வைக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அந்த இடத்தை மாற்றுவதற்கு, அல்லது வற்புறுத்துவதற்கு அரசுக்கு உரிமை இருக்கிறது. இதில் தவறான செய்தி கொடுப்பதற்காக அல்ல. அரசு தவறாக நடக்கக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேனேயொழிய, தவறான செய்தியை மக்களுக்கோ, இந்த அவைக்கோ தரவில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளியில் தொழிற் கல்வி அதிகமாக்கப்பட்டு இருந்தாலும், அதிலே மாணவர்கள் சேர்க்கை குறைவாக இருக்கிறது. என்ன காரணத்தால் மாணவர்கள் சேர்க்கை குறைவாக இருக்கிறது என்பதைக் கண்டு ஆராய்ந்து, அறிந்து அதில் என்ன சட்டச் சிக்கல் இருக்கிறது என்பதையும் கண்டு குறைகளைக் களைய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாணவர்கள் தொழிற் கல்வி பயின்ற பிறகு, அவர்களுக்கு வேலை வாய்ப்பு குறைவாக இருக்கின்ற காரணத்தால்தான், அங்கே மாணவர்கள் எண்ணிக்கை குறைவாக இருந்து கொண்டிருக்கிறது. அரசு அவர்களுக்கு வேலைவாய்ப்பு உத்தரவாதம் கொடுத்தால், தொழிற் கல்வியிலே மாணவர்கள் அதிகமாகச் சேர வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்குக் கல்வி இலவசம் என்று ஆணை இருந்தாலும், அது ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு இலவசமாகக் கொடுக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அந்த ஆணையில் ஐந்து ஆயிரம் ரூபாய் வருட வருமானத்துக்குக் குறைவாக இருந்தால்தான், ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு அல்லது அவர்களுடைய வாரிசுகளுக்கு இலவசமாகக் கல்வி கிடைக்குமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்று ஆசிரியர்களுக்கு மாத அடிப்படைச் சம்பளம் ரூ. 610. குறைந்தது வருடத்திற்கு 7,200 ரூபாய் வருமானம் அவர்களுக்கு வருகிறது. இந்த உச்ச வரம்பைத் தளர்த்துவதோடு, கண்டிப்பாக உச்சவரம்பு இல்லாமல் ஆசிரியர்களினுடைய குழந்தையாக இருந்தால், அவர்களுக்கு இலவசமாகக் கல்வி கொடுக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இருக்கிற ஆணை மக்களுக்குப் போய்ச் சேர முடியாத ஒரு ஆணையாக இருந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு அதை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கும் அரசுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடந்து, பல்வேறு கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் சில கோரிக்கைகள் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. தற்காலிக ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படுவதாக வாக்களிக்கப்பட்டு, நான்கு மாதமாகியும், இன்னும் அவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. அதை நிரந்தரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு ஊழியர் 35 பேரில் 9 பேர் நீங்கலாக 26 பேர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-10)

இரண்டு மாதங்களாகியும்கூட திரும்பவும் அவர்கள் பணிக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் உடனடியாக திரும்பவும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்த வேண்டுகிறேன். காரணம் அவர்களிடம் மன்னிப்புக் கடிதம் எழுதி வாங்கிய பின்பு திரும்பப் பணிக்கு எடுத்துக் கொள்வது என்பது நியாயமாக இருக்காது. அவர்களுடைய விளக்கத்தைக் கேட்டு, விசாரித்து ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையில் அவர்களையெல்லாம் மீண்டும் பணிக்குத் திரும்ப எடுத்தால்தான், அரசுக்கும் அவர்களுக்கும் உறவுமுறை சுமுகமாக இருக்கும்.



அடுத்து, இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அரசியலமைப்புச் சட்டத்தின் 311 (2) (எ) (பி) (சி) பிரிவுகளில் (சி) பிரிவின் கீழ் எந்த ஒரு அரசு ஊழியரும் எந்த நேரத்திலும் விசாரணை இன்றி வேலை நீக்கம் செய்யப்படலாம் என்ற நிலைமை இருக்கிறது. இதைக் குறித்து மத்திய அரசிடம் மாநில அரசு வற்புறுத்தி அதை நீக்கக் கோர வேண்டும். இதுபோன்ற ஒரு சட்டப் பிரிவு இருக்கக்கூடாது. இது ஊழியர்களின் நலனைப் பாதிக்கக்கூடிய சட்டம். எனவே அரசு இதுகுறித்து மத்திய அரசோடு வாதிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் விரைவில் முடித்துக்கொள்ள வேண்டும். அவையை 1 மணிக்கு முடிக்க வேண்டும். அதற்குள் 4 உறுப்பினர்கள் பேச வேண்டும். இப்போதே நேரம் அதிகமாகி விட்டது.

**திரு. மு. செ. சங்கரலிங்கம்:** நானே விரைவில் பேசி முடிக்கத்தான் இருக்கிறேன். குறுக்கீடு காரணமாக நேரமாகிவிட்டது. இருந்தாலும் மற்ற உறுப்பினர்கள் பேச வேண்டியிருப்பதால், எனக்கு இதுவரை பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி இத்துடன் என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. இராமலிங்கம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்தைச் சொல்லுவதற்கு முன்னால் தமிழ் நாட்டின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** துணை மானியக் கோரிக்கையின்மீது பேசும்போதே மாண்புமிகு உறுப்பினர் நீண்டதொரு சொற்பொழிவை ஆற்றிவிட்ட காரணத்தால், இந்தச் சொற்பொழிவை கொஞ்சம் சின்னதாக ஆக்குவது நல்லதென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. இராமலிங்கம்:** சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியொன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்தியாவில் இரண்டு கோடி மக்களுடைய நலனை முன்னிட்டு நமது மாநில அரசு ஒரு முன்னோடியாக இருந்து கொண்டு வந்த திட்டத்தின் அடிப்படையில் இன்றையதினம் மத்திய அரசு கரை போட்ட சேலை வேட்டிகளைப் பொறுத்தவரையில் கைத்தறிக்கே ஒதுக்கி 31 ஆம் தேதியிலிருந்து ஒரு அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. அதாவது 1—4—1986 முதல் இந்த உத்தரவு அமலுக்கு வரும் என்று ஒரு ஜீ.ஒ. வெளியிடப்பட்டிருக்கிறது. அதற்கு நன்றி தெரிவிக்கிற

பொருளடக்கம்.

| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள் .. .. .. | 193—221 |
| 2. | தகவல் கோரல்— | |
| | மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சி சுந்தரம் அவர்கள் பேசிய கருத்தை மாண்பு மிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் கூறியதாக ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' பத்திரிகையில் பிரசுரித்தது குறித்து .. | 1— |
| 3. | அறிவிப்பு— | |
| | அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து .. | 222—224 |
| 4. | கவன ஈர்ப்பு— | |
| | கடலூர் மௌலானா அபுல் கலாம் ஆசாத் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிலும் 26 மாணவர்கள் தேர்வு எழுத முடியாத நிலை குறித்து .. .. .. .. .. | 225—226 |
| 5 | 1986–87-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி .. .. .. .. | 226—296 |
| 6 | அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. | 297—298 |

வகையில்தான் நான் இங்கே கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாடு மெட்ராஸ் ஸ்டேட் ஆக இருந்தபோது, 1949 முதல் 1950, 1951 மற்றும் 1952 ஆம் ஆண்டுகளில் இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு மத்திய அரசு சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் கொள்கை அடிப்படையில் கைத்தறி ஜவுளிகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதை நிறுத்தியது. அதன் காரணமாக தமிழகத்தில் மிகப் பெரிய பஞ்சம் நெசவாளர் குடும்பங்களிடையே ஏற்பட்டது. மிகப் பெரிய வேலையில்லாத் திண்டாட்டம் அப்போது ஏற்பட்டது. வறுமையில் வாடிய ஏழை எளிய நெசவாளர்கள் ஊர் ஊராக, தெருத் தெருவாகச் சென்று பிச்சை எடுக்கிற நிலையில் அலைந்து கொண்டிருந்தபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட இயக்கத்தைக் கண்டார்கள். அந்த இயக்கத்தின் மாநாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களிடம் நெசவாளர் சமுதாயத்தைச் சார்ந்த நாமும் அருப்புக்கோட்டையைச் சார்ந்த எம்.எஸ். இராமசாமியும், சேலம் சித்தையனும் வடாற்காடு மாவட்டத்தைச் சார்ந்த கிருஷ்ணன் அவர்களும், மிகவும் வற்புறுத்திக் கேட்டோம். அப்போது நான் சைதை வட்டச் செயலாளராக இருந்தேன். அதாவது கைத்தறி நெசவாளர்களின் துயர் துடைப்பதற்காக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வாருங்கள் என்று கேட்டோம். அந்த மாநாட்டில்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் கரை போட்ட வேட்டி சேலைகளை கைத்தறிக்கே ஒதுக்க வேண்டும் என்றும் மாலைகளுக்குப் பதிலாக இனி கைத்தறி ஆடைகளைத்தான் கழகத் தொண்டர்கள் அணிவிக்க வேண்டுமென்றும் தேங்கியுள்ள கைத்தறித் துணிகளை திராவிட இயக்கத்தைச் சார்ந்த தலைவர்கள் முதல் அனைவரும் தெருத் தெருவாகக் கொண்டு சென்று விற்க வேண்டும் என்றும் தீர்மானம் போட்டார். மாநாடு நடந்தது டிசம்பர் மாதத்திலே, ஜனவரி மாதம் 4 ஆம் தேதி இயக்கத் தலைவர்கள் தங்கள் தோளில் கைத்தறித் துணிகளைச் சுமந்து விற்றார்கள். அதுமட்டுமல்ல. இன்றுமுதல் இயக்கத் தொண்டர்களும் தோழர்களும் கைத்தறித் துணிதான் அணிய வேண்டும் என்றும் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றினார்கள். 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சென்னை ராஜதானியில் அன்றைக்கு பல எதிர்க் கட்சிகள் மெஜாரிட்டியோடு வெற்றி பெற்றிருந்தனர். அதன் காரணமாக மூதறிஞர் இராஜாஜி அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அந்தச் சமயத்தில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் ஸ்ரீவில்லிப்புத்தூரிலிருந்து பட்டினிப் பட்டாளம் என்ற ஒரு பட்டாளத்தை அழைத்து வந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாங்கள் எல்லோரும் ஊர் ஊராகச் சென்று எங்கள் வறுமை நிலைமையை, ஏழ்மை நிலைமையை எடுத்துச் சொல்லி, நெசவாளர்களின் கஷ்டத்தைப் போக்க வேண்டும் என்று



பிரச்சாரம் செய்தோம். அன்றையதினம் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களையும் திரு. ப. ஜீவானந்தம் அவர்களையும் மற்ற தலைவர்களையும் அழைத்துப் பேசி, கரை போட்ட வேட்டி சேலைகளைக் கைத்தறிக்கு ஒதுக்கலாம் என்ற எண்ணத்தைத் தெரிவித்தார்கள்.

(பிற்பகல் 12-15)

அதையெல்லாம் ஏற்றுக்கொண்டு 1952 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3 ஆம் தேதியன்று, மூதறிஞர் இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது, தொழில் அமைச்சராக இருந்த டாக்டர் யூ. கிருஷ்ணா ராவ் அவர்கள் அந்தத் தீர்மானத்தைச் சட்ட சபையிலே முன்மொழிந்தார்கள். கரைகள் போட்ட வேட்டியையும், கலர் சேலைகளையும் கைத்தறிக்கு ஒதுக்க வேண்டும் என்ற தீர்மானத்தை அன்று நிறைவேற்றி டில்லிக்கு அனுப்பினார்கள். ஆனால் டில்லி செயல்படவில்லை. அதற்குப் பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் 1968 ஆம் ஆண்டு, முதலமைச்சராக இருந்தபோது, மீண்டும் அந்தத் தீர்மானத்தை வலியுறுத்தி டில்லிக்கு அனுப்பினார்கள். அதுவும் செயல்படாமல் போயிற்று. ஆனால் நாளாவட்டத்தில் கைத்தறிக்கு 'ரிபேட்' என்ற சலுகையை மத்திய அரசு கொடுத்ததே தவிர, கைத்தறிக்கென்று சில துணி வகைகளை ஒதுக்கவில்லை. கைத்தறிக்கும், விசைத் தறிக்கும் இடையே இருந்த போட்டியை மில்லுக்கும் விசைத் தறிக்கும் இடையே இருந்த போட்டியைத் தடுக்காமல் மத்திய அரசு இருந்தது. நசிந்து வரும் கைத்தறித் துறைக்கு மத்திய அரசு சில சலுகைகளைச் செய்தாலும் எங்களுடைய கொள்கையை ஏற்றுக்கொள்ளாமல் இருந்தது. அதற்குப் பிறகு பொன்மனச் செம்மல் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 1977-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, அண்ணா வழியில் நடப்பேன் என்ற முறையில் தொடர்ந்து அந்தத் தீர்மானங்களை மத்திய அரசுக்குத் தெரிவித்து வலியுறுத்தி வந்தார்கள். அதன் பிறகு 1980 ஆம் ஆண்டிலே என்னை தமிழ்நாடு நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குத் தலைவராக அமைத்து—அவரிடம் நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க—என்னை டில்லிக்கு அனுப்பினார்கள். மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களிடத்திலே எங்களுடைய கோரிக்கைகளை வைத்து அதை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் அவர்களும் கேட்டுக்கொண்டார்கள். அதன் அடிப்படையில் 1982-ம் ஆண்டு இதைப் பரிசீலிக்க எடுத்துக்கொண்டார்கள். இதிலே பல பேர் குழுக்களாக வந்து பல நல்ல விளக்கங்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். வாரணாசியைச் சேர்ந்த திரு. அன்சாரி அவர்கள் பருத்திக் குழுவுக்குத்

தலைவராகவும், பட்டுநூல் நெய்யக்கூடிய நெசவாளர்கள் குழுவிற்கு இன்றைய தினம் கோவாப்டெக்ஸ் ஸ்பெஷல் ஆபீசராக உள்ள திருமதி ஜெயந்தி அவர்கள் தலைவராகவும் இருந்து, இந்தியா முழுவதும் சென்று அறிக்கை கொடுத்ததன் அடிப்படையில், தற்போது மத்திய அரசு 'டெக்ஸ்டைல்ஸ் பாலிசி' என்று கொண்டு வந்திருக்கிறது. இதற்காக சட்டத்தையும் கொண்டு வந்திருக்கிறது. இந்தச் சட்டத்தை வரவேற்று ஆதரித்து பாராளுமன்ற உறுப்பினர், பேராசிரியர் என். ஜி. ரங்கா அவர்கள் பேசியிருக்கிறார்கள். இது பத்திரிகையில் வந்திருக்கிறது. ராஜ்ய சபையில் திரு. மோகனரங்கம், எம்.பி. அவர்களும், செல்வி ஜெயலலிதா அவர்களும் இந்தச் சட்டத்தை ஆதரித்துப் பேசினார்கள். பாராளுமன்றத்தில் பல மூத்த தலைவர்கள் இது தேவையென்று பேசியதன் விளைவாக, இப்போது இந்தச் சட்டம் அங்கே நிறைவேற்றப்பட்டு, இந்த 1 ஆம் தேதி முதல் அமுலுக்கு வருகிறது. 22 ரகங்களை கைத்தறிக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். பல தலைவர்கள் நமக்கு ஆதரவாக கருத்து தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக மேற்கு வங்கத்திலே உள்ள 'ஸ்டேட்ஸ்மென்' என்ற பத்திரிகை தொடர்ந்து நம்மைப்பற்றியும், நம்முடைய கொள்கையைப்பற்றியும் ஆதரித்து எழுதியிருக்கிறது. வட நாட்டிலுள்ள மற்ற பல பத்திரிகைகள் கூட எழுதியிருக்கின்றன. குறிப்பாக 'ஜஸ்ரீப்' என்ற பத்திரிகையில்—ஜோத்பூர், ஜபல்பூர் என்ற பகுதிகளில் இருந்து வருவது—கைத்தறிக்கு ஒதுக்க வேண்டிய அவசியம் பற்றியும், நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்களைப் பற்றியும், என்னையும் குறிப்பிட்டு பல கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள். ஆஜ்மீர், கோட்டா என்ற பகுதிகளிலிருந்து வெளிவரக்கூடிய "நவஜோதி" என்ற பத்திரிகையிலும் எங்களைப் பற்றியும், தமிழ் நாட்டைப் பற்றியும் எழுதியிருக்கிறார்கள். வாரணாசியிலிருந்து வரக்கூடிய "சைனிக் ஜாக்ரனா" என்ற பத்திரிகையிலும் நம்மை ஆதரித்து எழுதியிருக்கிறார்கள். ஒரியா மொழியில் வருகின்ற 'பிரகதிவாடி' என்ற பத்திரிகையிலும் நம்மை ஆதரித்து எழுதப்பட்டிருக்கிறது. 'ஆதி' என்ற பத்திரிகை பத்து ஊர்களிலிருந்து வெளிவருகிறது. அந்தப் பத்திரிகையிலும் நம்முடைய கருத்தை ஆதரித்து எழுதப்பட்டிருக்கிறது. நாம் வலுவாகப் போராடியதால்தான் இந்தச் சலுகை கிடைத்திருக்கிறது என்பதை பத்திரிகை உலகமும், நெசவாளர்களுக்காக பல கோணங்களில் படம் பிடித்துக் காட்டியிருக்கிறது.



குஜராத்திலிருந்து வரக்கூடிய பத்திரிகைகள் எடுத்துக்காட்டியதால், மறைந்த மாமேதை திருமதி இந்திரா காந்தி அவர்கள், 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் தேதி அன்று இந்தச் சட்டத்தை ராஜ்ய சபையில் இரவு எட்டரை மணிக்குத் தாக்கல் செய்தார்கள். இன்றைக்கு நிதியமைச்சராக உள்ள திரு. வி. பி. சிங் மூலமாகவும், துணை அமைச்சர் திரு. சங்மா மூலமாகவும் தாக்கல் செய்தார்கள். இவைகளுக்குப் பின்னணியாக யாராவது இருக்க வேண்டுமல்லவா? இதற்குப் பின்னணியாக இருந்தவர்கள் யார் யார்? தமிழகத்திற்காக பாடுபட்ட துணை ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பின்னணியில் இருந்து, எடுத்துச் சொல்லி, திருமதி இந்திரா காந்தி அவர்களிடம் எடுத்துச் சொல்லி, ஊக்கப்படுத்தி இன்றைக்கு இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-20)

நம் மூதறிஞர் இராஜாஜி அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் எதைக் கேட்டார்களோ அதையே அப்படியே அமலுக்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அப்படி அமலுக்குக் கொண்டுவந்திருப்பதை வரவேற்கிறேன். அதைச் செய்யச் சொன்ன அத்தனை பேர்களுக்கும், நெசவாளர்கள் சார்பில் அவர்கள் பாதங்களைத் தொட்டு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் உலகத்திலே பல தொழில்கள் இருக்கலாம். இந்தியாவிலே பல தொழில்கள் இருக்கலாம். இன்றைக்கு நெசவுத் தொழிலை ஏதோ ஒரு தரித்திரம் பிடித்த தொழில் என்று நினைத்துக்கொண்டிருக்கும் நிலையை மாற்றிக்கொண்டிருக்கின்றோம். அதே நேரத்திலே இன்னொன்றைச் சொல்கின்றேன். படித்துவிட்டு அலைந்து கொண்டிருக்கின்றவர்களுக்கு, வேலைக்காக திரிந்துகொண்டிருக்கின்றவர்களுக்கு இந்தத் தொழில் ஒரு ஊன்றுகோலாக இருக்கும் என்ற அடிப்படையிலே மத்திய அரசு இந்த அளவுக்கு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றது. 22 ரகங்களைக் கொண்டுவந்திருக்கின்றது. அவைகளை எல்லாம் இங்கே படிக்க வாய்ப்பில்லை. எல்லாம் ஆங்கிலத்திலே இருக்கின்றது. தமிழ்நாடு சட்டமன்றத்திலே மட்டும்தான் 1982-லே இந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று தீர்மானம் போட்டு டெல்லிக்கு அனுப்பினோம். 1968-லே தீர்மானம் போட்டு டெல்லிக்கு அனுப்பினோம். அதற்கு ஆந்திராவிலே உள்ள என்.டி.ஆர்., முதலமைச்சர் அவர்களும் ஆதரவு தெரிவித்தார்கள். அவர்கள் ஆதரித்து கடிதம் எழுதினார்கள். அவர்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தச் சட்டம்தான்

வந்திருக்கிறது. அந்தச் சட்டத்தை அமுல்படுத்தவேண்டியது இந்த அரசினுடைய கடமையாகும். இதற்காக என்று கோயம்பத்தூரில் ஒரு அலுவலகத்தைத் திறந்திருக்கின்றார்கள். தென்பிராந்தியத்தைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான் திறந்திருக்கிறார்கள். திருட்டுத்தனமாக விசைத்தறியாளர்கள் எங்களுடைய கரைபோட்ட வேட்டி சேலைகளை நெய்தால் பிடிக்கவும், சிறைக்கு அனுப்பவும் சட்டம் வந்திருக்கின்றது. அதை நெய்தாலும், விற்றாலும், அகமதாபாத்திலே இருந்து கொண்டு வந்து விற்றால் யார் பிடிப்பது? அகமதாபாத்திலே போய் பிடிக்க முடியாது. அந்த மாநில அரசுதான் அதைச் செய்ய வேண்டும். ஆகவே அந்தச் சட்டத்தின்படி அதை எங்கே யார் விற்றாலும் பிடிக்க வேண்டும். எப்படி மருந்து விற்பனையில் செய்கின்றார்களோ அதுபோல, போலி மருந்து அல்லது லாயக்கற்ற மருந்துகள் விற்றால், அகில இந்திய அளவில் சட்டம் வகுத்துப் பிடிக்கின்றார்களோ, அதுபோல செய்ய வேண்டும். அந்த வகையிலே சட்டம் கொண்டுவந்து அமுலாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது வந்திருக்கின்ற சட்டம் நம் பாராளுமன்றம் எடுத்த முயற்சியால் வந்திருக்கின்றது. அந்தச் சட்டத்தை நாம் அமுல்படுத்தும் போது, இனி எந்தக் காலத்திலேயும் இதைத் திரும்பப் பெறலாம் என்ற வாக்கியமும் இருக்கின்றது. எந்தக் காலத்திலேயும், எப்போது வேண்டுமானாலும் திரும்பப் பெறலாம் என்று நினைத்தால், பாராளுமன்றத்தில் வைக்காமலேயே அரசு நினைத்தால் திரும்பப்பெறலாம் என்று இருக்கின்றது. அந்த ஷரத்தை நீக்க வேண்டும் என்று உங்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு நம் தமிழக அரசுக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நெசவாளர்கள் பற்றி இந்த சபையிலே நான் பலமுறை பேசியிருக்கிறேன். நெசவுத் தொழில் செய்வதுதான் முக்கியம் என்பதல்ல, இரவும் பகலும் வேலைக்காகத் திரிகின்ற இளைஞர்களுக்கு இது உதவியாக இருக்கும். கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து, 30 லட்சம் பேர்களுக்கு வேலையை உருவாக்குவது கடினம். அது முடியாது. ஆகவே இந்தத் தொழிலை வளர்க்க வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை, அதைக் காப்பாற்ற வேண்டும் என்ற அளவிலேதான் சொல்கின்றேன். அதைக் காப்பாற்றுவதற்கு இந்தச் சட்டம் வந்திருக்கின்றது. நெசவாளர்களும் நல்ல முறையில், அதைப் பயன்படுத்திக்கொள்வார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். இன்றைக்கு நெசவுத் தொழிலாளர்களுக்காக என்று வந்திருக்கின்ற சட்டத்தை நான் வரவேற்கிறேன்.



அதே நேரத்திலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் வைக்கிறோம். நான் அன்றைக்குக்கூட பேசும்போது சொன்னேன். எங்களுக்கு விற்பனை வரியிலே விலக்கு அளிக்க வேண்டும் என்று சொன்னேன். சாயப்பொருள்களுக்கு ஆந்திராவில் ஐந்து சதவிகிதம் வரி என்றால், நம் தமிழகத்திலே அதற்கு எட்டு சதவிகிதம் என்று வைத்திருக்கிறோம் என்பதை எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன். அதேபோல இன்றைக்கு மத்திய அரசு பட்டு சேலை உற்பத்தியை முழுக்க முழுக்க எங்களுக்கே ஒதுக்கிக்கொடுத்திருக்கின்றது. அவர்கள் ஜரிகை போடலாம், மற்ற வகை சேலைகள் நெய்யலாம், எது வேண்டுமானாலும் நெய்யலாம். நான் மாண்புமிகு அமைச்சர், செரிகல்சர் இலாகா அமைச்சர் மாண்புமிகு திரு. ஆனூர் ஜகதீசன் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். பட்டுக்கு அதிக விலை கொடுத்து வாங்கவேண்டியிருக்கின்றது. பெங்களூர் விலையை விட 50 ரூபாய் அதிகமாகக் கொடுத்து வாங்கவேண்டியிருக்கின்றது. பட்டு அதிக விலைக்குத்தான் கிடைக்கிறது. வட்டியில்லாமல் பணம் கிடைத்தால், அவர்களுக்கு உதவியாக இருக்கும். கோடிக்கணக்கான ரூபாய்களை ஆசிரியர் பெருமக்களுக்குக் கொடுக்கின்றார்கள். எங்களுக்குப் பட்டு வட்டியில்லாமல் கிடைக்க வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-25)

கோடிக்கணக்கான பணத்தை உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சலுகைகள் என்று கொடுக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள், எங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி இலவசமாக வேண்டுமென்று கேட்டார்கள். ஆசிரியர்களே இலவசமாகக் கேட்கும்போது, எங்களுக்குச் செய்வதில் என்ன தவறு? பட்டு வாங்க வட்டி இல்லாமல் கொடுக்க வேண்டும். பெங்களூரில் உள்ள வியாபாரிகள் வட்டியில்லாமல் கொடுக்கிறார்கள். அப்படி வட்டி இல்லாமல் தர வேண்டும். மாண்புமிகு நிதி அமைச்சர், நாவலர் அவர்கள் விற்பனை வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்களும், மூதறிஞர் இராஜாஜி அவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சி, இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் நினைவாகியிருக்கிறது, எங்களுடைய கனவெல்லாம் நினைவாகியிருக்கிறது. எங்களுடைய நெசவாளர் சமுதாயத்தினர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்றென்றும் நன்றி உள்ளவர்களாக இருப்போம் என்று சொல்லி, மீண்டும் பட்டுத் தொழிலையும், நூல் தொழிலையும் காப்பாற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

[illegible] 3] [திரு. அ. ப. [illegible]]

[illegible] பொது விநியோகத்தின் மூலம், வழங்குவதன் வாயிலாக [illegible] ரூ. 100 கோடி இழப்பு ஏற்படுகிறது [illegible] ரூ. 100 கோடி ரூபாய்க்குமேல் உதவித் [illegible] பொது விநியோக முறையின் முழுப் [illegible] போய்ச் சேருகிறதா என்று கேட்டால் நான் [illegible] அது முழுமையாகப் போய்ச் சேர [illegible] குறைவு என்று சொல்ல [illegible] ஒரு கிலோ அரிசி அல்லது [illegible] அதில் 100 கிராம் அல்லது 50 கிராம் [illegible] என்ற புகார் தமிழ்நாட்டில் எல்லா [illegible] இதைத் தடுக்க வேண்டுமென்றால், ஒரு கிலோ, அரை கிலோ பாக்கெட்டுகளாக அத்தியாவசிய உணவுப் பண்டங்களை [illegible] வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முதலமைச்சர் அவர்களின் சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில், [illegible] திரு. ரா. செ. [illegible] ஒன்றைச் சொன்னார்கள், சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், அந்த [illegible] என்றால், தமிழ் நாட்டில் சில [illegible] அரிசி, பாமாயில், [illegible] அதைக் [illegible] என்ற புகார் [illegible] இருக்கிறது. ஆனால் சத்துணவுக்

(பிற்பகல் 12.30)

கூடங்களில் இருக்கிற அமைப்பாளர்கள் அல்லது உதவியாளர்கள் சிலர் [illegible] வருகிற உணவுப் பொருள்களை [illegible] நிலை இல்லை. ஆகவே [illegible] உணவுப் பொருட்களைப் பெற்றுக் [illegible] வழிவகை செய்ய வேண்டும்.

அடுத்து, இந்த நிதி நிலை அறிக்கையில் [illegible] பற்றியும் சொல்லியிருக்கிறார்கள் [illegible] அதிகாரிகள் மட்டத்தில் [illegible] நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சென்னையிலிருந்து [illegible] 100, 100 என்கிற [illegible] சத்துணவுக் கூடத்தில் இருக்கிற

[திரு. அ. ப. சிவராமன்] [1986 ஏப்ரல் 2

ஆர்கனைசர்ஸ் பெற்றுக்கொள்ளும்போது, ஒரு குறிப்பிட்ட தொகையினை கட்டாயம் கொடுக்க வேண்டுமென்று நிர்பந்தப்படுத்தி பெற்றுக் கொள்கிறார்கள். உதாரணத்திற்கு சென்னையிலிருந்து செல்கின்ற சீருடைகளுக்கு லக்கேஜ் 100 ரூபாய், 200 ரூபாய் என்று சொல்லி, அந்த அமைப்பாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்கிறார்கள். அதற்குப் பிறகு மாவட்டத் தலைநகரிலிருந்து சம்பந்தப்பட்ட சத்துணவுக் கூடங்களுக்குப் போகும்போது, அங்கேயும் அவர்கள் லக்கேஜ் கொடுக்க வேண்டுமென்று கேட்கிற நிலை இருக்கிறது. இதனை ஈடுகட்ட ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் விதம் வசூல் செய்கிறார்கள் என்கிற புகார் தமிழகம் பூராவும் இருந்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட மகத்தான மக்கள் திட்டங்களை அரசு நிறைவேற்றும்போது, நான் சொல்லியதுமாதிரி இதுபோன்ற சில்லரையான விஷயங்கள் நடைபெறாமல் இருக்கும் வகையில் கவனம் செலுத்த வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். உண்மையாகவே யார் லக்கேஜ்சார்ஜைச் செலுத்துவது என்பதை முறைப்படுத்தி, பிரச்சினையை நல்லமுறையில் தீர்க்க வேண்டும். அதுபோல் நூறு, நூறு என்று அனுப்பப்படும் பண்டல்களில் 90, 95 எண்ணிக்கையில் உடைகள் இருக்கின்றன என்கிற குற்றச்சாட்டுகள் பல்வேறு இடங்களிலிருந்தும் வந்துகொண்டிருக்கின்றன. உடைகளைப் பிரிப்பதிலும் பிரச்சினை. ஒரு பெண்ணுக்கு தாவணி, ஒரு பெண்ணுக்கு ஜாக்கெட், ஒரு பெண்ணுக்கு பாவாடை என்கிற முறையில் வழங்கியிருக்கிறார்கள். இதுபற்றி எதிர்க் கட்சியினர் கேலியாகப் பேசுகிறார்கள். தாவணி மட்டும் பெண்களுக்குக் கொடுத்தால் போதுமா என்று பேசுகிற நிலைமை தமிழகம் பூராவும் இருக்கிறது.

அடுத்து, சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், 1986-87 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கு 27 கோடியே 39 லட்சம் ரூபாய் செலவாகும். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து பல்வேறு ஐயப்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டாலும், அரசைப் பொறுத்தவரையில், இதுபற்றி பலரது பாராட்டுக்களையும் பெறுவோம் என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். முதலில் இத்திட்டத்தைக் கொண்டுவந்தபோது, இது தேவையில்லாதது என்று சொன்னவர்கள் ஏராளம் பேர். ஆனால் பொதுத் தேர்தல் வந்த நேரத்தில், சத்துணவுத் திட்டத்தை தொலை நோக்கு இல்லாத திட்டம் என்று குறிப்பிட்டவர்கள், இதைப்பற்றிச் சொல்லும்போது "உண்மையான சத்துணவை நாங்கள் போடுவோம்" என்று சொல்லும் அளவுக்கு தள்ளப்பட்டார்கள்.



1986 ஏப்ரல் 2] [திரு. அ. ப. சிவராமன்]

அடுத்து, குடிநீரைப் பொறுத்தவரையில், அது மிகவும் அத்தியாவசியமான ஒன்று. 1986-87ல் 45 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மேல்நிலைத் தொட்டிகளுக்கு பதிலாக சிமெண்டால் தொட்டிகளை அமைக்க ஐந்து கோடி ரூபாய் செலவு செய்வதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள தென் பெண்ணையாற்று நீரை திண்டிவனம், செஞ்சி, அனந்தபுரம் போன்ற பகுதிகளுக்கு வழங்க 11.55 கோடி தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதி மக்கள் ஏற்கெனவே மூன்று நாட்களுக்கு ஒரு முறை தான் தண்ணீர் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். நீண்டகாலமாக நிலுவையில் இருக்கின்ற இத்திட்டத்தை விரைவில் இந்த அரசு நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில், நாம் திடமாக இருக்கிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டாக மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் ஒரு சிறந்த விளக்கம் தந்தார்கள். இருந்தாலும், என்னைப் பொறுத்தவரையில், ஒன்றை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மதுவிலக்கைப் பொறுத்தவரையில், முன்னாள் முதலமைச்சர் அவர்கள் "சுற்றி எரிகின்ற நெருப்பு வளையத்திற்குள் கொளுத்தப்படாத கற்பூரமாக எத்தனை காலத்திற்குத்தான் தமிழகம் இருப்பது?" என்று சொல்லிக் கொண்டு மதுவிலக்கை முதலில் தள்ளுபடி செய்தார்கள். அப்படி அப்புறப்

(பிற்பகல் 12-35)

படுத்தியதற்குப் பின்னாலே அவர்களே மதுவிலக்கை மீண்டும் கொண்டு வந்தார்கள். அது திரும்பவும் கடுமைப்படுத்தப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களே பிறகு அதைத் தளர்த்தவேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார்கள். கொள்கையைக் கூட மாற்றிக் கொள்ள முடியும். ஆனால் பழக்க வழக்கத்தை மாற்றுவது கடினம். கிராமப்புறங்களிலே ஒரு பழமொழி சொல்வார்கள், 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்று. பத்தாண்டுக் காலம் பழக்கப்படுத்திக் கொண்டவர்களை உடனே அதை மாற்றச் செய்ய வேண்டுமென்று முனைந்தால், அது கள்ளச் சாராயம் காய்ச்சுவதிலும், போலீசாருக்கு மாமூல் போய்ச் சேருவதிலும் தான் முடியும் என்பதில் எனக்கு ஐயம் இருக்கிறது.

[திரு. அ. ப. சிவராமன்] [1986 ஏப்ரல் 2

அதைப்போலவே கல்வியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள், 1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி மேம்பாட்டுக்காக 468 கோடி ரூபாய் நிதி கொடுத்திருந்தார்கள். அது இவ்வாண்டு 551 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்ற செய்தி மகிழ்ச்சியை அளிக்கிறது. என்றாலும் கூட, ஒரு கோடி ரூபாய் மட்டும் கட்டிடங்களுக்காக ஒதுக்கியிருக்கிற நிலைமையை மாற்றி, அதை உயர்த்திட வேண்டும். இதனால் கல்வி மேம்பாட்டில் அக்கறை கொண்டவர்கள் மட்டுமல்லாமல், சாதாரண மக்களும் மகிழ்ச்சியடைவார்கள் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். தொழில் கல்வியைப் பொறுத்தவரையில், பல பள்ளிகளில் தொழில் கல்வியைக் கற்றுக் கொடுக்கிறோம். தட்டெழுத்துப் பயிற்சி, செவிலியர் பயிற்சியை அளிக்கிறோம். ஆனால் தட்டெழுத்துப் பயிற்சி முடிந்த பிறகு, அவர்களை எங்கும் தட்டச்சர்களாக எடுத்துக்கொள்ளவில்லை. அதேபோல செவிலியர் பயிற்சி முடித்த பிறகு, அவர்களையும் செவிலியர்களாக எடுத்துக்கொள்ளும் நிலைமை கிடையாது. அதுதான் இல்லை. தட்டெழுத்துப் பயிற்சியும் செவிலியர் பயிற்சியும் மேற்கொண்டவர்களுக்கு பயிற்சியிலாவது முன்னுரிமை கொடுக்கிறார்களா என்றால், அதுவும் இல்லை. ஆகவே வொகேஷனல் கோர்ஸ் எடுத்துப் படித்தவர்களுக்கு எந்தவிதப் பாதுகாப்பும் இல்லை.

அதைப்போலவே ஆதிதிராவிடர் நலத்திற்காக இந்த அரசு முனைப்பான திட்டங்கள் தீட்டியிருப்பதற்காக நான் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1986-87 ஆம் ஆண்டுக்கு ஆதி திராவிடர் பள்ளிகளை உயர் நிலை மற்றும் மேநிலைப் பள்ளிகளாக விரிவாக்கம் செய்ய ஏறத்தாழ 80.62 லட்ச ரூபாய் செலவு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. அதைப்போலவே 'லாப் இன்ஸ்ட்ருமெண்ட்' வாங்க ஒரு கோடி ரூபாயும், ஹாஸ்டல் வசதிக்காக 50 லட்ச ரூபாயும் ஒதுக்கியிருக்கிறார்கள். இதற்காக என் இதயங்கனிந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பல்வேறு இனங்களுக்கு வரிவிலக்களித்திருக்கிறார்கள். அதிலே ஒன்றே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சான்றளிக்கப்பட்ட பருத்தி விதைகளுக்கு வரி விலக்களிக்கப்பட்டிருக்கிறது. அதனால் விவசாயப் பெருமக்கள் மகிழ்ச்சியடைந்திருக்கிறார்கள். அதைப்போலவே நச்சு கலக்கப்பட்ட அனைத்து விதைகளுக்கும் பசுந்தாள் உர விதைகளுக்கும் உரம், பூச்சி



1986 ஏப்ரல் 2] [திரு. அ. ப. சிவராமன்]

மருந்து, உழவுக் கருவிகள் ஆகியவற்றுக்கும் வரிகள் ரத்து செய்யப்பட்டால், அதனாலும் உழவர் பெருமக்கள் பெருமகிழ்ச்சியடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உயிர் காக்கும் மருந்துகளுக்கு எட்டு சதவீத வரியை நான்கு சதவீத வரியாகக் குறைத்திருப்பதும், பாராட்டுக்குரியது. அதை அறவே நீக்க வேண்டுமென்று துணைத் தலைவர் அவர்கள் பேசினார்கள். அதை நானும் வலியுறுத்துகிறேன்.

இந்த நாட்டிலே குழந்தைகளுக்கு சத்துணவு கொடுப்பதால், எதிர்கால சந்ததியை வலிவாகவும் பொலிவாகவும் வைத்திருக்கும் இந்தத் திட்டத்தில் மாறுபட்ட கருத்துக்கள் யாருக்கும் இருக்க முடியாது. அந்த வகையில் பால் உணவுகளின் மீது வரியை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே வீடு கட்டப் பயன்படுத்தும் இரும்புகளுக்கு நான்கு சதவீத வரி போடப்பட்டிருக்கிறது. முன்பு இத்தகைய இரும்புகளுக்கு வரியில்லாமல் இருந்தது. இது புதிய வரியாக இருக்கிறது. ஒரு கட்டிடம் கட்ட சாதாரணமாக ஒரு டன் இரும்பு வாங்க வேண்டும். இப்போது அதற்கு ரூ. 7,000 ஆகிறது. அதற்கு ரூ. 280 வரி கட்ட வேண்டும். கடந்த ஐம்பது ஆண்டுகளாக இந்த வரி இருந்ததில்லை. ஆகவே அதை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே உந்து கலங்களுக்கு வரி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறது. அதை டயர் வண்டிகளுக்கும் நீடிக்க வேண்டும். பல மாநிலங்களில் டயர் வண்டிகளுக்கு வரியில்லை. ஒரு வண்டி வாங்க வேண்டுமென்றால், ரூ. 7,000 ஆகிறது. தமிழகத்தில் அதற்கு 400 ரூபாய் வரி கொடுக்க வேண்டும். இந்த வரியை நீக்கினால், விவசாயிகள் பலனடைவார்கள். விவசாயப் பணிகளுக்காகத்தான் இந்த டயர் வண்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. பஸ், லாரி போன்ற டயர்களுக்கு வரி இல்லையென்றும், டயர் வண்டிகளின் டயர்களுக்கு மட்டும் வரி உண்டு என்றும் சொல்கிறார்கள். அது உண்மையா இல்லையா என்று தெரியவில்லை. அப்படி இருந்தால், அதை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், வணிகர் சங்கங்கள் பல இந்நிதிநிலை அறிக்கையைப் பாராட்டியிருக்கின்றன. பல்வேறு பொருள்களுக்கு இருந்த பல முனை வரிகளை ஒருமுனை வரியாக மாற்றியிருப்பதைப் பெரிதும் வரவேற்கிறார்கள். இதனால் வியாபாரிகள் மத்தியில்

அநாவசியமாக ஏற்பட்டிருந்த அச்சம் தவிர்க்கப்படுகிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். அதுபோல் 'அடிஷனல் டாக்ஸை'-ப் பொறுத்தவரையில், "கூடுதல் விற்பனை வரியின் சுமையிலிருந்து ரூ. 10 இலட்சத்திற்குக் குறைவான ஆண்டு விற்பனை உள்ள விற்பனை வரி செலுத்துவோர்க்கு இனி மொத்தமாக விலக்கு அளிக்கப்படும்" என்று குறிப்பிட்டிருப்பதை அவர்கள் பெரிதும் வரவேற்கிறார்கள்.

ஆனாலும் சில தவிர்த்திருக்கக் கூடிய குறைபாடுகளைப்பற்றியும் சுட்டிக் காட்ட அவர்கள் விரும்புகிறார்கள். தற்போது ரூ. 10 இலட்சத்துக்கு மேல் ஆண்டு விற்பனை செய்யும் வாணிகத்தின்மீது ஒரே சீராக 1.25 சதவிகித கூடுதல் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இனி "பத்து இலட்சத்திற்கு மேல் ரூ. 40 இலட்சம் வரையில் ஆண்டு விற்பனையின்மீது 1.25 சதவிகித கூடுதல் விற்பனை வரியும், ரூ. 40 இலட்சத்திற்கு மேல் நடைபெறும் ஆண்டு விற்பனையின்மீது 1.5 சதவிகித கூடுதல் விற்பனை வரியும் விதிக்கப்படும்" என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த 'கேட்டகரி' வித்தியாசத்தை அவர்கள் தேவை இல்லை என்று கருதுகிறார்கள். இதனால் ரூ. 40 இலட்சத்திற்கு மேல் வணிகம் செய்கிறவர்கள்கூட, 40 இலட்சத்திற்குக் குறைவாக வணிகம் நடந்ததுபோல் கணக்குக் காட்ட முயலுவார்கள். எனவே இதைத் தவிர்ப்பது நலம் என்று சொல்கிறார்கள். அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே விற்பனை வரி கட்டுவதற்காக பதிவு செய்வதற்கான குறைந்த அளவு விற்பனை வரையறை தற்போது ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50,000 மதிப்புள்ள விற்பனையாகும் என்று இருப்பதை இனி இவ்வரையறை ஆண்டு ஒன்றுக்கு விற்பனை மதிப்பு ரூ. 75,000 என அதிகரிக்கப்படும் என்று குறிப்பிட்டிருப்பதை வரவேற்கிறேன். இதனால் உண்மையான பலன் ஏற்பட்டிருக்கிறதா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தற்சமயம் ரூ. 500-க்கு ஒருவர் பொருட்களை வாங்கினாலே, வாங்குபவரின் ஆர்.சி. எண்ணைக் குறிப்பிட வேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனால் இப்போது ஒரு மூட்டை பருப்பு வாங்கினாலே, 700 ரூபாயாகிவிடுகிறது. எனவே ஒரு மூட்டை பருப்பு வாங்குகிறவருக்கும் ஆர்.சி. எண்ணைப் போட வேண்டுமென்று சொல்கிறபோது, அது நடைமுறைச் சாத்தியமில்லாமல் இருக்கிறது. இதனால் ஒருவர் பொருளை வாங்கும்போதும் சரி, விற்கும்போதும் சரி, பொய் சொல்லவேண்டிய





கட்டாயத்திற்கு அவர்கள் தூண்டப்படுகிறார்கள். இவ்வாறு 500 ரூபாய்க்கு மேல் பொருள்களைக் கொள்முதல் செய்தால், ஆர்.சி. எண்ணைக் குறிக்க வேண்டுமென்கிற உத்தரவைப் போட்டு சுமார் 21 ஆண்டுகளுக்கு மேலாகிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் நிதிநிலை அறிக்கை விவாதத்தின்மீது பேசுவதற்கு இன்றுதான் கடைசி நாள். நாளைய தினம் கட்சித் தலைவர்கள் பேசி, அதன்பின் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். எனவே இன்றைக்கு விவாதம் 1-30 மணிக்காவது முடிந்தால் நலமாக இருக்கும். இன்னும் இரு உறுப்பினர்கள் பேச வேண்டும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எவ்வளவு குறைவாக இருக்க முடியுமோ அவ்வளவு குறைவாகப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. ப. சிவராமன்:** அந்தக் காலத்தில் 500 ரூபாய் என்பது பெரிய தொகையாக இருந்தது. ஆனால் இன்றைக்கு ஒரு மூட்டை துவரம் பருப்பே 700 ரூபாய்க்கு மேலாகிறது. இப்போதும் ஆர்.சி.-யைக் குறிக்க வேண்டுமென்று சொல்வது சரியாக இருக்காது. எனவே இந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் ; அல்லது இந்த வரம்பை குறைந்தபட்சம் ரூ. 1,500 என்றாவது உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்நிதிநிலை அறிக்கையில் நாட்டுச் சர்க்கரைக்கு வரி விலக்களிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வெல்லத்திற்கு வரி உண்டு. இதனால் பல சங்கடங்கள் ஏற்படும். நாட்டுச் சர்க்கரைக்கு ஒவ்வோரிடத்திலும் ஒவ்வொரு பெயருண்டு. கண்டசாரி சர்க்கரை என்றும், தூள் வெல்லம் என்றும் சொல்வதுண்டு. எனவே இவற்றையெல்லாம் ஆராய்ந்து அரசு ஒரு சரியான விளக்கத்தைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, சீரகத்தைப்பற்றியும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கிராமங்களில் மக்கள், படி அரிசிக்கு பிடி சீரகம் என்று சொல்வார்கள். அதாவது ஒரு படி அரிசிக்கு ஒரு பிடி சீரகம் இருந்தால் போதும் என்று சொல்வார்கள். பொதுவாக வெந்தயம், சோம்பு என்கிற பெருஞ் சீரகத்தை மக்கள் மிகவும் குறைவாகத்தான் பயன்படுத்துவார்கள். எனவே இவற்றிற்கு வரிவிலக்கு அளித்தால், மக்களும் மகிழ்வடைவார்கள், அரசுக்கும் அதனால் அதிக அளவில் இழப்பு ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. அ. ப. சிவராமன்] [1986 ஏப்ரல் 2

**அடுத்து,** இன்னொரு மிக முக்கியமான விஷயத்தைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ஜெயச்சந்திரன் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். புதுவை மாநிலத்தைச் சேர்ந்த பாண்டிச்சேரி, காரைக்கால், மாகி முதலிய ஊர்களுக்கு அருகிலுள்ள தமிழ் நாட்டு மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள், புதுவை மாவட்ட ஆர்.சி.-ஐ எடுத்துக் கொண்டு சென்று சாக்குகளை அங்கே வாங்கி, இடையிலே சோதனைச் சாவடியில் ஒரு ரூபாய் இலஞ்சம் கொடுத்துவிட்டு, இங்கேகொண்டுவந்து விற்கிற நிலைமை இருந்து வருகிறது. ஒரு மூட்டை கடலைப் பருப்பு இதுமாதிரி கொண்டுவந்து இங்கே விற்றால் ரூ. 708-க்கு விற்கலாம். ஆனால் இங்கேயே வாங்கி விற்றால், ரூ. 728-க்குத்தான் விற்கவேண்டிய கட்டாயம் ஏற்படும். புதுவை என்பது கடலூருக்கு 12 மைல் தூரத்தில்தான் இருக்கிறது. புதுவை, தென்னாற்காடு மாவட்டத்தின் பல பகுதிகளுக்கு அருகாமையில் தான் இருக்கிறது. புதுவை மாநிலத்தில் வாங்கிய ஆர்.சி.-ஐ எடுத்துக்கொண்டு, அங்கே ரூ. 700க்குப் பொருள்களை வாங்கி இடையில் சோதனைச்சாவடியில் ஒரு ரூபாய் இலஞ்சம் கொடுத்துவிட்டு, இங்கே கொண்டுவந்து ரூ. 708 அல்லது ரூ. 710-க்கு விற்கிறார்கள். இவ்வாறு எல்லோரையும் ஏமாற்றுகிறார்கள் என்று நாம் சொல்லவேண்டியதில்லை. இதை "பிசினஸ் காம்பெடிஷன்" என்று சொல்லலாம். ஆனால் இவர்களை கள்ளக்கடத்தல்காரர்கள் போல் நடத்துகிறார்கள். இந்நிலையைப் போக்க நாம் சோதனைச் சாவடிகளைப் பலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, கேரளாவில், பருப்புக்கு ஒரு சதவீதம் வரி விதிப்பு போட்டிருக்கிறார்கள். ஆனால் நாம் இங்கே நான்கு சதவீதம் போட்டிருக்கிறோம். இதனாலும் அங்கு பொருள்களை வாங்கி இங்கே கொண்டுவந்து விற்கும் நிலைமை ஏற்படுகிறது. எனவே அங்கே இருப்பதுபோல் இங்கேயும் வரிவீதத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதனால் வியாபாரம் அதிகமாகும் என்பதுதான் உண்மை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, வியாபாரிகளைப் பொறுத்தவரையில், அதிகாரிகள் அவர்களை "கள்ள வணிகர்கள்" என்பதுபோல் கருதி நடத்துகிறார்கள். அவர்கள் திருடர்கள் போல நடத்தப்படுகிறார்கள் என்கிற குறை இருக்கிறது. "ரெயிடு" நடத்துகிறார்கள். அவ்வாறு ரெயிடு நடத்தும்போது, கொஞ்சம் மரியாதையோடு நடத்துவதில்லை. அந்த அதிகாரிகள் 'ரெய்டு' நடத்தும் போது ஏற்படும் அபராதத் தொகையைவிட அந்த அதிகாரிகளுக்குக்



1986 ஏப்ரல் 2] [திரு. அ. ப. சிவராமன்]

(பிற்பகல் 12-45)

கிடைக்கும் செலவுத் தொகை இரண்டு மடங்காக இருக்கிறது. அது பொதுவாக இருக்கிற நிலைமை என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் நான் சீக்கிரம் முடித்துவிட வேண்டுமென்று சொல்கிற காரணத்தால் நான் சீக்கிரம் முடித்துவிடுகிறேன் . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் நிறைய விஷயங்கள் வைத்திருக்கிறார்கள். அவர்கள் முன்பே பேசியிருந்தால் நீண்ட நேரம் பேசியிருக்கலாம்.

**திரு. அ. ப. சிவராமன் :** பண்ணுருட்டியிலே எட-ல-புரம் என்ற ஒரு சேனல் இருக்கிறது. இதில் பல லட்ச ரூபாய் செலவில் ஒரு பகுதி கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. இதைப் பொறுத்தவரையில், பண்ணுருட்டியில் இருக்கிற எல்லா கழிவு நீரும் இந்தச் சேனலில் வந்து சேரவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் இருக்கிறது. இந்தச் சேனல் பக்கத்திலிருக்கிற ஒரு ஏரியிலிருந்து அதிகப்படியான நீர் வருவதற்காகக் கட்டப்பட்டிருக்கிறது. இதில் ஒரு பகுதி கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. மற்றப் பகுதிகள் காடாகக் கிடக்கின்றன. பத்து ஆண்டுக் காலமாக அப்படிக் கிடக்கின்ற காரணத்தால், இந்தப் பகுதியிலே சாக்கடை நீர் தேங்கி, மக்களுக்குச் சிரமம் ஏற்பட்டு, கொசுக்கள் உற்பத்தியாகி மக்கள் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே 10 அல்லது 15 ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்ட அணைப்பு நிலையத்திற்கு ஒரு நிலையான கட்டிடம் இல்லை. அதற்கு ஒரு நிலையான கட்டிடம் பண்ணுருட்டியிலே கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே கால்நடை மருத்துவமனையைப் பொறுத்தவரையில், அது 1981-லே பயனற்றது என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்த பிறகும்கூட, அந்த மருத்துவமனை புழக்கத்தில் இருந்துகொண்டிருக்கிறது. இதனால் பல்வேறு உபத்திரவாதங்கள் ஏற்பட்டிருக்கிற காரணத்தாலே, இதில் அருள்கூர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், 'ரியல் எஸ்டேட்' என்ற வகையில் நகரங்களின் புறநகர்ப் பகுதியில் இருக்கிற ஒவ்வொரு நிலத்தையும் அவர்கள் ஆக்கிரமித்து அந்த நிலங்களை 'பிளாட்' போட்டு விற்கும் நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது. இது எங்கு போய் முடியுமென்றால், விவசாயத் தொழிலாளியாக பணியாற்றும் ஆதிதிராவிட மக்கள் நாளை விவசாய வேலைகள் இங்கு இல்லை என்ற நிலைமைகள் ஏற்படும் போது, வேறு மாநிலங்களுக்குக் கொத்தடிமைகளாகப் போகும் நிலைமை உண்டாகும். அதனால் இந்த ரியல் எஸ்டேட்டை உடனடியாகக் கவனித்து நிறுத்த வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகிற வாய்ப்பு நல்கியமைக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் மேலவைத் தலைவர் அவர்களுக்கும், துணைத் தலைவர் அவர்களுக்கும், நிதிநிலை அறிக்கையை அளித்த மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும் நான் சார்ந்திருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். ஏழை எளிய பாட்டாளி மக்களினுடைய நன்மையைக் கருதி இன்றையதினம் தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு வரி இல்லாத நிதிநிலை அறிக்கையைத் தயாரித்துத் தந்திருக்கிறது. எனவே அதைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்; அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்தியத் துணைக் கண்டத்தினுடைய அரசியல் வரலாற்றில் கடந்த 40 ஆண்டுக் காலமாக நாம் விடுதலை பெற்ற பிறகு பல்வேறு ஆட்சிகள் மாநிலத்திலும்சரி, மத்தியிலும்சரி மாறியிருக்கின்றன. அவர்கள் எல்லாம் நாட்டினுடைய நலனைக் கருதியோ, நலனைக் கருதாமலோ வரி போடுவதும், வரி போடுவதினால் விலைவாசி ஏறுவதும், விலைவாசி ஏறுவதினால் கூலி உயருவதும், கூலி உயருவதனால் மறுபடியும் வரி போடுவதும் இப்படி ஒரு தொடர் கதையாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தத் தொடர் கதைக்கு முற்றுப்புள்ளி காண வேண்டுமென்பதற்காகத்தான் தர்மத்தின் தலைநாயகனாக இருக்கிற புரட்சித் தலைவர் அவர்கள் இன்றையதினம் வரி இல்லாத நிதிநிலை அறிக்கையைத் தயாரித்ததோடு மட்டுமல்லாமல், வரியைக்



குறைத்தும் இருக்கிறார்கள். ஏழை எளிய மக்களுடைய நலனைக் கருதி வரியைக் குறைத்திருக்கிறார்கள். அவர் வரியைக் குறைத்ததினுடைய நோக்கமே மனிதனுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்பட்ட பண்டங்களின் விலைகளைக் குறைக்க வேண்டுமென்பதுதான். ஏழை எளிய மக்களின்பால் கொண்டிருக்கிற அக்கறையின் காரணமாகத்தான், புரட்சித் தலைவர் இந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது இந்த நாடு அறிந்த உண்மை; இந்த நாட்டு மக்கள் அறிந்த உண்மையாகும். புரட்சித் தலைவர் தான் ஆட்சிக்கு வந்த பிறகு, சத்துணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். சத்துணவுத் திட்டத்தைப்பற்றி பல பேர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். ஆனால் புரட்சித் தலைவரவர்கள் சத்துணவுத் திட்டத்தை ஏன் கொண்டு வந்தார்கள் என்பது நாடு அறிந்த உண்மையாகும். இந்த நாட்டில் இருக்கிற ஏழை எளிய பாட்டாளி மக்களுடைய பிள்ளைகள், வருங்கால சந்ததிகள் வலுவுள்ள பிள்ளைகளாகவும், சத்துள்ள பிள்ளைகளாகவும் உருவாக வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல், ஏறத்தாழ 200 கோடி ரூபாய் செலவின் மூலம் வளருகிற பிள்ளைகள் சாதி, சமய பேதமற்ற ஒரு சமத்துவத்தை உருவாக்குவதற்கு, அண்ணாவின் கொள்கைகளையும், பெரியார் அவர்களின் கொள்கைகளையும் உருவாக்குவதற்கு அடிகோலும் என்றுதான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்த

(பிற்பகல் 12-50)

நேரத்திலே அதற்கு ஆரூடம் கணித்தவர்கள், இதுவும் ஒரு 100 நாள் படம் என்று சொன்னவர்கள், எங்களைப் பார்த்து கேலி பேசியவர்கள், இந்த நாட்டில் இவர்கள் பிச்சைக்காரர்களைத்தான் உருவாக்கப் போகிறார்கள் என்று கிண்டல் செய்தவர்கள், தேர்தல் களத்திற்கு வந்தபோது, என்ன சொன்னார்கள் தெரியுமா? "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நாங்களும் சத்துணவு தருவோம், அதுவும் உண்மையான சத்துணவைத் தருவோம், முட்டையோடு தருவோம், வாழை இலையில் தருவோம்" என்று பேசினார்கள். அவர்களைப் பார்த்து இந்த நாட்டு மக்கள் ஒரு தெளிவான முடிவை எடுத்தார்கள். அண்ணாவின் தம்பிகள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் அண்ணா தந்த கொடியை வைத்துக் கொண்டிருப்பவர்கள், அண்ணா தந்த கட்சியை வைத்துக் கொண்டிருப்பவர்கள், என்று சொல்லிக் கொண்டாலும், இவர்கள் அண்ணா தந்த படியரிசித் திட்டத்தை மறந்தவர்களாயிற்றே, எப்படி இவர்களை நம்புவது என்று நினைத்து, திட்டவட்டமான முடிவை கடந்த தேர்தலில் எடுத்து நாட்டுக்கு அறிவித்தார்கள். அதை உணர்ந்த

காரணத்தால்தான், மாண்புமிகு புரட்சித் தலைவர் இத்தகையதோர் நிதிநிலை அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்கள். அதிலே பல சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். பல வரிகளை நீக்கியிருக்கிறார்கள். அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவராமன் அவர்களேகூட இங்கே குறிப்பிட்டாகள். நாட்டுச் சர்க்கரை மீதான வரியைக் குறைத்ததையும் நாட்டு மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் சீரகம் போன்றவற்றிற்கான வரியை எடுத்து விலையைக் குறைத்ததையும் இங்கே குறிப்பிட்டார்கள். இப்படி நல்லதைச் செய்யும் அரசுக்கு நான் ஒன்றை மட்டும் இந்த நேரத்தில் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். மதுரை போன்ற பகுதிகளில் விதவைத் தாய்மார்கள் தங்கள் வீடுகளிலே ஊறுகாய் தயாரிக்கிறார்கள். அப்படித் தயாரிக்கப்படும் ஊறுகாய் பொட்டலங்களை ஐந்து பைசாவுக்கு விற்று ஏதோ கொஞ்சம் லாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சில அதிகாரிகள்—வேண்டுமென்றே இந்த அரசுக்குக் கெட்ட பெயரை உருவாக்க வேண்டும் என்று செயல்படுகிற சில அதிகாரிகள், திட்டமிட்டே களங்கம் கற்பிக்க வேண்டும் என்று செயல்படுகிற சில அதிகாரிகள்—ஒரு நாளைக்கு 10 ரூபாய் சம்பாதித்துக் கொண்டிருக்கும் அந்தத் தாய்மார்களை மிரட்டி கையூட்டு பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அத்தகைய விதவைத் தாய்மார்கள் எந்தவிதமான சிக்கலும் இல்லாமல் தங்கள் வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்த தமிழக அரசு வழிவகை செய்து தர வேண்டுமென்று, மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஏழை எளிய மக்கள் மீது எந்த அளவுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு அக்கறை கொண்டிருக்கிறது என்பதற்கு சான்று ஒன்றைக் குறிப்பிட வேண்டுமென்றால், ஏறத்தாழ 100 கோடி ரூபாய் அளவுக்கு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக வெளியே அதிக விலைக்கு அரிசி வாங்கி குறைந்த விலைக்கு நாட்டு மக்களுக்கு விநியோகித்துக் கொண்டிருப்பது இந்த அரசாகும். இதன் நோக்கம் விலைவாசியைக் கட்டுப்படுத்துவது மட்டுமல்ல, விலைவாசி ஏறிவிடாமல் தடுக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, ஏழை எளிய மக்களுக்கு எப்படியும் அரிசி கிடைக்க வேண்டும், பருப்பு கிடைக்க வேண்டும், பாமாயில் கிடைக்க வேண்டும் என்ற தொலை நோக்கத்தோடு தமிழக அரசின் முதலமைச்சர் அவர்கள் செயல்படுகிறார்கள். இதிலே கூட என்ன நடக்கிறது என்றால், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகளில் ஒரு சிலர் தவறாக நடந்து கொள்கிறார்கள். எடைகளைத்





தவறாகப் போடுகிறார்கள், பொருள்களைக் கள்ளச் சந்தையில் விற்கிறார்கள். இப்படி ஒரு சிலர் திட்டமிட்டு காரியமாற்றுகிறார்கள். இந்தத் தவறுகளைச் சில அதிகாரிகள் கண்டித்தால்கூட, சில அரசியல் வாதிகள்—அதிலும் தொழிற் சங்கவாதிகளாக இருப்பவர்கள் கையூட்டு பெற்றுக்கொண்டு, தவறான முறையில் மேலும் மேலும் அவர்களை உற்சாகப்படுத்துகிறார்கள். அப்படிப்பட்ட தொழிற்சங்கவாதிகள் யாராக இருந்தாலும் அவர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை இந்த அவையிலே திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்திற்குத்தான் 100 கோடி ரூபாய் நஷ்டமானாலும் பரவாயில்லை என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை எளிய மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கள்ளச் சந்தையில் இன்றைக்கும் அரிசி பருப்பு போன்றவைகளை விற்கிறார்கள். இதை உடனடியாகத் தடுத்தாக வேண்டும். புரட்சித் தலைவரின் அரசுக்குக் களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு ஒரு சிலர் மட்டும் திட்டமிட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். யாருடைய காலத்திலோ அந்தப் பொறுப்புக்கு வந்து அந்த வேலையில் அமர்த்தப்பட்டவர்கள், திட்டமிட்டு தொழிற் சங்கம் என்று வைத்துக்கொண்டு, சதித் திட்டம் ஒன்றை உருவாக்கிச் செயல்படுகிறார்கள். அவர்களை எல்லாம் அடையாளம் கண்டுகொள்வதற்காக இந்த அவையின் மூலமாக ஒரு குழுவையாவது அமைத்து உடனடியாக அதைத் தடை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்னை நகரத்தில் உள்ள திரை அரங்குகளைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது வெயில் காலம் ஆரம்பித்துவிட்டது. அந்தத் திரை அரங்குகளில் ஏர் கண்டிஷன் யூனிட்கள் வேலை செய்வதில்லை. அதற்காக அந்தத் திரை அரங்கின் உரிமையாளர்கள் அதிகமாகக் கட்டணத்தை பெறுகிறார்கள் என்றாலும் கூட, ஏர் கண்டிஷனர்கள் அங்கெல்லாம் வேலை செய்யாமல் இருக்கின்ற நிலை இருக்கிறது. இத்தகைய திரை அரங்குகள்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த அவையின் மூலமாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-55)

சென்னை மாநகராட்சியை எடுத்துக்கொண்டால், எங்கே பார்த்தாலும் இருள். மஸ்டர் ரோல் ஊழலுக்குப் பிறகு இன்றைக்கும் அந்த நிலை நீடித்துக் கொண்டிருக்கிறது. மஸ்டர் ரோல் ஊழல் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அன்றையதினம் பொறுப்புக்கு வந்தவர்கள் தங்களுடைய நன்றிக் கடனை

ஆரம்பிக்கலாமென்று மத்திய அரசு முடிவு செய்து பத்திரிக்கையில் விளம்பரம் செய்திருக்கிறது. அதற்கு பலபேர் மனு செய்திருக்கிறார்கள். நாம் பரிந்துரை தான் செய்யலாம். அவர்களுக்கு மத்திய அரசுதான் அனுமதி தர வேண்டும். அதுபற்றி தனியாகக் கேள்வி கேட்டால், பதில் அளிக்கப்படும்.

### உணவகங்கள்.

* 140 வினா—திரு. சி. இராமலிங்கம் (டாக்டர் இரா. சனார்த்தனம் சார்பில்): மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) உணவகங்களில், சிற்றுண்டிகள் அரசு அறிவித்துள்ள விலைகளில் வழங்கப்பட, எடுத்துள்ள நடவடிக்கை யாது?

(இ) அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள விலைகளில் வழங்காத உணவகங்கள் மீது, அரசு, 1-9-1985 வரை, எடுத்துள்ள நடவடிக்கை யாது?

(உ) மாதிரி உணவகங்களை நடத்த அரசு திட்டமிட்டுள்ளதா?

(எ) ஆம் எனில், சமையல்கலை படித்த மாணவர்கள், அவ்வுணவகங்களை நடத்த, அரசு ஊக்குவிக்குமா?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** (அ) மற்றும் (இ)—ஓட்டல் பண்டங்களின் விலையுயர்வு குறித்து உணவு அமைச்சர் என்கிற முறையில் நான் தலைமைச் செயலகத்தில் ஓட்டல் உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகளோடு பேச்சுவார்த்தை நடத்தினேன். அப்பேச்சு வார்த்தைகளின் பலனாக சென்னை நகரத்தில் சாதாரணமாக மக்கள் விரும்பிச் சாப்பிடுகிற, அவர்களுக்குத் தேவையாக இருக்கிற இட்லி, சாதா தோசை, காபி, டீ, அளவுச் சாப்பாடு போன்ற 5 உணவுப் பண்டங்களுக்கு அரசு அறிவித்துள்ள விலைகளில் விற்பதற்கு ஓட்டல் உரிமையாளர்கள் சங்கம் அதனுடைய பிரதிநிதிகள் தாமாக முன்வந்து ஒப்புக்கொண்டனர். மாவட்டங்களில் இவ்வாறு சென்னையில் விலை நிர்ணயம் செய்தது போல் அந்தந்த மாவட்டங்களில் இருக்கிற விலைவாசிக்கு ஏற்றவாறு விலைகளை நிர்ணயம் செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். அந்தந்த மாவட்டங்களில் இருக்கிற ஓட்டல் உரிமையாளர் சங்கங்களிடையே அந்தந்த மாவட்டத்தில் இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி சென்னையில் விலை



நிர்ணயம் செய்தது போல் விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். எனவே இப்படி எல்லா மாவட்டங்களிலும் விலை நிர்ணயம் இந்த ஐந்து வகையான உணவுப் பண்டங்களுக்குச் செய்யப்பட்டிருக்கின்றது.

**(உ) மாதிரி உணவகங்கள் நடத்தும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.**

**(எ) இக் கேள்விக்கு இடமில்லை.**

### *Diesel Generators.*

* 131 *Q.*—Thiru K. SUBBU: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the TANCEM has proposed to purchase Diesel Generators, to combat power cut; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) டான்செம், அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு மூன்றும் மற்றும் ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலைக்கு இரண்டும் என்ற வீதத்தில் ஐந்து டீசல் ஜெனரேட்டர் இயந்திரங்களை நிறுவ எண்ணியுள்ளது.

**திரு. க. சுப்பு:** தலைவரவர்களே, டீசல் ஜெனரேட்டர் இயந்திரங்களை வாங்குவதற்கு ஏதாவது கமிட்டி போடப்பட்டிருக்கிறதா? அவைகள் வாங்குவதற்கு விவரங்கள் ஏதாவது இருக்கின்றனவா? அவைகளை எங்கிருந்து வாங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது? அவைகளை வாங்க 'ஓபன் டெண்டர்' கேட்கப்பட்டிருக்கிறதா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, கமிட்டி போடப்பட்டதாகத் தெரியவில்லை. 'ஓபன் டெண்டர்' கேட்டுத்தான் வாங்குகிறார்கள். ஏற்கெனவே பல 2500 கே.வி. டீசல் ஜெனரேட்டர்கள் இறக்குமதி செய்யப்பட்டு நிறுவப்பட்டு வருகின்றன. வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட ஒரு இயந்திரம் சமீபத்தில் அரியலூரில் வேலையை ஆரம்பித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு:** தலைவரவர்களே, அவைகள் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்டன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவைகள் எந்த நாட்டிலிருந்து எந்தக் கம்பெனியிலிருந்து, என்ன விலைக்கு வாங்கப்பட்டது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, அதுபற்றி தனிக் கேள்வி போட்டால், விடையளிக்கப்படும்.

இப்போது தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஆட்சிக்கு எப்படியும் கெட்ட பெயர் உண்டாக்க வேண்டும், புரட்சித் தலைவருடைய ஆட்சிக்குக் களங்கம் கற்பிக்க வேண்டும், மாநகராட்சியைப் பிடிக்கக் கூடாது என்பதற்காகத்தான் இன்றையதினம் திட்டமிட்டு அவர்கள் சில காரியங்களைச் செய்கிறார்களோ என்ற ஐயம் எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால் எங்கே பார்த்தாலும், இத்தகைய புகார்கள் வருகின்றன. குறிப்பாக புரட்சித் தலைவர் தமிழகத்தின் முதல்வர் கடந்த 30 ஆம் தேதி கூட்டத்திற்கு வரும்போது, அவர் வருகின்ற சாலைகளான மன்னார்சாமி கோயில் தெரு, சூரியநாராயணா செட்டி தெரு, கிழக்கு மாதா கோயில் தெரு, மேற்கு மாதா கோயில் தெரு ஆகிய எந்தத் தெருவிலும் விளக்குகள் எரியவில்லை. ஹைவேஸ் சாலைகள் அவை. அச்சாலைகளின் இருபுறமும் பார்த்தால், ஒரு முக்கிய பிரமுகரின் லாரிகளும், டிராக்டர்களும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. எந்த வாகனமும் செல்ல முடியவில்லை. சாலைகளின் மையத்தில் சாக்கடைகள் அடைபட்டு இருந்த காரணத்தால், பள்ளங்கள் தோண்டப்பட்டிருந்தன. இந்த நாட்டின் முதல்வர் அந்தப் பகுதிக்குச் செல்லுகிறபோது, விளக்குகள் சரிவர எரியவில்லை. சில விளக்குகள் மின்மினிப் பூச்சிகள் போல எரிந்து கொண்டிருந்தன. இதே நிலை மாநகராட்சியின் பல பகுதிகளில் இருக்கின்றது. இத்தகைய நிலை இருப்பதற்குக் காரணம் சில அதிகாரிகளுடைய பொறுப்பற்ற தன்மைதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை உடனடியாகத் தீர்ப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதை உடனடியாகத் தீர்ப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

(திரு. நெல்லை பாலாஜி தன் இருக்கையிலிருந்து எழுந்தார்)

யாரும் தயவு செய்து குறுக்கிட வேண்டாம். நான் குறுக்கிட்டால் நீங்கள் பேச முடியாது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** குறுக்கிடுவதற்கு பேசுகின்ற உறுப்பினர் சம்மதிக்கவில்லை. உட்கார வேண்டும்.

**திரு. இ. மதுசூதனன் :** இந்த நிலையில் இன்றைய தினம் மாநகராட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வட சென்னை பகுதியைப்பற்றி இந்த அவையிலே ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வட சென்னையிலுள்ள துறைமுகம், ராயபுரம், ராதாகிருஷ்ணா நகர், பெரம்பூர் போன்ற பகுதிகள் ஏழையெளிய மக்கள் வாழும் பகுதிகள். அந்தப் பகுதிகளில்



சாலைகள் போடப்படுகின்றன. அந்தச்சாலைகளில் மணலும் தாரும் போடப்படுகின்றன. ஒரு நாள் மழை பெய்தால்கூட, அந்தச் சாலைகளில் மணல் வெளியே வருகிறது. அதை உடனடியாகக் கண்காணிக்க வேண்டும். கண்காணிக்கும் குழுக்கள் கூறும் குற்றச்சாட்டுகள் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு வழிவகை செய்து தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மதுவிலக்கு. புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தொலைநோக்கோடு, இந்த நாட்டின் வருங்கால சந்ததியினர் ஒழுங்கானவர்களாக இருக்க வேண்டுமென்பதற்காக, வருகின்ற சனவரி 1 ஆம் தேதி முதல், மத்திய அரசு உதவி செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி, மதுவிலக்கை நடத்தியே தீருவேன் என்று திட்டவட்டமான கொள்கையை வகுத்திருக்கிறார்கள். இது நடைபெறுமா, நடைபெறாதா, முடியுமா முடியாதா என்று பல பேர் ஆருடம் கணித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் ஒன்றே ஒன்றை இந்த அவையின் வாயிலாகக் கேட்கிறேன். 1947 முதல் 1971 ஆம் ஆண்டு வரையில் இந்த நாட்டிலே குடிக்கத் தெரியாமல் இருந்தவர்களை யார் குடிக்கச் செய்தார்கள் ? இந்த நாடு விடுதலை பெற்ற பிறகு குடிக்காதவர்களையெல்லாம் குடிக்கச் செய்த பெருமை யாரைச் சாரும் ? புரட்சித் தலைவர் அவர்கள் எப்படியும் கள்ளச் சாரயத்தை ஒழிக்க வேண்டும் என்பதற்காக கடுமையான சட்டங்களை வகுத்த நேரத்தில், அதைப்பற்றியும் கேலி பேசினார்கள். அதைப்பற்றிப் பேசி அரசியல் லாபம் தேடினார்கள். இந்த நாட்டிலே ஒழுங்கானவர்களை உருவாக்குவதற்காக, வருங்கால சந்ததியினர் நேர்மையானவர்களாக, நீதிமான்களாக வாழ வழி என்ன என்பதைப்பற்றி உறுப்பினர்களும், அரசியல்வாதிகளும்—அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும்—சிந்திப்பதே இல்லை. இதற்கு மாறாக இதனால் தம்முடைய கட்சிக்கு என்ன லாபம் என்று பார்க்கிறார்கள். மறுபடியும் நாற்காலியைப் பிடிக்க என்ன வழி என்று சிந்திக்கிறார்கள். அடுத்த தலைமுறையைப்பற்றி யாருமே சிந்திப்பதில்லை. அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்திக்கின்ற ஒப்பற்ற தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தான் என்பதை இந்த அவையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுவிலக்கைக் கொண்டுவருகிற நேரத்தில் கள்ளச் சாராயத்தை எப்படியாவது ஒழிக்க வேண்டும்.

[1986 ஏப்ரல் 2

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவையின் அனுமதியோடு மேலவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. இ. மதுசூதனன் :** இதன் வாயிலாக கள்ளச்சாராய வியாபாரிகள் மீது, திரு. சிவராமன் அவர்கள் சொன்னதுபோல, ஒரு சட்டம் போட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஏறத்தாழ அரசாங்கத்திற்குப் பெரிய நஷ்டம் ஏற்படுவது மட்டுமல்லாமல், தனிப் பட்டவர்கள் இந்த நிலைமையைப் பயன்படுத்திக்கொள்கின்றார்கள். தனிப்பட்டவர்களுக்குப் பின்னாலே சில சந்தர்ப்பவாதிகள் இருக்கின்றார்கள். அவர்கள் லாபம் அடிக்க ஆரம்பித்தார்கள். அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு கள்ளச் சாராயத்தை விற்பவர்கள் மீது மட்டும் நடவடிக்கை எடுப்பதால் மட்டும் பயன் இல்லை. எந்த சரகத்தில் அந்தக் கள்ளச் சாராயம் விற்கப்படுகிறது என்று பார்க்க வேண்டும். அந்த சரகத்திலே இருக்கின்ற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். கடுமையான சட்டங்கள் போட்டு அதன் வாயிலாக நடவடிக்கை எடுத்தால்தான், அதை ஒழிக்க முடியும் என்பதனை இந்த மேலவையில் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது தலைவரைப் பார்த்துப் பேசவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. இ. மதுசூதனன் :** அப்படி திறமையாக நடவடிக்கை எடுக்கின்றவர் களுக்குப் பரிசு தருவது மட்டுமல்லாமல், புரோமோஷனையும் தர வேண்டும். சீனியாரிட்டி அடிப்படையிலே தான் புரோமோஷன் என்று தந்து கொண்டிருப்பதால், தரம் குறைந்துவிடுகிறது. அந்தத் தரத்திற்கு மரியாதையும் வாய்ப்பும் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித் தமைக்காக நான் உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாங்கள் அறிவித்ததுபோல, ஒன்றரை மணிக்கு முன்னால் முடித்துக் கொள்வேன் என்ற உறுதியோடு பேச்சைத் தொடங்குகிறேன் என்று ஏன்





சொல்கிறேன் என்றால், இந்த அவையிலேயிருந்து உறுப்பினர்கள் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேறிக்கொண்டிருக்கின்றார்கள். கடைசியிலே யாரும் இல்லாமல் இருக்கின்ற நிலைமையிலே பேச வேண்டியிருக்கும். எப்போதும் சுருக்கமாகவே பேசும் நான் சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள முன்வருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மூத்த உறுப்பினர் என்ற அளவிலே கடைசியிலே வாய்ப்புக் கொடுப்பதுதான் வழக்கம். அந்த முறையிலேதான் உறுப்பினர் அவர்களுக்கு ஒரு மணியளவில் வாய்ப்பு கொடுத்திருக்கிறேன்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான் சொல்வது என்னவென்றால், பேசி 'ரெக்கார்ட்' பண்ண வேண்டும் என்பதற்காகத்தான். நான் பேசவில்லை என்று இருக்கக்கூடாது என்பதற்காகப் பேசுகிறேன். ஆகவேதான் நான் சில கருத்துக்களைச் சொல்ல முன்வந்திருக்கிறேன்.

என்னுடைய பேச்சைத் தொடங்குவதற்கு முன்னதாக இந்த அவை யினுடைய உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொன்ன ஒரு கருத்தை நான் ஆதரிக்கிறேன். அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இந்த நிதிநிலை அறிக்கையின்மீது விவாதம் நடக்கும்போது, நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே இருக்க வேண்டும் என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். நாம் என்ன பார்க்கிறோம் என்று சொன்னால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பட்ஜெட்டை சமர்ப்பிக்க வருகின்றார்கள். நிதி மசோதாவைத் தாக்கல் செய்ய வருகின்றார்கள். இடையிலே வந்து போகின்ற விருந்தாளிபோல வந்துவிட்டுப் போய்விடுகின்றார்கள். அதற்குச் சொல்லப்படக்கூடிய காரணம், சட்டமன்றப் பேரவையும் சட்டமன்ற மேலவையும் ஒரே நேரத்தில் நடப்பது என்று சொல்கின்றார்கள். அதனால் வர இயலவில்லை என்று சொல்கின்றார்கள்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மன்னிக்க வேண்டும். ஒரு தகவலுக்காகச் சொல்கிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மாண்புமிகு அவையினுடைய முன்னவர் அவர்களும் இன்னொரு அறையிலே தமிழ்ச் சங்கத்தினுடைய உறுப்பினர்களுடன் பேச வேண்டும் என்பதற்காகப் போயிருக்கின்றார்கள். ஒரு அரை மணி நேரம் போய்விட்டு வந்துவிடுகிறோம் என்று சொல்லிவிட்டுப் போயிருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் வந்து உட்கார்ந்துகொண்டிருக்க வேண்டும் என்ற திட்டத்தோடுதான் வந்திருந்தார்கள். இந்த அவையை அவமதிக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை என்பதனை நம்முடைய முன்னாள் அமைச்சர் ஆகவும், என்னுடைய நண்பராகவும் இருக்கக்கூடிய அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அலுவல் காரணமாகப் போயிருக்கின்றார் என்ற விவரம் தெரியாது. பொதுவாக நான் சொல்ல விரும்புவது நிதிநிலை அறிக்கை அளிக்கப்பட்டு விவாதிக்கும்போது, நிதி அமைச்சர் அவர்கள் வந்து உட்கார்ந்திருக்கின்ற அளவிலே நேரத்தை ஒதுக்கிக்கொள்வது நல்லதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். இப்படி பேசுவதை 'டேப் ரெக்கார்ட்' செய்து, அந்த டேப் ரெக்கார்டரைப் போட்டுக் கேட்டு அதற்குப் பதில் சொல்வது என்பது பயன் தராது என்று நான் கருதுகிறேன். நேருக்கு நேராகப் பேசும்போது, அதற்குக் கொஞ்சம் 'வெயிட்' இருக்கும். அதற்காகத்தான் சொல்கிறேன். நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு, விருந்தாளி போல வந்து விருந்தாளிபோல போவது நல்லதல்ல என்ற கருத்தைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, நிதிநிலை அறிக்கையிலே பேசும்போது, நம்முடைய உயர்நீதி மன்றத்திலே காலியாக இருக்கின்ற இடங்களில், நூற்றுக்கணக்கான கோர்ட்டுகளில் மாஜிஸ்ட்ரேட்டுகளும் முன்சீப்களும் போடாமல் இருக்கின்றார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். இதுவரைக்கும் எந்த நபரையும் போட்டிருப்பதாகத் தெரியவில்லை. இப்போதும் நான் சொல்ல விரும்புவது, உயர்நீதி மன்றத்திலேகூட நான்கிற்கும் மேலே இடங்கள் காலியாக இருக்கின்றன.

(பிற்பகல் 1-05)

அதைப்போல தமிழ் நாட்டிலே பல்வேறு கோர்ட்டுகளிலே நூற்றுக்கணக்கான இடங்கள் காலியாக இருக்கின்றன. அதற்காக சர்வீஸ் கமிஷன் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 33 பேர் என்று அறிவிப்பு வந்திருக்கிறது. அவர்களுக்கு அப்பாயின்ட்மென்ட் ஆர்டர் போட்டதாகத் தெரியவில்லை. இனியும் காலதாமதம் செய்யாமல் அந்த இடங்களை நிரப்ப வேண்டும்.



அடுத்து, நம்முடைய சட்ட அமைச்சரவர்கள் பேசியதாக பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். பெண் நீதிபதி ஒருவர் உயர்நீதி மன்றத்தில் நியமிக்கப்பட இருப்பதாகக் கருத்து தெரிவிக்கப்பட்டது. இதுவரை பெண் நீதிபதி நியமிப்பதற்கான சாத்தியக்கூறு காணவில்லை. உடனடியாக ஒரு பெண் நீதிபதியை நியமித்து, உங்கள் ஆட்சிக் காலத்திலேதான் முதன் முதலாகப் பெண் நீதிபதியை நியமித்தோம் என்ற பெருமையை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மயில்சாமி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். உயர்நீதி மன்றத்திற்குச் சென்றால், வழக்குகள் காலதாமதமாகின்றனவே, 'ஸ்டே' வாங்கிவிடுகிறார்களே என்று எல்லாம் சொன்னார்கள். அது ஓரளவுக்கு உண்மையாக இருக்கலாம். அதே நேரத்தில் உயர் நீதி மன்றத்திலே வழக்குகளை நடத்துகிற அரசாங்கம் எப்படி நடந்து கொள்கிறது என்ற நிலைமையைப் பார்க்கும்போது, வேதனையாக இருக்கிறது. ஒரே ஒரு குறிப்பை மட்டும் படித்துக் காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் அனுமதியோடு படிக்கிறேன். இங்கே, சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், 'குவிட் ரென்ட்' என்று வசூலிக்கிறார்கள். 'குவிட் ரென்ட்' வசூலிக்கக்கூடாது என்று சொல்லி, ஒரு தனிப்பட்டர் நபர், திரு. தளவாய் என்பவர் கோர்ட்டுக்குப் போகிறார். அவர் வக்கீல் வைத்து வாதாடவில்லை, அவரே வாதாடுவார். 'குவிட் ரென்ட்' வசூலிக்கக்கூடாது என்று வழக்கு தொடரப்பட்டு, அதிலே 'ஸ்டே' கேட்கப் பட்டு, அந்த மனுவிலே அரசாங்கத் தரப்பிலே எப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இரண்டு, மூன்று வாக்கியங்கள் படித்து, தெரிவிக்க விரும்புகிறேன்.

"In this case, in spite of the fact that the Writ Petition had been filed as a public interest litigation and more than once explained that a particular Act had been relied upon to claim that the demand is illegal, the counter-affidavit does not deal with these points. Is it not expected of a Government to state that the said Act has been already repealed and that the Petitioner is relying upon an obsolete enactment?"

அது மாத்திரமல்ல, இன்னும் சொல்லுகிறார்கள்.

"Mainly because of the scantily prepared counter-affidavit which does not even disclose whether a particular enactment relied upon by the Petitioner is existing or not, it is left to the Court to find it out for itself."

இன்னும் என்ன சொல்லுகிறார்கள் என்றால், மிக முக்கியமான ஒன்று—

" If Government fails to put before the Court the correct position, the ultimate sufferers are the general public. "

" These are adverted to for enlightening those who are in charge of Government-interest litigations in Court as to how far and how negligently this defence is put forth. "

இந்த அளவுக்கு அலட்சியமாக அரசாங்கத்தின் நடவடிக்கை நடந்து வருகிறது.

திரு. க. சுப்பு : துணைத் தலைவரவர்களே, அரசாங்கத்தைச் சொல்வதை ஒத்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே,

The existence of a law need not be disclosed. The Court should take cognizance of the Act.

அது, அரசாங்கத்தினுடைய தப்பு என்று எப்படிச் சொல்லுவது? சட்டம் இருக்கிறதா, இல்லையா என்பது கோர்ட்டுக்குத் தெரியாமல் இருக்க முடியாது. பெட்டிஷனர், ரெமிடி கேட்டுப் போகும்போது, அதை 'கோட்' பண்ணாமல் இருக்க முடியாது. அது இல்லாமல் போனால், அதற்கு அரசாங்கம் பொறுப்பு ஆகுமா என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்ல வேண்டும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள், சிங்கிள் ஜட்ஜ் டெசிஷனுக்கு மேலே அப்பீல் போட்டுக் கேட்டால், அவர்கள் சொல்லுவார்கள். நான் சொல்ல முடியாது. சீஃப் செக்ரட்டரியையும், கலெக்டர் ஆஃப் மெட்ராஸ் அவர்களையும் இதிலே சேர்த்திருக்கிறார்கள். இவர்கள் பொறுப்பு ஏற்ற நிலையில், வழக்கை இப்படி நடத்தினால் என்ன செய்ய முடியும்? எனவே இந்த நேரத்தில் அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புவது, இது போன்ற பிரச்சினைகளில் கவனமாக நடந்துகொள்ள வேண்டுமென்ற கருத்தைத்தான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளுக்கும், ஹைகோர்ட் நீதிபதிகளுக்கும் ஊதிய உயர்வு கொடுக்கப்படுமென்ற அறிவிப்பு வந்திருக்கிறது. அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க வேண்டுமென்பதில் கருத்து வேறுபாடு யாருக்கும் இருக்க இடமில்லை. அதே நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, உயர்நீதி மன்றத்திற்கு ஜீவநாடியாக இருப்பவர்கள் சப்-ஜட்ஜஸ், ஜுடிஷியல்



மாஜிஸ்டிரேட்ஸ், டிஸ்டிரிக்ட் முனுசிப்ஸ் ஆகியோர் ஆவர். அவர்களின் ஊதியத்தையும் அதிகப்படுத்த வேண்டுமென்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

அடுத்து, இங்கே நம்முடைய உறுப்பினர்களில் சிலர் அரசாங்கத்தின் திட்டங்களைப் பாராட்டினார்கள். பாராட்டுவது குறித்து கருத்து வேறுபாடு ஒன்றும் இல்லை. ஆனால் நம்முடைய மாநிலத்தில் திட்டங்கள் எல்லாம் எப்படி நிறைவேற்றப்படுகின்றன என்பது குறித்து நான் சொல்லவில்லை, நான் சொன்னால் எதிர்க்கட்சிக்காரன் சொன்னான் என்று சொல்லி விடுவார்கள். பத்திரிகையில் வந்த ஒன்றைச் சொல்கிறேன். மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. சிதம்பரம் அவர்கள் பேசியதாக 23—10—1985 அன்றைய பத்திரிகையில் வந்தது.

" Tamil Nadu Government not properly implementing anti-poverty scheme for the past 15 months. "

15 மாதங்களாக என்று என்ன கணக்கில் சொல்லியிருக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை.

"Noticed stagnation in implementation ..........."

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஒருவேளை அவர் அமைச்சராக 15 மாதங்களாக இருக்கிறாரோ என்னவோ.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அமைச்சரானால் தான் தெரிய வரலாம். "Noticed stagnation in the implementation of the anti-poverty programmes after reviewing its working in Pon Muthuramalingam district "

அங்கே அதுபற்றிப் பார்த்திருக்கிறார். உடனே அறிவிப்பு தந்திருக்கிறார்.

திரு. க. சுப்பு : பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் என்கிற பெயரில் தமிழ் நாட்டில் மாவட்டம் இல்லை. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் என்பது தான் சரியான பெயர். உறுப்பினர் குறிப்பிட்ட பெயரில் சட்டமன்றப் பேரவையில் ஓர் உறுப்பினர் இருக்கிறார்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒருவேளை அவருக்கு எங்களைப்பற்றித் தெரியுமோ என்னவோ. இம்மாதிரி நிலைமைகளை எல்லாம் கவனிக்க வேண்டும்.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1986 ஏப்ரல் 2

அடுத்து, தமிழ் நாட்டிலே தொழில் வளர்ச்சியடைந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். இதுசம்பந்தமாக நான் ஒன்றைச் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். சிட்கோ என்கிற ஒரு நிறுவனம் இருக்கிறது. அதிலே என்ன நடைபெற்றிருக்கிறது என்றால், 18—2—1986 அன்று 200 பேரை 'ரிட்ரென்ச்' பண்ணியிருக்கிறார்கள். இதுதான் தொழில் முன்னேற்றமா? இன்னொன்றையும் சொல்கிறேன். பட்ஜெட் விவாதம் முடிவதற்காக காத்துக் கொண்டிருப்பதாகவும், இது முடிந்தவுடன் இன்னும் 400 பேரை வீட்டுக்கு அனுப்ப இருக்கிறார்கள் என்றும் கேள்விப்பட்டேன். இப்படியெல்லாம் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஹெட்கான்ஸ்டபிள்களுக்கு சப் இன்ஸ்பெக்டர் பதவி உயர்வு அளிப்பதற்கான பிரச்சினையைப் பொறுத்தவரையில், 2—12—1985-ல் பெர்சனல் பைல்ஸ் எல்லாம் எக்சாமின் பண்ணியிருக்கிறார்கள். 10—12—1985-ல் ரிட்டன் டெஸ்ட் முடிந்திருக்கிறது. 18—12—1985 அன்று பெரேட் டெஸ்ட் பண்ணியிருக்கிறார்கள். 27—12—1985 அன்று செலக்ஷன் லிஸ்டை பைனலைஸ் பண்ணியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு 10—1—1986-ல் ஒரு சர்குலர் 'இஸ்யூ' பண்ணுகிறார்கள். 20—1—1986 அன்று பி.டி.சி. சென்னையில் அட்டென்ட் பண்ணுமாறு அதில் சொல்கிறார்கள். பயிற்சிக்கு வருமாறு அழைப்பு விடுக்கிறார்கள். பிறகு 18—1—1986 அன்று ஓர் அறிக்கை வருகிறது. அதனை 10—2—1986-க்கு போஸ்ட்போன் பண்ணியிருப்பதாக வருகிறது. தேர்தலை முன்னிட்டு அதுவும் போஸ்ட்போன் பண்ணப்பட்டது என்று வேறு அறிக்கை பின்னர் வருகிறது. அந்த 'ஃபைல்' இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் தேங்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். ஹெட்கான்ஸ்டபிள்களை எஸ்.ஐ.-க்களாகப் பதவி உயர்வு கொடுத்து உயர்த்துவது போன்ற பைல்கள் எல்லாம் நிச்சயமாகத் தேங்கக் கூடாது. இதையும் அவசியம் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஸ்லம் கிளியரன்ஸ் போர்ட், ஹவுசிங் போர்ட் போன்றவைகளின் செயல்கள் குறித்து விவாதிக்கப்படுகின்றது. ஹவுசிங் போர்டைப் பொறுத்த வரையில், குறிப்பிட்ட சிலருக்கு, ஃபிளாட்டில் வாடகைக்குக் குடியிருப்பவர் களுக்கு அந்த வீடுகளை விலைக்குக் கொடுத்து அவர்களே அவற்றை அனுபவிக்கலாம் என்கிற முறையில் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். நானும் ஹவுசிங் போர்ட் வீட்டில் தான் குடியிருக்கிறேன். நான் தனிப்பட்ட முறையில் ஒன்றும் கேட்கவில்லை. நான் குடியிருக்கும் அசோசியேஷன் சார்பில் இரண்டு மூன்று முறை இதுபற்றிக் கேட்டேன். குறிப்பாக



1986 ஏப்ரல் 2] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

ஐந்து, பத்து வருடங்களுக்கு மேலாகக் குடியிருப்பவர்களுக்கு எல்லாம் அந்த வீடுகளைச் சொந்தமாக ஆக்கிக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் எங்கள் கோரிக்கைக்குப் பிறகு, கோரிக்கை அனுப்பிய இரண்டு பேருக்கு வீடு கொடுத்திருக்கிறார்கள். எங்கள் கோரிக்கை மதிக்கப்படவில்லை. குடியிருக்கின்ற வீட்டைச் சொந்தமாக்கிக் கொடுப்பது என்றால், எல்லோருக்கும் ஒரே சட்டத்தின்கீழ் கொடுங்கள். தயவுசெய்து சிலருக்குக் கொடுத்துவிட்டு சிலருக்குக் கொடுக்காமல் இருப்பதுமாதிரி வேறுபாடு காட்ட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டு மல்லாமல், இன்னொன்றையும் சொல்வேன். இங்கே நம்முடைய உறுப்பினர்

(பிற்பகல் 1-15)

திரு. மதுசூதனன் அவர்கள் பேசும்போது, பிரச்சினைகளை அதிகாரிகள் கவனிப்பதில்லை என்று கார்ப்பரேஷன் அதிகாரிகள் பற்றிச் சொன்னார்கள் நான் கூட எதிர்பார்த்தேன், மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதற்காக, மாநகராட்சித் தேர்தல்கள் வர வேண்டுமென்று சொல்வார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர் அப்படிச் சொல்லவில்லை. நான் கேட்டுக்கொள்வதெல்லாம், மாநகராட்சி மன்றங்களுக்கும் காலதாமதம் இல்லாமல் தேர்தல் நடத்துங்கள் என்பதுதான். நம்முடைய சபையில் அதிகமான உறுப்பினர்களே இல்லை. 21 பேர்கள் வரவேண்டும். ரொம்ப நாட்களாக உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் இல்லாமல், களையே இல்லாமல் இருக்கிறது. இனிமேலாவது காலம் கடத்தாமல் மத்திய எலெக்ஷன் கமிஷனை வற்புறுத்தி தேர்தலை நடத்தவைத்து, அந்த 21 உறுப்பினர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டு வருகிற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். சட்டச்சிக்கல் இருப்பதாகச் சொன்னார்கள். நாம் கூட சில பிரச்சினைகளையே திரும்பத் திரும்ப இங்கே பேசுகிறோம். மக்கள் பிரச்சினைகளைப் பேசுவதற்கும் ஊராட்சி, நகராட்சிப் பிரச்சினைகளைப் பேசுவதற்கும் வாய்ப்பளிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, எங்கள் பகுதியில் பல்லவன் போக்குவரத்துக் கழகம் மூன்றாண்டுக் காலமாக ஒரு பஸ் ஸ்டாண்டைக் கட்டி வருகிறது. இப்போது டி.ஜி.பி.-யாக இருக்கும் அதிகாரி திரு. ரவீந்திரன் பல்லவன் போக்குவரத்துக் கழகத் தலைமை அதிகாரியாக இருந்தபோது, அவரிடம் தெரிவித்திருக் கிறோம். அங்கே ரொம்ப காலதாமதமாக வேலைகள் நடக்கின்றன. இதன் காரணமாக ஒரு குழந்தைகூட அடிபட்டு இறந்துவிட்டது. டிரைவர்களையும்

கண்டக்டர்களையும் குறை சொல்லிப் பயன் இல்லை. பட்டினப்பாக்கம் பஸ் நிலையத்தை காலதாமதம் இல்லாமல் கட்டி முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, ஸ்ரீலங்கா பிரச்சினை. திரு. ஜேப்பியார் கூட வேகமாகப் பேசினார். அவர் பேசியபிறகுகூட, அங்கே பல பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். நாமெல்லாம் ஒட்டுமொத்தமாக ஒருமித்த கருத்தின் அடிப்படையில் மத்திய அரசை பலவந்தப்படுத்தி ஸ்ரீலங்கா அரசோடு தொடர்பு கொண்டு ஒரு சுமுகமான முடிவெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினை என்றாலும் மத்திய சர்க்காருடைய . . .

திரு. ஆர். டி. சீத்தாபதி: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர், அண்ணன் சாதிக் அவர்கள் ஸ்ரீலங்கா பிரச்சினை பற்றி . . . . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்களை விளிப்பது எப்படி என்பதற்கு ஒரு வரைமுறை இருக்கிறது. உறுப்பினர் தனது கட்சி உறுப்பினரைப் பார்த்துச் சொல்லும்போது, மாண்புமிகு நண்பர் என்றும், எதிர்க் கட்சியினரைப் பற்றிச் சொல்லும்போது, மாண்புமிகு உறுப்பினர் என்றுதான் சொல்ல வேண்டும். வேறு மாதிரியாக அழைப்பது சம்பிரதாயம் ஆகாது.

திரு. ஆர். டி. சீத்தாபதி: வேறுவிதமாக அழைக்கவில்லையே, முன்னாள் அமைச்சர் . . . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: பாரம்பரியத்தைத்தான் சொன்னேன். ஆளும் கட்சியில் இருப்பவர்களாக இருந்தால், மாண்புமிகு நண்பர் என்றும் அதே மாதிரி எதிர்க் கட்சியில் இருப்பவர்களாக இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் என்றும் சொல்வது பாரம்பரியம்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: திரு. சீத்தாபதி அவர்கள் என்னை அண்ணனாக ஏற்றுக் கொள்வதில் உங்களுக்கு என்ன ஆட்சேபனை என்று தெரியவில்லை.



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: சபையில் மரபு இருக்கிறது. எப்படி அழைப்பது என்று முறை இருக்கிறது. அது நெடுங்காலமாக இருக்கிறது.

திரு. ஆர். டி. சீத்தாபதி: மரபைக் கெடுக்க நிச்சயமாக நான் இடம் கொடுக்கமாட்டேன். அண்ணன், முன்னாள் அமைச்சர் என்றுதான் குறிப்பிட்டேன். அதிலே தவறில்லை. நீங்கள் தீர்ப்புக் கொடுத்தால் அப்படி நடந்து கொள்வதற்குத் தயார். அப்படி முன்னாள் அமைச்சர் அவர்கள் எல்லோரும் ஒன்றாக வரவேண்டும், ஒருமித்த கருத்தோடு வரவேண்டுமென்று சொன்னார்கள். அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், அமைச்சர்கள் பதவிகளைத் தூக்கியெறிந்துவிட்டுப் போராடுவதற்கு வரவேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்தை அவர்கள் ஏற்றுக் கொள்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: எங்களுடைய தலைவர் அறிவிப்பை நான் ஏற்றுக்கொள்ளாமல், வேறு யாருடைய கருத்தை ஏற்றுக்கொள்வது? (சிரிப்பு)

(பிற்பகல் 1-20)

திரு. ஆர். டி. சீத்தாபதி: நான் தெரிந்துகொள்ள விரும்புவது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், என்னையும் உள்ளடக்கிச் சொல்கிறேன். ஏன் இங்கே உள்ள அத்தனை பேரையும் உள்ளடக்கியே சொல்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலிருந்து சொல்கிறேன். அப்போதுகூட நாம் ஆட்சியைக் கலைத்துவிட்டு, பதவியைத் தூக்கி எறிந்துவிட்டுப் போராடியதில்லை. ஆனால் இப்போது மட்டும் இந்தக் கருத்தைத் தெரிவிப்பதன் நோக்கம், அரசியல் நோக்கமாக இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டு, அதன் காரணமாக ஸ்ரீலங்கா பிரச்சினை முடியும் என்று சொன்னால், அதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டுமென்ற கருத்தை மாத்திரம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதில் ஸ்ரீலங்கா **தமிழர்கள் பிரச்சினை மாத்திரம்**

[illegible]



இன்னொரு கருத்தைக் கூற விரும்புகிறேன். பொதுவாக முஸ்லீம்களைப் பொறுத்தவரை, இந்த அரசு அவர்களிடம் பாரபட்சமாக நடந்துகொள்வதாக ஒரு குற்றச்சாட்டு சொல்கிறார்கள். காவல் துறையில், கல்வித் துறையில், உள்ள முஸ்லிம் அதிகாரிகளுக்கு சரியான முறையில் பதவி உயர்வு கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அதைப்போல டைரக்டர் ஆப் டெக்னிக்கல் எஜுகேஷன் ஆகப் போக வேண்டியவரைக் கொண்டுபோய் வேறொரு இடத்திலே போட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தக் குறைபாடுகள் எல்லாம் இல்லாமல் கவனித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வக்ப் போர்டைப் பொறுத்தவரையில், ஒரு பிரச்சினையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வக்ப் போர்ட் கூட்டங்கள் மாதா மாதம் நடக்கின்றன. இவை பல சமயங்களில் மாவட்டங்களில் நடக்கின்றன. இவை சென்னையில் நடைபெற்றால், உதவியாக இருக்கும். ஆனால் மாவட்டங்களில் இவைகள் நடக்கும்போது, கட்சிக்காரர்களும், வழக்கறிஞர்களும் அங்கேயெல்லாம் போவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பழைய காலத்தில் ஜமாபந்தி ஜபர்தஸ்து நடக்கும். "சப்ளை அன்ட் சர்விஸ்"-ஐ ஒழுங்காக வருவாய் ஆய்வாளரும், தாசில்தாரும் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் நிலைமை மிக மோசமாகிவிடும். அதுபோல் இப்போது வக்ப் மீட்டிங்குகள் நடைபெறுகின்றன என்று சொல்கிறார்கள். இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, ஒரு பிரச்சினை. நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சரைப்பற்றி நாடாளுமன்றத்திலே ஒரு பிரச்சினை கிளப்பப்பட்டதாகச் சொன்னார்கள். புயல் வீசிய காலத்தில் மத்திய அமைச்சரவையில் உள்ள ஒரு துணை அமைச்சர் சொன்னதாகவும் அதனைத் தொடர்ந்து எழுந்த பிரச்சினைகளைப்பற்றியும் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். அந்தப் பிரச்சினைக்குள் நான் போக விரும்பவில்லை. ஒரு மாநில முதலமைச்சரைக் கேள்வி கேட்பதற்கு ஒரு சாதாரண மத்திய துணை அமைச்சருக்கு அதிகாரம் உண்டா? இதை யாராவது தட்டிக்கேட்க வேண்டாமா? ஒரு துணை அமைச்சர் ...

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். நாடாளுமன்றத்தின் அ.இ.அ.தி.மு.க. கழகத் தலைவர் மாண்புமிகு திரு. குழந்தைவேலு அவர்கள் மாண்புமிகு துணை அமைச்சரின் கூற்றை மறுத்துத் தெரிவித்து ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து அமைச்சரின் கூற்று வாபஸ் வாங்கப்பட்டு இனி அதுமாதிரி ஆதாரமில்லாமல் பேசக்கூடாது என்றெல்லாம் நாடாளுமன்றத்தில் வலியுறுத்திப் பேசப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-25)

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதுபோன்று எந்த ஒரு மாநில முதலமைச்சருக்கும் அதிகாரம் உண்டு; சுய ஆட்சி உண்டு. மாநில அரசுக்கு அதிகாரம் உண்டு. ஒரு மாநிலத்தில் முதலமைச்சர்தான் அந்த மாநிலத்தின் முடிவான கொள்கைகளில் நடவடிக்கை எடுப்பதற்கு ஆற்றல் படைத்தவர்; அதிகாரம் படைத்தவர். அப்படிப்பட்ட அவரைப் போய் கேள்வி கேட்பது என்பது 'டில்லி பாதுஷா' போன்ற மனப்பான்மையில் மத்திய சர்க்கார் இருக்கிறது என்பதைச் சொல்லிக் கண்டிக்கிறேன்......

The Hon. Dr. H. V. HANDE: I fully agree with the hon. Member that no Minister can raise such a point anywhere. I fully agree with the hon. Member.

அதற்காகத்தான் நாம் அந்தக் கருத்துக்கு உடன்பட்டிருக்கிற காரணத்தாலே தான் மதிப்பிற்குரிய திரு. ப. குழந்தைவேலு அவர்கள் அது சம்பந்தமாக ஒரு தீர்மானத்தை அங்கு கொண்டு வந்தார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் நான் பேசுவதற்கு அனுமதியளித்ததற்கு நன்றி தெரிவித்து எனது உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை நாளை 3—4—1986 வியாழக் கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-26)



## 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

192. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற் கான ஆறாவது ஆண்டறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1986) 619 (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

193. சோழன் பொறியியல் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான பதினோராவது ஆண்டறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

194. தமிழ் நாடு பீங்கான் நிறுவனத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான பதினோராவது ஆண்டறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

195. அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் '1984-85 ஆம் ஆண்டிற்கான பதின்மூன்றாவது ஆண்டறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1986) 619 (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

*89. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1986).

*90. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1986).

91. பொதுக் கணக்குக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை (1985-86).

92. பொதுக் கணக்குக் குழுவின் இருபதாவது அறிக்கை (1985-86).

93. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தொன்றாவது அறிக்கை. (1985-86).

94. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி இரண்டாவது அறிக்கை. (1985-86).

95. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி மூன்றாவது அறிக்கை. (1985-86).

96. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி நான்காவது அறிக்கை. (1985-86).

97. பொதுக் கணக்கு குழுவின் இருபத்தைந்தாவது அறிக்கை. (1985-86).



## இணைப்பு—I

(200 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 133-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

சென்னைப் பல்கலைக் கழகத்தில் அண்ணா கல்வி குறித்து ஆராய்ச்சி செய்வதற்காக 'அண்ணா கல்வி மையம்' என்ற பெயரில் ஒரு மையத்தை ஏற்படுத்தி, இதற்காக ரூ. 21.00 இலட்சம் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு செலுத்தி ஓர் அறக்கட்டளையை ஏற்படுத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாட்சி மன்றத்தால் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களுக்குட்பட்டு அண்ணா கல்வி குறித்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்.

அம்மையத்தின் நடவடிக்கைகள் கீழே குறிக்கப்பட்டுள்ளது :—

1. அண்ணாவை குறித்து அவர் ஓர் அரசியல் தத்துவஞானியாக, நிர்வாகியாக, அரசியல் தந்திரியாக, சிறந்த எழுத்தாளராக, பேச்சாளராக, நாடாளு மன்ற சிற்பியாக, மக்களுக்கு நற்செய்தி அறிவிப்பாளராக, மனிதாபிமானியாக ஆராய்வு செய்தல்.

2. அண்ணாவின் அடிப்படைக் கொள்கைகள் அறியவும், கற்கவும், அதனை கற்பிக்கவும், விளம்பரம் செய்தல் குறித்தும் ஆராய்தல்.

3. இந்தியாவைக் குறித்தும் குறிப்பாக தமிழ்நாட்டில் சமகாலத்திய சமூக அரசியல் வரலாறுகள் குறித்து ஆராய்தல்.

4. தமிழ் நாட்டிலும், தென்னிந்தியாவிலும் அண்ணா தொடர்புடைய சமூக அரசியல் குறித்து ஒப்புமை செய்தல்.

5. இந்திய நாட்டின் மைய, மாநில அரசுகளின் சமூக உறவுகளைக் குறித்து ஆராய்தல்.

6 தமிழ் பண்பாடு, தமிழ் தேசியம், தமிழ்மொழி புத்துணர்விற்கு அண்ணாவின் பங்களிப்பு.

7. தமிழ்நாட்டில் சமகாலத்திய உலகில் திராவிடர் முன்னேற்றமும், நாகரிகமும், அறிவியல் தொழில் நுட்பமும் மற்றும் பொருளாதார முன்னேற்றம் குறித்து ஆராய்தல்.

8. அண்ணாவின் கொள்கைகள் குறித்து பல்வேறு படிப்புப் பிரிவுகள் ஏற்படுத்தி, அத்தேர்வுகளில் வெற்றி பெறுவோருக்கு பட்டங்களையும், சான்றிதழ்களும் வழங்குதல்.

9. அண்ணாவின் காலத்திற்குப்பின் வரலாறு மற்றும் அரசியலில் அவரின் எண்ணங்களும் பங்குகளும் குறித்து பதிவு செய்தல்.

10. அண்ணாவைப் பற்றிய முழுவிவரங்கள் ஈ. வெ. ரா. முதல் எம்.ஜி.ஆர். காலம் வரை சமகாலத்தவர்களைக் குறித்து கருத்தரங்குகள் வெளியீடுகள் மற்றும் பிரசங்கங்கள் மூலமாக அறியச் செய்தல்.

11. அண்ணாவின் எண்ணங்களும் நோக்குகளும் கொண்ட புதிய உலகத் தன்மையை ஏற்படுத்துதல்.

மேற்கண்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக மையத்தை நிறுவும் பொருட்டு, ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோரை விரைவில் நியமனம் செய்ய, தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



## இணைப்பு II

(225 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

கடலூரில் மௌலானா அபுல் கலாம் ஆஸாத் கல்வியியல் கல்லூரி தொடங்க முறையான விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. இவ்வாறான கல்லூரி அமைக்க அனுமதியும் வழங்கப்படவில்லை. மேலும் அவ்வாறு ஒரு கல்லூரி நடைபெறுவதாகவும் தகவல் ஏதுமில்லை.

2. எனினும், இவ்வாறான ஒரு கல்லூரியை 1985-86-ல் தொடங்க சென்னைப் பல்கலைக்கழகத்திற்குக் கல்வி நிறுவனம் விண்ணப்பம் அனுப்பி யுள்ளதென்றும், 1985-86 ஆம் ஆண்டில் கல்லூரி தொடங்குவதற்கு அவ் விண்ணப்பம் காலங்கடந்து வந்துள்ளதால், அவ்விண்ணப்பம் 1986-87 ஆம் ஆண்டிற்கு உரியதாகக் கருதப்படும் என்றும், இவ்விண்ணப்பத்தினை மேலும் பரிசீலிக்க இக்கல்லூரி தொடங்குவதற்கு அரசின் அனுமதி ஆணை பெற்றுப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்ப வேண்டும் என்றும் 'மௌலானா அபுல் கலாம் ஆஸாத்' கல்வி மற்றும் சமூக நலக்கழகம் என்ற நிறுவனத்திற்குப் பல் கலைக் கழகம் தெரிவித்துள்ளது எனவும் கல்லூரிக் கல்வி இயக்குநர் குறிப் பிட்டுள்ளார்.

செ. அரங்கநாயகம்,
கல்வி அமைச்சர்.

[1986 ஏப்ரல் 2

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அந்த ஒரு சர்க்கரை ஆலை மட்டுமே மத்திய அரசால் நடத்தப்பட்டு வந்தது. இதைக் குறித்துத் தனியாகக் கேள்வி கேட்டால், விடை அளிப்பதற்கு நலமாக இருக்கும்.

அறிஞர் அண்ணா ஆய்வு மையம்.

* 133. வினா—திரு. அ. ப. சிவராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னைப் பல்கலைக் கழகத்தில், அறிஞர் அண்ணா ஆய்வு மையம் துவக்கும் பணி, எந்த நிலையில் உள்ளது?

(இ) இந்த மையம் துவக்கப்பட, யார் யாரிடமிருந்து, எவ்வளவு நிதி உதவிகள் பெறப்பட்டுள்ளன?

(உ) இந்த மையம் ஆற்ற இருக்கும் பணிகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ), (இ) மற்றும் (உ) விவர அறிக்கை ஒன்று @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. அ. ப. சிவராமன்:** சென்னைப் பல்கலைக் கழகம் அண்ணா ஆய்வு மையம் துவங்க எந்தத் தேதியில் இந்தப் பெருந்தொகையை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தந்தது என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதுபற்றிய விவரம் இங்கே இல்லை. ஒரு விழாவின்போது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் மூலமாக அந்தப் பணம் தரப்பட்டது.

**திரு. அ. ப. சிவராமன்:** அதுபற்றிய விவரம் இல்லை என்ற பதிலைக் கேட்டு, நான் மிகவும் வருத்தப்படுகிறேன். ஏறத்தாழ 1½ ஆண்டுகளுக்கு முன்பாக இந்த வினா எழுப்பப்பட்டது. இப்போது தரப்பட்டுள்ள பதிலில் "மேற்கண்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுவதற்காக மையத்தை நிறுவும் பொருட்டு, ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோரை விரைவில் நியமனம் செய்யத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் எப்போது நியமனம் செய்யப்படுவார்கள்? இதிலே இந்த அளவுக்குக் காலதாமதம் எதனாலே ஏற்பட்டது என்று அறிய விரும்பு

@ 299-300 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1986 ஏப்ரல் 2]

கிறேன். காரணம் ஒரு நல்ல பணி இது என்று தமிழகத்தில் படித்தவர்களாலே பாராட்டப்படுகிற பணி. இதற்காக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மிகப் பெரிய தொகையைத் தந்திருக்கிறது. அந்த வகையில் இனியும் அநாவசியமான காலதாமதம் இல்லாத வகையில் அண்ணா கல்வி மையம் அமைக்கப்படுவதற்கு உரிய நடவடிக்கையை விரைவில் மேற்கொள்ள முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** சென்னைப் பல்கலைக் கழகம் என்பது ஒரு தன்னாட்சி அமைப்பு. அவர்கள்தான் அதைப்பற்றிய முடிவை எடுக்க வேண்டும். கேள்வி கேட்கப்பட்டதாலே இங்கே பதில் அளிக்கிறோம். எனவே அரசின் சார்பில் இத்தகைய காரியங்களை விரைவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளலாமே தவிர, நாம் ஒன்றும் செய்ய முடியாது. அது ஒரு தன்னாட்சி நிறுவனம் என்கிற உண்மையை நாம் மறந்துவிடலாகாது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** அண்ணா கல்வி மையம் அமைப்பது சம்பந்தமான கோரிக்கையை சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழு, செனட் போன்ற அவைகள் ஏற்றுக்கொண்டுவிட்டனவா? அப்படி அது ஏற்றுக் கொள்ளப்படாத வகையில் அதற்கு ஏதேனும் தடை இருந்தால், அதைப் பற்றிய விவரங்களை நாங்கள் அறியலாமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதுபற்றிய விவரம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால், பதில் சொல்லலாம்.

மேல்நிலைப் பள்ளிகள்.

* 134. வினா—செல்வி ஆ. லீலாவதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டில், 1985-86 ஆம் கல்வியாண்டில், மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் கருத்துரு ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதில் பெண்களுக்கென்றும், ஆண்களுக்கென்றும் தனித் தனியாக அதிகப்படுத்தவிருக்கும் மேல்நிலைப் பள்ளிகள் எத்தனை?

1033/86 (234)

# தமிழ்நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# செயலக வெளியீடு
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 3, 1986-தொகுதி 222 எண் 4.
Thursday, 3rd April 1986-Volume 222 No. 4.

சட்டமன்ற மேலவைச் செயலகம்.
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரூ. 2.75]

234

## பொருளடக்கம்

3—4— 1986


பக்கங்கள்.

. தகவல் கோரல்

சென்னை வானொலியில் மேலவையின் மாற்றுத் தலைவர் அவையில் குறிப்பிட்டதை மேலவைத் தலைவர் குறிப்பிட்டதாகச் செய்தி ஒலிபரப்பியது குறித்து. .. .. 303—304

2. அரசு உறுதி மொழிக் குழுவின் நாற்பத்தி இரண்டாவது அறிக்கையை அளித்தல் .. 504

3. 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின்மீது பொது விவாதம் —தொடர்ச்சி. ... ... 304—392

4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. 393—394



143547

D

V2 V, 39 1986

N86.39 2-8-S

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

வியாழக்கிழமை, 1986 ஏப்ரல் 3.

பங்குனி 20, குரோதன—திருவள்ளுவராண்டு-2017.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்களின் தலைமையில் அவை கூடியது.

## 1. தகவல் கோரல்.

**சென்னை வானொலியில் மேலவையின் மாற்றுத் தலைவர் அவையில் குறிப்பிட்டதை மேலவைத் தலைவர் குறிப்பிட்டதாகச் செய்தி ஒலிபரப்பியது குறித்து.**

* திரு. ஆர். டி. சீத்தாபதி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் உரை நிகழ்த்தும்போது, அதில் சிலவற்றை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று அப்போது மாற்றுத் தலைவராக அமர்ந்திருந்த திரு. அனகாபுத்தூர் சி. இராமலிங்கம் அவர்கள் ஆணை பிறப்பித்தார்கள். ஆனால் அண்ணன், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தன்னுடைய பெயரைக் குறிப்பிடுவதற்காக மன்னிக்க வேண்டும். திரு. எம். கருணாநிதி என்பவர் வானொலியில் . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தலை எழுத்து மாறித்தானே இருக்கிறது . . . . . .

திரு. ஆர். டி. சீத்தாபதி: மேலவை நிகழ்ச்சியைப்பற்றிச் செய்தி எழுதி ஒலிபரப்பப்பட்டது. அதில் நேற்றையதினம் மேலவை நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிடும்போது மேலவைத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிட்டார் என்று அறிவித்தார். யார் அப்போது தலைமை வகித்தாரோ அவருடைய பெயரைச் சொல்வதற்குப் பதில் தங்கள் பெயரைக் குறிப்பிட்டார்கள் என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

## சென்னை வானொலியில் மேலவையின் மாற்றுத் தலைவர் அவையில் குறிப்பிட்டதை மேலவைத் தலைவர் குறிப்பிட்டதாகச் செய்தி ஒளிபரப்பியது குறித்து

[1986 ஏப்ரல் 3

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** யார் தலைமை வகித்தாரோ அவருடைய பெயரைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆனால் மேலவைத் தலைவர் என்றாலே என்னுடைய பெயர் நினைவிற்கு வந்து, அதை அப்படிச் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். இருப்பினும் அவர்கள் வானொலியில் திருத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

## 2. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்தி இரண்டாவது அறிக்கையை அளித்தல்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்தி இரண்டாவது அறிக்கையை அவையில் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (3) 1986-87-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

* **டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் இந்த அவையில் வைத்துள்ளதையொட்டி கடந்த சில நாட்களாக நடைபெறுகிற விவாதங்கள் மூலமாக விமர்சிக்கப்படுவதைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக் களை இந்த அறிக்கையின்மீது கூற விரும்புகிறேன்.

முதலில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அறிக்கையில் "இந்தியா முழுவதும் தழுவிய வகையில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறைப் பொருளாதாரம் புதிய வரிகள் ஆயத் தீர்வை—ஏற்றுமதி இறக்குமதி வரிகள் போன்றவற்றால் ஏற்படும் இன்றியமையாப் பண்டங்களின் விலை உயர்வு, உரம், இரும்பு, நிலக்கரி போன்றவற்றின் விலை உயர்வு, இரயில் போக்குவரத்துக் கட்டண உயர்வு, டீசல், பெட்ரோல் போன்ற எண்ணெய்களின் விலை உயர்வு போன்றவை, தமிழக அரசின் பொருளாதாரத்தையும் தமிழக மக்களின் பொருளாதாரத்தையும் பாதிக்கவே செய்திருக்கின்றன" என்கிற உண்மை இந்த அரசால் ஒப்புக்கொள்ளப்பட்டு, வேறு மாநில முதலமைச்சர்கள் எல்லாம் இப்படிப்பட்ட விலை உயர்வு அறிவிக்கப்பட்ட நேரத்தில், தங்களுடைய கண்டனங்களைத் தெரிவித்திருந்தாலும்கூட, நம்முடைய முதலமைச்சர் அவர்களின் சார்பாக அப்படிப்பட்ட



கண்டனங்கள் தெரிவிக்கப்படாவிட்டாலும்கூட, இது ஏழையெளிய நடுத்தர மக்களைப் பாதிக்கக்கூடிய ஒன்று என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உணர்ந்து இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது பாராட்டத் தக்க ஒன்றாகும்.

மற்றொன்று, "இந்திய நிலப்பரப்பைக் காப்பாற்றுவதற்கு ஏற்ற வலிவான இந்தியாவும், மக்களை வாழவைப்பதற்கு ஏற்ற வளமான மாநிலங்களும் அமைய வேண்டும்" என்ற கருத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளார்கள். இந்திய ஒருமைப்பாட்டிற்கு உட்பட்ட மாநிலத் தன்னாட்சி அமைய வேண்டும். அதற்கான ஆக்கம் ஏற்பட வேண்டும். "கூட்டாட்சி அமைப்பில் மாநிலத் தன்னாட்சிக் கோட்பாடு என்பது ஒரு அரசியல் கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு பல்வேறு அரசியல் தரப்பின ராலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது" என்ற கருத்தையும் மாண்புமிகு டாக்டர் நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் இந்த அறிக்கையிலே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இது, தொடர்ந்து 2, 3 ஆண்டுக்காலமாக ஆளும் கட்சியில், குறிப்பாக இந்த அரசில் ஏற்பட்டுள்ள ஒரு முன்னேற்றம் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால் மாநில

(முற்பகல் 10-05)

சுயாட்சி என்ற அந்தச் சொற்றொடரேகூட அறிஞர் அண்ணா அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றல்ல என்ற கருத்து ஆளும் கட்சி உறுப்பினர் களால் 1974-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து சொல்லப்பட்டு, 1974-ஆம் ஆண்டில் சட்டப் பேரவையிலே மாநில சுயாட்சி தீர்மானம் கொண்டுவரப் பட்டு அது நிறைவேற்றப்பட்ட அந்தக் காலக்கட்டத்திலேகூட ஏற்றுக் கொள்ளப்படாமல் இருந்த அந்தக் கொள்கையை இன்றைக்கு நிதியமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையின் வாயிலாக ஏற்று அண்ணா அவர்களின் அந்தக் கருத்து தொடர்ந்து வலியுறுத்தப்படும் என்று கூறியிருப்பது வரவேற்கத் தக்கது என்ற அளவில் தான் அதனையும் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன்.

பொதுவாக இந்த நிதிநிலை அறிக்கை தமிழ் பதிப்பில் 23-ஆம் பக்கத்தில் நிதியமைச்சர் அவர்கள் மொத்த நிதிநிலைமை பற்றி எடுத்துக் கூற விரும்புகிறேன் என்று கூறியிருக்கிறார். ஆனால் கடந்த ஆண்டுகளில் எல்லாம் ஒவ்வொரு ஆண்டும் வருவாய்க் கணக்கில் வருவாயையும், வருவாய்க் கணக்கில் செலவையும் குறிப்பிட்டுவிட்டு, நடப்பாண்டு வருவாய்க் கணக்கின் வருவாயையும், வருவாய்க் கணக்கின் செலவையும் குறிப்பிடுவது வழக்கம். இந்த பல்லாண்டுக்கால நிதிநிலை அறிக்கை உரை முறையை இந்த ஆண்டு

மாற்றி மொத்த நிதிநிலை பற்றி வருவாய்க் கணக்கின் வரவும் செலவும் அமைச்சர் அவர்கள் படித்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடவில்லை. ஆனால் 'பட்ஜெட்' மெமோரென்டம் நிதிநிலைக் குறிப்பு என்ற தனிப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒருவேளை உறுப்பினர்கள் எல்லாம் நிதிநிலை அறிக்கையை மாத்திரம் படித்துவிட்டு, பெரிய புத்தகத்தைப் படிக்காமல் இருந்துவிடுகிறார்கள் என்பதற்காக வருவாய்க் கணக்கு எவ்வளவு, செலவு எவ்வளவு என்பதை ஆராய்ந்து அறிந்துகொள்ள உறுப்பினர்களுக்கு வேலை தருகிற வகையில் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடவில்லையோ என்று சந்தேகப்படுகிறேன். அப்படியிருந்தாலும், அப்படி குறிப்பிடப் பட்டுள்ள அந்த விவாதத்திலேகூட சில குழப்பங்கள் உருவாகிற சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

இந்த நிதிநிலைக் குறிப்பில், தமிழில் தரப்பட்டுள்ள குறிப்பில் "1985-86 ஆம் ஆண்டுக்குரிய வரவு—செலவுத் திட்டம், சட்டமன்றத்தின் முன் வைக்கப் பட்டபோது, வருவாய்க் கணக்கின் வருவாய் ரூபாய் 2,368.46 கோடியாகவும், செலவு ரூபாய் 2,314.86 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் 53.60 கோடி உபரியாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. வருவாய்க் கணக்கு வரவில் 209.68 கோடியும், வருவாய்க் கணக்குச் செலவில் 42.03 கோடியும் இருக்கும் என்று கடைசியாகத் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகள் காட்டுகின்றன" இதை மாத்திரம் படித்தால், உறுப்பினர்கள் பெரும் குழப்பத்திற்கு ஆளாவார்கள். ஏனென்றால் 1985-86–ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கு வரவு ரூபாய் 2,368 கோடி என்று சொல்லிவிட்டு திருத்திய மதிப்பீட்டில் 209 கோடி என்றும் அச்சிடப்பட்டுள்ளது. ஆங்கிலத்திலே வழங்கப்பட்டுள்ள நிதி நிலை அறிக்கையிலே இந்தத் தவறு இல்லை. ஆங்கிலப் புத்தகத்தில்

Latest estimates, however, indicate an increase of Rs. 209.68 crores under Revenue Receipts as well as an increase of Rs. 42.03 crores under Revenue Expenditure.

என்று increase என்ற ஆங்கிலச் சொல் தமிழ் பதிப்பில் விடப்பட்ட காரணத்தால் ரூ. 2,368 கோடியிலே இருந்த வருவாய்க் கணக்கு வரவு ரூபாய் 209 கோடியாக திருத்திய மதிப்பீட்டில் குறைந்துவிட்டது போன்ற தோற்றத்தை மாத்திரமல்ல, குழப்பத்தை உருவாக்கும். ஆங்கிலப் பதிப்பைப் படித்தால்தான், தமிழிலே உள்ள குழப்பத்தைப் போக்க முடியும் என்பதை மாண்புமிகு தலைவர் அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஒரிஜனலாக தமிழிலே எழுதி பிறகு ஆங்கிலத்திலே மொழிபெயர்க்கவில்லை. ஆங்கிலத்திலே எழுதி தமிழில் மொழிபெயர்ப்பது என்பது நீண்டகாலமாக நடந்து வருகிறது. தங்கள்



காலத்திலேயிருந்து அப்படி நடந்து வருகிறது. அதை மாற்றினால் நல்லது. தங்கள் காலத்திலேயே நான் மேலவையிலேயே இதை எடுத்துக்காட்டியிருக்கிறேன். ஆங்கிலத்திலேயிருந்து தமிழிலே மொழிபெயர்ப்பாகியிருக்கிறது என்று எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

(முற்பகல் 10-10)

**டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தாங்களே 'ஒரிஜினல்' என்ற வார்த்தையைத் தான் பயன்படுத்தினீர்கள். எனவே அந்த அளவுக்கு ஆங்கிலம் நம்மோடு இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் தவறாக உபயோகிக்கின்றார்கள். ஒரிஜினலாக தமிழிலேயே எழுதி இருந்தால், இந்தத் தவறு வந்திருக்காது என்றுதான் நான் சொல்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி:** வருவாய்க் கணக்கில் 1985-86-ல் திட்ட மதிப்பீடு, பட்ஜெட் எஸ்ட்டிமேட் ரூ. 2,368.46 கோடி வரவு. திருத்திய மதிப்பீடு, பட்ஜெட் பிஸ்ட்டிமேட் ரூ. 2,578.44 கோடி வரவு என்று இருக்கின்றது. அதாவது வரவில் ரூ. 209 கோடி அதிகமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. 1985-86 செலவுக் கணக்கில் ரூ. 2,314.86 கோடி என்று காட்டப் பட்டிருக்கின்றது. திருத்திய மதிப்பீடு ரூ. 2,356.89 கோடி என்று காட்டப் பட்டிருக்கிறது. எனவே திட்டமிட்டதிலேயே செலவுக் கணக்கில் திருத்திய மதிப்பீடு 42 கோடி ரூபாய் தான் அதிகமாகி இருக்கின்றது. இந்த ஒப்புவமையை நாம் உற்று நோக்க வேண்டும். அதாவது வருவாய்க் கணக்கிலே ரூ. 209 கோடி அதிகமாகி இருக்கின்றது. செலவுக் கணக்கில் திருத்திய மதிப்பீட்டில் ரூ. 49 கோடிதான் அதிகமாகி இருக்கிறது. இது நாம் செலவழிப்பதற்காக ஒதுக்கிய, திட்டங்களுக்காக ஒதுக்கிய பணம் சரியாகச் செலவழிக்கப்படவில்லை என்பதைத்தான் சூசகமாகத் தெரிவிக்கிறது. இந்த ரூ. 42 கோடி திருத்திய மதிப்பீட்டில் அதிகமாக ஆகியிருக்கிறது என்பதை நோக்கும்போது, அதிலே கூட நிதி அமைச்சர் அவர்கள் தங்களுடைய அறிக்கையிலே குறிப்பிட்ட ரூ. 60 கோடி வெள்ள நிவாரண செலவையும் கழித்துவிட்டால், அரசு செலவழிக்க திட்டமிட்டதிலேயே ரூ. 18 கோடியைச் செலவழிக்கவில்லை என்ற உண்மையும் புலனாகிறது. செலவு கணக்கில் திருத்திய மதிப்பீடு ரூ. 2,356.89 கோடி என்று இருந்தது. அரசு சரியாகச் செலவழிக்காத காரணத்தினால், அதிலே ரூ. 60 கோடி வெள்ள நிவாரண நிதி என்று ஒதுக்கப்பட்ட காரணத்தால் நீங்கள் திட்டமிட்டதிலேயே 18 கோடி ரூபாய் செலவழிக்காமல் ரூ. 2,296.89 கோடி தான் செலவாகியிருக்கிறது என்பதை நிதி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

எப்போதுமே திட்ட மதிப்பீட்டைவிட திருத்த மதிப்பீடு, ரிவைஸ்ட் எஸ்டிமேட் சற்று அதிகமாகவே இருக்கும். ஆனால் இந்த அரசு 209 கோடியை வரவுக் கணக்கிலே அதிகமாகக் காட்டிவிட்டு செலவுக் கணக்கிலே ஒதுக்கிய பணத்தைச் செலவழிக்காமல் திட்டப்பணிகளை நிறைவேற்றாத அரசாக இருக்கிறது என்பதைத் தான் இது காட்டுகிறது. மேலும் இதற்கு எடுத்துக் காட்டு வேண்டும் என்றால், 1985-86 பட்ஜெட் எஸ்டிமேட்டில் திட்டமதிப்பீடு வருவாய்க் கணக்கில் ரூ. 53.60 கோடி உபரி, சர்ப்பிளஸ், என்று குறிப்பிடப் பட்டிருக்கின்றது. 1985-86 திருத்திய மதிப்பீட்டில் உபரி ரூ. 221.25 கோடியாக உயர்ந்திருக்கின்றது. இந்த உபரி உயர்ந்திருப்பதற்குக் காரணம், நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன், திட்டப் பணிகள் செம்மையாக நடைபெற வில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டாகும்.

திட்டங்களுக்காக வகுத்து ஒதுக்கப்பட்ட தொகை ஒழுங்காகச் செலவழிக்கப்படவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தரவேண்டுமென்றால், ஐ.ஆர்.டி.பி., ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், இன்டக்ரேட்டட் ரூரல் டெவலப்மெண்ட் புரோகிராம். இதற்கு 1985-86 திட்ட மதிப்பீடு 29.5 கோடி ரூபாய். ரிவைஸ்ட் எஸ்டிமேட், திருத்திய மதிப்பீடு 17.55 கோடி ரூபாயாக இருக்கின்றது. ஆக கடந்த ஆண்டு இந்த ஐ.ஆர்.டி.பி. திட்டத்திற்கு 12 கோடி ரூபாய் குறைவாகச் செலவழிக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு 11.61 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே இந்த

(முற்பகல் 10-15)

ஆண்டு மேலும் 3 கோடி ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. ஊரக வேலை வாய்ப்பு தேசியத் திட்டம்—
N.R.E.P. (National Rural Employment Programme) திட்ட மதிப்பீடு–Budget Estimate 53.48 கோடி ரூபாய். ஆனால் 1985-86-ல் திட்ட மதிப்பீடு–Budget Estimate 53.48 கோடி ரூபாய். ஆனால் செலவழிக்கப்பட்ட பிறகு திருத்திய மதிப்பீடு 40.81 கோடி ரூபாய். சுமார் 13 கோடி ரூபாய் இதிலே குறைத்து செலவழிக்கப்பட்டிருக்கிறது. அடுத்து R. L. E. C.P.—இதில் அரசினுடைய குறிப்புகளிலும், நிதிநிலைக் குறிப்பிலும், பட்ஜெட்—இதில் அரசினுடைய குறிப்புகளிலும், பட்ஜெட் மேமோராண்டத்திலும் சொல்லப்பட்ட விளக்கம்
Prime Minister's Employment Guarantee Scheme for Rural landless labourers— பிரதமரின் கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டம் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தில் 1985-86-ல் பட்ஜெட் எஸ்டிமேட் 65 கோடி ரூபாய். ஆனால் திருத்திய மதிப்பீடு 34.43 கோடி ரூபாய். எனவே கடந்த ஆண்டு 31 கோடி ரூபாய் குறைவாகச் செலவழித்தவர்கள், இந்த ஆண்டும் அதே 34 கோடி





செலவழிக்கப்போவதாக 1986-87ல் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே மாநில அளவிலே இந்த வரவு-செலவுத் திட்டத்தின் அடிப்படையில் நிறைவேற்றப் போகிற திட்டத்தில் இந்த அளவுக்கு பெருந்தொகை குறைக்கப்பட்டு, செலவழிக்கப்படாமல் இருப்பது அந்தத் திட்டங்கள் ஒழுங்காக நிறைவேற்றப்படவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

1986-87 மாநில ஆண்டுத் திட்டம்—ஆன்யுவல் பிளான்—இதைப்பற்றி பக்கம் 27ல் பட்ஜெட் மெமோரண்டத்தில், நிதிநிலைக் குறிப்பில் என்ன கூறப்பட்டிருக்கிறதென்றால், 1985-86 வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப் பட்டுள்ளதைவிட இப்போது அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 1985-86 மாநிலத் திட்டம் பட்ஜெட் எஸ்டிமேட்டில் 1,102.05 கோடி ரூபாய் என திட்டமிட்டு ஒதுக்கிவிட்டு, திருத்திய மதிப்பீட்டில், ரிவைஸ்டு எஸ்டிமேட்டில் 1,068.89 கோடி ரூபாய் என்று குறைத்திருப்பதைக் காணும்போது, சுமார் 34 அல்லது 35 கோடி ரூபாய் திட்டப் பணிகளுக்குச் செலவழிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. செம்மையாக, விரிவாகத் திட்டமிட்டுப் பணிகள் நடைபெறவில்லை என்பதற்கு இது மற்றொரு உதாரணமாகும். நடப்பு ஆண்டுக்கு 1,199 கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளார்கள் என்றாலும், கடந்த ஆண்டு அனுபவத்தைப் பார்க்கும்போது, இதையாவது முழுமையாகச் செலவழிப்பார்களா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. மாநில ஆண்டுத் திட்டத்தில், ஆன்யுவல் பிளானில், முக்கியமான தனித் தலைப்புகளைப் பார்க்கும்போது, எனக்கு ஏமாற்றம் அளிப்பதாக இருக்கிறது. பட்ஜெட் மெமோராண்டம் பக்கம் 27ல் ரிசர்ச் & எடுகேஷன்—ஆராய்ச்சியும், கல்வியும் என்ற தலைப்பில் 1985-86 திட்ட மதிப்பீடு 4.90 கோடி ரூபாய். திருத்த மதிப்பீடு 1985-86ல் 3.57 கோடி ரூபாய். அதாவது 1.33 கோடி ரூபாய் குறைவாகச் செலவிடப்பட்டிருக்கிறது. Special Area Programme for Rural Development இது முக்கியமானது. ஊரக வளர்ச்சி சிறப்பு செதித் திட்டம். இதற்கு 1985-86 ஆன்யுவல் பிளானில் 41.75 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் திருத்திய மதிப்பீட்டில் 30.08 கோடி ரூபாய் தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது 11.67 கோடி ரூபாய் குறைத்து செலவிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு பார்த்தால் ஊரக வளர்ச்சி என்ற சிறப்புத் திட்டத்தில் 30 கோடிக்கும் குறைக்கப்பட்டு ரூ. 25.86 கோடி என்று தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது ஆன்யுவல் பிளான், மாநில ஆண்டுத் திட்டத்தை தீவிரமாக நடத்துவதற்கு பயன்படாது என்று மாண்புமிகு நிதி அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1986 ஏப்ரல் 3

மேலும் பார்த்தால் சமுதாய நல வளர்ச்சி—இது முக்கியமான தலைப்பு. இதில் 1985-86 திட்ட மதிப்பீடு பட்ஜெட் எஸ்ட்டிமேட் 28.07 கோடி ரூபாய். ஆனால் 25 கோடி ரூபாய்தான் அதற்கு திருத்த மதிப்பீட்டிலே குறிப்பிடப் பட்டு, இரண்டையும் பார்க்கும்போது, குறைத்து செலவிடப்பட்டிருக்கிறது. 3 கோடிக்கு குறைவாகச் செலவிட்டு, இந்த ஆண்டு மீண்டும் 3 கோடி குறைத்து, 22.53 கோடி ரூபாய் என்ற அளவுக்குத்தான் சமுதாய நலத்

(முற்பகல் 10-20)

திட்டத்திற்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாசன மேம்பாடு மிக முக்கியமான ஒன்று என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இதிலே 1985-86 திட்ட மதிப்பீடு 63.62 கோடி ரூபாய். ஆனால் திருத்த மதிப்பீடு 52.97 கோடி ரூபாய். சுமார் 11 கோடி ரூபாய் குறைத்து செலவிடப்பட்டிருக்கிறது. மின் விசை மேம்பாட்டுக்காக 1985-86-ல் போட்ட திட்ட மதிப்பீடு ரூபாய் 325.93 கோடி. ஆனால் திருத்த மதிப்பீடு வெறும் 300 கோடி ரூபாய். இதிலே 25 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை. குடிநீர் வழங்கலும் கழிவு நீர் அகற்றலும் என்பது மிக மிக அத்தியாவசியமான பிரச்சினை. இதில் 1985-86-க்கான திட்ட மதிப்பீடு 153 கோடி ரூபாய். ஆனால் திருத்த மதிப் பீட்டில் செலவிடப்பட்டதோ வெறும் 123.18 கோடி ரூபாய். ஆக, 30 கோடி ரூபாய் செலவிடப்படவில்லை. சமூக நலத்திற்காக 1985-86ல் பட்ஜெட் எஸ்ட்டிமேட்படி ஒதுக்கப்பட்டது 43.85 கோடி ரூபாய். ஆனால் செலவழிக் கப்பட்டதோ 40.62 கோடி ரூபாய். எனவே 3 கோடி ரூபாய் குறைத்து செலவழிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆண்டு அந்த 40 கோடி ரூபாயும் 39 கோடி ரூபாய் என்று ஆகி, 1 கோடி ரூபாய் ஆண்டுத் திட்டத்தில் குறைக்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையின் 16-வது பக்கத்தில் 21-வது பாராவில் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார். "மது விலக்கை நடைமுறைக்குக் கொண்டுவருவதன் மூலம், 1986-87-ஆம் நிதி ஆண்டில், ரூபாய் 60 கோடி அளவுக்கு அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும். இந்த இழப்பைக் கருத்தில் கொண்டுதான் 1986-87 ஆம் ஆண்டிற்குரிய வரவு —செலவுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டிருக்கிறார். அதை நானும் படித்துப்பார்த்தேன். அதற்குப் பிறகு அவர்கள் தந்திருக் கிற பெரிய புத்தகத்தில் நிதிநிலைக்கான குறிப்பையும் படித்துப்பார்த்தேன். அதில் 4-வது பக்கத்தில் மாநில ஆயத்தீர்வை என்கின்ற குறிப்பு வரும்போது, 1985-86-ல், திருத்த மதிப்பீட்டின்படி 230.82 கோடி ரூபாய் வருவாய் மாநில



1986 ஏப்ரல் 3] [டாக்டர் மு. கருணாநிதி]

ஆயத்தீர்வை மூலம் அரசு பெறுகிறது. என்றும், 1986-87-ல் வரவு செலவுத்
திட்ட மதிப்பீட்டின்படி 200.43 கோடி ரூபாய்தான் வருவாய் வரும் என்றும்
சொல்லியிருக்கிறார்கள். அப்படி என்றால், 30 கோடி ரூபாய் குறைவாகக்
காட்டப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் என்ன என்று கூறும்போது, 1987
ஜனவரியிலிருந்து மீண்டும் மதுவிலக்குக் கொள்கையை நடைமுறைக்குக்
கொண்டுவர உத்தேசித்துள்ளதால், மாநில ஆயத் தீர்வையின் மூலம் 30
கோடி ரூபாய் வருவாய் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது என்று குறிப்
பிட்டுள்ளார்கள். எனக்குள்ள சந்தேகம் எல்லாம் பட்ஜெட் மெம்மோ
ரண்டத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல், ஜனவரி 1987-ல் இருந்து மதுவிலக்கைக்
கொண்டு வருவதால் 30 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படும் என்று
குறிப்பிட்டுள்ள புள்ளிவிவரம் சரியா அல்லது 1986-87 நிதிநிலை அறிக்கையில்
மதுவிலக்கை நடைமுறைக்குக் கொண்டு வருவதன் மூலம் அரசுக்கு 60 கோடி
ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளார்களே, நிதி
யமைச்சர் அவர்கள், இதில் எது சரி என்பதை விளக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று, இந்த அவையிலே ஓர் அமைச்சர் ஒரு கேள்விக்கு பதில்
அளித்தார். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. எம். பி. எஸ். அவர்கள்
அப்போது குறுக்கிட்டு சில விளக்கங்களைக் கேட்டார்கள். ஸ்ரீலங்காவிலிருந்து
பாதிக்கப்பட்டு வருகிறார்களே தமிழ் அகதிகள், அவர்களுக்காக இதுவரை
555.47 லட்சம் ரூபாய் செலவிட அரசால் அனுமதிக்கப்பட்டது என்று
அன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் திரு. இராமசாமி அவர்கள் தெரிவித்
தார்கள். அப்போது திரு. எம். பி. எஸ். அவர்கள் குறுக்கிட்டு, 1983-ல்
இருந்து இதுவரை செலவிடப்பட்ட தொகை குறித்து ஒரு துணை வினா கேட்
டார்கள். மத்திய அரசு ஒதுக்கியுள்ள தொகை மற்றும் மாநில அரசு ஒதுக்கி
யுள்ள தொகை இரண்டுக்கும் விளக்கம் தேவை என்று சொன்னார்கள்.
மத்திய அரசு இதற்கான தொகையைத் தருவதில் காலதாமதம் ஏற்படுவ
தனால், மாநில அரசு இதற்கான செலவுகளை முதலில் செய்து கொண்டிருக்
கிறது என்று அப்போது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

(முற்பகல் 10.25)

அதன் பிறகு மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் கேட்ட
போதும், இந்த ஸ்ரீலங்காவாழ் தமிழர்கள் பிரச்சினையில் மைய அரசு
எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன் என்று
கேட்டதற்கு, 5 கோடியே 55 லட்சம் ரூபாய் என்று மாண்புமிகு அமைச்சர்
திரு. ராமசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் நிதிநிலை அறிக்கையில்

ஐந்தாம் பக்கத்தில், நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் "தங்கள் உயிர்களைக் காத்துக்கொள்ள, இலங்கையிலிருந்து தமிழகத்துக்குத் தப்பி ஓடி வந்துள்ள தமிழ் அகதிகளின் எண்ணிக்கை 1,25,000 ஆகப் பெருகியுள்ளது. இவர்களில் 32,000 பேர்கள், ஆங்காங்கு அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். இலங்கையில் நல்ல சூழ்நிலை ஏற்பட்டு, இவர்கள் அனைவரும் தங்கள் தாயகம் திரும்பும் வரையில் இவர்களுக்கு எல்லா அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு, இவர்கள் மரியாதையுடனும், மதிப்புடனும் நடத்தப்படத் தமிழக அரசு அயராது பாடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் அகதிகள் மற்றும் தாயகம் திரும்பியோர் ஆகியோரின் நிவாரணப் பணிகளுக்காகவும், மறுவாழ்வுப் பணிகளுக்காகவும், இதுவரை மொத்தம் சுமார் ரூ. 45 கோடி செலவிடப்பட்டுள்ளது " என்று கூறியிருக்கிறார்கள்.

இந்த 45 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிவிக்கும் நிதிநிலை அறிக்கையை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், தமிழக அரசே இந்தத் தொகையை ஒதுக்கியிருப்பதாகத் தோற்றம் அளிக்கும். ஆனால் ஒரு கேள்விக்குப் பதில் சொன்ன மாண்புமிகு அமைச்சர் திரு. இராமசாமி அவர்கள் தெரிவித்தபோது, இது முழுவதும் மத்திய அரசு அளித்துள்ளது, 5 கோடியே 55 லட்ச ரூபாய் என்று குறிப்பிட்டுள்ளார். மத்திய அரசு முழுவதையும் அளிக்கிறது என்று சொன்னது சரியா, அல்லது மாநில அரசு அளிக்கிறது என்று சொல்வது சரியா, அல்லது இதுவரையில் மத்திய அரசு 5.55 கோடி ரூபாய் அளித்துள்ளது என்று அமைச்சர் சொன்னார்களே, அது சரியா, அல்லது 45 கோடி ரூபாய் இந்தப் பணிகளுக்காக செலவிடப்பட்டது என்று நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது சரியா என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதிலுரையில் விளக்குவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்

ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 1975-76 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்படி, மூலதனக் கணக்கு உட்பட அரசினுடைய வருமானம் ரூ. 563 கோடியாக இருந்தது. இப்போது வைத்துள்ள அறிக்கையின்படி, மூலதனம், வருவாய்க் கணக்கு இரண்டும் இணைந்த வருமானம் 3,275 கோடி ரூபாயாக பெருகியிருக்கிறது. அதாவது ஆறு மடங்கு உயர்ந்திருக்கிறது. ஆனால் இதுவரையில் நான் படித்துக் காட்டிய விபரக் குறிப்புக்களைப் பார்த்தால், இந்த அவையில் தரப்படும் விவரங்களைப் பார்த்தாலும், அல்லது நாட்டிலே பல்வேறு பகுதிகளிலும் நேரிலே சென்று கண்டாலும் சரி, இந்த வருவாய் 6 மடங்காக உயர்ந்திருப்பதற்கு ஈடாக, வளர்ச்சித் திட்டங்கள் 6



மடங்காக ஏற்பட்டிருக்கின்றனவா இந்த மாநிலத்தில் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்கு ஒரு பதில், 'இல்லை' என்பது தானே தவிர, வேறல்ல. 500 கோடி ரூபாய், 300 கோடி ரூபாய், 200 கோடி ரூபாய் என்று இருந்த நேரத்தில், எனக்குக்கூட நன்றாக நினைவு இருக்கிறது, 1957 ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவையில் இருந்த போது, எங்கள் பக்கத்தில் திரு. எம். பி. எஸ். அவர்கள் அமர்ந்திருந்த அந்த நேரத்தில், அப்போது நிதியமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் வரவு செலவுத் திட்டத்தை அவையில் அளித்த போது குறிப்பிட்டார்கள். "என்னுடைய வாழ்க்கையில் நிதியமைச்சர் பொறுப்பில் இருந்து, 100 கோடி ரூபாய்க்கான வரவு செலவுத் திட்டத்தை இன்றைக்கு இந்த அவை முன்பு சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்" என்று குறிப்பிட்டார்கள் இப்படி நூறு கோடி ரூபாயிலிருந்து வளர்ந்து 500 கோடி ரூபாய் என்று பெருகி இன்றைக்கு 3,275 கோடி ரூபாய் என்ற அளவுக்கு ஆறேழு மடங்கு அதிகமாகியிருக்கிற இந்தக் கட்டத்தில், வளர்ச்சித் திட்டங்கள் எதுவும் தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கின்றனவா என்றால், அப்படி அமையவில்லை என்பதுதான் என்னுடைய குறை என்பதை இந்த அவையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

1986 ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் தேதி, கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையில், 23 ஆம் பக்கத்தில் "வீடில்லாதவர்களுக்கு வீட்டு வசதிக்கு வகை செய்யும் மிகப் பெரிய திட்டத்தை அடுத்த நிதி ஆண்டில் செயல்படுத்த அரசு கருதுகிறது என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆதி திராவிடர் மக்கள், பழங்குடி மக்கள், நரிக்குறவர்கள் ஆகிய மக்களுக்கு ஐந்து லட்சம் வீடுகளும், வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிற ஏனைய குடும்பங்களுக்கு 5 லட்சம் வீடுகளும் கட்டிக் கொடுக்கப்படும். இந் நலிந்த பிரிவினர்களுக்கு வீட்டு வசதியை அளிக்க வேண்டுமென்று பாராட்டத்தக்க நோக்கத்தை மூன்றாண்டுகளில் முப்பது இலட்சம் மக்களுக்குக் குடியிருப்புக்கள் கட்டி முடிக்க வேண்டும் என்பதுதான் இத்திட்டத்தின் உறுதியான நோக்கமாகும்".

(முற்பகல் 10.30)

பிப்ரவரி 23 ஆம் நாள் நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தல்களுக்கு முன்பு பிப்ரவரி 20, 21, 22 ஆகிய நாட்களில் ஆளுங் கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், உள்ளாட்சி மன்றத் தேர்தல் தொடர்பான விளம்பரங்களில் எல்லா ஏடுகளிலும் வெளியிடப்பட்டபோது, அதில் "தாழ்த்தப்பட்டோர், நரிக்குறவர், நலிந்த

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, இந்தியா முழுவதும் உள்ள இந்திய உணவுக் கழகத்தினர் (Food Co-operation of India) மூலம் நடத்தப்படுகின்ற நவீன அரிசி ஆலைகள் (Modern rice mills) அத்தனையும் அவர்கள் விற்க விரும்புவதாக ஓர் அறிவிப்பு வந்தது. அதற்கு என்ன காரணங்கள் என்று மைய அரசு வெளியே சொல்ல விரும்பவில்லை. நாமும் அதுபற்றிக் கேட்கவில்லை. அது மைய அரசுக்குத் தான் தெரியும். ஆனால் மத்திய அரசினர் இப்படி விற்க விரும்புகிறார்கள் என்று தெரிந்தவுடன், நமக்கு அதிகமான ஆலைகள் தேவைப்படுகிற காரணத்தினால், நாம் அவற்றை வாங்க முன்வந்திருக்கிறோம். இப்போது நாம் நம் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் (Civil Supplies Corporation) மூலம் 13 நவீன அரிசி ஆலைகளை நடத்திக்கொண்டு வருகிறோம். மேலும் நமக்கு அதிக ஆலைகள் தேவைப்பட்டதால், நாம் அவற்றைப் புதிதாக வாங்குவதைவிட இவைகளை வாங்கினால் இலாபகரமாக இருக்கும் என்ற அடிப்படையில் இவ்வாறு முன்வந்திருக்கிறோம். அதன் அடிப்படையில் நம் அரசு அதிகாரிகள் மைய அரசு அதிகாரிகளோடு பேசிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் அவற்றின் விலை மற்றும் விவரங்களைப் பொறுத்து பேச்சுவார்த்தை முடியவில்லை. பேச்சுவார்த்தை அதிகாரிகள் மட்டத்திலே நடந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிற இதே சமயத்தில் இந்திய உணவுக் கழகத்தில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் எல்லாம், இவற்றை தமிழக அரசு எடுத்துக்கொண்டால், தாங்கள் வேறு மாநிலத்திற்கு மாற்றப்படும் சூழ்நிலை ஏற்படும் என்று கருதி, சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட பணியாளர்கள்—தஞ்சாவூர் மற்றும் பல இடங்களில் பணியாற்றுபவர்கள்—மேற்படி ஆலைகளை மாநில அரசு எடுக்கக் கூடாது என்றும், மைய அரசே இவற்றைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்றும் 'ரெப்ரசன்டேஷன்' கொடுத்திருக்கிறார்கள். இந்த அளவிலே பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** தலைவர் அவர்களே, விலை பற்றி பேச்சுவார்த்தை நடைபெறுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எந்த விலைக்கு நவீன அரிசி ஆலைகளை விற்பதாக மைய அரசு அறிவித்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, மைய அரசு விலை ஏதும் நிர்ணயித்துச் சொல்லவில்லை. அவர்கள் விற்க விரும்புகிறார்கள் என்று நமக்குத் தெரிய வந்தது. நாம் அவற்றை வாங்கலாம் என்று முன்வந்தோம். நாம் அவற்றை அவற்றின் 'புக் வேல்யு' விலைக்கு வாங்கலாம்





ன்று முடிவு செய்தோம். ஆனால் அதற்கு மைய அரசு ஒத்துக்கொள்ள ில்லை. அதனால் இன்னும் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, மைய அரசு நவீன அரிசி ஆலைகளை மூடுவதற்கு அல்லது விற்பதற்கு முன்வந்திருப்பதற்குக் காரணம், அந்த அரிசி ஆலைகள் நட்டத்தில் இயங்குவதால் இருக்குமா? அவ்வாறு ட்டம் ஏற்பட்டு மைய அரசு மூடவோ அல்லது விற்கவோ முன்வரும்போது அவற்றை நம்முடைய அரசு வாங்குவது சரியாக இருக்குமா? நட்டத்தில் டும் அவற்றை வாங்கி இலாபகரமாக நடத்த நம் அரசு முயற்சிக்கிறதா? கூடு மானவரையில் அவற்றை மைய அரசே நடத்துவதற்கு, ஊழியர் நலன் கருதி இந்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா? இவ்வாறு நாமும் நட்டம் அடையாமல் இருக்கவும், இப்போது அங்கே பணியாற்றும் ஊழியர் நலன் கருதியும் அரசு இந்நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, இந்திய நாடு முழுவதும் உள்ள நவீன அரிசி ஆலைகளை மைய அரசு விற்பதற்கு முடிவு எடுத்திருக்கிறது. அதற்குக் காரணம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போலவும் இருக்கலாம்; அல்லது வேறு விதமான காரணமாகவும் இருக்கலாம். ஆனால் நம்மைப் பொறுத்தவரையில், அவற்றை நாம் அவற்றின் 'புக் வேல்யூ'-விற்கே வாங்கினால், அவற்றை இலாபகரமாக நடத்த முடியும் என்ற காரணத்தினால்தான், அவற்றை வாங்க முன்வந்திருக்கிறோம். அவர்கள் நட்டத்தில் நடத்துவதால், அவர்கள் விற்க முன்வந்து, நாமும் அவற்றை வாங்கி நட்டத்திலேயே நடத்துவதற்காக நாம் அவற்றை வாங்க முற்படவில்லை. வாங்கினால் இலாபம் கிடைக்கும் என்பதனால்தான் 'புக்-வேல்யு'-விற்கு நாம் அவற்றைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

**திரு. அ. ப. சிவராமன்:** தலைவர் அவர்களே, நாள் ஒன்றுக்கு 30 டன்னுக்கு மேல் அரைக்கப்படுகிற ஒரு கோதுமை அறவை ஆலையை தமிழ் நாட்டில் துவங்க அரசு முனைந்து கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-05)

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** தலைவரவர்களே, இந்தக் கேள்விக்கும், மூலக் கேள்விக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பத்திரிக்கையில் வந்த செய்தியைப் பார்த்துக் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். 'கோதுமை மாவு ஆலைகளை'

பிரிவினர், வாழ்வில் உயர்ந்திட வழி பிறக்கிறது. 30 இலட்சம் வீடுகள், மூன்றே ஆண்டுகளில்" என்று கொட்டை எழுத்துக்களில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் ஆளுநர் உரையில் "முப்பது இலட்சம் மக்களுக்கு வீடுகள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆளும் கட்சியில் உள்ளாட்சி மன்றத் தேர்தல் பிரச்சாரங்களில் "முப்பது இலட்சம் வீடுகள் மூன்றே ஆண்டுகளில்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மாண்புமிகு நாவலர் அவர்கள் இந் நிதிநிலை அறிக்கையில், "ஆதி திராவிடர், பழங்குடியினர், நரிக்குறவர், ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே இருக்கும் ஏனையோர் ஆகியோருக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கும் திட்டம் ஒன்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டது. இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த பெரும் முதலீடு தேவைப்படுகிறது." நாவலர் இந்த இடத்திலே பெருமூச்சு விட்டுக்கொள்கிறார். ஏனென்றால் அவர் எண்ணிப் பார்க்கிறார். இப்படி ஒரு திட்டம் ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த பெரும் முதலீடு தேவைப்படுகிறது என்று கூறும்போது பெருமூச்சு விட்டுக்கொண்டு அது எப்படி நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு நாவலர் கோடிட்டுக் காட்டுகிறார் என்றால், குடிசைவாழ் மக்களுக்குப் போதிய வசதி செய்து கொடுக்கும் என்கிறார். மாண்புமிகு நாவலர் மொழியிலேயே கூறுவது என்றால், "குடிசைவாழ் மக்களுக்குப் போதிய குடியிருப்பு வசதி செய்து கொடுப்பது, ஏழ்மைக்கோட்டிற்கு கீழே வாழும் மக்களின் குடியிருப்பு வசதிகளை மேம்படுத்துவது, வீடு கட்ட ஏழைகளுக்குக் கடனுதவி அளிப்பது, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வீடு கட்ட உதவுவது, தொழில் நிறுவனங்கள் மூலம் வீடு கட்டித்தர ஊக்குவிப்பது போன்ற வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்" என்று நாவலர் அவர்கள் மெதுவாக அந்த இடத்தை விட்டு தந்திரமாக நழுவுகிறார். கட்டித் தரப்படும் என்ற அந்தச் சொல்லை மாற்றிவிட்டு வசதி செய்து கொடுக்கப்படும், வசதிகள் மேம்படுத்தப்படும், கடன் உதவி அளிக்கப்படும், வீடுகள் கட்ட உதவப்படும், தொழில் நிறுவனங்கள் மூலம் வீடு கட்ட ஊக்குவிக்கப்படும், இவற்றிற்கு ஹட்கோ, வீட்டுவசதி மேம்பாட்டு நிதியுதவி நிறுவனம், ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் போன்ற நிறுவனங்கள் மூலம் நிதி ஆதாரங்களைப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றெல்லாம் குறிப்பிட்டுவிட்டு, பின்னால் 26 கோடி ரூபாயை நிதி ஒதுக்கீடு செய்து இந்த வரவு செலவுத் திட்டத்தில் இதற்காக ஒதுக்கியிருப்பதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார். ஓர் அரசு இப்படி 30 இலட்சம் வீடுகள் அல்லது 30 இலட்சம் மக்களுக்கு வீடுகள் கட்டித் தருகின்ற திட்டத்தை படிப்படியாகத் தான் நிறைவேற்றும் என்பது நாவலருக்குத் தெரியும். என்ன செய்வது, நாவலருக்கேகூட பிடிக்காத சில திட்டங்கள் தீவிரமாக அறிவிக்கப்பட்டு





விடுகின்றன. திட்டங்கள் பிடிக்காது என்றல்ல. அவசர அறிவிப்புக்கள் அவருக்குப் பிடிக்காது என்பது அவரோடு நான் பல ஆண்டுக்காலம் பழகியவன் என்ற முறையில் நன்கு புரிந்துகொண்டிருப்பவன். அந்தக் காரணத்தினால்தான், "நான் என்ன செய்வது? ஆளுநர் உரையில் குறிப்பிட்டுவிட்டார்கள்" என்று பெருமூச்சு விட்டுவிட்டு இப்படியெல்லாம் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் கட்டித்தரப்படும் என்றும் திட்டவட்டமாக அறிவிக்காமல், அடுத்தமுறை யாராவது இதைப்பற்றிக் குறிப்பிட்டால், "நான் கட்டித் தரப்படும் என்றா சொன்னேன். வசதிகள் செய்து கொடுக்கப்படும், வசதிகள் மேம்படுத்தப்படும் என்று அல்லவா சொன்னேன்" என்று தப்பித்துக்கொள்ள அவருக்குத் தெரியும் என்கிற காரணத்தினால்தான் அந்த வார்த்தைகளைப் பயன்படுத்தி இருக்கிறார்.

ஒரு வீடு கட்ட பத்தாயிரம் ரூபாய் ஆகும் என்று வைத்துக்கொண்டால் கூட, ஏற்கெனவே ஆதி திராவிடர் மக்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசின் சார்பில் வீடுகள் கட்டும்போது 5,000 ரூபாய், 6,000 ரூபாய், 7,000 ரூபாய் என்று அந்த அந்தப் பகுதிகளுக்கு ஏற்றவாறு, அதன் மதிப்பு இருந்தது. இப்போது ஒரு வீடு கட்டுவதற்கு பத்தாயிரம் ரூபாய் என்று வைத்துக்கொண்டால்கூட, 30 லட்சம் வீடுகள் கட்டுவதற்கு 3,000 கோடி ரூபாய் மூன்று ஆண்டுகளுக்குத் தேவைப்படும். ஆனால் இப்போது இந் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியிருக்கும் பணம் 26 கோடி ரூபாய்தான். இது போதுமா என்கிற விளக்கம் எனக்குத் தேவை. இந்த வீடுகள் யாருக்குக் கட்டித் தரப்படும் என்ற குறிப்பில், 'வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு 30 இலட்சம் வீடுகள்" என்று சொல்லப்படுகிறது. அப்படி முப்பது இலட்சம் வீடுகள் என்றாலோ அல்லது 30 இலட்சம் பேருக்கு வீடுகள் என்றாலோ, அந்தக் கணக்கிலே உள்ள சில விவரங்களை நான் புரிந்துகொள்ள விரும்புகின்றேன். வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள்பற்றி சில வேறுபட்ட கருத்துக்கள் நாட்டிலே உலவிக் கொண்டிருக்கின்றன.

(முற்பகல் 10-35)

நம்முடைய தமிழக அரசின் சார்பில் இந்த அவையிலே வைக்கப்பட்டபோது, 1981-82 ஆம் ஆண்டு தொழிலாளர் நலன் பற்றிய கொள்கைக் குறிப்பு வைக்கப் 1981-82 ஆம் ஆண்டு தொழிலாளர் நலன் பற்றிய கொள்கைக் குறிப்பு வைக்கப்பட்டபோது, அதில் குறிப்பிடப்பட்டிருந்தாவது

"State Planning Commission has estimated roughly 62 per cent of the rural population and 53 per cent of the urban population in the State are living below the poverty line".

62 சதவீதம் கிராம மக்களும், 53 சதவீதம் நகர்ப்புற மக்களும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள் என்று 1981-82 ஆம் ஆண்டு இந்த அவையிலே வைக்கப்பட்ட புள்ளிவிவரம் குறிப்பிடுகிறது. இந்த அரசினுடைய மாநிலத் திட்டக் கமிஷனால் தயாரிக்கப்பட்ட ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் என்ற புத்தகம் 14—11—1983-ல் இந்த அவையில் வைக்கப்பட்டது. அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் எழுதியுள்ள முன்னுரையில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் எண்ணிக்கை நமது மாநிலத்தில்தான் அதிகம் என்பதை வருத்தத்தோடு ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது; தொழில் வளர்ச்சியில் மூன்றாவது இடத்தில் இருக்கிறோம் என்று பெருமை கொண்டாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தின் எண்ணிக்கை மிகப் பெரும் அளவில் இருக்கும் மாநிலங்களில் 3-வது இடத்தில் நாம் இருக்கிறோம் என்று கூறினார்கள். நாவலர் அவர்கள் திருப்பூரிலே பேசும்போது, இப்போது தமிழ் நாட்டில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் இருப்பவர்கள் எண்ணிக்கை 36.9 சதவீதம் பேர் என்ற அளவுக்குக் குறைந்திருப்பதாகக் கூறினார்கள். எப்படி இந்தத் திடீர் குறைவு ஏற்பட்டது என்று எனக்கு விளங்கவில்லை. நேற்றைக்கு முன்தினம் நிதி அமைச்சர் அவர்கள் பேரவையில், தமிழ் நாடு தொழில் வளர்ச்சியில் 4-வது இடத்திலே இருப்பதாகக் கூறியதாகப் பத்திரிகையிலே செய்தியை நான் படித்தேன். தமிழ் நாடு தொழில் வளர்ச்சியில் 3-வது இடத்தில் இருக்கும்போது, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் எண்ணிக்கை 50 சதவீதத்திற்கு மேலே இருந்தது என்றால், தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சி 4-வது இடத்திற்கு இறங்கியுள்ள இந்தச் சூழ்நிலையில் வறுமைக்கோட்டின் சதவீதம் 36 என்று எப்படிக் குறையுமென்று எனக்குத் தெரியவில்லை. நாவலர் அவர்கள் வாதத்தைச் சரியென்று ஒப்புக்கொண்டு பார்த்தாலும் கூட ஐந்து கோடி மக்களில் 36 சதவீதம் என்ற கணக்குப்படி 1 கோடி, 50 லட்சம் பேர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள். இதில் 30 லட்சம் பேர்களுக்கு மாத்திரம் வீட்டு வசதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மீதி 1 கோடியே 50 லட்சம் பேர்களுக்கு யார் வீடு கட்டுவது என்ற கேள்வி எழும். இந்த அரசு அவர்களுக்கு வீடுகளை 3 ஆண்டுக்குள்ளேயே கட்டித் தருமென்று சொல்கிறது. அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் என்றால் நான் மகிழ்ச்சியடைவேன். இந்த ஆண்டு 26 கோடி ரூபாய் மட்டும் ஒதுக்கி தரப்படவே இல்லை.



அந்தத் திட்டத்தைத் தொடங்க முடியுமா என்ற ஐயப்பாட்டிற்கு அரசு விளக்கம் தர வேண்டும். எனவே எந்த சிந்தனையும் இல்லாமல் அடிக்கடி தேர்வு வரும்போதெல்லாம் இப்படிப்பட்ட மகத்தான, பிரம்மாண்டமான அறிவிப்புகளை வழங்குவது இந்த அரசுக்கு வாடிக்கையாக இருக்கிறது.

அடுத்து, வீட்டுக்கு ஒருவருக்கு வேலை. one job for each family அது மகத்தான அறிவிப்பு. ஏற்கெனவே 1983-84 நிதிநிலை அறிக்கையில் நம்முடைய நாவலர் அவர்கள் 'குடும்பத்தில் ஒருவருக்கு வேலை' என்ற தலைப்பில் 'அத்திட்டங்களுக்கான விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன; இந்த நிதியாண்டில் 15 கோடி ரூபாய் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது" என்று இந்த அவையிலும் அந்த அவையிலும் படித்தார்கள். குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்ற தலைப்பில் அதற்கு 15 கோடி ரூபாய் அந்த நிதியாண்டில் செலவாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் சொன்னார்கள். அதற்குப் பிறகு 1984-85-ல் நிதிநிலை அறிக்கையை எடுத்துப் பார்த்தேன். அதில் 'குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை' என்ற தலைப்பையே காணவில்லை. 1985-86 நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதில் 'குடும்பத்தில் ஒருவருக்கு வேலை' என்ற தலைப்பையே காணவில்லை. 1986-87 நிதிநிலை அறிக்கையையும் படித்துப் பார்த்தேன். அதிலும் 'குடும்பத்தில் ஒருவருக்கு வேலை' என்ற தலைப்பையே காணவில்லை. நண்பர் திரு. சுப்பு அவர்கள் அழகாகச் சொல்வார்கள். குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்றால், அந்தந்தக் குடும்பத்தில் அவரவர் வேலையை அவரவர் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று திரு. சுப்பு அவர்கள் சொல்லக்கூடும். . . .

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, நாவலர் அவர்கள் அன்றைக்கே சொல்லி விட்டார்கள். வேலை இருக்கிறது, பார்த்துக்கொள்ள வேண்டும்.

டாக்டர் மு. கருணாநிதி: அதைப்போல கர்ப்பவதிகளுக்கு பேறுகாலத்திற்கு மூன்று மாத காலத்திற்கு முன்பு 150 ரூபாய் தரப்படுமென்று ஒரு பெரிய அறிவிப்பு. அதைப் பார்த்து தாய்மார்கள் எல்லாம் இந்த 150 ரூபாய்க்காக குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மீறலாமா என்று கூட யோசித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் நிதிநிலை அறிக்கையில் மதுரை மாவட்டத்தில் கொட்டாம்பட்டி என்ற ஊருக்கு மட்டும் தான் முதலில் பணம் தரப்படுமென்று சொல்லப்பட்டது. இன்றைக்கு கொட்டாம்பட்டியிலுள்ள தாய்மார்களுக்குத் தரப்படவே இல்லை.

[டாக்டர் மு. கருணாநிதி] [1986 ஏப்ரல் 3

(முற்பகல் 10-40)

பிறகு கொட்டம்பட்டி தொடரவே இல்லை. அதைப்போலத்தான் சென்னையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புத் தருவது என்று சொல்லி ஒரு திட்டத்தை அறிவித்தார் 3 சக்கர வண்டிகளைத் தயாரித்து — முதலில் வெள்ளோட்டமாக 5 வண்டிகளை விட்டு — அதிலே பட்டதாரிகள் காய்கறிகளை மலிவான விலையில் விற்பனை செய்வார்கள் என்றும், அவரவர்கள் வீட்டிற்கே இந்த வண்டிகளில் கொண்டு வந்து விற்பார்கள் என்றும், வீட்டிலுள்ள பெண்டிர் அங்கேயே காய்கறிகளை வாங்கிக் கொள்கிற அளவுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்றும் சொல்லி — இப்படி 5 வண்டிகள் 500 வண்டிகளாகப் பெருகும், பிறகு திருச்சி, கோவை, சேலம் போன்ற இடங்களில் இப்படிப்பட்ட பட்டதாரிகளுக்கு காய்கறிகளை விற்கிற மகத்தான வேலை தரப்படும் என்றும், அந்த சைக்கிள்களுக்கான ஸ்பேர் பார்ட்ஸ், உதிரிப் பாகங்கள் செய்வதற்காகக் கிராமப்புறங்களில் தொழிற்சாலைகள் உருவாக்கப்படும் என்றும் சொல்லப்பட்டது அந்தத் திட்டமும் தொடங்கியதோடு சரி, தொடரவே இல்லை.

பிறகு பாம்புக்கடி வைத்தியம் என்று ஒரு திட்டம். ஒவ்வொரு ஊரிலும் பாம்பு கடித்தால், அதற்கு வைத்தியம் செய்தால், அவர்களுக்கு இவ்வளவு ஊதியம் என்று சொல்லி, திட்டம் தொடங்கப்பட்டது. அதற்குப் பிறகு எங்கேயும் பாம்புகள் கடிக்காமல் பயந்து கொண்டு பதுங்கிப் போய் விட்டனவோ, எனக்குத் தெரியவில்லை. அதற்குப் பிறகு அந்தத் திட்டம்பற்றி விவரமே இல்லை. இது எப்படி இருக்கிறது என்றால், ஒவ்வொரு திட்டமும் அறிவிக்கப்படும்போது, பிரம்மாண்டமாக அறிவித்து விட்டு, கடைசியில் ஒன்றுமில்லை என்று முடிகிறது. பஞ்சபாண்டவர்கள் எத்தனை பேர் என்றால் கட்டிற்கால்கள்போல் 3 பேர் என்று சொல்லி இரண்டு விரலைக் காட்டியதைப் போல் நீங்களும் இரண்டு விரலைக் காட்டியே இந்த நாட்டை ஏமாற்றி விடலாம் என்று நம்பிக் கொண்டிருக்கிறீர்கள். அது சரியில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது மீண்டும் மதுவிலக்குச் சட்டம் வரும் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். மதுவிலக்குச் சட்டம் மீண்டும் வரும் என்பதைக் குறிப்பிடும்போது — அதை ஒரு மகிழ்ச்சியோடு, திட்டவட்டமாக மதுவிலக்குச் சட்டம் மீண்டும் வந்தே தீரும் என்று குறிப்பிடாமல்—வழக்கமாக எத்தனையோ பிரச்சினைகளுக்கெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையிலே பீடிகை இருக்கும்போது,



1986 ஏப்ரல் 3] [டாக்டர் மு. கருணாநிதி]

இதற்கு மட்டும் எந்தப் பீடிகையும் இல்லாமல்—மதுவிலக்குத் திட்டம் மீண்டும் அமுல்படுத்தப்படுகிற காரணத்தால் இப்படியெல்லாம் வருவாய் இழப்பு ஏற்படும் என்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்களே அல்லாமல், மதுவிலக்குச் சட்டம் நிச்சயமாக மீண்டும் வரும் என்று அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை. ஆனால் பேரவையில் பதிலுரையில் நிச்சயமாக மதுவிலக்குச் சட்டம் வரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆளும் கட்சியினுடைய பொதுக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டி, மதுவிலக்குச் சட்டத்தை மீண்டும் கொண்டு வருவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிற கட்டத்தின் அடுத்த பகுதியில், மதுவிலக்குச் சட்டம் நிறைவேற்றப்படுகிற நேரத்தில் மீண்டும் கள்ளச் சாராயம் பெருகும் என்பதையும் நினைவில் வைத்துக்கொண்டு, இதனாலே பல பேர் சிறைச்சாலைக்குச் செல்ல வேண்டி வரும் என்பதையும் நினைவில் வைத்துக் கொண்டும், காவலர்களுக்குப் பல தொல்லைகள் ஏற்படும் என்பதையும் நினைவில் வைத்துக் கொண்டும் மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்றும் பயமுறுத்தல்கள் தோன்றுகின்ற காரணத்தால், எனக்குச் சில ஐயப்பாடு எழுகிறதே தவிர வேறொன்றுமில்லை. நீங்கள் அறிவிப்பதையெல்லாம் சந்தேகப்படுவதா என்றால், எங்களின் முன் அனுபவம் அப்படி இருக்கிற காரணத்தால், சந்தேகப்படுகிறோம்.

1979 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியது அண்ணா பத்திரிகையில் 2—12—1979 தேதியில் வெளியாகியிருக்கிறது. "என் உயிர் இருக்கும் வரை, நான் பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சரி, அல்லது பதவியில் வேறு ஒருவரை உட்கார வைத்து நான் ஓய்வு எடுத்தாலும் சரி — இதை இங்கே கோடிட்டுக் கொள்ள வேண்டும் — வேறு ஒருவரைப் பதவியில் உட்கார வைத்துவிட்டு நான் ஓய்வு எடுத்துக் கொண்டாலும் சரி, என் இறுதி மூச்சு வரை மதுவிலக்குக் கொள்கையை நான் நிறைவேற்றுவேன் என்று என்னைப் பெற்ற அன்னை மீது உறுதி எடுத்துக் கொள்கிறேன்" என்று 1979 ஆம் ஆண்டில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு சபதம் செய்தார்கள். பிறகு அது கைவிடப்பட்டது. கடைகள் திறக்கப்பட்டன. மதுவிலக்கு தளர்த்தப்பட்டது. ரத்து செய்யப்பட்டது.

மீண்டும் 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் தேதி அண்ணா பிறந்த நாள் முதல் என் உயிர்க் கொள்கையான மதுவிலக்கு மீண்டும் கொண்டு வரப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உறுதியாகக் கூறப்பட்டது என்ற செய்தி 23—7—1984 அன்று தமிழ் நாட்டில் உள்ள பல்வேறு செய்தி

ஏடுகளில் வெளிவந்தது. அதற்குப் பிறகு பொதுத் தேர்தல் நேரத்திலும், தேர்தல் முடிந்த பிறகும் மதுவிலக்கு கொண்டு வரப்படும் என்று அமைச்சர்கள் எல்லாம் மேடைக்கு மேடை பேசினார்கள். ஆனால் என்னவாயிற்று? மதுவிலக்கைத் தளர்த்தி தாய்மார்களின் கண்ணீரைச் சிந்த வைக்க மாட்டேன் என்று தாய்மார்களின் கண்ணீரைக் காட்டி மதுவிலக்கைத் தளர்த்த மாட்டேன் என்று சொன்னதும் நம் முதலமைச்சர்தான். அதற்குப் பிறகும் இதைத் தீவிரப் படுத்துவேன் என்று சொல்லி, குடிப்பவர்களை நாடு கடத்துவேன் என்று சொல்லுகிற அளவுக்குச் சட்டம் கொண்டு வருவேன் என்று சொல்லி சட்டம் கொண்டு வந்ததும், அப்படிப்பட்ட சட்டம் கொடுமையானது, பயங்கரமானது, சர்வாதிகார நாட்டில்கூட இப்படிப்பட்ட சட்டம் இருக்காது என்று நாங்கள் எல்லாம் கண்டித்தும்கூட அதையெல்லாம் மீறி பெரும்பான்மை காரணமாக அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி அதற்குப் பிறகு தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்க மதுக் கடைகளை மீண்டும் திறக்கிறேன் என்று சொல்லித் திறந்ததும், இந்த முதலமைச்சர்தான். இப்படி மதுக்கடைகளை மூடுவதற்கும் தாய்மார்களின் கண்ணீர். மீண்டும் திறப்பதற்கும் தாய்மார்களின் கண்ணீர். திரும்பவும் மூடுவதற்கும் தாய்மார்களின் கண்ணீர் என்று மாறி மாறிச் சொல்லும் சூழ்நிலை 1979 ஆம் ஆண்டு முதல் வாக்குறுதியாகத் தரப்பட்ட காரணத்தால்தான், இந்த வாக்குறுதி யாவது காப்பாற்றப்படுமா என்ற ஐயப்பாடு எனக்கு எழுகிறதே தவிர வேறல்ல.

(முற்பகல் 10-45)

தொழில் வளர்ச்சியில் நம்முடைய மாநிலம் மிகவும் முன்னேற்றம் அடைந்திருப்பதாக குறிப்புகளைக் காட்டியிருக்கிறார்கள். மத்திய அரசு நம்முடைய மாநில தொழில் வளர்ச்சிக்குத் தேவையான பெரும் திட்டங்களை அளிக்கவில்லை என்ற குறைபாட்டை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். குறிப்பாக சேதுசமுத்திரத் திட்டம் எத்தனையோ ஆண்டுகளாக அவ்வப்போது இருக்கின்ற தமிழக அரசாங்கங்களால் தமிழ் நாட்டின் சார்பாக சென்றிருக்கின்ற தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர்களானாலும் சரி. அ.தி.மு.க. உறுப்பினர்களானாலும் சரி, வேறு கட்சி உறுப்பினர்களானாலும் சரி, காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களானாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களானாலும் சரி, அவர்கள் அத்தனை பேரும் பாராளுமன்றத்திலே வலியுறுத்தி, நினைவூட்டத் தவறவில்லை. அதைப் போலவே திண்டுக்கல்—கரூர் அகல இருப்புப் பாதை. இந்த இரண்டு திட்டங்களையும் மாநில அரசு பல முறை கோரியும், மாநில அரசின் சார்பாக பல்வேறு கட்சிகள், எதிர்க் கட்சியாக இருந்தாலும்கூட



எங்களைப் போன்ற கட்சிகள் வாதாடியும்கூட, பிரதமரிடம் விண்ணப்பம் தந்தும்கூட இந்த இரண்டு பெரிய திட்டங்களையும் நிறைவேற்ற மத்திய சர்க்கார் முன்வரவில்லை, . அதற்காக முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்பது எங்களுக்குள்ள மாபெரும் குறைபாடு. நாங்கள் அதைக் கண்டித்திருக்கிறோம், எதிர்த்திருக்கிறோம், அதுபற்றி பல முறை பேசியிருக்கிறோம், ஆனாலும் கூட மத்திய அரசு தரவில்லை என்கின்ற அந்தக் காரணத்தை மாத்திரம் சொல்லிக் கொண்டிராமல் மாநில அரசும், தொழில் அமைச்சரும் அக்கறை காட்ட வேண்டும். அப்படி சரியான முறையில் அக்கறை காட்டப்படவில்லை என்பதற்கு என்னிடத்திலே ஒன்றிரண்டு உதாரணங்கள் இருக்கின்றன.

என்னுடைய கையிலே இருப்பது 'டிட்கோ' வெளியிட்ட ஒரு எழில் பொருந்திய மலர். இந்த மலருக்கு ஜனாதிபதி திரு. ஜெயில்சிங் அவர்கள் அக்டோபர் 15, 1985-இல் வாழ்த்து அனுப்பியிருக்கிறார். பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் 1985 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் தேதி வாழ்த்து அனுப்பியிருக்கிறார். கவர்னர் திரு. குரானா 1985 ஆம் ஆண்டு டிசம்பர் 4 ஆம் தேதி வாழ்த்து அனுப்பியிருக்கிறார். நம்முடைய தொழில் அமைச்சர் 1985 அகடோபர் மாதம் 8 ஆம் தேதி வாழ்த்து அனுப்பியிருக்கிறார். ஆனால் முதல்வர் அவர்கள் பிப்ரவரி 4, 1986-இல் வாழ்த்து அனுப்பியிருக்கிறார். வாழ்த்து தாமதமாக வந்தது என்று நான் குறை சொல்ல விரும்பவில்லை. இந்த மலர் 1986-க்குப் பிறகு வெளியிடப்பட்டு, அதாவது பிப்ரவரி 4 ஆம் தேதிக்குப் பிறகு வெளியிடப்பட்டிருக்கிறது என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். ஜனாதிபதி அவர்கள் வாழ்த்தை 1985-லே அனுப்பியும், பிரதமர் 1985 ஆம் ஆண்டு அனுப்பியும், முதலமைச்சர் தன்னுடைய வாழ்த்தை தாமதமாக அனுப்பினாரே என்று நான் குறை சொல்லவில்லை. பிப்ரவரி 4, 1986-க்குப் பிறகு இந்த மலர் வெளியிடப்பட்டிருக்கிறது என்பதற்காகத்தான் குறிப்பிடுகிறேன். இதிலே தொழிலமைச்சர் அனுப்பிய வாழ்த்தில்

"It is a commendable achievement of TIDCO in having successfully implemented 31 projects in the joint sector and 7 in the public sector."

என்று அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

[1986 ஏப்ரல் 3

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் சொல்லுகின்ற நேரம் புரட்சித் தலைவர் மருத்துவ மனையில் இருந்த நேரம்.

**டாக்டர் மு. கருணாநிதி:** அது 1985-இல் இல்லை. அமைச்சர் அவர்கள் தவறாகச் சொல்லுகிறார்கள். நான் அவர் தாமதமாக வாழ்த்து அனுப்பி ..தைப் பற்றிக் கூறவில்லையே! இந்த மலர் 1986-க்குப் பிறகு வந்தது என்பதற்காகத்தான் குறிப்பிடுகிறேன். இந்த மலரில்

"Ariyalur Cement Works: A dry process cement plant was set up with an installed capacity of 5 lakh tonnes per annum. (Cement production at a capital cost of Rs. 28.76 crores). The unit commenced commercial production in August 1979. The plant is located at Ariyalur in Ariyalur taluk of Tiruchirappalli district. The plant provides direct employment to 916 persons in a backward area besides providing indirect employment in areas such as transportaiton of raw materials, finished goods, etc."

(முற்பகல் 10-50)

ஆனால் இதே அரியலூர் சிமெண்ட் ஒர்க்ஸ்-ல், இது குறித்து 1985-86 இண்டஸ்ரியல் பாலிசி அண்டு புரோகிராம்ஸ் என்ற தலைப்பில் வைக்கப்பட்ட கொள்கைக் குறிப்பில்

"Ariyalur Works is a dry process plant having an installed capacity of 5 lakh metric tonnes per annum."

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சிமெண்ட் புரோடக்ஷன் ஆகஸ்ட் 1, 1979 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நாள்வரை இந்த 5 லட்சம் மெட்ரிக் டன்ஸ் என்பதை எங்கேயாவது தொட்டு இருக்கின்றதா என்று பார்த்தால், இல்லை.

1979-80 இல், 1,15,919 மெட்ரிக் டன்கள், 8 மாதங்களுக்கு. 1980-81-ல், 2,46,736 மெட்ரிக் டன்ஸ், 1981-82-ல் 2,84,350 மெட்ரிக் டன்ஸ், 1982-83-ல், 2,47,300 மெட்ரிக் டன்ஸ், 1983-84-ல், 3,01,366 மெட்ரிக் டன்ஸ், 1984-85-ல் 2,84,366 மெட்ரிக் டன்ஸ் ஆகத்தான் இருக்கின்றது. ஆரம்பத்திலே குறிப்பிடப்பட்ட இந்த 5 லட்சம் மெட்ரிக் டன்ஸ் என்பதைத் தொடவே இல்லை. அது மாத்திரமல்ல, இதிலே This unit has been incurring losses. என்று இருக்கிறது, ஆக





இது நஷ்டத்திலே நடந்துகொண்டிருக்கின்றது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது ஒரு பப்ளிக் செக்டார். இது நஷ்டத்திலே நடந்துகொண்டிருக்கின்றது. இதற்காக ஒரு அழகான மலர் போடப்பட்டிருக்கின்றது. வெளிநாட்டுக்காரர்கள் அந்த மலரை வாங்கிப் பார்த்தால், அது நஷ்டத்திலே ஓடுகின்றதா அல்லது அதிலே உற்பத்தி வருகிறதா என்று தெரிந்து கொள்ள முடியாது. இந்த நிலையிலேதான் அந்த மலர் இருக்கின்றது.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அரியலூர் சிமெண்ட் ஆலையில் சில சிக்கல்கள் காரணமாக, அதில் சாம்பல் அதிகமாக வந்துவிடுகிறது என்ற பிரச்சினை காரணமாக, அதிலே தீவிரமாக ஈடுபட்டு, தற்போது அது சரியாக ஓடிக்கொண்டிருக்கின்றது. இந்த ஆண்டு அது லாபத்திலே ஓடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி:** 5 லட்சம் மெட்ரிக் டன் டார்க்கெட் வந்ததா என்பதைப் பற்றித்தான் நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** ஐந்து லட்சம் மெட்ரிக் டன்கள் அளவுக்கு இன்னும் வரவில்லை.

**டாக்டர் மு. கருணாநிதி:** நான் சொன்னதை ஏற்றுக்கொண்டதற்காக நன்றி.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இல்லை, இல்லை. ஏற்கெனவே பல சிக்கல்கள் இருந்தன. சாம்பல் அதிகமாக வந்துவிட்டது. அதனால் பல சிக்கல்கள் வந்து, அதை இப்போது மாற்றியிருக்கிறோம். அதிலே ஒரு வருடகாலமாக தீவிர கவனம் செலுத்தி முயற்சியிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு லாபத்தில் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி:** இதே மலரில், 'புராஜெக்ட்ஸ் அண்டர் புரொடக்ஷன்'. அதாவது திட்டம். ஜாயிண்ட் செக்டார் புராஜெக்ட்ஸ் அண்டர் புரொடக்ஷன். உற்பத்தியிலே இருக்கின்ற ஜாயிண்ட் செக்டார் தொழில்கள் என்கின்ற அந்த தலைப்பில் வருகிறது. ஒரு தொழிற்சாலை சதர்ன் ஹைட்ரோ கார்பன்ஸ் லிமிட்டெட், குளத்தூர், புதுக்கோட்டை மாவட்டம் இதற்கு ரூபாய் 2 கோடியே 70 லட்சம் ரூபாய் மூலதனம். அந்த மூலதனத்தோடு தொடங்கப்பட்டது. அதிலே 60 பேர்கள் பணியாற்றுகின்றார்கள் என்றெல்லாம் இந்த மலரில் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதற்கும் அழகான படம் போட்டு ஒரு மலர் வெளியிட்டிருக்கின்றார்கள். நான் கடந்த 28 ஆம் தேதி அறந்தாங்கிக்கு புதுக்கோட்டை வழியாகச் சென்றிருந்தேன்.

அப்போது அந்தப் படத்திற்குரிய அந்த ஆலை அங்கே இருக்கின்றதா என்று பார்த்தேன். இருந்தது. ஆனால் மூடிக்கிடந்தது. ஆனால் இங்கே என்ன சொல்லப்பட்டிருக்கின்றது என்றால் ஜாயிண்ட் செக்டார் புராஜெக்ட்ஸ் அண்டர் புரொடக்ஷன் என்ற தலைப்பில் அந்த ஆலையினுடைய பெயர் வந்திருக்கின்றது. அது பல மாத காலமாக மூடிக் கிடக்கிறது. பழுதடைந்து, தூசிகள் படிந்து அங்கே உள்ளே கூட செல்ல முடியாத அளவில் இருக்கின்றது. நான் செல்லும் வழியில், சாலை ஓரத்திலேயே அமைந்திருந்ததால், நேரில் சென்று பார்க்க முடிந்தது. ஆசிட்டிங் ஆசிட் தயாரிக்கின்ற ஒரு தொழிற் சாலை. எனவே மலரை அழகாகத் தயாரித்துவிட்டால் மட்டும் போதாது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பாடியிருக்கின்றார்கள்.

"மலம் மூடத்தான் மலர் பறித்தேன் என்றால்,
குளிர் மலர் சோலை கோவென் றழாதோ?"

என்று பாடியிருக்கின்றார்கள். அதுபோல, மலர் வெளியிடுகின்ற நேரத்தில் அதிலே உள்ள தொழிற்சாலைகள் எப்படி இருக்கின்றன என்பதற்கு இன்னும் உதாரணங்கள் தொடர்ந்து மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களுக்குக் காட்ட முடியும். அவர்கள் இனிமேலாவது நிர்வாகத்தில் உள்ள குறைகளைக் கண்டறிந்து, அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் சொல்கின்றேனே அல்லாமல் வேறல்ல.

(முற்பகல் 10-55)

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு தலைவரவர்களே, கார்போராண்டம் தொழிற்சாலை பற்றிச் சொன்னார்கள். அதுபற்றி குறிப்பு என்னிடமில்லை. ஆனால் ஒன்றை மட்டும் சொல்கிறேன். இந்த ஆண்டு பொதுத் துறைகள் எல்லாவற்றிலும் லாபம் வரும் வகையில் நான் வேலை வாங்கப் பார்க்கிறேன். அந்த வகையில் தற்போது வேலை நடந்து கொண்டிருக்கிறது என்பதை அவையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு நாவலர் அவர்கள் அறிக்கையை நிறைவு செய்கிற கட்டத்திற்கு முன்பு ஒன்றைக் குறிப்பிடுகிறார். "நீதி, நேர்மை, சட்டம், திட்டம், ஒழுங்கு, தேவை ஆகியவற்றின் அடிப்படையில் வகுத்துத் தந்தும் ஆட்சி புரிய வேண்டும் என்ற குறள் நெறிக் கருத்திற்கு இணங்க இந்த அரசு செய



லாற்றி வருகிறது" என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்த நீதி, நியாயம் இவைகளுக்கெல்லாம் மதிப்பு தராமலும், இவைகளைப்பற்றி எல்லாம் கவலைப்படாமலும் இந்த அரசு நடைபெறுகிறது என்பதற்கான சில எடுத்துக்காட்டுகளை இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

நான் யாரையும் தனிப்பட்ட முறையில் குற்றம் சாட்டவோ அல்லது ஆதாரங்கள் இல்லாமல் யார்மீதும் அவதூறு கூறவோ இந்தக் கருத்தை இங்கே எடுத்து வைக்க நான் விரும்பவில்லை. நீதி மன்றம் சில தீர்ப்புகளை வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்புகளை மாத்திரம் படிக்கிறேன். அந்தத் தீர்ப்புகளைப் படிக்கும்போது, அதன் அடிப்படையிலே, மாண்புமிகு நாவலர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் குறள் நெறிக்கு ஒப்ப இந்த அரசு நடைபெறுகிறதா என்ற அந்தக் கேள்விக்கு பதில் கிடைக்கிறதா என்று ஆய்ந்தால் மாத்திரம் போதுமானது. தங்கவேலு என்பவர் ஒரு விவசாயியின் மகன். இவர் பி.எஸ்சி. (அக்ரி.)—வேளாண்மை, 1984-85 ஆம் ஆண்டு படிப்பதற்கு மனுச் செய்திருந்தார். இந்த மனுச் செய்வதற்கு முன்பு அரசாங்கம் 26—8—1983, அரசு ஆணை எண் 1531, வேளாண்மை, என்ற எண்ணின்படி ஒரு நல்ல திட்டத்தை வகுத்து, அறிவித்தது. அது என்னவென்றால், பி.எஸ்சி. (வேளாண்மை) படிப்பதற்கு விவசாயியினுடைய மகன்களுக்கும், மீனவர்களுடைய மகன்களுக்கும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஒதுக்கப்பட்டிருந்த இடங்கள் அதிகரிக்கப்பட்டன. அதன்படி பி.எஸ்சி. (வேளாண்மை) பிரிவில் 20. 25 இடங்கள் ஒதுக்கப்பட்டன. அரசாணை 1640, வேளாண்மை, தேதி 24—88—1984-படி விவசாயிகள், மீனவர்கள் மகன்களைத் தேர்ந்தெடுக்க ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு விவசாயிகளின் மகன்கள், மீனவர்களின் மகன்கள் ஆகியோரைத் தேர்ந்தெடுக்க தன்னுடைய கவனத்தைச் செலுத்தும் என்ற சீரிய நோக்கத்தோடு, பொதுவாக அந்தத் தேர்விலே தேர்வு செய்யப்படுகிறவர்களை பொறுக்கி எடுக்க வேளாண்மைத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், வேளாண்மைத் துறைச் செயலாளர் ஆகியோர் அடங்கிய குழுவை அரசு முடிவு எடுத்து அறிவித்தது. இந்தக் குழு கூடி பி.எஸ்சி. (வேளாண்மை) படிப்புக்கு தேர்ந்தெடுத்த நபர்கள் குறித்த ஒரு வழக்கு. அந்த வழக்கில் உயர்நீதிமன்ற நீதிபதி திரு. மோகன் அவர்கள் தெரிவித்த கருத்தை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கான வழக்கறிஞர் தேர்வு சம்பந்தப்பட்ட பதிவுப் புத்தகத்தை கோர்ட்டில் தாக்கல் செய்தார். நான் அதைக் கவனமாகப் பார்த்தேன். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பலர் முறையீடுகள் அதில் இருந்தன. அவைகள் பரிசீலிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் இந்தப் பிரிவில், அரசாங்கத் துறையிலே பணியாற்றுகிறவர்களின் வீட்டுப் பிள்ளைகள், தங்களுக்குச் சொந்தத்தில் நிலம் இருப்பது ஒன்றையே ஆதாரமாக வைத்து, இடம் பெற்றிருப்பது வியப்புக்குரியதாகும்.

(முற்பகல் 11-00)

அவர்கள் ஏழை விவசாயிகள், ஏழை மீனவர்கள். இவர்களுக்காக என்று ஒதுக்கப்பட்ட இடத்தில் அரசாங்கத் துறைகளிலே பணியாற்றுகிறவர்கள் அவர்களுக்குச் சொந்தமாக நிலம் இருப்பதை வைத்து, அவர்கள் வீட்டிலுள்ளவர்களுக்கு இடம் பெற்றிருப்பது வியப்புக்குரியதாகும். இப்படி ஒதுக்கீட்டு இடங்களை குறிப்பிட்ட ஒதுக்கீட்டுக்கு தகுதியுடையவர்களுக்கு வழங்காமல், கேட்பவர்களுக்கு எல்லாம் கொடுப்பது என்பது அரசு ஒதுக்கீட்டு முறைக்கு மாறானதாகும். இவர்கள் அரசு விதித்துள்ள ஒதுக்கீட்டு முறையை கவனத்தில் எடுத்துக் கொண்டார்களா என்பதே கேள்விக்குரிய ஒன்று. அரசுப் பணியில் இருப்பவர்களுடைய பிள்ளைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஏழை விவசாயிகள், ஏழை மீனவர்கள் போன்றவர்களுடைய நிலையை உணர்ந்து கருணையுடன் அவர்களுக்கு உதவுவதற்காக அரசு இந்த ஒதுக்கீட்டு முறையைக் கொண்டு வந்தது. ஆனால் இந்தக் குழு அந்த விதியைக் கடைப்பிடிக்கவில்லை. முழுத் தேர்வையும் செல்லாது என்று சொல்வது தான் முறையாக இருக்க முடியும். ஆனாலும் தேர்ந்தெடுக்கப்படாத மற்றவர்கள் மனு எதுவும் போடவில்லை. அப்படிச் சொல்வதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பாதிக்கப்படலாம். ஆகவே, பாதிக்கப்பட்ட இவர்களை பி.எஸ்சி. வேளாண்மை படிக்க சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவிடுகிறேன் என்று நீதிபதி அவர்கள் தன்னுடைய தீர்ப்பில் கூறியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்ன குறிப்புகளின் அடிப்படையில் ஒன்றை விளக்கமாகச் சொல்கிறேன். வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பம் அனுப்பும்போதே, சான்றிதழையும் சேர்த்து அனுப்புகிறார்கள். பல்கலைக் கழகம் அவர்கள் அனுப்புகின்ற சான்றிதழையும் சேர்த்தே இந்தக் குழுவுக்கு அனுப்புகிறது. ஆனால் மதிப்பெண்களின் அடிப்படையில்தான் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். நீதிபதியின் தீர்ப்பின் அடிப்படையில் இதுபற்றி பல்கலைக் கழகத்திற்கு எழுதி இப்போது மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் போன்றோர் அடங்கிய ஒரு குழுவின் மூலம் தேர்ந்தெடுக்கிறோம்.



**டாக்டர் மு. கருணாநிதி :** அரசு நல்ல உணர்வோடு, நல்ல நோக்கத்தோடு இதனைச் செய்திருந்தாலும், அந்தக் குழுவானது அரசின் நோக்கத்துக்கு ஏற்ப இதனைக் கவனிக்கவில்லை என்று நீதிபதி சுட்டிக் காட்டியதைத் தான் நான் இங்கே குறிப்பிட்டேன். வேளாண்மைச் செயலாளர், பல்கலைக் கழகப் பதிவாளர் இவர்கள் எல்லாம் இதில் பிரதிவாதிகளாக இருக்கிறார்கள். அரசே நல்ல நோக்கத்தோடு ஒரு ஆணையைப் பிறப்பிக்கிறது. அப்போது யார் வேளாண்மைத் துறை அமைச்சர் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அமைச்சர்கள் இடம் பெற்றிருக்கிற ஒரு குழுவே அரசு ஆணைக்கு மாறாகச் செயல்பட்டிருக்கிறது. அட்வகேட் ஜெனரல் அவர்களும் இதில் வாதாடப் போயிருக்கிறார். நீதிபதியே குறிப்பிட்டுள்ள வாசகங்களில் கூற வேண்டுமேயானால்

It is surprising that persons working in the Government service on the strength of owning the required extent of wet garden or dry land have come to be included under this category. This is a serious flaw. When the Government passes an order on reservations, it is the bounden duty of the Committee to have kept the Government Order in mind and followed not only the letter of the same but the spirit as well. But that has not been done at all in this case. "The resultant position will be that the entire selection will have to be set aside. But, unfortunately, the petitioner has not impleaded all the selected candidates. Besides, setting aside the entire selection will cause immense hardship to the selected candidates who are now pursuing the course. Therefore, it appears to me just and proper to provide remedy to the petitioner alone. Accordingly I hereby direct that the petitioner be admitted to B.Sc. (Agri.) Course with effect from 16th December 1985" என்று நல்ல உணர்வை மனதிலே வைத்துக்கொண்டு அவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நீதிபதி அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தமிழிலே மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்னபோதே நான் அதைப் புரிந்துகொண்டேன், ஆங்கிலத்திலேயும் சொல்ல வேண்டுமென்பதற்காகக் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். சிறு விவசாயிகள் என்று சான்றிதழ் வாங்கி விண்ணப்பம் அனுப்புகிறார்கள். அப்படி சான்றிதழுடன் வந்த விண்ணப்பத்தை அப்படியே பல்கலைக் கழகத்திலிருந்து குழுவுக்கு அனுப்புகிறார்கள். அவர்கள் பெற்றிருக்கும் மதிப்பெண்களின் அடிப்படையில்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். நான் அதுபற்றிய முழு விவரங்களையும் தர வேண்டுமென்றாலும் தரத் தயாராக இருக்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: நீதிமன்றத்திற்குச் சென்ற இந்த வழக்கினுடைய முழு விவரங்களும், அது சம்பந்தமான பட்டியலும், வழக்கினுடைய முழு விசாரணைகள் மற்றும் நீதிபதியினுடைய தீர்ப்பு பற்றிய முழு விவரங்களும் என்னிடத்தில் இருக்கின்றன.

(முற்பகல் 11-05)

தானே தங்களிடம் தருகிறேன். பார்த்துக்கொள்ளலாம். மாண்புமிகு அமைச்சரும் பார்த்துக்கொள்ளலாம் அதையெல்லாம் பார்த்துவிட்டு, அமைச்சர் தரப்பு வாதங்களையெல்லாம் கேட்டுவிட்டுத்தான், நீதிபதி அவர்கள் இந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: டாக்டர் கலைஞர் அவர்களுடைய உணர்வைப் புரிந்துகொள்கிறேன். எங்களுக்கு வந்திருக்கிற பட்டியல் பல்கலைக் கழகம் அனுப்பியிருக்கிற பட்டியல். இதிலே நிலங்கள் வைத்திருக்கக் கூடியவர்கள், சில பேர் அதிகாரிகளாக இருக்கிறார்கள். அவர்கள் வேறு விதமான சான்றுகளைத் தந்திருக்கிறார்கள் என்பதுதான் பிரச்சினை. அதிலே இருக்கிற சிக்கல் அதுதான். அதைக் களைய தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

டாக்டர் மு. கருணாநிதி: மற்றொன்று. இதுவும் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஒட்டியதுதான். சற்று தாமதமாக வழங்கப்பட்ட தீர்ப்பென்றாலும், 4—12—1985 அன்று இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிற காரணத்தால், நான் இதை இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பாக, எம்.பி.ஏ. படிப்புக்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழக்கில், தலைமை நீதிபதி திரு. எம். என். சந்தூர்க்கர் அவர்களும், நீதிபதி திரு. வெங்கடசாமி அவர்களும் அளித்த தீர்ப்பு மிகவும் முக்கியமானது.. அதற்கு முன்னாலேயே உயர்நீதி மன்றத் தீர்ப்புக்கு முன்னதாகவே, பல்கலைக் கழகத்தின் தேர்வுக் குழு கூடி, தேர்வுகள் பற்றி ஆராய்ந்து அறிக்கையைத் தாக்கல் செய்தபோதும், தேர்வில் நடைபெற்ற ஊழல்கள் குறித்து விபரமாக அந்த அறிக்கையில்



குறிப்பிட்டுள்ளது. உயர்நீதிமன்றமும் அந்தத் தேர்வுக் குழுவின் அறிக்கையை ஆராய்ந்திருக்கிறது. உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட, தேர்வுக் குழுவின் அறிக்கை இது. இதில் சொல்லப்பட்டிருக்கிறது,

The following discrepancies were observed and the committee resolved to record the following facts.

The Committee observed that the marks given by the following Committee Members were erased and changed by someone other than the respcctive Committee Members.

அதாவது குழு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தப் பெயர்களைக் கொண்டவர்களின் மார்க்குகளை ஒருவர், அதாவது அந்தக் குழுவில் இல்லாத ஒருவர் "எரேஸ்" செய்து மாற்றியிருக்கிறார் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது.

The Committee observed that the following candidates' marks were erased and changed by someone other than the respective Committee Members.

அதுவும் வேறு தொனி அல்ல.

In the light of the observations of changes in the interview marks, the Committee, after discussing with the Professor and the Head of Management Studies, decided to invite Mr. D. V. Suresh Kumar, Reader, Management Studies. Accordingly Mr. Suresh Kumar was requested to appear before the Committee and the Committee understood that Mr. D. V. Suresh Kumar had erased and changed the marks. During our discussion it was brought to the notice of the Committee that these changes were made by D. V. Suresh Kumar with the knowledge of the Head of the Department. This statement was not denied by the Head of the Department. However, Mr. Suresh Kumar had accepted the corrections and was willing to change the marks back to their original positions". The following discrepancies were observed in the case of Forward Caste candidates. The candidate with Hall Ticket No. 2262 was absent for the test.

2262 என்ற எண்ணுடைய டிக்கட்காரர் அந்த டெஸ்ட்டுக்கே வரவில்லை.

But he was called for the personal interview and group discussion.

The candidate with Hall Ticket No. 1088 has not secured enough marks in the test.

[டாக்டர் மு. கருணாநிதி] [1986 ஏப்ரல் 3

டெஸ்ட்டில் 1088 என்னுள்ள அந்த வேட்பாளர் தேவையான மார்க்கைப் பெற வில்லை என்றாலும் கூட, அதற்கான மெரிட் லிஸ்டில் அவர் பெயர் இல்லை யென்றாலும் கூட

But she was called for the interview. The candidate with Hall Ticket No. 1088 has not secured enough marks in the test to appear in the merit list ; but she was called for the interview. The Committee has observed that the following numbers have secured enough marks to appear in the merit list but were not called for the interview :

Hall Ticket No. 1183, 1261, 1392.

ஹால் டிக்கட் 1183, 1261, 1392 என்னுள்ள இவர்கள் எல்லாம் தகுதி வாய்ந்தவர்களாக இருந்தும், அவர்கள் இண்டர்வியூவிற்கு அழைக்கப்படாமல், மெரிட் இல்லாதவர்களும், யார் யார் ஆப்சென்ட் ஆனார்களோ அவர்களும் அழைக்கப் பட்டிருக்கிறார்கள்" இதுதான் அந்தக் கமிட்டியின் விசாரணை.

The Committee observed that one number (1498) in the register showing the rank order has been erased and changed.

(முற்பகல் 11-10)

அதாவது 71 மதிப்பெண் வாங்கிய 2030 என்னுள்ளவனுக்குக் கிடைத்த மதிப் பெண்களை 2025 என்ற என்னுள்ளவனுக்குக் கெட்டிக்காரத்தனமாக மாற்றி விட்டார்கள். இதையெல்லாம் அந்தக் குழு ஆராய்ந்தது.

Due to this change the Committee has taken up the task of tracing the relative number and located the following answer sheets with Hall Ticket No.

| | | | |
|---|---|---|---|
| Hall Ticket No. | 2063 | Marks | 40 |
| | 2025 | Marks | 30 |
| | 2030 | Marks | 71 |



1986 ஏப்ரல் 3] [டாக்டர் மு. கருணாநிதி]

Out of the three numbers, the candidate with the Hall Ticket No. 2025 was given the mark of the candidate with Hall Ticket No. 2030.

The Committee observed that due to this change of Test Mark from one person to another the candidate with Hall Ticket No. 2025 was called for the interview and the candidate with Hall Ticket No. 2030 was not called for the interview. The candidate with Hall Ticket No. 2025 was able to appear in the final list due to this change of marks from another candidate.

The Committee has accidentally got hold of a record containing the list of candidates, tentatively worked out for identifying the probable candidates. The Committee has notices that this exercise was done independently probably before the Committee met on 17th July 1979 for selection of candidates. Mr. D. V. Suresh Kumar has agreed that he has worked out the list (with the knowledge of the Professor). The Committee has taken the above document and resolved that this document be handed over to the Vice-Chancellor immediately.

இது துணை வேந்தரிடத்திலே உடனடியாகத் தரப்பட்டது. இவ்வளவு தவறுகளை, மோசடிகளைப் பற்றிய உண்மைகள் துணை வேந்தரிடத்திலே தரப் பட்டன. இவ்வளவு கொடுத்தும் துணை வேந்தர் இவற்றின்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. யாருக்கு இடம் தருவதற்காக இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அல்லது யார் தூண்டுதல் மீது இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன? எனக்குத் தெரியாது. ஆனால் இது சம்பந்தமாக ஆளுநரிடத்திலே கொடுத்த முறையீடு கவனிக்கப்படாத காரணத்தினால், ஒரு பத்திரிக்கைக்காரர், ஹரி என்பவர் என்று கருதுகிறேன். அவர் உயர்நீதி மன்றத்திலே ஒரு வழக்கு தொடுத்தார். அதன்மீது உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியும், மற்றொரு நீதிபதியும் தீர்ப்பளிக்கின்றபோது அது காலம் கடந்து கொடுக்கப்பட்ட வழக்கு என்று கூறி தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஆனாலும் தலைமை நீதிபதியும், மற்றொரு நீதிபதியும் அந்தத் தீர்ப்பில் சில குறிப்புகளை எழுதி அந்தத் தீர்ப்பின் நகலை ஆளுநருக்கு அனுப்பி யிருக்கிறார்கள். அதில் என்ன எழுதி அனுப்பியிருக்கிறார்கள் தெரியுமா?

[டாக்டர் மு. கருணாநிதி] [1986 ஏப்ரல் 3

Judgt. of C. J. & Venkatasamy:

In these circumstances when an allegation with regard to the tampering of marks of certain candidates has been brought to the notice of this Court, notwithstanding the fact that this has taken place in the year 1979, in the interest of purity of academic atmosphere of the University and equally in the interests of the fairness and reputation of Madras University, we think the best course for us would be to send a copy of this judgment to the Chancellor (Governor) along with a copy of the Minutes which are kept in the sealed envelope for such action as the Chancellor may deem fit to take in this case.

இவ்வாறு உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியும், மற்றொரு நீதிபதியும் தீர்ப்பளித்த தீர்ப்பின் நகலை ஆளுநருக்கு—அதாவது பல்கலைக் கழக வேந்தருக்கு—அனுப்பி நான்கு மாதங்களுக்கு மேலாகிறது. இன்னும் அதுகுறித்து எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கடைசியாக, மற்றொரு தீர்ப்பைக் குறித்துக் கூறுகிறேன். இதுபற்றி வேறொரு அவையிலே விவாதம் நடந்திருப்பதால், அதைப்பற்றி அதிகமாகக் கூறி பிரச்சினையாக்க விரும்பவில்லை. 'பிரிண்டிங் டெக்னாலஜி'யில் டிப்ளோமா படிப்பதற்கு மாணவர்கள் எப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்றால், அவர்கள் எஸ.எஸ்.எல்.சி. இல் ஆங்கிலத்தில் எடுத்த மதிப்பெண்ணையும், விஞ்ஞானத்தில் எடுத்த மதிப்பெண்ணையும் கூட்டி, அதன் பின் 'இன்டர்வியூ'விற்கு 30 மதிப்பெண்கள் என்று வைத்து, இன்டர்வியூவில் எடுக்கிற மதிப்பெண்ணையும் சேர்த்து, இறுதியிலே இவற்றில் அதிக மதிப்பெண்கள் வாங்குகிறவர்களுக்கு இடம் அளிக்கப்பட வேண்டுமென்பது நியதி. சென்ற தடவை இந்நிலையத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கடைசி மாணவர் பெற்ற மதிப்பெண் 137 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதிலே பி. சீனிவாசன் என்பவர் ஆங்கிலத்தில் 62 மதிப்பெண்களும், விஞ்ஞானத்தில் 58 மதிப்பெண்களும் ஆக மொத்தம் 120 மதிப்பெண்கள்தான் எடுத்திருக்கிறார். அவருக்கு 'இண்டர்வியூ' வில் 6 மதிப்பெண்கள் தரப்பட்டிருக்கின்றன. இவ்வாறு அவர் 126 மதிப்பெண்கள்தான் பெற்றிருக்கிறார். ஆனால் ஒருவர் இடம் கிடைக்க வேண்டுமானால், குறைந்த அளவுக்கு 137 மதிப்பெண்களாவது பெற்றிருக்க வேண்டும். ஆனால் 126 மதிப்பெண் பெற்ற சீனிவாசனுக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது.



1986 ஏப்ரல் 3] [டாக்டர் மு. கருணாநிதி]

(முற்பகல் 11-15)

அவர் மதிப்பெண் 140 வாங்கியதாகப் பதிவு செய்யப்பட்டு அவருக்கு இடம் தரப்பட்டது. ஆனால் அவர் இண்டர்வியூவில் வாங்கிய மார்க்கையும் சேர்த்து 120 பிளஸ் 6 ஆக மொத்தம் 126 தான். ஆனால் 140 மார்க் அவர் வாங்கியதாக அவருக்கு இடம் தரப்பட்டது.

அதைப்போலவே சிவகுமார் எஸ்.எஸ்.எல்.சி. யில் பெற்ற அடிப்படை மார்க் 123. நேர்முகத் தேர்வில் பெற்ற மதிப்பெண் இரண்டே இரண்டு மார்க். ஆக மொத்தம் 123 பிளஸ் 2, 125 தான். அவருக்கு 143 மார்க் என்று போட்டு இடம் தரப்பட்டிருக்கிறது. ஆறுமுகசெல்வம் என்பவர் எஸ்.எஸ்.எல்.சி.யில் பெற்ற அடிப்படை மார்க் 110. நேர்முகத் தேர்வில் பெற்ற மார்க் 8½. ஆக மொத்தம் பெற்றது 118½ மார்க் தான். ஆனால் இவருக்கு 137 மார்க், கடைசி மார்க் போட்டு இடம் கொடுக்கப்படுகிறது. நேர்முகத் தேர்விலே பதிவு செய்த மார்க்குகளின் பட்டியல் என்னிடம் இருக்கிறது. நீதிமன்றத்தில் அதைத் தங்களுடைய கையெழுத்து என்று அதற்குத் தொடர்புடைய பிரின்சிபாலே ஒத்துக்கொண்டிருக்கிறார், அதை 'ரஃப் ஷீட்' என்று எல்லாம் கூட சுப்ரீம் கோர்ட்டில் நடைபெற்ற வழக்கில் சொல்லப்பட்டது. 'ரஃப் ஷீட்' என்றால் 'அன்பாலிஷ்டு' என்று அர்த்தம். ஒரு படம் 'ரஃப்' ஆகப் போடுகிறோம். அனுமார் படம் போட ஆரம்பித்து, 'ரஃப்' ஆகப் போடுகிறோமென்று சொல்லி, பிறகு 'பைனலாக' படம் போடும் போது இராமர் படமாகப் போட முடியாது. அனுமார் படம் போடுவதற்காக 'ரஃப்' ஆகப் படம் போட்டால், அது அனுமாராகத்தான் இருக்க முடியும். அந்தத் தாளை உச்ச நீதிமன்றத்தில் காட்டும் போது, அதை 'ரஃப் ஷீட்' என்கிறார்கள். ஆனால் உச்ச நீதிமன்றம் அதை ஒத்துக் கொள்ளவில்லை. ஒத்துக்கொள்ளாத நிலையில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்ற போது, மார்க் குறைவாகப் பெற்ற மாணவன் என்று அந்தக் கல்லூரி முதல்வரால் கூறப்பட்ட வேல்முருகன் என்ற மாணவனுக்கு இடம் தரவேண்டுமென்று சமரசமாக வழக்கு முடிக்கப்பட்டுவிட்டது. ஆனால் அந்த மாணவர் 129 மார்க்தான் வாங்கியதாகச் சொல்லப்பட்டது. ஆனாலும் சுப்ரீம் கோர்ட்டில் சமரசமாக முடிக்கப்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு வேல்முருகன் தவறு செய்தவர்கள் மீது மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடருகிறார். அந்த வழக்கில் அந்தக் கல்லூரியினுடைய முதல்வரால் ஹைக்கோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் அந்த முதல்வர் குறிப்பிடுகிற வாசகம்,

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) 1985-86 ஆம் கல்வி ஆண்டில் 49 அரசு மற்றும் உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன.

(இ) மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்ட அரசு மற்றும் உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகள் :

| | |
|---|---|
| ஆண் உயர்நிலைப் பள்ளிகள் | 42 |
| பெண் உயர்நிலைப் பள்ளிகள் | 7 |

**செல்வி ஆ. லீலாவதி :** தலைவர் அவர்களே, புதிய கல்விக் கொள்கையைப் புகுத்துவதால், சில குறிப்பிட்ட பாடங்களைப் பொறுத்த வரையில், மாணவர்களின் சேர்க்கை இல்லாமல் போய்விடும் நிலை ஏற்படுகிறது என்றும் இதனால் மேல்நிலைப் பள்ளிகளில் சில வகுப்புகள் மூடப்படும் என்ற அச்சம் ஆசிரியர்கள் மத்தியில் இருப்பதை அரசு அறியுமா? அவ்வாறு வகுப்புகள் மூடப்படாமல் இருக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

(முற்பகல் 10-15)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** புதிய கல்விக் கொள்கையின் காரணமாக மூடப்படக்கூடிய ஆபத்து இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அப்படி ஏதேனும் வந்தால், ஆசிரியர்களைப் பாதுகாக்க அரசு தக்க நடவடிக்கையை எடுக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** 1985-86 ஆம் கல்வி ஆண்டில் தொடங்க அனுமதி வழங்கப்பட்ட 42 ஆண்கள் பள்ளிகள், 7 பெண்கள் பள்ளிகள் ஆகியவற்றுக்கெல்லாம் போதிய கட்டிட வசதிகள், ஆய்வுக்கூட வசதிகள் ஏற்படுத்தப்பட்ட பிறகு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதா அல்லது இனிதான் அத்தகைய வசதிகள் ஏற்படுத்தப்படவிருக்கின்றனவா என்பதையும் இவ்வாண்டு எத்தனை மேல்நிலைப் பள்ளிகள் துவங்க அனுமதி வழங்க அரசு உத்தேசித்திருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஏற்கெனவே இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகள்தான் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படுகின்றன. அப்பள்ளிகளில் இருக்கின்ற வசதிகளைத்தான் பயன்படுத்துகிறோம். புதிதாகத் துவங்கப்படும் அரசுப் பள்ளிகளுக்கு விஞ்ஞான ஆய்வுக் கூடங்களைக் கட்டித் தருகிறோம். அதற்கு மேலும் தேவையிருக்குமானால், அதற்குப் பிறகுதான்



யோசிக்க வேண்டும். எல்லாவித வசதிகளையும் செய்துவிட்டுத்தான் புதிதாக மேல்நிலைப் பள்ளிகளை ஆரம்பிக்க வேண்டும் என்ற முறை எந்தக் காலத்திலும் இல்லை. அப்படியொரு நிலை ஏற்படுவது நல்லதுதான்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** 1986-87 ஆம் கல்வியாண்டில் தேவைக்கேற்ப உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்துகின்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறதா? அப்படி அரசு முடிவு எடுக்கும்போது, 1985-86 ஆம் கல்வியாண்டில் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நவம்பர்-டிசம்பர் மாதங்களில் உயர்த்தப்பட்டதால், காலதாமதத்தின் காரணமாக பல பாதிப்புகள் ஏற்பட்டன என்பதைக் கருத்திற்கொண்டு அத்தகைய காலதாமதத்தை 1986-87 ஆம் ஆண்டில் தவிர்க்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இப்போது நாம் புதிதாகத் துவங்குகிற உத்தேசமில்லை. சட்டமன்ற உறுப்பினர்களைப் போன்ற மக்கள் பிரதிநிதிகள் தங்களுடைய பகுதிகளில் வேண்டுமென்று சொல்லுகிறபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்த்து முடிவு எடுக்க வேண்டிய ஒன்று. அரசைப் பொறுத்தவரையில், இதுவரையில், இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையில், புதிதாக மேல்நிலைப் பள்ளிகளை ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. மயில்சாமி:** புதிதாகத் துவங்கப்படுகிற மேல்நிலைப் பள்ளிகளைக் குறித்த ஆணைகள் கிட்டத்தட்ட கல்வியாண்டு முடிகிற நேரத்திலேதான் வருகின்றன. இதனால் மாணவர்கள் பல தொல்லைகளுக்குள்ளாகிறார்கள். கடந்த சில ஆண்டுகளாக அப்படித்தான் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே 1986-87 ஆம் ஆண்டில் ஜூன், ஜூலைத் திங்களில் புதிய பள்ளிகளைத் துவங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்கள் கவனத்திலே எடுத்துக்கொள்ளப்படும்.

**செல்வி ஆ. லீலாவதி:** இந்தக் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளிகளைத் திறக்கும் உத்தேசம் ஏதுமில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதற்காக தனியார் யாராவது வேண்டுகோள் விடுத்திருக்கிறார்களா? அதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

I, K. Mohan Rao, do hereby solemnly affirm and sincerely state as follows :—

I am the Principal, Institute of Printing Technology, Madras.

It is true that I expressed my regret since it was pointed out by Their Lordships of the Supreme Court that it is an irregularity and the Supreme Court was pleased to accept my apology.

சுப்ரீம் கோர்ட் என்னுடைய அப்பாலஜியை ஏற்றுக்கொண்டுவிட்டது; மன்னிப்பை ஏற்றுக்கொண்டு விட்டது என்று ஹைக்கோர்ட்டில் சொல்கிறார். அது மாத்திரமல்ல.

'I submit that since it is true that the handwriting is mine and since the Supreme Court pointed out that such procedure is irregular, I sincerely expressed regret' என்று அவர் ஒத்துக் கொண்டார். ஆகவே இது பிரின்சிபாலே உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் ஒத்துக்கொண்ட தகவல். இன்னும் சொல்லப்போனால், நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரியிருக்கிறார்; வருத்தம் தெரிவித்திருக்கிறார். ஆனால் இந்த முறைகேட்டிற்கு அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்தால், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவருக்கு ஏதோ நல்லாசிரியர் விருது தரப்பட்டதாக நான் பத்திரிக்கையில் செய்தி பார்த்தேன். அது உண்மையோ அல்லது தவறோ எனக்குத் தெரியாது.

இறுதியாக, நான் ஒன்றிரண்டை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். இந்த அரசை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். எரிச்சல் கொண்டு பேசுவது, அல்லது யாரையும் பழி வாங்குவது என்கிற முறையில் இந்த அரசு தன்னுடைய தொடர் பயணத்தை அந்த வகையில் நடத்தாமல், அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாதவரம் பால் பண்ணைத் தொழிலாளர்கள் மீது பழி வாங்குகிற போக்கு, ஒரு நீதி மன்றத்தின் தீர்ப்புக்குப் பிறகும் இன்னும் நீடிக்கிறது. அது முறையல்ல. அந்தத் தொழிலாளர்களுக்கு நல்வாழ்வு கொடுக்க வேண்டுமென்று நிதியமைச்சர் அவர்களை நான் இந்த அவையிலே கேட்டுக்கொள்கிறேன் அதேபோல் தலைமைச் செயலக ஊழியர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்கு அவர்களைத் தற்காலிகமாகத் தள்ளிவைக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை மேலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்று அச்சுறுத்தல்கள்





இவைகளிலிருந்து அவர்களை விடுவித்து, தலைமைச் செயலகம் சீராகச் செயல்படுவதற்கு வழி வகுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். 'எரிச்சல்' என்று குறிப்பிட்டேன். அதில் ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன்.

உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் எல்லாம் முடிவுற்று எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆங்காங்கே பொறுப்புகளை வகிக்க இருக்கிறார்கள். நான் அண்மையிலே அறந்தாங்கி சென்றிருந்தேன். அறந்தாங்கியில் நடைபெற்றது நாவலர் அவர்களுக்குக் கூடத் தெரியும். திரு. ஏ. பி. ஆர். ஜனார்த்தனம், எல்.இ.டி.டி.டி. என்பவர் நீண்ட காலமாக, 20 ஆண்டுக் காலமாக ஆசிரியராக இருந்தார். 7 ஆண்டுக் காலமாக துணைத் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்று பணியாற்றியிருக்கிறார். இந்தத் தேர்தலுக்காக அவர் பதவி விலகி தேர்தலில் நின்று அறந்தாங்கி நகராட்சியிலே, நகராட்சித் தலைவராக வெற்றி பெற்றிருக்கிறார்.

(முற்பகல் 11-20)

அந்த நகராட்சித் தலைவர் ஏற்கெனவே பள்ளி ஆசிரியராகவும் இருந்தார், துணைத் தலைமையாசிரியராகவும் இருந்தார் என்ற காரணத்திற்காக அறந்தாங்கி அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற இருந்த ஒரு ஐம்பெரும் விழாவிற்கு அழைக்கப்பட்டிருந்தார். ஐம்பெரும் விழா என்றால் ஏதோ அரசியல் விழாவல்ல. இலக்கிய மன்ற விழா, சிறு சேமிப்பு விழா, பள்ளி ஆண்டு விழா என்று இப்படி ஐந்து விழாக்களை ஏற்பாடு செய்து, அந்த நகராட்சித் தலைவரான திரு. ஏ. பி. ஆர். ஜனார்த்தனம் அவர்களை அழைத்திருந்தார்கள். அந்த விழா 24-3-1986 அன்று நடைபெறுவதாக இருந்தது. ஆனால் 24-3-1986 அன்று ஒரு முக்கிய அறிவிப்பு என்று கரும் பலகையில் எழுதி "பள்ளி சார்பில் இன்று நடைபெறுவதாக இருந்த ஐம்பெரும் விழா தவிர்க்க முடியாத சூழ்நிலையில் ஒத்தி வைக்கப்பட்டது" என்று அறிவிக்கப்பட்டது. இதைக் குறித்து மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் விசாரித்தால், தெரிந்துகொள்ள முடியும். அறந்தாங்கி பட்டுக்கோட்டைக்குப் பக்கத்தில்தான் இருக்கிறது. விசாரித்தால் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும். அதற்குக் காரணம் அங்கே இருக்கிற சி.ஈ.ஓ. பள்ளி அதிகாரி, ஆசிரியர்களை அச்சுறுத்தி அவரே அதற்காக உத்தரவிட்டு, "எப்படி நகராட்சித் தலைவரை வைத்து நீங்கள் விழா நடத்தலாம்"? என்று மிரட்டியிருக்கிறார். நகராட்சித் தலைவர் ஒருவர் நகராட்சியில் பள்ளி விழாவுக்குச் செல்வது என்பது அவ்வளவு பெரிய குற்றமா? அப்படியென்றால் இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நகராட்சித் தலைவர்

களை; ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை இந்த அரசு எப்படி நடத்தப் போகிறது என்பதற்கு இது ஒரு முன்னுதாரணமாக ஆகிவிடாதா என்று கூற விரும்புகிறேன். எனவே இந்த நிலைமைகளை எல்லாம் விட்டுவிட்டு அரசு செம்மையாக, சீராக ஆட்சியை நடத்த வேண்டும். அதற்காகத்தான் இத்தனை குறைபாடுகளை நான் எடுத்துக் காட்டினேனே தவிர, வேறு அல்ல என்று தெரிவித்துக் கொள்வதோடு, நேரம் அதிகமாகிவிட்டது—மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் அடிக்கடி என்னைப் பார்க்கிறார் என்பதைச் சொல்லி—இன்னும் நிறைய பேச வேண்டும் என்று நான் விரும்பினாலும், இன்னும் பல விஷயங்களைப் பற்றியும் 11 பேர்களைப் பற்றியும் . . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பேசுகிற உறுப்பினர்கள் அவைத் தலைவரைப் பார்த்துப் பேசுவதும், தலைவராக இருப்பவர் பேசுபவரைப் பார்ப்பதும் இங்கே மரபு என்பதைத் தவிர வேறு பொருள் அதற்கு இல்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: இன்னும் அதிகமாகப் பேச விரும்பினாலும், எனக்கு இருக்கிற சங்கடமெல்லாம் நான் ஏதாவது பேசப் போய், 11 பேர் பதவி விலக இருக்கிற நேரத்தில், அந்தப் பழி என்மீது வந்து சேரக்கூடாதே என்ற எண்ணத்தில் இத்தோடு நிறுத்திக் கொள்கிறேன் என்பதைத் தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. எம். பி. சுப்பிரமணியம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதி யமைச்சர் அவர்கள் பேரவையில் சமர்ப்பிப்பதற்கு முன்பும், மேதகு ஆளுநர் அவர்கள் கூட்டு அவைகளின் கூட்டத்தில் தனது உரையை நிகழ்த்தியதற்குப் பின்னாலும் தமிழ் நாட்டில் ஒரு தேர்தல் நடைபெற்றது என்பதை நாம் நன்றாக அறிவோம். அந்தத் தேர்தல் பொதுத் தேர்தலைவிட சிறப்பான ஒன்று என்றால், அது மிகையாகாது என்பதைத் குறிப்பிட விரும்புகிறேன். காரணம் பொதுத் தேர்தலில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையைவிட கூடுதலான வாக்காளர்கள் நடந்து முடிந்த தேர்தலில் கலந்துகொண்டு வாக் களித்தார்கள். அதாவது 18 வயது அடைந்தவர்கள் எல்லாம் அந்தத் தேர் தலில் கலந்துகொண்டு வாக்களித்த காரணத்தாலே, அது முக்கியமான தேர்த லாகும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் இந்தத் தேர்தலைக் குறித்து நிதிநிலை அறிக்கையில் அரசு குறிப்பிடாததற்கு என்ன காரணம் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. தேர்தல் முடிவுகள் சில கட்சிகளுக்குக் கசப்பாகவும், சில கட்சிகளுக்கு எதிர்பாராத மகிழ்ச்சியை அளிக்கத்தக்கதாகவும் இருந்ததால், நிதிநிலை அறிக்கையில் அதைப்பற்றிக்



குறிப்பிடாமல் விட்டுவிட்டார்களோ என்று நான் நினைக்கிறேன். ஆனால் என்னைப் பொறுத்தவரையில், ஜனநாயகத்தில் அது நிச்சயமாக இடம் பெற வேண்டும் என்று விரும்புகிறேன்.

நடைபெற்று முடிந்த தேர்தல் என்பது பல வகையில் மாறுபட்ட தேர்த லாகும் என்பதையும் நாம் நன்றாக உணர்வோம். 1958 ஆம் ஆண்டு பஞ்சா யத்துச் சட்டம் நிறைவேற்றப்பட்ட காலத்திலிருந்து உள்ளாட்சி அமைப்பு களுக்கான தேர்தல் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு நடத்தப்பட வேண்டும் என்ற மரபு இருந்தது. இந்த மரபு காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்தில் இருந்து வந்ததும் உண்மை. ஆனால் பல கட்சிகள் கூடிப் பேசி, நகராட்சி மன்றத் தலைவர்களுக்கும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கும் அதைப் போலவே பேரூராட்சித் தலைவர்களுக்கும் கட்சி அடிப்படையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும், ஏனையவர்களைப் பொறுத்தவரையில், தனிப்பட்ட முறையில் அவர்கள் சுயேட்சையாகப் போட்டியிட்டு தேர்தலைச் சந்திக்க வாய்ப்பு அளிக்க வேண்டும் என்றும் விரும்பியதன் காரணமாக, அவ்வாறே சட்டத் திருத்தம் செய்யப்பட்டதற்குப் பிறகு, இந்தத் தேர்தல் நடைபெற்றது என்பதைப் பார்க்கும்போது, அரசியல் கட்சிகள் அரசியல் ரீதியாக இந்தத் தேர்தலை அணுக முயற்சித்தாலும்கூட, தமிழ்நாட்டு வாக்காளப் பொதுமக்கள் இந்தத் தேர்தலை அந்த முறையில் அணுகவில்லை என்பதை இந்தத் தேர்தல் முடிவுகள் நமக்கு எடுத்துக் காட்டிக் கொண்டிருக் கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கடந்த சட்டமன்ற மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் சுயேச்சைகள், அதிகமாக வெற்றி பெற முடியாது என்ற நிலைமைக்கு மாறாக இந்தத் தேர்தலில் ஏராளமானவர்கள் நகராட்சி மன்றத் தலைவர்களாகவும் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் களாகவும் பேரூராட்சிமன்றத் தலைவர்களாகவும் தனிப்பட்டவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் ஆயிரக்கணக்கில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே மக்கள் இந்தத் தேர்தல்களை கட்சிக் கண்ணோட்டத்தோடு அணுகவில்லை என்பதோடு, தனிப்பட்ட முறையில் அவரவர்களின் யோக்கியதாம்சங்களின் அடிப்படையில் அணுகி யிருக்கிறார்கள் என்று கூற விரும்புகிறேன்.

(முற்பகல் 11-25)

ஆகவே இந்தத் தேர்தலில் வெற்றி, தோல்வி என்பது நிலையானதல்ல, அரசியல் கணிப்பு அல்ல என்பதை உணர்வேன். 1965 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் நடைபெற்ற ஊராட்சி ஒன்றியத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் பெரும்பான்மையாக அங்கம் வகித்தார்கள். 1967 ஆம் ஆண்டு

நடந்த பொதுத் தேர்தலில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஊராட்சி ஒன்றிய பெருந் தலைவர்களாகவும், உறுப்பினர்களாகவும் பெரும்பான்மையான இருந்தும்கூட, காங்கிரஸ் கட்சி தோற்றது என்றால், பொதுமக்கள் இவை களை அரசியல் ரீதியாக அணுகவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே அரசாங்கம் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்குள்ள சட்டங்களைக் குறித்து கட்சி அடிப்படையில் தொடர்ந்து நடக்க வேண்டுமா என்பதை மறு பரிசீலனை செய்வதற்குரிய அவசியம் இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த நேரத்திலே மற்றொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். அரசியல் கட்சி அடிப்படையிலே தேர்தலை அணுக வேண்டும் என்றால், அனைத்துப் பதவிகளுக்கும், அதாவது சாதாரண நகராட்சி உறுப்பினர்களிலிருந்து தலைவர் வரையில், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களிலிருந்து தலைவர்கள் வரையில் அரசியல் கட்சியின் அடிப்படையில் நடத்தப்பட வேண்டும், அல்லது அரசியல் கட்சி அடிப்படையில் இல்லாமல் நடத்தப்பட வேண்டும். இப்பொழுது உள்ளபடி தொடர்ந்தால் அதனாலே பெரும் குழப்பம் இந்தத் தேர்தலிலே நடந்திருப்பதைப்போல நடைபெறும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

1969-70-க்குப் பிறகு ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள் நடைபெறவில்லை, அதனாலே வட்டார வளர்ச்சி அதிகாரிகளிடத்திலே அதிகாரங்கள் இருப்பதை அரசாங்கம் மேற்கொள்வது அவசியம் என்ற எண்ணம் காரணமாக இருந் திருந்தால், மீண்டும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்களிடம் அந்த அதிகாரங்களைக் கொடுக்க வேண்டியது மிக அவசியம் என்று அரசுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ஏற்கெனவே உள்ள அதிகாரங்கள் போதாது என்று அந்தக் காலத்திலேயே ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும், நகராட்சி சபைத் தலைவர்களும் பல காலமாக எடுத்துக்காட்டி வந்ததற்கு நேர்மாறாக இப்போது இருக்கின்ற அதிகாரங்களையும் பிரித்திருப்பது சரியல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே அதை அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும்.

ஒரு மாதத்திற்கு முன்பு மதுரை மாவட்டத்திலே இருக்கின்ற ஒரு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குச் சென்றேன். அங்கேயுள்ள வட்டார வளர்ச்சி அதிகாரியை சந்தித்தேன். "நீங்கள் என்ன பணி செய்கிறீர்கள்?' என்று கேட்ட போது மாதம் ஒன்றுக்கு ஒரு இலட்சத்து 26 ரூபாய் சம்பளமாகக் கொடுக்கப் படுகிறது என்றும், வேலை செய்வதற்கென்று அரசாங்கம் 25 ஆயிரம் ரூபாயைத்





தான் ஒதுக்கியிருக்கிறது என்றும் சொன்னார். அந்த அதிகாரிகள் செய்கின்ற வேலை என்னவென்று கேட்டபோது, மத்திய அரசாங்கம் ஐ. ஆர். டி. பி. என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி. போன்ற திட்டங்களுக்காக கொடுக்கப்படும் பணத்தைச் செலவு செய்கிறோம் என்றும், வேறுவிதமான நிதி ஒதுக்கீடு எதுவும் தமிழக அரசாங்க நிதியிலிருந்து வழங்கப்படவில்லை என்றும் சொன்னார்கள். அப்படியென்றால் மத்திய அரசாங்கத்தினுடைய இந்த மூன்று திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மட்டும் அந்த வட்டார வளர்ச்சி அலுவலரும் அவரின் கீழேயுள்ள அதிகாரிகளும் இருக்கும் இத்தகைய நிலை மாற வேண்டுமானால், அவர்களுக்குக் கூடுதலான அதிகாரங்களைக் கொடுப்பது மிகவும் அவசியம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். காந்திஜியிலிருந்து, ஜெயப்பிரகாஷ் காலத்திலேயிருந்து, அசோக் மேத்தா கமிட்டியிலிருந்து எல்லோரும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும், நகர சபை களுக்கும் கூடுதலான அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும் என்பதற்கான நியாயமான காரணங்களை பெருமளவிற்குக் கூறியிருக்கிறார்கள். அன்மை யிலேகூட பல பேரறிஞர்கள் கூறியிருப்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அரசியல் சாசனத்தின்படி 3-டியர் நிர்வாகம் இருக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கம், இரண்டு மாநில அரசாங்கம், அதற்கடுத்து மக்களோடு தொடர்பு கொண்டு, மக்கள் தேவைகளைக் கவனித்து பணியாற்ற லோக்கல் போர்ட்ஸ் என்பது. ஆகவே அரசியல் சாஸனத்தின்படி யூனியன் லிஸ்ட், ஸ்டேட் லிஸ்ட், லோக்கல் போர்ட் லிஸ்ட், கன்கரண்ட் லிஸ்ட் என்று வைத்தால் உண்மையாகவே ஜனநாயகம் நல்ல முறையிலே நடைபெற வழிவகையாக அமையும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஊராட்சி மன்றங்களுக்கான காலத்தை மூன்றாண்டுக் காலம் என்று குறைத் திருப்பதை மாற்றி ஐந்தாண்டுக்காலம் என்று மீண்டும் கொண்டுவர வேண்டும். ஏனென்றால் பல்வேறு காரணங்களுக்காகத்தான் சட்டமன்றமும், பாராளு மன்றமும் ஐந்தாண்டுக் காலத்திற்கு என்று வைத்திருக்கிறார்கள். ஐந்தாண்டு காலம் வைக்க வேண்டும் என்று முன்பு ஒரு வாதத்தின்போது நான் குறிப் பிட்டதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் இதை மறுபரி சீலனை செய்வதற்குரிய அவசியம் இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் தாம்தப் பட்ட மக்களுக்கும், தாழ்த் [illegible] கும் உள்ளாட்சி மன்றங்களில் பிரதிநிதித் துவம் கொடுக்க வேண்டும் என்று கூறினார், இல்லையென்றால் நகர சபைத்

தலைவர்களாகவும் ஊராட்சி மன்றத் தலைவர்களாகவும் தாழ்த்தப்பட்ட மக்களும், பெண்களும் வர முடியாது என்பதற்காகத்தான் இட ஒதுக்கீடு செய்தார்கள். அந்தச் சட்டம் நீதிமன்றத்திலே தடை செய்யப்பட்ட காரணத்தாலேயும், தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்பதாலேயும், அந்தச் சட்டத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, புதியதாக ஒரு சட்டத்தை நிறைவேற்றி அதன் அடிப்படையில் தேர்தலை நடத்தினார்கள். ஆனால் இப்போது உச்ச நீதிமன்றம் பெண்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிப்பதிலே தடையேதுமில்லை என்று அறிவித்துவிட்டதால், அரசாங்கத்தின் எண்ணம் நிறைவேறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே மீண்டும் பழைய சட்டத்தை இங்கே கொண்டுவர வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

பெண்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் தேர்தலில் இட ஒதுக்கீடு செய்து சட்டம் கொண்டுவந்துவிட்டு, நிறைவேற்றிவிட்டபின் அதை அமல்படுத்தலாம். அமலாகும் தேதியை பின்னாலே தள்ளி வைக்கலாம். அவசியம் இதைக் கொண்டுவர வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தேர்தல் குறித்து நேற்றையதினம் தொலைக்காட்சியில் 3 பேர்கள் பேசியதை நான் கேட்டேன். தமிழக அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள், ஜனதா கட்சியைச் சேர்ந்த திரு. சோ அவர்கள் எல்லாம் "நியூஸ் லைன்ஸ்" என்ற நிகழ்ச்சியிலே பஞ்சாயத்துத் தேர்தலைக் குறித்து அவர்களுடைய கருத்துக்களை அவர்களுடைய அரசியல் கட்சி பின்னணியாக வைத்துப் பேசினார்கள். இதிலே நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், ஏதோ தொலைக்காட்சி செய்தியில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்று இருப்பது போல டெல்லி தொலைக்காட்சி மீதும், மத்திய அரசாங்கத்தின் மீதும் குறை சொல்லி போராட்டம் நடத்தியிருக்கின்றார்கள். தடை செய்ததாகச் சொல்லி, தமிழ் நாட்டிலே உள்ளவர்கள் சிலர் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களையும், அவர்களுடைய அரசாங்கத்தையும் தாக்கிப் பேசி ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றார்கள் என்பதனை இந்த அவையிலே குறிப்பிட விரும்புகிறேன். இந்த நேரத்திலே நான் விளக்க விரும்புவது என்னவென்று சொன்னால், . . .





திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தூர்தர்சன் என்று சொன்னார்கள். எனக்கு அது என்ன என்று புரியவில்லை. தமிழிலே சொன்னால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். பி. சுப்பிரமணியம்: தொலைக் காட்சி, தூர்தர்சன் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். அதுவும் பழக்கத்திலே இருக்கின்ற ஒரு சொல் என்ற அளவில்தான் நான் அந்த வார்த்தையைச் சொன்னேன். உறுப்பினர் அவர்கள் விரும்பினால், தொலைக் காட்சி என்றே சொல்கிறேன். தூர்தர்சன் என்பது ஒன்றும் புதியதல்ல. தூர இருக்கின்ற பொருள் தரிசனம் என்பதுதான். அதுவும் பழைய காலத்திலேயிருந்து இருக்கின்ற ஒரு வார்த்தைதான் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இன்றைய தினம் 'நியூஸ் லைன்ஸ்' என்பதானது, அங்கேயுள்ள தொலைக்காட்சியினுடைய நிறுவனத்திற்கும் அந்த 'நியூஸ் லைன்' நிகழ்ச்சிக்கும் எந்தவிதமான நேரடி சம்பந்தம் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள வேண்டும். அது விளம்பரதாரர்களுக்கு உள்ள ஒரு 'ஸ்பான்சார்ட் புரோகிராம்' என்ற அளவிலே வருகின்ற ஒன்றாகும்.

ஆனந்த பஜார் பத்திரிகா நிறுவனம் பல பத்திரிகைகள் நடத்திக் கொண்டிருக்கின்றது. அந்த ஸ்தாபனம் நியூஸ் லைன் நிகழ்ச்சிகளை நடத்திக் கொள்ள பொறுப்பை ஏற்றிருக்கின்றார்கள். அதிலே எம்.ஜே. அக்பர் என்று ஒருவர், 'சண்டே' என்ற ஒரு பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்த ஒருவர் இந்த நிகழ்ச்சியை 15 நாட்களுக்கு ஒரு முறை ஏற்பாடு செய்து வருகிறார். இந்த நிகழ்ச்சியை நடத்திக்கொடுப்பதற்கு அவர் தொலைக்காட்சியிலே ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றனர். அந்த வகையிலே அவரும் அந்த 'சண்டே' பத்திரிகைக்கு இங்கே நிருபராக இருக்கின்ற ஒருவரும் தயாரித்த நிகழ்ச்சி காட்டப்படவில்லை என்பதற்கு எந்த விதத்திலும் தொலைக்காட்சி நிறுவனமும் அரசாங்கமும் பொறுப்பேற்க முடியாது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களது கருத்துக்களைக் கூறுவதற்குத் தடையேதும் இருக்குமானால், அவமானப் படுத்தப்படுவார்களானால், அதை நானும் உறுதியாக எதிர்க்கத் தயாராக இருக்கிறேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் தெரியாமல் புரியாமல் தவறாக அரசாங்கத்தின் மீதும், பாரதப் பிரதமர் அவர்கள் மீதும், ஒரு தாழ்ப்புணர்ச்சி கொள்வதற்கு என்று மத்திய அரசாங்கத்தைக் குறை சொல்வதற்கு வாய்ப்பு கிடைக்காதா என்று ஏங்கிக் கொண்டிருந்தவர்கள் இதைப் பயன்படுத்திக்கொள்வது சரியல்ல என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிரச்சினை முதலில் இல்லை. ஆனால் பிறகு தெலுங்கு தேசக் கட்சி ஆளுங் கட்சியாக வந்த பிறகு, அதன் முதல்வர் கிருஷ்ணாவிலிருந்து தண்ணீரை சென்னைக்குக் கொண்டுவரும்போது, வறட்சியால் பாதிக்கப்படும் பகுதிகளுக்கும் நீர்ப்பாசனத்திற்குத் தண்ணீர் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, திட்டத்தை விரிவாக்கியதால், அதிகப்படியான தண்ணீரை எடுத்துக் கொள்கிறார்கள் என்று சொல்லி மகாராஷ்டிரமும், கர்நாடகமும் ஆட்சேபிக்கின்றன. காரணம் டச்சாவாட் டிரிபியூனல் அவார்ட் அடிப்படையில் கி.பி. 2000 ஆண்டுகளுக்குப் பின்னாலே மறுபரிசீலனை செய்யும்போது, ஏற்கெனவே நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டு வருவதைக் காட்டி ஆந்திரம் உரிமை கொண்டாடுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாக, இந்தத் திட்டத்தை நிறைவேற்றக்கூடாது என்று ஆட்சேபித்து வருகிறார்கள். இதில் மத்திய அரசின் குறுக்கீடோ, அல்லது மத்திய அரசின் நல்லெண்ணமோ எங்கே எழுகிறது என்று கேட்க விரும்புகிறேன். மூன்று அரசாங்கங்களும் சேர்ந்து ஒத்துக்கொண்டாலொழிய, சென்னை நகருக்குத் தண்ணீர் கிடைக்க எளிதில் வாய்ப்பு இல்லை.

1924 ஆம் ஆண்டு, அப்போது இருந்த மைசூர் மாநிலத்திற்கும், அப்போதிருந்த சென்னை ராஜதானிக்கும் ஏற்பட்ட காவிரி நதி நீர்ப் பங்கீடு ஒப்பந்தமானது 1974 ஆம் ஆண்டு மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும் அல்லது பரிசீலனை செய்யப்பட வேண்டும். ஆனால் அப்போது என்ன காரணத்தாலோ தவற விட்டுவிட்டோம். இப்போது கர்நாடகம் நம்முடைய வாதத்தை ஏற்றுக்கொள்ளாமல், புதிதாகப் பரிசீலனை செய்யப்பட வேண்டுமென்று சொல்லுகிறது. இந்த விஷயத்திலே மத்திய அரசு தன்னுடைய தாப்பை வலியுறுத்த அரசியல் சட்டம் இடம் கொடுக்கவில்லை.

(முற்பகல் 11-40)

இதிலே சம்பந்தப்பட்ட மாநிலங்கள் ஆந்திராவாக இருந்தாலும் சரி, வேறு எந்த மாநிலங்களாக இருந்தாலும், ஒன்றைச் சொல்வேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் பார்க்கும்போது, மத்திய அரசு பொறுப்பைத் தட்டிக் கழிப்பதுபோல் இருக்கிறது. அவர்கள் இதிலே தலையிட்டு, உரிய நடவடிக்கை எடுத்து, சிக்கல்களைத் தீர்க்க வேண்டும் என்பதுதான் இந்த அரசின் கோரிக்கை. மத்திய அரசு அதைச் செய்யும் அளவுக்கு வாய்ப்பினையும் பெற்றிருக்கிறது. ஆனால் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவது அதற்குத் தடையாக இருக்கக்கூடாது.



**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** தடையாக இருப்பதற்காக அல்ல, உதவி செய்வதற்காகத்தான் நான் இந்த வாதத்தை இங்கே எழுப்பினேன். நதிகளை எல்லாம் தேசியமயமாக்கக் கூடிய அதிகாரம் மத்திய அரசுக்கு அளிக்கப்பட்டால், உறுதியாக, நிச்சயமாக யாருக்கு நீர் தேவை என்பதை அறிந்து, உணர்ந்து மத்திய அரசு செயல்பட வாய்ப்பாக இருக்கும். அதற்கு மத்திய அரசு வலியுடையதாக இருக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** நோயை விட வைத்தியம் பயங்கரமானது. அதற்கான அதிகாரம் இருக்க வேண்டும். மத்திய அரசு வலிவுடையதாக இருக்க வேண்டும் என்றெல்லாம் இங்கே சொன்னார்கள். இரு நாடுகளுக்கிடையே இருக்கின்ற நதி நீர் பிரச்சினைகள் கூட ஒப்பந்தங்களின் மூலம் சுமுகமாகத் தீர்க்கப்படுகின்றன. உதாரணத்திற்கு பாகிஸ்தானுடனும், பங்களா தேசுடனுமான நதி நீர்ப் பிரச்சினைகள் கூட ஒப்பந்தங்கள் மூலம் சுமுகமாகத் தீர்க்கப்படுகின்றன. ஆகவே இதற்காக வேண்டி மத்திய அரசுக்கு மேலும் வலிவு தேவை என்று சொல்வது சரியான வாதமல்ல.

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** வைத்தியம் ஆபத்தாக இருக்கிறது என்று சொல்வது ஒருவேளை அமைச்சரின் உள்ளத்தில் அப்படி இருக்கலாம். ஆனால் உண்மையிலே நிலைமை அப்படி இல்லை. 192-லிருந்தே கேரளாவில் மேற்கு நோக்கி ஓடி வீணாகக் கடலில் விழுகின்ற ஆற்று நீரை எல்லாம் தமிழகத்திற்குத் திருப்பினால், தமிழகம் குறிப்பாக தென் மாவட்டங்கள் வளமுடையனவாகத் திகழும் என்று சொல்லி வருகிறோம். இதிலுள்ள நல்லெண்ணங்கள், கோரிக்கைகள், நியாயங்கள், வாதங்கள் எல்லாவற்றையும் கேரளாவில் உள்ளவர்கள் உணர்ந்தும், நம்முடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவேதான் நான் கூறுகிறேன், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வர வேண்டுமென்று கோரும்போது, எந்த அளவுக்கு வர வேண்டுமென்று பார்த்து, பாகுபடுத்தி, அறிந்து, உணர்ந்து பேச வேண்டும். பொதுவாக இந்தப் பிரச்சினையிலே மொட்டையாக நிறைய அதிகாரங்கள் மாநிலங்களுக்கு வேண்டுமென்று சொன்னால், அதனால் நிறைய பிரச்சினைகள் வருகின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், தமிழகத்தை எடுத்துக் கொண்டால், இராமநாதபுரம் வறட்சியான மாவட்டம், கோவை மாவட்டமோ வளமான மாவட்டம். நாம் அதிகமாகச் செலவிடுவது யாருக்கு என்று பார்க்கும்போது, அவசியம் பின்தங்கியவர்களுக்குத் தான் செலவிட வேண்டும். வளமில்லாமல் பல்லாண்டு காலமாகப் பின்தங்கியிருப்பவர்களுக்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும் உதவி செய்வது தான் நியாயம்; அதுபோல் மத்திய அரசும்

[திரு. எம். பி. சுப்பிரமணியம்] [1986 ஏப்ரல் 3

பொறுப்பிலே இருந்து மிகவும் தேவையானவர்களுக்கு உதவி செய்வது தான் நியாயமாகும். அந்தக் கோணத்திலேயிருந்து மத்திய அரசை அணுகினால், குறுகிய அரசியல் பிரச்சினைக்கோ, காழ்ப்புணர்ச்சிக்கோ, குறுகிய நோக்கத்திற்கோ சற்றும் இடமே இல்லை.

இங்கே இருந்துகொண்டு மத்திய அரசிலிருந்து நிறைய அதிகாரம் வேண்டும், நிறைய அதிகாரம் வேண்டும் என்று கோருவதிலே உள்ள நியாயத்தை நான் உணர்கிறேன். ஆனால் அதே நேரத்தில், அதிகாரத்தை ஓரே இடத்தில் குவித்து வைக்கக் கூடாது என்று சொல்கிறவர்கள் தங்களிடம் இருக்கும் அதிகாரத்தை எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டினால், அது விவாதத்திற்கு வலுவூட்டுவதாக அமையும் என்று கருதுகிறேன். இன்றைக்கு தமிழகத்தை எடுத்துக்கொண்டால், எந்த ஒரு சிறிய நடவடிக்கைக்குக்கூட முதலமைச்சரைப் பார்த்தால்தான் காரியம் நடக்கும் என்கிற நிலைமை சரியானதா? அதிகாரம் என்பது தனது சகாக்களுடன் பெற்று பரஸ்பரம் பகிர்ந்துகொள்கிற நிலைமையில் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான், ஒரு அரசின் நிர்வாகமும் நல்லமுறையில் நடைபெறும். இல்லையென்றால், நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறாது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கலைஞர் அவர்கள் பல காரியங்களைச் சுட்டிக்காட்டினார்கள். அதற்கு என்ன காரணம்? யார் பொறுப்பு? யார் அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார்கள்? மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறார்களா? அல்லது அதிகாரிகள் பொறுப்பேற்றுக் கொள்கிறார்களா? அல்லது அமைச்சர்கள் பொறுப்பேற்றுக்கொள்கிறார்களா என்று புரிந்துகொள்ள முடியாத, உணர்ந்து செயல்பட முடியாத நிலைமை இருக்கிறது. அதிகாரங்கள் யாரிடம் இருக்க வேண்டுமென்று உணர்ந்து, அவர்களிடம் அதனை சுமத்தினால்தான் காரியங்கள் சரிவர நடைபெறும். இந்த அரசின் முதலமைச்சர் அவர்களிடத்திலுள்ள விரோத மனப்பான்மையால் நான் இதைச் சொல்லவில்லை, தமிழக மக்களின் ஒட்டுமொத்த நலனைக் கருதித்தான் நான் இதைக் குறிப்பிடுகிறேன். எப்போது வேண்டுமானாலும் எந்த ஒரு பிரச்சினையைப் பற்றியும் முதலமைச்சர் அவர்களை பொது மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் பார்த்துச் சொல்லுகின்ற நிலை இருக்க வேண்டும். இப்போது அப்படிப்பட்ட ஒரு நிலை இல்லாததால், அரசு செயலற்றுப் போகிற ஒரு நிலை இருக்கிறது. மக்களுடைய உணர்வுகளை உள்ளபடியே உடனுக்குடன் அரசால் உணர்ந்து கொள்கிற ஒரு நிலை இப்போது இல்லை. மக்களுக்கும் அரசுக்கும் இடையே நேரடியாக இருக்க வேண்டிய ஒரு தொடர்பு வாய்க்கால் இப்போது அடைபட்டுப் போயிருக்கிறது. அதைப்



1986 ஏப்ரல் 3] [திரு. எம். பி. சுப்பிரமணியம்]

(முற்பகல் 11-45)

போலவே, மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற விவாதத்திற்கு வலிவூட்டுகிற வகையில் எனது வாதத்தை வைப்பதற்கு முன்பு, கோட்டையில் உள்ள அதிகாரங்களை உள்ளாட்சி மன்றங்களுக்கும், நகராட்சிகளுக்கும் பிரித்துக்கொடுத்து முன்மாதிரியாக நடந்துகொண்டால், இந்தக் கோரிக்கைக்கு நியாயமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்வதோடு, அந்தக் கொள்கைக்கு எதிரானவர்களும் அதை உணர்வார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

* **மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றங்கள் ஒருசில சட்ட விதிகளுக்குட்பட்டு செயல்படுகின்றன. ஒரு சட்டம் உருவாக்கப்படுகிற நேரத்தில், அந்தச் சட்டம் உருவாக்கப்படக்கூடிய அவசியத்தைப்பற்றி, அதன் நோக்கம் என்ற தலைப்பில் அதற்காக அரசாங்கம் சில விதிகளைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. அந்த நோக்கம் ஈடேறாத வகையில் புதிய விதிமுறைகள் உருவாக்கப்பட்டு, அந்தச் சட்டங்களின் வாயிலாக மாநில அரசு உள்ளாட்சித் துறையை தனது கையில் வைத்திருக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது இல்லாத வகையில் உள்ளாட்சித் துறைக்குத் தேவையான அதிகாரங்களைத் தர அரசு மறுக்கவில்லை என்பதையும் ஏற்க வேண்டும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** ஏற்கெனவே சட்டம் நிறைவேற்றப்பட்டது என்பது ஒன்று. மீண்டும் அதிகாரத்தை விரிவுபடுத்தலாம் என்பதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பது மற்றொன்று. இந்த மன்றத்தில் உள்ளவர்களுக்கும், அரசாங்கத்திற்கும் தமிழ் மக்களின் மீது எவ்வளவு அக்கறை இருக்கிறதோ அந்த அளவுக்கு உள்ளாட்சி மன்றங்களின் பொறுப்புக்களுக்கு வந்தவர்களுக்கும் இருக்கிறது என்பதை நாம் உணர்ந்தால், அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுப்பதில் எந்தவித மாற்று உணர்வுகளும் இருக்காது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்ததாக, ஸ்ரீலங்கா குடிமக்களாக இருக்கக்கூடிய தமிழர்களின் நிலைமை. அவர்களுடைய நிலைமைபற்றி இரண்டு விதமான கருத்தே யாருக்கும் இல்லை. சுயமரியாதையோடு தங்களுடைய எல்லா உரிமைகளையும் பெற்று அவர்கள் ஸ்ரீலங்காவிற்கும் செல்ல வேண்டும். அதற்கான எல்லா நடவடிக்கைகளையும், முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசும், மாநில அரசும் செயல்பட்டு வருவதை யாரும் மறுக்க

முடியாது. யுத்தம் என்பதைத் தவிர, மற்ற எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மத்திய அரசும் மாநில அரசும் எடுத்து வருகிறார்கள் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. ஆனால் அதில் உணர்ச்சி வசப்படுவதிலோ, ஆத்திரப்படுவதற்கோ இடம் கொடுப்பதில்தான் பிரச்சினை மீண்டும் சிக்கலாகும் என்பதை அனுபவ ரீதியாக நாம் உணர்ந்து வருகிறோம்.

இப்போது பார்த்தால், உலகத்தில் உள்ள பல்வேறு நாடுகள் நம்முடைய நியாயத்தை உணர்ந்துகொண்டு அதற்கேற்றவாறு நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை அறியலாம். சில காலத்திற்கு முன்பு சீன நாடு ஸ்ரீலங்காவுக்கு நட்பு நாடாக இருந்தபோதிலும், ஸ்ரீலங்காவுக்கு பல உதவிகள் செய்து வந்தபோதிலும், இந்தப் பிரச்சினையால் அந்த நாட்டுக்குத் தொடர்ந்து உதவி செய்வதை மறுத்துவிட்டது என்பதைக் கூற விரும்புகிறேன். சீனா எப்போதுமே நமக்கு நட்பு நாடாக இருந்தது இல்லை. இனப் பிரச்சினையில் சுமுகமான தீர்வு ஏற்பட வேண்டுமென்று இந்தியா விரும்புகிறது. ஆகவே "இப்போது ஸ்ரீலங்காவுக்கு உதவி செய்தால், அது அந்த உணர்வுகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தி விடும்" என்று சீனா கருதுகிறது. ஆகவே எந்தவிதமான உதவியும் அந்த நாட்டுக்குச் செய்ய முடியாது என்று சீனா மறுத்து வருகிறது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். பிரச்சினையை முழுமையாக அணுகி அதற்குத் தீர்வு சொன்னால், நன்றாக இருக்கும். இந்தப் பிரச்சினையில் உணர்ச்சி வசப்படக் கூடாது என்கிறார்கள். இதற்கு உணர்ச்சி வசப்படாமல் வேறு எதற்கு உணர்ச்சி வசப்படுவது என்பதற்கு அண்ணன் எம்.பி.எஸ். அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** உணர்ச்சி வசப்படுவதால் உள்ளத்திற்கு அது ஆறுதலாக இருக்கும். அரசியல் செல்வாக்கு பெருகுவதற்கு இருக்கலாம். உள்ளத்திற்கு வேண்டுமானால் சமாதானமாகும். ஆனால் அரசியல் ரீதியான ஒரு நிரந்தரத் தீர்வுதான் பலனளிக்கும் பரிகாரமாகும். அதை விட்டு சிறுபிள்ளைகளைப்போல் உணர்ச்சி வசப்படுவதோ ஆவேசப்படுவதோ கலைக்கு உதவாது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** அப்படியானால் பெரியவர்கள் உணர்ச்சி வசப்படவே மாட்டார்கள் என்பதுதான் பொருளா? உணர்ச்சி வசப்படவே கூடாது என்பது மனித மரபுக்கே சரியானதாக இருக்காது.



**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** மனித மரபு என்று சொல்ல முடியாது. அறிவு முதிர்ச்சியைக் காட்டாது. நிச்சயமாக அரசியல் தீர்வு காண்பதுதான் நலமாக இருக்குமே தவிர, வேறு வழி வகை கிடையாது. இதைத் தவிர வேறு என்ன வழிவகை இருக்கிறது? மாநில அரசும் மத்திய அரசும், அங்குள்ள பிரதமர் அவர்களும், இங்குள்ள முதல்வர் அவர்களும் எடுத்து வருகிற நடவடிக்கைகளுக்கு குந்தகமாகிவிடும் என்பதை நான் கூற விரும்புகிறேன். ஆகவே உணர்ச்சி வசப்படாமல் எல்லாவிதமான நடவடிக்கைகளையும் முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு தமிழ் இனத்தையே பூண்டோடு அழிக்கிற செயல் என்பதை மத்திய அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. மேலும் விரைவில் நாமெல்லாம் விரும்புகிற வகையில் இந்தப் பிரச்சினைக்கு உறுதியான தீர்வு ஏற்படும் என்றும் நான் நம்புகிறேன்.

அடுத்தபடியாக, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்த நிதிநிலை அறிக்கையைப் படிக்கிற போது, வருவாய் எவ்வளவு, செலவு எவ்வளவு என்பதை இந்தப் புத்தகத்தில் கண்டுபிடிக்க முடியவில்லை.

(முற்பகல் 11-50)

எனக்குத் தெரிந்த அனுபவத்தில், இந்தப் புத்தகத்தில் ஒவ்வொரு ஆண்டும் இதற்குப் பின்னாலே 1984-85 ஆம் ஆண்டிற்குரிய கணக்கு, 1985-86 ஆம் ஆண்டிற்குரிய திருத்திய மதிப்பீடு, 1986-87 ஆம் ஆண்டிற்குரிய செலவு செய்கின்ற இனங்கள் என்று போட்டிருப்பார்கள். எங்களைப் போன்ற சாதாரண உறுப்பினர்கள் அவற்றைச் சுலபமாக படித்துப் புரிந்து கொள்வதற்கு வசதியாக இருக்கும். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையை, நான் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். என்ன வருவாய் என்று என்னால் உடனடியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. இவ்வாறு செய்ய வேண்டிய அவசியம் என்ன? இது பட்ஜெட் பிரபரேஷனில் ஒரு முன்னேற்றமா? என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. தயவுசெய்து பழைய முறையையே பின்பற்றி நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்தால், எங்களைப் போன்ற சாதாரண உறுப்பினர்கள் புரிந்துகொள்வதற்குத் துணையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையிலும் மாநில அரசிற்குத் தேவையான அளவிற்கு வருவாய் இருப்பதில்லை என்பதைப்போல குறைபாடு சொல்லப்பட்டு வருகிறது. அதைப்போல இந்த நிதிநிலை

அறிக்கையிலும் காட்டப்பட்டிருக்கிறது. இந்த அவையிலே முன்பே குறிப்பிட்டதைப்போல, அரசாங்கத்தின் வருவாய் பல மடங்கு பெருகியிருக்கிறது. ஆனால் அதற்கு ஏற்றாற்போல், பலன்கள் கிடைக்கவில்லை.

வருவாய் அதிகம் கிடைக்கிறது என்ற காரணத்தினாலேயே, அந்நாட்டு மக்களுக்கு அதிக நன்மைகள் கிடைத்துவிடும் என்று சொல்ல முடியாது. இதற்கு எடுத்துக்காட்டாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். செல்வம் கொழிக்கும் அமெரிக்கா என்று நாமெல்லாம் சொல்கிறோமே, அதன் உண்மையான பொருளாதார நிலை உலகத்திலே பதினோராவது இடத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டது. அதாவது பெர் கேபிடா இன்கம் உலகத்தின் பதினோராவது இடத்திற்குச் சென்றுவிட்டது. அதைப்போல படிப்பறிவு பெற்றவர்கள் சதவிதக் கணக்கைப் பார்க்கும்போது, அமெரிக்கா உலகத்தின் 46 ஆவது இடத்திற்குப் பின்னாலே தள்ளப்பட்டுவிட்டது என்பதைக் காண்கிறோம். உலகத்தில் படிக்காத மக்கள் அதிகமாக இருக்கிற நாடுகளில் அமெரிக்காவும் ஒன்று. உலகத்திலே பின்தங்கிய நாடுகளுக்கு ஏராளமான உதவிகளைச் செய்து வருவதைப்போல பெருமையடித்துக்கொள்கிற அமெரிக்க நாட்டின் தனிநபர் சராசரி வருமானம் 11-வது இடத்திற்குச் சென்றுவிட்டது; படிப்பின்மையில் 46 ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டது. இன்றையதினம் அந்த நாடும் ஒரு கடன்கார நாடாக ஆகியிருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் கோடி டாலர் அரசாங்கம் கடன்பட்டிருக்கிறது. ஜப்பான் ஒன்றுதான் பொருளாதார நிலைமையில் இன்றைக்கு முன்னணியில் இருப்பதாக நான் ஒரு குறிப்பைப் பார்த்தேன். எதற்காக நான் இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், வருவாய் இருந்துவிட்ட காரணத்தினாலேயே செவ்வையாகக் காரியங்கள் நடைபெற்றுவிடும் என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை என்பதைத்தான் குறிப்பிடுகிறேன். எனவே வருவாய் போதவில்லை என்பதையே எப்போதும் காரணம் காட்டுவது பலன் அளிக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளது:

"Central assistance for the Plan also has gone up from ... crores to 1,438 crores. The percentage increase in both the categories, as compared to the Sixth Plan, is 82.54 per cent as far as the Plan is concerned and 11.28 per cent as far as the Central ... is concerned.".





என்று தமிழக அரசினுடைய கோரிக்கைகளை, உள்ள நிலைமைகளை உணர்ந்துகொண்டு மத்திய அரசு அதற்கேற்றாற்போல உதவிகளை, பங்கீடுகளை, ஆண்டுதோறும் பெருக்கிக்கொண்டே வந்திருக்கிறது என்று நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கும்போது, மத்திய அரசு நியாயமான வகையில் தரவேண்டியவைகளை உறுதியாகத் தந்து கொண்டிருக்கின்றது என்பது நன்கு தெரிகிறது என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன்.

1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது, Grants-in-aid from Central Government என்பது ரூ. 262.72 கோடியாக இருந்தது. 1985-86 திருத்திய மதிப்பீட்டில ரூ. 321.60 கோடியாக உயர்ந்திருக்கிறது. அதைப்போலவே Excise duty யிலே தமிழகத்திலே எதிர்பார்த்த வருமானம் என்பது ரூ. 328.73 கோடியாக இருந்தது, 375.47 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. வருமான வரியைப் பொறுத்தவரை, வருமான வரியில் நமக்குக் கிடைக்கவேண்டிய பங்கு ரூ. 98.74 கோடியாக இருந்தது, 139.68 கோடியாக உயர்ந்திருக்கிறது. இவ்வாறு முறையே 58 சதவீதம், 46 சதவீதம், 40 சதவீதம் என்கிற அளவுக்கு உயர்ந்து 146.56 கோடி ரூபாயாக தமிழக அரசு எதிர்பார்த்ததைவிட கூடுதலாக உயர்ந்திருக்கிறதென்று சொன்னால், தமிழக அரசுக்குத் தேவையான உதவிகளை மத்திய அரசு எப்போதும் செய்து வருகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-55.)

தமிழக அரசு பள்ளி மாணவர்களுக்கு முதலமைச்சர் மதிய சத்துணவுத் திட்டம் என்ற பெயராலே ஏறக்குறைய ஒரு கோடி மாணவர்களுக்குப் பகல் உணவு வழங்கப்பட்டு வருவதை நாம் அறிவோம். அதில் தமிழக அரசின் நோக்கம், முதலமைச்சர் அவர்களின் நோக்கம் வரவேற்கத்தக்கது, பாராட்டத் தக்கது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் எந்த நல்ல திட்டமும் அதை நிறைவேற்றுவதற்குரிய ஒரு சரியான நிர்வாக இயந்திரம் இல்லையென்று சொன்னால், பலன் தருவதைவிட கெடுதல்தான் தரும் என்பதற்கு இந்த முதலமைச்சருடைய சத்துணவுத் திட்டம் ஒரு உதாரணமாகும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், சத்துணவு மையத்திலே வேலை செய்கின்ற நபர்களுக்குக் கொடுக்கக்கூடிய ஊதியத்தைப் பார்த்தால், அந்த ஊதியத்தை அவர்கள் பெற்று நியாயமாக, நேர்மையாக அவர்கள் நடப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஒரு குழந்தை நல அமைப்பாளருக்கு மாதச் சம்பளம்

வாய்ப்பில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எல்லா ஊரும் எல்லோருக்கும் சொந்தம், எல்லா இடமும் எல்லோருக்கும் சொந்தம். தேர்தலுக்குத் தேர்தல் வேண்டுமென்றால் இடங்கள் மாறுமே தவிர, எல்லாத் தொகுதிகளும் எல்லோருக்கும் சொந்தம் என்ற எண்ணத்தில்தான் நாம் பாடுபடவேண்டியவர்களாக இருக்கிறோம். கிட்டத்தட்ட ரூ. 262 கோடி ரூபாய் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து, 378 ஊராட்சி ஒன்றியங்கள் இருந்த காலத்தில் தன்னிறைவுத் திட்டத்தை நாம் கொண்டுவந்தபோது, மேற்படி 378 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சமமான அளவில்தான் நிதி ஒதுக்கீடு செய்தோம். எந்தவித வேறுபாடும் கருதாமல், எந்தக் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.-க்கள், எம்.பி.-க்கள் இருக்கிறார்கள் என்று பார்க்காமல், ஒன்றியத்தின் தகுதி, வாய்ப்பு, வசதி, தேவை ஆகியவற்றின் அடிப்படையில் கிட்டத்தட்ட 40 இலட்சம் ரூபாயிலிருந்து, 70, 75 இலட்சம் ரூபாய் வரையில் ஒன்றியத்தின் தன்மையைக் கருதி தன்னிறைவுத் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்திருக்கிறோம். எல்லோரும் சமமாக வளர வேண்டுமென்கிற நோக்கத்தில்தான் அவ்வாறு செய்திருக்கிறோம். அந்த அடிப்படையில்தான் அரசினுடைய முழு ஆதரவும், முழுத் தன்மையும் அமையும் என்பதை இந்த வாய்ப்பிலே சொல்லிக்கொண்டு, எனவே எல்லோரும் ஒத்துழைப்பும் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கலைஞர் பேசுகிறபோது ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள். அறந்தாங்கியில் என்று கருதுகிறேன். அங்கே அரசியல் மாச்சரியங்கள் ஏற்பட்டதென்று கூறினார்கள். இப்படிப்பட்ட மாச்சரியங்கள் ஏற்படவேண்டிய அவசியமில்லை. பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்களுக்கு, அந்த ஊரின் நிலைமைகளுக்கேற்ப, எங்கே யாரிருந்தாலும், அவர்களுக்கு உரிய மரியாதையும், மதிப்பும் கொடுப்பதிலே எந்தத் தவறும் கிடையாது. அரசினுடைய சார்பில் இன்னாரைத்தான் வரவேற்க வேண்டுமென்றோ அல்லது இன்னாரை வரவேற்கக்கூடாது என்றோ எதுவும் சொல்லப்படவில்லை. இதற்கென்று சில சட்ட திட்டங்கள், சில வரைமுறைகள் இருக்கின்றன. அதற்கு உட்பட்டு எவ்வளவு வேண்டுமானாலும் செய்யலாம். சாதாரணமாக உள்ளாட்சி அமைப்புகள் சென்ற காலங்களில் எதிர்க் கட்சியில் இருப்பவர்களுக்கு வரவேற்பு கொடுத்திருக்கின்றன. காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது, நாங்கள் எல்லாம் எதிர்க் கட்சி வரிசையில் இருந்தபோது கூட, நாங்கள் பல இடங்களுக்குச் சென்றிருக்கிறோம் ; வரவேற்பு பெற்றிருக்கிறோம். ஆக பொது வாழ்க்கையில்



(பிற்பகல் 12-35)

இருப்பவர்கள், ஈடுபட்டவர்கள் யாராயினும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயினும் அந்தந்த ஊர்களில் அவர்களை வரவேற்று மகிழ்விப்பது என்ற பண்பை நாம் தொடர்ந்து கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறோம். அதிலே மாச்சரியங்கள் காட்ட வேண்டிய அவசியம் இல்லை என்பதுதான் அரசினுடைய கருத்து. இன்னும் ஒருபடி நான் மேலே செல்ல விரும்புகிறேன். அங்கே அரசியல் கட்சிகளுக்கு இடமே இல்லை. ஸ்டேட் கவர்ன்மென்ட், சென்ட்ரல் கவர்ன்மென்ட் என்று வரும்போதுதான் மாநில அரசு என்று வருகிறது ; மத்திய அரசு என்று வருகிறது. அரசுக்கென்று சிலபல கொள்கைகளின் அடிப்படையில், கோட்பாடுகளின் அடிப்படையில் திட்டங்களை வகுப்பதும், சட்டங்களைச் செய்வதும், அவைகளை நடைமுறைப்படுத்துவதும், ஆணைகளையும், அதிகாரங்களையும் விடுவிப்பதும் மத்திய, மாநில அரசுகளுக்கு இருக்கிறது. அந்த வகையில் கொள்கைகளின் அடிப்படையில் ஏற்படுகின்ற வாதங்களால் ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்று இருப்பதும், அவைகள் இந்த வாதங்களைச் சூடுபடுத்தி, மென்மைப்படுத்தி, செம்மைப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, சீர்படுத்தி சட்டங்களை நிறைவேற்றுவதற்கான அளவுக்கு வகைப்படுத்திச் சொல்வதற்கும், வழிபடுத்திச் சொல்வதற்கும், மேலவைத் தலைவர், பேரவைத் தலைவர் என்றெல்லாம் அமைந்திருப்பதையும் நாம் பார்க்கிறோம். இயற்றப்படுகிற எந்தச் சட்டங்களானாலும் கொள்கைகள் இருக்கும் . . . .

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, நகராட்சித் தலைவர்கள், ஒன்றியத் தலைவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் மாச்சரியங்கள் காட்டக்கூடாது என்று மாண்புமிகு நாவலர் அவர்கள் குறிப்பிட்டதை நானும் வரவேற்கிறேன். நான் சொன்னதை அவர்கள் ஏற்றுக்கொண்டு, இப்படிப்பட்ட மாச்சரியங்கள் காட்டப்பட்டதற்காக வருத்தம் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். ஆனால் மாண்புமிகு நாவலர் அவர்கள் கருத்துக்கு மாறாக அல்லது இந்த அரசுக்கு வேறு கருத்து இருக்குமேயானால், அந்தக் கருத்துக்கு மாறாக, ஒரு 'சி.இ.ஓ.' மூலம் அந்த உத்தரவு அந்தப் பள்ளிக் கூடத்திற்குப் போடப்பட்டு அதன் காரணமாக நகராட்சித் தலைவர் விழா நிறுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் வர்களே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் எடுத்துச் சொல்லியபடி, இந்தக் கருத்துக்கும், இந்தக் கொள்கைக்கும் மாறுபாடாக அப்படி ஒரு சர்குலர், அறிக்கை விடப்பட்டு இருக்குமேயானால், அதற்கு கல்வித் துறை

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, 2 கோடி புத்தகங்கள் அச்சடிக்க அச்சு இயந்திரங்கள் மற்றவைகளுக்கு ரூ. 9 கோடி அளவுக்கு முதலீடு வேண்டும். 3 கோடி புத்தகங்கள் அச்சடிக்க ரூ. 11 கோடி அளவுக்கு முதலீடு செய்ய வேண்டும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதற்குள் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். பணத்தைப் பொறுத்த மட்டில், தமிழ் நாடு பாட நூல் நிறுவனம் தங்களுக்கு வருகின்ற லாபப் பணத்திலே முதலீடு செய்வது என்ற அடிப்படையிலேதான் அணுகுகிறோம். தேவையானால் அரசிடமிருந்து கடன் வாங்கிக்கொள்ள வேண்டும்.

## உதகமண்டலம் அரசு பல்தொழில் நுட்பப் பயிலகம்.

*136 வினா—திரு. அ. மயில்சாமி (டாக்டர் இரா. சனார்த்தனம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உதகமண்டலத்தில் உள்ள அரசு பல்தொழில் நுட்பப் பயிலகத்தை, பொறியியல் கல்லூரியாக உயர்த்தும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (இ) இல்லை.

திரு. அ. மயில்சாமி: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி எதுவும் புதியதாக அரசுத் தரப்பில் ஆரம்பிக்க கருதியிருக்கின்றதா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அரசின் சார்பில் பொறியியல் கல்லூரி திறக்கின்ற எண்ணம் அரசுக்கு இப்போது இல்லை.

## Acupuncture Treatment.

*137 Q.—Selvi A. LEELAVATHI : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether it has been proved that treatment through acupuncture reduces paid of the patients ; and

(b) if so, the action taken by the Government to introduce acupuncture treatment in Government Hospitals ?



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) அக்குபஞ்சர் முறைப்படி பலபேர் குணமடைந்ததாகவும், அதேபோல் பலர் குணம் காணவில்லை என்றும் கூறப்படுகிறது.

(இ) அரசு மருத்துவமனைகளில் இச்சிகிச்சை முறையை ஆரம்பிக்க நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

செல்வி ஆ. லீலாவதி: தலைவர் அவர்களே, அக்குபஞ்சர், என்பது சீன முறையிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றது என்று அறிகிறேன். இதனால் பல பலன்கள் கிடைத்திருக்கின்றன என்றும் நான் அறிகிறேன். முக்கியமாக மூட்டு வலிகள் இந்த முறையினால் நல்ல முறையிலே குணம் ஆகின்றன என்றும் அறிகிறேன். அதனை நமது அரசு மருத்துவ மனைகளிலும் தொடங்கி அதை நல்ல முறையிலே நடத்த அரசு முன்வருமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இந்த அக்குபஞ்சரைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மாதிரி, இதுவரை சீனமருத்துவ முறையை மருத்துவப் பாடத் திட்டத்தில் டைரக்டர் ஆஃப் மெடிகல் எஜுகேஷன், யூனிவர்சிடி ஆஃப் மெட்ராஸ் ஆகியோர் இந்திய மருத்துவ முறையாகக் கருதிப் புகுத்தவில்லை. இந்த முறையைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக நாம் சென்னையிலேயிருந்து இரண்டு மருத்துவர்களை அனுப்பியிருக்கிறோம். அவர்கள் பயிற்சி பெற்று வந்திருக்கின்றார்கள். இனிமேல் அவர்களிடம் கலந்து பேசி, நம்முடைய சென்னைப் பல்கலைக்கழகத்திலே இந்த சிலபசைப் புகுத்தலாமா என்பதைப் பிறகு பரிசீலிக்கலாம்.

(முற்பகல் 10.25)

செல்வி ஆ. லீலாவதி: தலைவரவர்களே, நம் நாட்டிலே இருந்து பல டாக்டர்கள் இந்த முறையை சீனாவில் பயிலச் சென்றிருக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த மருத்துவ முறை மூலம் எந்தெந்த நோய்கள் குணமடைகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, அக்குபஞ்சரைப் பொறுத்தவரையில், இதிலே பல்வேறு வகையான முறைகள் இருக்கின்றன.

manual free-based technique, rectified placing the needles and connecting it to electrical low-wattage stimulator, acu-pressure என்றெல்லாம் இருக்கின்றன. முக்கியமாக 'பெயின் கில்லர்'—உடலிலே

மூலமாக தக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை நான் கூறிக்கொள்கிறேன். நாடாளுமன்றத்திலே, சட்டமன்றத்திலே கொள்கை அடிப்படையிலே கல்வி என்றால் அதைப்பற்றித்தான் பேச வேண்டும். கட்சிக்குக் கட்சி கொள்கைகள் உண்டு. மாநிலத்துக்கு மாநிலம் உரிமைகள் வேண்டுமா வேண்டாமா என்பதிலும் கட்சிக்குக் கட்சி கொள்கையுண்டு, தேசியமயமாக்கப்பட வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றியும் கட்சிக்குக் கட்சி கொள்கை உண்டு. ஆகவே அவைகள்பற்றி வாதிட வேண்டிய அவசியமும், நிறைவேற்ற வேண்டிய அவசியமும் ஏற்படுகிறது. ஆனால் ஊராட்சி மன்றங்கள், நகராட்சிகளிலே கவுன்சிலர்கள் மற்றும் சேர்மன் என்றும், மெம்பர் மற்றும் பிரசிடென்ட் என்றும்தான் இருக்கிறதே தவிர, நகராட்சிச் சட்டத்திலோ, ஊராட்சிச் சட்டத்திலோ ரூலிங் பார்ட்டி, ஆப்போசிஷன் பார்ட்டி என்று சட்டத்திட்டத்திலே இடமே வகுக்கப்படவில்லை. ஆனால் அங்கே போனவர்கள் வேண்டுமானால், அங்கே உள்ள பெஞ்சுகளை அப்படி, இப்படி இழுத்துக்கொண்டு உட்காரலாமே தவிர, அங்கேயிருக்கிற நிலைமை என்னவென்றால் தலைவர் என்று ஒருவர் உண்டு. அவர்தான் தலைமை தாங்குவார். எல்லா உறுப்பினர்களும் எப்படி வேண்டுமானாலும், உட்காரலாம்; வட்ட வடிவிலும் உட்காரலாம், கலந்தும் உட்காரலாம், சேர்ந்தும் உட்காரலாம்; எப்படி வேண்டுமானாலும் உட்காரலாம். அங்கே வருகிற பிரச்சினை எல்லாம் அரசியல் கட்சி ரீதியிலே வருவதில்லை. மக்களுக்கு நன்மை செய்கின்ற வகையிலேதான், சாலைகள் போடுவது, ஒளி விளக்குகள் போடுவது, சுகாதார வசதிகள் செய்து தருவது, சாலைகள் போடுவது, குடிநீர் தருவது, அவைகளை அரசுக்குத் தீர்மான வடிவிலே நிறைவேற்றித் தருவது என்பது போன்றவைகள் இருக்கும். ஆகவேதான் இதில் மாச்சரியங்கள் காட்ட வேண்டிய அவசியமில்லை என்பதையும் அரசின் சார்பாக திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன். இந்த நல்லெண்ணம் பரவுமேயானால், தமிழகத்தின் பல்வேறு நகரங்கள் நன்றாக இருக்கும். ஊராட்சி மன்றங்கள், உள்ளாட்சி மன்றங்கள் சார்பாக பிரதிநிதிகள் வராததன் காரணமாக அவர்களுடைய நகரங்கள் கவனிக்கப்படவில்லை; சரியாகக் கவனிக்கப்படாமல் குறைபாடுகள் ஏற்பட்டுவிட்டன என்பதையெல்லாம் நாம் அனைவரும் ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டும். ஏனென்றால் இந்தப் பிரதிநிதிகளுக்கு இருக்கிற அக்கறை அங்கு வந்து உட்காருகிற அதிகாரிகளுக்கு இருக்குமென்பதற்கில்லை. அவர்கள் அங்கு இரண்டு மாதமோ, மூன்று மாதமோ, இரண்டு வருடங்களோ, மூன்று வருடங்களோ இருப்பதால், அவர்களுக்கு அக்கறை இருக்க நியாயமில்லை. அவர்கள் அவர்களுடைய கடமைகளைச் செய்வார்கள். ஆங்காங்கு மக்களுடைய உணர்வுகளை



அறிந்து அவர்களுக்குத் தேவையானதைச் செய்யும் வகையில் நிலைமைகள் ஏற்பட்டிருக்கவில்லை. அந்த நிலைமை இப்போது ஏற்பட்டதன் காரணமாக நல்ல சூழ்நிலை விளையும் என்ற நம்பிக்கையுண்டு.

சத்துணவுத் திட்டத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்னார்கள். சத்துணவுத் திட்டத்திற்காக அரசு அதிகம் செலவழிக்கிறது. இந்த ஆண்டு 169 கோடி ரூபாய் சத்துணவுத் திட்டத்திற்காக 2 வயதிலிருந்து 14 வயது வரையுள்ள சிறுவர் சிறுமிகளுக்கு சத்துணவு வழங்குவதற்காக அரசு செலவழிக்கிறது. இந்த நோக்கத்தின் அடிப்படையே நம்முடைய நாட்டில் இளம் சிறார்கள் ஊட்டச் சத்தைப் பெற வேண்டுமென்பதற்காக அந்த ஊட்டச் சத்தைத் தரக்கூடிய அளவுக்கு அந்த உணவு வகைகள் எல்லாம் அமைய வேண்டுமென்று திட்டம் போட்டு, ஒவ்வொரு கிழமையும் என்னென்ன உணவு வழங்க வேண்டுமென்று பட்டியல் எல்லாம் போட்டு அரசு தந்திருக்கிறது. அதற்குப் பணமும் அரசு ஒதுக்கித் தருகிறது. அந்த வகையிலே சிலபல திருத்தங்கள் செய்ய வேண்டுமானாலும்கூட, நாளடைவில் நாம் செய்ய வேண்டியிருக்கிறது என்றாலும்கூட, இப்போது இந்த 169 கோடி ரூபாய் என் கையைவிட்டுப் போகிறது என்பது

(பிற்பகல் 12-40)

உண்மைதான். இந்தத் திட்டத்தில் ஆங்காங்கு பரவலாகப் போகிறபோது குறைபாடுகள் இருக்கின்றன என்று உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அத்தகைய குறைபாடுகளைப்பற்றி தணிக்கை அறிக்கையில் வந்ததையும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இது எல்லோரும் அறிந்த ஒன்றாக இருக்கிறது. ஆனால் இத்தகைய குறைபாடுகளைக் களைய எல்லோரும் சேர்ந்து முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்தக் குறைபாடுகள் எந்தக் காரணத்தாலே உண்டாகின்றன என்பதைக் கண்டறிந்து அவற்றை நீக்குவதற்கான வழிமுறைகளைக் காண வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். 63,000 சமையற் கூடங்களில் தினந்தோறும் சமையல் செய்கிற கட்டாய நிலை இருக்கிறது. அதுவும் 365 நாட்களுக்கும் மாணவர்கள் வர வேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால், அவ்வளவு நாட்களுக்கும் கணக்கிட்டு ஒட்டுமொத்தமாக அரிசி, பருப்பு, எண்ணெய் ஆகியவை ஒதுக்கப்படுவதால், மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்போல், ஒரு குறிப்பிட்ட கணக்கைக் காட்டிவிட்டு, அதனால் ஏமாற்றுகிறார்கள். எனவே இதையெல்லாம் தடுத்து நிறுத்த வேண்டுமென்றால், பொதுமக்களின் ஒத்துழைப்பும் உதவும் இதற்குத் தேவைப்படுகிறது. ஆங்காங்கே போகிறது என்பது உண்மை. தவறான கணக்குக்

கொடுக்கப்படுகிறது என்பதும் உண்மை. இதைத் தடுக்க முதலில் நாம் கண்காணிப்பை ஏற்படுத்த வேண்டும். இப்போது ஊராட்சி மன்றங்களிலும் ஒன்றியங்களிலும் மக்களுடைய பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருப்பதால், இந்தப் பணியைக் கண்காணிக்கிற பொறுப்பில் அவர்களையும் ஈடுபடுத்த வேண்டும். அப்படிச் செய்தால், நல்ல பலன் கிடைக்கும். அதே சமயத்தில் இந்தக் கண்காணிப்பிற்கு ஆசிரியர்களும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அந்தப் பணியை ஏற்று நடத்த வேண்டுமென்று சொல்லவில்லை. அந்தப் பணியைக் கண்காணிக்கிற வேலையை மேற்கொள்ள வேண்டும். அந்தந்தப் பகுதிகளில் இந்தத் திட்டம் செயல்படுவதைக் கண்காணிக்கிற அளவுக்கு மனிதாபிமான உணர்வோடு, கருணை உள்ளத்தோடு ஆசிரியர்கள் இந்தக் கண்காணிப்புப் பணியை ஏற்றுக்கொள்கிற சூழ்நிலை இருக்குமானால், மிகவும் நல்லதாக இருக்கும். அட்டென்டென்சில் 38 என்றும் சத்துணவு வாங்குவதற்கு வரும் மாணவர்கள் 98 என்றும் எழுதாமல் கண்காணிக்கிற அளவுக்கு மட்டுமாவது தங்களின் ஒத்துழைப்பை நல்க வேண்டும். இத்தகைய கூட்டுறவு முயற்சி மூலம்தான் இந்தத் திட்டத்தைச் சரியாக நிறைவேற்ற முடியும். ஆசிரியர்களை அந்தத் திட்டத்தில் ஈடுபடுத்தக் கூடாது, அவர்களுக்கு அந்தப் பணி வேண்டாம் என்றுதான் தற்போதைய முறையையே நாம் ஏற்படுத்தினோம். ஆனால் இன்றைய சூழ்நிலையில் அவர்களும் ஒரு கண்காணிக்கிற பொறுப்பை மட்டும் ஏற்றுக் கொண்டால், ஒரு நாளில் 5, 10 நிமிடங்கள் கண்காணித்தால் கூட போதும். திருடுகிறவர்கள், தவறு செய்கிறவர்கள் பயப்படுவார்கள். அவர்களுக்கு பிறகு இடம் இருக்காது. அவர்களோடு உள்ளாட்சி மன்ற அமைப்புகளுக்கு வந்திருக்கும் மக்கள் பிரதிநிதிகள் சேர்ந்தால், இன்னும் நன்றாகச் செயல்படுத்த முடியும். இப்போது எல்லா ஊர்களிலும் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். 1,60,000 பேர்களுக்கு மேல் ஊராட்சிகள் வார்டு உறுப்பினர்களாக வந்திருக்கிறார்கள். 12,610 ஊராட்சிகளில் அவர்கள் இடம்பெற்றிருக்கிறார்கள். அவர்கள் இருக்கிற இடங்களிலெல்லாம் இந்தத் திட்டம் செயல்படத்தான் செய்யும். எனவே அவர்களையும் சேர்த்து ஒரு பொறுப்பை அவர்களிடம் ஒப்படைப்பதன் மூலம் இந்தத் திட்டச் செயல்பாட்டை சிறப்பாகக் கண்காணிக்கிற நிலைமையை உண்டாக்க முடியுமா என்று யோசிக்கலாம். எந்தெந்த வகைகளில் குறைகள் உருவாகின்றன, எந்தெந்த வகைகளில் தவறுகள் நடக்கின்றன என்று இங்கே பலரும் சுட்டிக் காட்டியதை நாம் போக்க வேண்டுமானால், இந்த முயற்சியை நாம் மேற்கொண்டாகத்தான் வேண்டும். அந்த வகையில் இதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு ஏற்று செயல்படும் என்று இந்த வாய்ப்பில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.





அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கே மதுவிலக்கைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். மதுவிலக்குக் கொள்கையைப்பற்றி ஆளுநர் உரை விவாதத்திற்கு சட்டமன்றப் பேரவையில் பதிலளிக்கும்போது, 1987 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் சாராயக் கடைகளும் கள்ளுக் கடைகளும் தமிழகத்தில் அறவே நீக்கப்படும் என்ற கருத்தைச் சொன்னேன். அதிலே இந்த அரசு உறுதியாக இருக்கிறது. அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் இப்போது சொல்கிறேன். அதிலே ஒன்றும் ஐயப்பாட்டிற்கே இடமில்லை. மீண்டும் தெளிவுபடுத்துகிறேன், 1987 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் தேதி முதல் மதுவிலக்குக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படும், அதுவும் கட்டாயமாக அமுல்படுத்தப்படும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதற்கான முயற்சியில்தான் இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது. நிதிநிலை அறிக்கையில் நான் அதைச் சுட்டிக்காட்டியிருப்பதற்குக் காரணம் அடுத்த ஆண்டு மத்திய அரசை வற்புறுத்திக் கேட்க வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும்கூட, அதிலே ஏற்படுகிற இழப்பு எவ்வளவு என்பதைச் சுட்டிக் காட்டி, அவர்கள் அதற்காக முழுமையாக உதவி அளித்தாலும் அல்லது பாதி மட்டும் தருகிற சூழ்நிலை வந்தாலும், அவர்களிடம் வாதிடப் பயன்படும் என்கிற வகையில்தான் இழப்புக் கணக்கைக் கொடுத்திருக்கிறேனே தவிர வேறல்ல. இழப்பைப் பற்றிச் சொல்லுகிற மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1985—86 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் 230 கோடி 80 லட்சம் என்று இருப்பதாகவும் நிதிநிலை அறிக்கையில் ரூ. 60 கோடி உள்ளடக்கிய கணக்கு போடப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்தார்கள். சாதாரணமாகப் பார்க்கிறபோது, ஆண்டுக்காண்டு ஆயத் தீர்வையைப் பொறுத்த வரையில், 15 சதவீதம் கூடுதலாக வரும் என்ற கணக்கின் அடிப்படையில்தான் நாம் போடுகிறோம். அந்த வகையில் அடுத்த ஆண்டுக்கு மதுவிலக்கு அமுல் செய்யாமல் இருப்போமானால், ரூ. 260 கோடி அளவுக்கு வருவாய் வரும். அதாவது 15 சதவீதம் உயர்த்தி எதிர்பார்க்கிறோம்.

(பிற்பகல் 12-45)

1985-86-ல் ரூபாய் 230 கோடிதான். 15 சதவீதம் தூக்கி கணக்குப் போட்டால் 260 கோடி ரூபாய் வரும். ஆகவே 3 மாதங்களுக்கு 60 கோடி ரூபாய் இழப்பு வரும். மீதி 200 கோடி ரூபாய் அடுத்த ஆண்டு இழப்பா வரும் என்ற கணக்கைச் சொன்னேன்.

**டாக்டர் மு. கருணாநிதி:** நிதி அமைச்சர் அவர்கள் சொன்ன கணக்கு, நிதிநிலை அறிக்கையிலே உள்ள கணக்கு. பட்ஜெட் மெமோரண்டம் என்ற பெரிய புத்தகத்தில் உள்ள கணக்கில் ரூபாய் 30 கோடி இழப்பு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தக் கணக்கை நான் கேட்டேன். நிதிநிலை அறிக்கையிலே 60 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதே ஆயத் தீர்வையைப்பற்றிக் குறிப்பிடும்போது நிதிநிலை அறிக்கைக் குறிப்பு என்ற புத்தகத்திலே ரூபாய் 30 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த வேறுபாடு ஏன் என்று நான் கேட்டேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அது என்னவென்று நான் மறுபடியும் விசாரித்துச் சொல்கிறேன். ரூபாய் 230 கோடி திருத்த மதிப்பீட்டில் வந்திருக்கிறது. 15 சதவிகிதம் கூடுதலாகக் கணக்குப் போட்டால், 260 கோடி ரூபாய் என்று வரும். ஆகவே 60 கோடி ரூபாய் குறையும் என்று கணக்குப் பார்த்துச் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களும், திரு. எம்.பி.எஸ். அவர்களும் வரவு-செலவு மொத்தச் செலவு, மொத்த வரவு, உபரியா, பற்றாக்குறையா, என்று நிதிநிலை அறிக்கையிலே எடுத்துச் சொல்வது வழக்கம், ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையிலே அப்படிச் சொல்லாமல் விடுபட்டிருக்கிறதே என்று குறிப்பிட்டார்கள். அது சேர்த்திருக்க வேண்டியதுதான். அது விடுபட்ட ஒன்றுதான். உள்ளபடியே சேர்த்திருக்க வேண்டும் என்பது அதற்குப் பிறகுதான் எனக்கேபட்டது. சேர்க்காமல் விட்டுவிட்டார்கள். இந்தக் கணக்கு வேறு புத்தகத்திலே இருக்கிறது என்றாலும்கூட, உறுப்பினர்கள் மிக எளிதாக, தெளிவாகப் புரிந்துகொள்ள நிதிநிலை அறிக்கையிலேயே எப்போதும் கொடுப்பது வழக்கம்தான். மற்ற புத்தகத்திலே அந்தக் கணக்குகள் இருக்கின்றன என்றாலும், ஒரு சில பேர் அந்தக் கட்டையே பிரிப்பார்களா என்றால், பிரிக்கமாட்டார்கள், வைத்த...இல் அப்படியே இருக்கும். அப்படிப்பட்டவர்களுக்குப் புரியும் நிலைமை இருக்காது. அடுத்த ஆண்டிலிருந்து அதைச் சேர்த்துக்கொள்வது நல்லதுதான். எல்லா விளக்கங்களும் வர வேண்டும் என்று நாங்கள் கருதினாலும், அதைப் படிக்க நேரம் அதிகம் ஆகிறது என்பதால், முழுவதையும் படிக்க வேண்டுமென்றால் ஒரு மணி நேரம் அல்லது ஒன்றரை மணி நேரம் ஆகிறது என்பதால், உறுப்பினர்களுக்குத் தெரிய வேண்டிய கருத்துக்களையும், புதிதாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் அறிக்கையிலே சேர்த்துவிட்டு, மற்ற வேளாண்மைத் துறை, கல்வித் துறை, கால்நடைத் துறை, சுகாதாரத் துறை பற்றிய கருத்துக்களை விளக்கமாக பின்சேர்க்கையிலே சேர்த்துவிட்டால்



விளக்கமாக இருக்கும் என்பது என்னுடைய எண்ணம். ஆகவே அடுத்த ஆண்டும் இன்னும் விளக்கமாகத் தரப்பட்டால், மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் புரியும் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆர்.எல்.ஈ.ஜி.பி., என்.ஆர்.ஈ.பி., ஐ.ஆர்.டி.பி. பற்றி .

**டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பட்ஜெட் மெமொரண்டம் என்ற புத்தகத்திலே ஆங்கிலத்திலே ஒரு மாதிரியாகவும், தமிழிலே ஒரு மாதிரியாகவும் இருக்கிறது. ஆகவே இந்த வேறுபாட்டை நீக்கி தமிழ் புத்தகத்தை எல்லோருக்கும் தந்தால் நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஒன்றைச் சுட்டிக்காட்டினார்கள். ஆங்கிலத்திலே உள்ள குறிப்பில் சரியாக இருக்கிறது என்றும், தமிழ் மொழி பெயர்ப்பில் குழப்பம் ஏற்படும் அளவிற்கு தவறு இருக்கிறது என்றும் சொன்னார்கள். இது திருத்தப்பட வேண்டிய ஒன்றுதான். அப்படிப்பட்ட மொழிபெயர்ப்பில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். இந்த நிதிநிலை அறிக்கையை ஒன்றரை மாதங்களாக எல்லாவற்றையும் சேர்த்துத் தயாரிக்கும்போது சிலபல தவறுகள் ஏற்பட்டுவிடுகின்றன. பட்ஜெட் மெமோரண்டம் மிகவும் முக்கியமானது. ஆகவே இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படாமல் இனிமேல் பார்த்துக்கொள்வார்கள். இப்படிச் சுட்டிக்காட்டியது எதிர்காலத்திலே எச்சரிக்கையாக இருக்க பயன்படும் என்று கருதுகிறேன். ஆங்கிலத்திலே சரியாக வந்திருந்து தமிழில் சரியாக வரவில்லையென்றால், மொழி பெயர்ப்பில் ஏற்பட்ட குறைபாடு.

ஆர்.எல்.ஈ.ஜி.பி., என்.ஆர்.ஈ.பி., ஐ.ஆர்.டி.பி., ஆகியவைகளைப்பற்றி டாக்டர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லி மதிப்பீட்டில் ஒரு தொகையும் திருத்த மதிப்பீட்டில் குறைக்கப்படுகிற அளவிற்கு ஒரு தொகையும் இருக்கிறது என்றும், மேலும் 1986-87 ஆம் ஆண்டு மதிப்பீட்டில் குறைவாக ஒதுக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதையும் சுட்டிக்காட்டினார்கள். இந்த இனங்களைப்பற்றி நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆர்.எல்.ஈ.ஜி.பி.-க்கு முழுக்க முழுக்க நூற்றுக்கு நூறு மத்திய அரசின் உதவி நமக்குக் கிடைக்கிறது. மத்திய அரசின் உதவி எவ்வளவு கிடைக்கும் என்று எதிர்பார்த்து, நம்முடைய பட்ஜெட்டில் முன்கூட்டியே போட்டுவிடுகிறோம். அதற்குப் பிறகு மத்திய அரசு எவ்வளவு தருகிறதோ அதை திருத்திய மதிப்பீட்டில் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 ஏப்ரல் 3

வளர்ச்சிக்காக அளித்த கடன் மொத்தமாக 18,500 கோடி ரூபாய். அதில் தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக மட்டும், 1,868 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறது. இது கிட்டத்தட்ட 10 சதவீதம் ஆகிறது. முதல் இடத்தை மகாராஷ்டிராவும், இரண்டாவது இடத்தை குஜராத்தும், மூன்றாவது இடத்தை தமிழ் நாடும் பெற்றிருக்கின்றன. ஐ.டி.பி.ஐ. பாங்க் மூலமாக உதவி பெறுவதைப் பார்த்தால், முதலிடத்தை மகாராஷ்டிரமும், இரண்டாவது இடத்தை தமிழ் நாடும் பெறுகின்றன. (டிஐஐசி) தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம் பெற்ற உதவி என்று பார்த்தால், தமிழ் நாடு நான்காவது இடத்தில் இருக்கிறது. ஐ.சி.ஐ.சி.ஐ. (இந்திய தொழில் முதலீட்டுக் கழகத்தைப்) பொறுத்தவரையில், தமிழ் நாடு மூன்றாவது இடத்தைப் பெற்று விளங்குகிறது. (ஐ.எப்.சி.ஐ.) இந்திய தொழில் நிதிக் கழகத்தைப் பார்த்தால், மகாராஷ்டிரம் முதலிலும், தமிழ் நாடு இரண்டாவதாகவும் இருக்கின்றன. (சிப்காட்) மாநில தொழில் வளர்ச்சிக் கழகம் பெற்ற உதவிகளைப் பொறுத்தவரையில், தமிழ் நாடு இரண்டாம் இடத்தில் நிற்கிறது. எல்.ஐ.சி. மூலமாகப் பெற்ற உதவியைப் பொறுத்தவரையில், தமிழ் நாடு நான்காவது இடத்தைப் பெற்றிருக்கிறது. இப்படி இந்தியா முழுவதும் பார்த்தால், மொத்தத்தில் தமிழ் நாட்டுக்கு எட்டு சதவீதம் உதவி கிடைத்திருக்கிறது. யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா உதவியில் தமிழகம் ஐந்தாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. ஜெனரல் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் உதவியைப் பொறுத்தவரை, தமிழகம் ஐந்தாவது இடத்தில் இருக்கிறது. இப்படி ஐந்து இடத்திற்குமேல் போகாமல் காப்பாற்றி வருகிறோம். 'லெட்டர் ஆப் இன்டன்ட்', லைசன்ஸ் பெறுவதைப் பொறுத்துவரையில், 3-4-ல் இருக்கிறோம். ஆக தென்னக மாநிலங்களில் முதல் இடத்திலேயே தொடர்ந்து இருந்துவருகிறோம்.

புதிய தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், பல்வேறு தன்மைகளைப் பெற்றிருக்கிறோம். தென்னிந்தியாவைப் பொறுத்தவரையில், இன்ஜினியரிங் பொருட்கள் ஏற்றுமதியில் முதலிடத்தில் இருக்கிறோம் என்ற குறிப்பும் இங்கே தரப்பட்டிருக்கிறது. இடர்ப்பாடுற்ற, இயங்க இயலாமல் இருக்கிற தொழிற் சாலைகள் என்று பார்த்தால், தமிழ் நாட்டில் சில தொழிற்சாலைகள்

(பிற்பகல் 1-10)

இருக்கின்றன. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை, பெரும் தொழில்கள் 1984-85 இல் 46-ம், சிறுதொழில்கள் 7,801 என்றும் இருந்தன. அதைக் கூடுமானவரையில் குறைப்பதற்கான முயற்சிகளைச் செய்து வருகிறோம். நம்மைவிட சில மாநிலங்களில் இந்த எண்ணிக்கை அதிகம். குஜராத்தில்



1986 ஏப்ரல் 3] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

51 பெரும் தொழில்களும், மகாராட்டிரத்தில் 100 பெரும் தொழில்களும், மேற்கு வங்கத்தில் 116 பெரும் தொழில்களும், சிறு தொழில்களைப் பொறுத்தவரை 4,165 இயங்காமல் இருப்பவையாகும். நாம் நம் மாநிலத்தில் இயங்காமல் இருக்கும் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை, மத்திய அரசின் உதவியோடு அவைகளை இயங்க வைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகளில் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும், தொழிலாளர் துறை அமைச்சர் அவர்களும் மேற்கொண்டு வருகிறார்கள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பள்ளிக்கூடக் கட்டிடங்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறுக்கிடும்போது, அதற்கு ஒரு கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்பதைப்பற்றிச் சொன்னார்கள். அது Part II Scheme -இல் ஒதுக்கிய தொகைதான். இதற்குமுன் உள்ள கணக்கை எல்லாம் நாம் சேர்த்துப்பார்க்க வேண்டும். 1979-80-இல் பராமரிப்புக்கு ரூ. 39,87,000. கட்டிடங்கள் கட்ட ஆறு கோடியே முப்பத்தேழு லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். 1980-83-லே பராமரிப்புக்கு 79,96,000 ரூபாயும், பள்ளிக்கூடக் கட்டிடங்கள் கட்ட ஏழு கோடியே எட்டு இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டது. ஆக 1986-87 ஆம் ஆண்டு கணக்குப்படி நாம் பராமரிப்புக்கு ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இவ்வாறு பள்ளிக்கூடக் கட்டிடங்கள் கட்ட மொத்தம் ஏழு கோடியே 46 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியது போல், ஒரு கோடி அல்ல. மொத்தக் கணக்கையும் சேர்த்தால், ஏழு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பார்ட் 2 ஸ்கீமில்தான் ஒரு கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சாலைகளைப் பொறுத்தவரை, மூன்று கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். இதைக் குறித்து எல்லாப் புள்ளிவிவரங்களையும் எடுத்துச்சொல்ல நேரமில்லை. என்றாலும்கூட சாலைகளுக்கு நாம் ஆண்டுக்கு ஆண்டு அதிகம் ஒதுக்கிக் கொண்டுதான் வருகிறோம். 1977-78-இல் சாலைகள், பாலங்கள், பராமரிப்பிற்காக ரூ. 19 கோடியே 98 இலட்சம் செலவிட்டிருக்கிறோம். 1980-81-இல் ரூ. 48 கோடி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். 1985-86-இல் ரூ. 94 கோடியே 75 இலட்சம் ஒதுக்கீடு செய்திருக்கிறோம். 1986-87-ல் சாலைகள், பாலங்கள் கட்டவும், பராமரிப்பு செய்யவும் 113 கோடியே 79 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாகச் செலவிட்டு வருகிறோம். இந்த ஆண்டுகூட பராமரிப்புக்காக சுமார் 54 கோடியும்,

பணிகளுக்கு என்று சுமார் 64 கோடியும் ஒதுக்கீடு செய்திருக்கிறோம். ஆண்டுக்காண்டு இவ்வாறு கூடுதலாகத்தான் ஆக்கிக்கொண்டிருக்கிறோம் என்பதையும் குறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கலைஞர் அவர்களும் மற்றவர்களும் வீடு கட்டும் திட்டத்தைப்பற்றி எடுத்துச்சொன்னார்கள். இதைப்பற்றி நானும் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். இதனை அவர்கள் புரிந்துகொண்டு சரியாகச் சொல்லியிருக்கின்றார்கள். பாம்பின் கால் பாம்பு அறியும் என்பார்கள். (சிரிப்பு) அதைப்போல அதைப் புரிந்துகொண்டு எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்பதற்கிணங்க அந்த நோக்கத்தில் ஒன்றும் தவறில்லை. முப்பது இலட்சம் வீடுகள் கட்ட வேண்டும் என்று நினைத்து, இந்தக் கருத்தை எடுத்துச்சொல்வதில் எந்தத் தவறுமில்லை. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளே எவ்வளவு பெரிய அளவுக்கு நிதியை ஒதுக்கீடு செய்து கட்டிவிட முடியும் என்றால், முடியாதுதான். ஆனால் அந்த நோக்கத்தைச் சொல்லாமலே விட்டிருக்கலாமா? விட்டிருக்கலாம். இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. இந்த உயர்ந்த நோக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்கிணங்க அதனைக் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக முடிக்க முடியுமா என்றால், முடிக்க முடியாது தான். இந்த நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமானால், பல்வேறு வகைகளில் நிறைவேற்ற வேண்டும். அதற்கென்று தனியாக இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 20 கோடி ரூபாய் ஒதுக்கவும், வேறு வகைகளில் மொத்தம் 40 கோடி ரூபாய் ஒதுக்கவும், மற்ற வகைகளில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சேகரிக்கவும், இவ்வாறு இந்த ஆண்டு ஓரளவுக்கு நிறைவேற்றித் தர முடியும். குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் இந்த இலக்கை அடைய முடியாது என்று மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கலைஞர் கூறியது உண்மை. ஆனால் இந்த மாதிரி ஒரு இலட்சியம் இருக்கும் என்று சொன்னால், அந்த இலட்சியத்தை நிறைவேற்ற வேண்டுமென்கிற தூண்டுதலின் அடிப்படையில், செயல்பாடுகளைச் செய்வதற்கு ஒரு தூண்டுதலாக இருக்கும் என்ற அடிப்படையில்தான் அறிவித்திருக்கிறோம். Something is better than nothing என்பதைப்போல அந்த அளவுக்குப் பயன்படும் என்ற நோக்கத்தில்தான், ஓரளவுக்கு நிறைவேற்றி வர முடியும். எடுத்த எடுப்பிலேயே முழுமையாக நிறைவேற்ற முடியாது. ஆகவேதான் இந்தக் குறிப்புகளை மட்டும் காட்டியிருக்கிறோம். படிப்படியாக இத்திட்டத்தினை நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொள்வோம் என்பதைக் குறித்துக்கொள்ள விரும்புகிறேன்.



(பிற்பகல் 1-15)

சேது சமுத்திரம் திட்டத்தைப்பற்றி இங்கே உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். எல்லோரும் அதைத் திரும்பத் திரும்ப வற்புறுத்தி வருகிறோம். மாநில அரசின் மூலமாகவும் அதை வற்புறுத்தி வருகிறோம். அதை இரண்டு, மூன்று காரணங்களுக்காக வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். மத்திய அரசினுடைய கடற்படை அதிகாரி வந்தபோது கூட, அதைப்பற்றி அவரிடத்திலே எடுத்துச் சொன்னோம். சேது சமுத்திரம் திட்டம் வருவதன் காரணமாக வாணிபம் பெருகும் என்பது ஒன்று; செலவினம் குறையும் என்பது மற்றொன்று; இன்றைக்கு வளர்ந்து வருகின்ற நாடுகள், ஐக்கிய நாடுகளின் 'ஸ்ட்ராடெஜிக் பாயின்ட்' என்று வரும்போது, இன்று ஸ்ரீலங்காவிற்கும் நமக்கும் இருக்கிற தன்மைகளின் அடிப்படையிலே மாச்சரியங்கள் வளர வளர, எந்தச் சூழ்நிலையிலும் நாம் ஸ்ரீலங்காவைச் சுற்றிக்கொண்டுதான் போக வேண்டுமென்ற சூழ்நிலையிலே நமக்குப் பாதுகாப்பும் உண்டு. திரிகோணமலையில், ஒரு நேரத்தில் அமெரிக்கா அதனுடைய தளத்தை வைத்துவிடுமேயானால், அப்போது மத்திய அரசு அதைச் சுற்றிக்கொண்டு போக வேண்டிய சூழ்நிலையில் இல்லாமல், அதனுடைய கடற்கரை ஓரத்திலேயே போக வேண்டிய அவசியம் ஏற்படுமானால், அப்போது சேது சமுத்திரம் திட்டம் மிக மிக முக்கியமான ஒன்றாக அமையும். அது இந்தியாவைப் பாதுகாக்கவும் பயன்படுகிறது; செலவினத்தைக் குறைக்கவும் பயன்படுகிறது. அதன் மூலமாக தூத்துக்குடி துறைமுகம், மற்ற தொழில்களும் வளர்ச்சி பெறுவதற்கு வழி வகைகள் ஏற்படுகின்றன. சேது சமுத்திரம் திட்டத்தை, சர் இராமசாமி முதலியார் தயாரித்துக் கொடுத்த காலத்திலேயே மத்திய அரசு நிறைவேற்றி இருக்குமே யானால், அதிகச் செலவு ஏற்படாமல், குறைந்த செலவிலேயே அந்தத் திட்டத்தை நிறைவேற்றி இருக்க முடியும். அவர்கள் சுட்டிக்காட்டியதை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் காவிரி நதிநீர் பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். இது தீர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் தீர்க்கப்பட முடியாமல் இருப்பதற்கான சூழ்நிலையை கர்நாடக அரசு தொடர்ந்து உருவாக்கிக் கொண்டுவருகிறது. அந்த நாளிலிருந்து பல அரசியல் கட்சித் தலைவர்களிலிருந்து, டாக்டர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோதும் சரி, அதற்குப் பிறகும் சரி, இப்போதும் சரி, அதுபற்றி நாம் கலந்து, கலந்து பேசுகிறோம். நம்முடைய எண்ணம் அப்போதும் சரி, இப்போதும் சரி அந்த

1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் நீடிக்கிறது என்பதுதான். 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் இருக்கிற திட்டத்தை மாற்ற வேண்டுமென்று சொல்லவே இல்லை. கடந்த 50 ஆண்டுகளில் கூடுதலாகத் தண்ணீர் வர வாய்ப்பு இருக்குமேயானால், கூடுதலாக வரும் தண்ணீரை எப்படிப் பகிர்ந்து கொள்ளலாம் என்பதைப்பற்றித்தான் யோசிக்கலாமே தவிர, தொடர்ந்து அந்தத் திட்டத்தினுடைய அடிப்படையில் கொடுத்து வரும் தண்ணீரின் அளவை மாற்றக்கூடாது என்பதுதான் திட்டம். ஆனால் இதில் தீர்ப்புகளின் தன்மையை வைத்துக்கொண்டு ஒரு சூழ்நிலை வராது இருப்பதன் காரணமாக, அடுத்து என்ன செய்வது என்பதைப் பற்றித் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறோம். கர்நாடக அரசும் தள்ளிப் போட்டுக்கொண்டே இருக்கிறது. அடுத்த கட்டம், ஒரு கட்டம்தான் பேச முடியும். அதற்குப் பிறகு ஏதேனும் ஒரு சட்டதிட்டமான, திட்டவட்டமான தெளிவான நடவடிக்கையைத்தான் இந்த அரசு எடுக்கவேண்டி வரும். அல்லது மத்திய அரசு இதில் தலையிட்டு பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். இல்லாவிட்டால், சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, வேறு வழி இல்லை என்கிற தன்மையை நாம் பெறவேண்டியவர்களாக இருக்கிறோம்.

இங்கே தீர்ப்புகள் பலவற்றைப்பற்றி மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 'இன்ஸ்டிடியூட் ஆஃப் பிரின்ட்டிங் டெக்னாலஜி' யைப்பற்றி அதிலுள்ள தன்மைகளைப்பற்றிச் சொன்னார்கள். பேரவையிலே அது சம்பந்தமாகக் கேள்வி எழுப்பப்பட்டு அதற்கான காரணங்களும் சொல்லப்பட்டன. பிறகு கல்வித் துறையினுடைய அறிக்கையிலே இப்படித் தெரிவித்திருக்கிறார்கள் என்று சொன்னோம். அதற்குப் பிறகும் மாண்புமிகு உறுப்பினருக்கு அதற்கான விளக்கங்கள் தந்து, இப்போது பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் அது பரிசீலனையில் இருக்கிறது. இங்கு இன்னும் சில கருத்துக்களையும் தந்திருக்கிறார்கள். இந்தக் குறிப்புகளின் அடிப்படையில், இந்த அரசைப் பொறுத்தவரையில், உள்ளபடியே அந்தத் தவறை ஏற்படுத்திய அதிகாரிகள் மீது, தவறு இருக்குமேயானால், அவைகளைக் கண்டறிந்து, ஜட்ஜ்மென்ட் இவைகளை எல்லாம் வைத்துக் கொண்டு நாங்கள் பேசுவதாக இருக்கிறோம். கல்வி அமைச்சரும், நானும் மற்றவர்களையும் வைத்துப் பேசி உள்ளபடியே அதில் தவறுகள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார் யார் என்று பார்த்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமென்ற உறுதியை இப்போது நான் தர விரும்புகிறேன். கட்டாயமாக யாரையும் காப்பாற்ற வேண்டுமென்ற நிலையில் இந்த அரசு இல்லை. இப்படிப்பட்ட தவறுகள் நடந்திருக்கக் கூடாது. ஆகவே





தான் இப்போது கிட்டத்தட்ட எல்லாவற்றிலும் இன்டர்வியூ மார்க்கே வேண்டாமென்று கொண்டு வந்துவிட்டோம். மிச்சம் மீதி இருக்கிற இவைகளில் இன்டர்வியூ மார்க்கிலே 30 மார்க் இருப்பதால்தான் வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற நிலைமைகள், சிபாரிசுகள் வருகின்றன. ஆகவே மாணவர்கள் வாங்கின மார்க் என்று வைத்துவிட்டால், ஒரு தொல்லையும் இல்லை. அதைப்பற்றி அவர்கள் சுட்டிக்காட்டியதை இந்த அரசு கவனித்துத் தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை மட்டும் இந்த அவையிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

உள்ளாட்சி மன்றங்கள் மற்றவைகளுக்குக் கூடுதலாக அதிகாரங்கள் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள். ஆகவே கூடுதலான அதிகாரங்கள், தேவைப்பட்ட அதிகாரங்கள் அவைகளுக்குக் கொடுப்பதிலே இந்த அரசுக்கு என்றும் தயக்கம் கிடையாது, ஆம்சேபணையும் கிடையாது.

(பிற்பகல் 1-20)

உள்ளாட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவை எல்லாம் சிறப்பாகவும் திறம்படவும் தங்கள் பணிகளை நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் எப்படிப்பட்ட அதிகாரங்கள் அவர்களிடம் இருந்தால் நல்லது என்று நாம் கண்டறிந்து கொடுப்பது நல்லதுதான். இந்த வகையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு எல்லோருடனும் பேசி ஒரு முடிவுக்கு வருவாரானால், அந்த அடிப்படையில் அதிகமான அதிகாரங்களைக் கொடுப்பதைப்பற்றி யாருக்கும் ஆட்சேபணை இருக்க நியாயமில்லை. ஏனென்றால் நம்மைப் பொறுத்தவரை, அங்கெல்லாம் பணிகள் நன்கு நடக்க வேண்டும். அதற்குச் சில பல அதிகாரங்கள் இல்லை என்றால், அவற்றை அவர்களுக்கு அளிக்கச் செய்வது நல்லதுதான். அந்த வகையில்தான் உள்ளாட்சித் துறை அமைச்சர் . . .

**டாக்டர் மு. கருணாநிதி :** கேபினெட் கூட்டத்திலேயே முடிவு செய்யலாமே.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** செய்யலாம். ஆனால் அதற்கு முன்பு பலரும் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம். அவ்வாறு அனைவரும் சொன்னதற்குப் பிறகு முடிவு செய்வது என்பது கேபினெட்டாகத்தான் இருக்கும். எனவே எல்லோரும் சேர்ந்து கூடி பேசி முடிவெடுத்து, எத்தகைய அதிகாரங்கள் உள்ளாட்சி மன்றங்களுக்குத்

200. வேளாண்மைத்துறையின் 3—9—1985 ஆம் நாளிட்ட II (2)AG/5231/85 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் தொடர்பாக, வேளாண்மைத் துறையின் 7—1—1986 ஆம் நாளிட்ட 48 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

201. 1—5—1933 ஆம் நாளிட்ட அன்றைய அரசின் 618 ஆம் எண் அறிவிக்கையில் வெளியிடப்பட்ட நகராட்சி மன்றங்களின் வருவாய்-செலவு குறித்த விதிகளில் திருத்தம் தொடர்பாக, நகராட்சி திருவாகம்-நீர் வழங்கல் துறையின் 29—4—1985 ஆம் நாளிட்ட 285 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 303 ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

2002. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் 1981-82 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏணைய தாள்கள்.

98. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்தி இரண்டாவது அறிக்கை.

* 99. சட்டமன்றப்-பேர்வையால் நிறைவேற்றப்பட்ட 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 30/1986).

---

* 2—4—1986 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.

1036/86 (234)

# தமிழ் நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

## செயலக வெளியீடு
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 4, 1986-தொகுதி 222 எண் 5
Friday, 4th April 1986-Volume 222 No. 5

சட்டமன்ற மேலவைச் செயலகம்.
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரூ. 2.75]

(234

பொருளடக்கம்.


| | பக்கங்கள் |
|---|---|
| 1 வினாக்கள்—விடைகள் .. .. .. | 395—431 |
| 2 தகவல் கோரல்— | |
| வானொலியிலும், தொலைக்காட்சியிலும் சட்டமன்ற நிகழ்ச்சிகளைத் திரித்து வெளியிடுவது குறித்து | 432—435 |
| 3 அறிவிப்புகள்— | |
| பேரவையிலிருந்து செய்தி | 435 |
| 4 அரசின் சட்ட முன்வடிவு— | |
| 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1986) | 432—479 |


143547

D 2 C 13—1

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, வருமான வரம்பை நீட்டி ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு படிப்புதவி செய்வதற்கு அரசு முயற்சி எடுத்திருப்பதற்காக ஆசிரியர்கள் சமுதாயத்தின் சார்பில் நான் என் வரவேற்பைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது சாதாரணமாக ஹையர் கிரேட் ஆசிரியராக அதுவும் ஆரம்ப நிலையிலே இருக்கும் ஒருவர் மட்டும்தான் இந்தப் படிப்புதவித் தொகை பெறக்கூடிய அளவுக்கு அந்த வருமான வரம்பு இருக்கிறது. ஆகவே அது வருகின்ற வரையிலே காத்திராமல், தற்காலிகமாக ஓரளவுக்காவது வருமான வரம்பை உயர்த்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, பள்ளி ஆசிரியரின் ஆண்டு வருமானம் உச்சவரம்பு ரூ. 6,000 என்பதை அடிப்படைச் சம்பளத்தை வைத்துதான் கணக்கிடுகின்றார்கள். இந்தக் கருத்தரு பரிசீலனைக்கு வந்திருக்கின்றது. அதில் ஒரு முடிவு எடுப்பதற்கு முன்னால் நாம் இதை உயர்த்துவது என்பது அவசியமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம்:** தலைவர் அவர்களே, ஆசிரியர்களுடைய ஆண்டு வருமானம் அடிப்படைச் சம்பளப்படி ரூ. 7,200 என்று இருக்கின்றது. அதனால் அவர்கள் குழந்தைகள் படிக்க உதவி பெறும் வாய்ப்பு இல்லாமல் போகின்றது. ஆகவே தற்காலிகமாக ரூ. 8,000 ஆகவாவது மாற்றினால், அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படும். 42 வயது வரும்போது சம்பளம் அதிகமாக இருக்கும். தற்காலிகமாக ஒரு வாய்ப்பு கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, 1961-62-ல் துவக்கப்பட்ட பள்ளி ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கான மத்திய அரசின் தேசிய படிப்புதவித் திட்டம் 1978-79 முடிவு வரை மத்திய அரசின் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டது. 1979-80 முதல் அது மாநில அரசின் திட்டமாகச் செயல்பட்டு வருகிறது. இப்போது உச்ச வரம்பு ரூ. 6,000 ஆக இருக்கின்றது. இதை நீக்க வேண்டும் என்ற கருத்தும் இருந்து வருகிறது. அதை அரசு பரிசீலித்து வருகிறது. விரைவில் அரசு முடிவு எடுக்க இருக்கின்றது. இடையிலே எந்த விதமான மாற்றமும் தேவையில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவர் அவர்களே, நான்காவது ஊதியக் குழு பரிந்துரைகள் செய்து அது அமுலாக்கப்பட்டு அரசு ஏற்கெனவே வகுத்திருப்பது ரூ. 6 ஆயிரம் என்று இருக்கின்றது. அநேகமாக யாருமே உதவித்



தொகை வாங்க முடியாத நிலை இருக்கிறது. அந்த படிப்புதவித் தொகையை வாங்க முடியாத நிலைமைகள் இருக்கின்றன. அதனால் தற்காலிகமாக அந்த உச்ச வரம்பை மாற்ற வேண்டும் என்று கேட்கின்றார்கள். பள்ளிகள் தொடங்கும் முன்பாக வருகின்ற ஆண்டில், எல்லோருக்கும் அந்த உதவி கிடைக்கின்ற அளவிலே திட்டத்தைக் கொண்டுவர வேண்டும். அந்த நிலைமைகளையும் மனதில் கொண்டு அரசு பரிசீலிக்குமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-05)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, இப்போதிருக்கிற உச்சவரம்பானது ஆசிரியர்களுக்குப் பலனளிக்கவில்லை என்பதைக் கருத்திலே கொண்டுதான் அரசு அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. விரைவிலே அதில் முடிவெடுக்க முயற்சி செய்யும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, இதிலே விரைவிலே முடிவெடுப்பதை அரசு செய்யுமென்று நம்பினாலும், தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி என்று சொல்லி, அதற்காக ஆணை பிறப்பிக்கப்பட்டு 2 ஆண்டுகளுக்கு மேலாகிறது. என்றாலும், அதனாலே யாரும் பலன் பெற்றதாகத் தெரியவில்லை. அப்படி ஒரு சட்டம் இருந்தும் செயல்படுத்த முடியாத நிலைமை இருக்கிறதே, அதை அமல் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, இதுபற்றித் தனியாகக் கேள்வி கேட்கவும்.

**திரு. அ. மயில்சாமி:** தலைவரவர்களே, ஆசிரியர்களின் குழந்தைகள் பயன்பட உச்சவரம்பை அதிகப்படுத்துவதுபற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு நன்றி. அதோடு, அலுவலகங்களிலே பணிபுரிகிற ஆசிரியர் அல்லாதவர்களின் குழந்தைகளுக்கும் இந்தத் திட்டத்தை நீட்டிக்கும் கருத்து அரசிடம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அலுவலர்களுக்கு அந்தத் திட்டமில்லை. இது ஆசிரியர்களுடைய குழந்தைகள் என்ற அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டு, நடைபெற்று வந்த திட்டம். இப்போது அந்தத் திட்டத்தினால் ஆசிரியர்களுக்குப் பலனில்லை என்பதால், அது பரிசீலிக்கப்படுகிறது.

## கட்டாய நன்கொடை

*** 144 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினம், சி.எஸ்.ஐ. திருமண்டலத்திலுள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், கட்டாயமாக தங்களது ஊதியத்தில் மூன்று சதவிகிதத்தை கோவிலுக்கு நன்கொடையாகக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தி வாங்கப்படுவது, அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) கட்டாயமாக வற்புறுத்தி வாங்கப்படவில்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, கட்டாயமாக ஆணை பிறப்பித்து வாங்கப்படவில்லை என்றாலும்கூட, தஞ்சை மாவட்டம், நாகப்பட்டினம், சி.எஸ்.ஐ. திருமண்டலத்திலுள்ள பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்கள் மாதந்தோறும் பணம் தந்தால்தான், பணியில் இருக்கலாம் என்று அச்சுறுத்தப்படுகிறார்கள். அது சம்பந்தமாக ஆசிரியர்களே கையொப்பமிட்டு அரசுக்குப் புகார் செய்திருப்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அவர்கள் ஆணை பிறப்பிக்கவில்லை என்றாலும், பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தந்துள்ள புகாரின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** புகார்கள் செய்யப்படாத வகையில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. எனவே புகார்கள் எழுதி அனுப்பினாலோ அல்லது என்னிடம் கொடுத்தாலோ அதை வைத்துக்கொண்டு, நடவடிக்கை எடுக்கலாம்.

## ஐந்து ஆண்டு சட்டப்படிப்பு.

*** 145 வினா.—திரு. அ. மயில்சாமி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1984 ஆம் ஆண்டு, சென்னை சட்டக் கல்லூரியில் துவக்கப்பட்ட, ஐந்து ஆண்டு சட்டப் படிப்பிற்கான பாடப்புத்தகங்கள் கிடைக்கவில்லை என்பது உண்மையா?





(இ) மேற்படி படிப்பிற்கான பாடம் நடத்த, உரிய ஆசிரியர்கள் இல்லை என்பதும் உண்மையா?

(உ) ஆம் எனில், அவைகள் குறித்து அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(இ) ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு விட்டனர்.

(உ) ஐந்தாண்டு சட்டப்படிப்பிற்குரிய பாடத்திட்டம் பல நூல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை. அவைகள் தனித்தனி புத்தகங்களில் உள்ளன. அவைகள் தொகுக்கப்பட்ட வடிவில் ஒரே புத்தகமாகக் கிடைக்கவில்லையென்பதால், அகில இந்திய வழக்கறிஞர் மன்றம் புத்தகங்களைத் தயார் செய்து வருவதாகத் தகவல் அறியப்பட்டுள்ளது. அவற்றை விரைவில் வழங்குமாறு மேற்குறிப்பிட்ட மன்றத்திடம் கேட்கப்பட்டுள்ளது. தற்போது ஐந்தாண்டு சட்டப்படிப்பு பாடத்திட்டங்களின்படி சென்னை சட்டக் கல்லூரி ஆசிரியர்கள் வகுப்பில் மாணவர்களுக்கு குறிப்புகள் தருவதுடன் அவற்றைத் தொகுத்து போதனை ஏடுகள் தயார் செய்து மாணவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளன.

**திரு. அ. மயில்சாமி:** தலைவரவர்களே, 5 ஆண்டுப் படிப்புக்குத் தேவையான சட்ட சம்பந்தமான பாடம் தவிர, மற்றவற்றுக்கான—நான்-லாஸ்—புத்தகங்கள் கிடைப்பதில்லை. நூலகத்திலும் இல்லை என்கிறார்கள், வெளியே கடைகளிலும் இல்லை. அவை விரைவிலே கிடைத்து, மாணவர்களுக்குப் பயன்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, அந்தப் பாடத் திட்டத்தைத் தயாரித்தவர்கள், அகில இந்திய வழக்கறிஞர்கள் மன்றத்தின் சார்பிலே கலந்து பேசி, தயாரித்திருக்கிறார்கள். அவர்கள் பல்வேறு புத்தகங்களில் உள்ள சிறப்பான பகுதிகளை பாடமாக வைத்திருக்கிறார்கள். அவர்கள், ஒரே புத்தகமாகச் சொல்லவில்லை. அவர்களே அவற்றை புத்தகமாக வெளியிடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைக் கேட்டிருக்கிறோம். இதற்கிடையே, அவற்றை நோட்ஸ்-ஆகத் தருகிறார்கள், தொகுத்துத் தருகிறார்கள். பாடப் புத்தகங்களை கல்லூரியில் அச்சிட்டு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, இந்தப் பாடப் புத்தகங்கள் ஆங்கிலத்தில் இருக்கின்றனவா அல்லது தமிழில் இருக்கின்றனவா? இந்தக் கோர்சை ஆரம்பிப்பதற்கு முன்னாலே சிலபஸ் எல்லாம் தயாரித்திருக்க வேண்டுமே, ஏற்கெனவே ஏன் அவை தொகுக்கப்படவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

இருக்கக்கூடிய தலைவலி போன்ற அல்லது நரம்புகளால் ஏற்படுகின்ற வலிகளை எடுக்கும் சக்தி இந்த முறைக்கு இருக்கிறது. பல மருந்துகளால் குணமடையாத வலிகளுக்கு, இந்த சிகிச்சை அளித்தால், அதைக் குணப்படுத்தும்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, பல வழிகளில் ஒன்றும் செய்ய முடியாததற்கு, இந்த முறையை அளித்து குணப்படுத்தலாம் என்னும்போது, இந்த முறையைக் கற்றறிய 2 பேர்களை அனுப்பியதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இது யானைப் பசிக்கு சோளப் பொறி போல இருக்கிறது. இதை அதிகமாக அபிவிருத்தி செய்ய வேண்டும். இது நல்ல மருத்துவ முறை. இது இப்போது நல்ல முறையில் பரவி வரும்போது, இதைப்பற்றித் தெரிந்து கொண்டு, அதை அமுல்படுத்த நிறைய பேர் வர வேண்டும். இதற்காக ஒருவர் அல்லது இருவரை அனுப்புவது சரியல்ல. இந்த மருத்துவ முறையை அதிக முறையில் பயன்படுத்த, அரசு முயற்சிகளை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, மூலக் கேள்விக்கு பதில் அளிக்கும்போது, பல பேருக்கு குணம் அடைந்ததாகச் சொல்கிறார்கள் என்றும், இன்னொரு சாரார் குணமில்லை என்றும் சொல்லுகிறார்கள் என்றும் சொன்னேன். Therefore, there are two opinions on one subject அந்த வகையில் இரண்டு பேர்களை அனுப்பி, அவர்கள் அந்த மருத்துவ முறையில் அறிவு பெற்று, அதற்கான எக்குவிப்மென்ட்ஸ் எல்லாம் ஏற்படுத்தி, அதற்கான புள்ளி விவரங்களை எல்லாம் சேகரித்து வருகிறோம். We have to collect our own statistics. Only on the bas's of the statistics collected by our own Department can we quantify the improvement made in all these diseases.

திரு. ஆர். டி. சீத்தாபதி: தலைவரவர்களே, 2 டாக்டர்கள் சென்று, பயிற்சி பெற்று வந்தார்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர்கள் பெயர்களை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிக்க முன்வருவார்களா? அப்படிச் சென்று வந்தவர்கள், அரசு மருத்துவ மனைகளிலேயே இருப்பார்களா அல்லது அவர்கள் கற்று வந்த மருத்துவத்தைச் செய்ய வெளியே தனியாக நர்சிங் ஹோம் வைத்துக்கொண்டு போய்விடுவார்களா? அவர்கள் அரசு மருத்துவ மனைகளில்தான் பணியாற்ற வேண்டுமென்ற உறுதிமொழியைப் பெற்றுக்கொண்டு, அவர்களை நாம் பயிற்சிக்கு அனுப்பி இருக்கிறோமா?



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, 2 டாக்டர்களின் பெயர்கள் என்னிடம் இல்லை. நியூராலஜி துறையிலிருந்து அனுப்பியிருக்கிறோம். அரசாங்கத்திலிருந்துகொண்டு வேலை செய்ய வேண்டுமென்ற நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். அது முக்கியமாக நியூராலஜியுடன் இணைக்கப்படும் பகுதியாகும். சாதாரணமாக, தலைவலி என்றால் பல மருந்துகளைச் சாப்பிட்டு குணப்படுத்தலாம். அதற்கு என்ன காரணம் என்று தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. சில நேரங்களில் 'ஆஸ்பிரின் சாப்பிட்டாலும் குணமடையாது. அப்படிப்பட்ட தலைவலிகளுக்கு இந்த மருத்துவ முறை பயன்படுகிறது என்று சீனாவில் உள்ளவர்கள் 'க்ளெயிம்' பண்ணுகிறார்கள். அந்த வகையில் இதை நியூராலஜி டிப்பார்ட்மென்டோடு இணைத்து வைத்திருக்கிறோம். அவர்கள் அரசாங்க மருத்துவ மனைகளில் வேலை செய்வதோடு, கூடுதலாக இதையும் செய்வார்கள். அவர்கள் அல்லோபதி மருத்துவ முறையைக் கையாளுவார்கள், இதையும் செய்வார்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவரவர்களே, அரசாங்கத்தின் சார்பாக 2 மருத்துவர்களை பயிற்சிக்கு அனுப்பியது ஒரு புறமிருந்தாலும், இந்த அக்குபஞ்சர் முறையில் தேர்ச்சி பெற்றவர்கள், பயிற்சி பெற்றவர்கள் பலர் நம் நாட்டில் இருக்கிறார்கள். அவ்வாறு தேர்ச்சி பெற்றவர்கள், கல்வித் தகுதி பெற்றவர்கள் வெளி நாட்டவர்களாக இருந்தாலும், அவர்களை நம்முடைய பொது மருத்துவ மனைகளில் பணி புரியச் செய்து, அவர்கள் மூலமாக நம்முடைய டாக்டர்களுக்குப் பரவலாகப் பயிற்சி அளிக்கலாமல்லவா. அதனை ஏன் பரிசீலிக்கக்கூடாது? அடுத்து, மெடிகல் கவுன்சில் ஆஃப் இந்தியா இதைப்பற்றி என்ன கருதுகிறது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, 'மெடிகல் கவுன்சில் ஆஃப் இந்தியா' இதனை அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய சிகிச்சையாகத் தெரிவிக்கவில்லை. நம் நாட்டைப் பொறுத்தவரையில், வெஸ்டர்ன் ஓர்ல்டைப் பொறுத்தவரையில், ஏற்றுக் கொள்ளப்படாத விஷயமாக இது இருக்கிறது.

Acupuncture has been used for all kinds of known diseases from time to time. But, at present, as per the recent WHO report, it is used successfully for conditions which have general and muscle spasm. According to WHO, acupuncture does not alter organic changes occurring in osteo arthritic joints.

முன்புமாதிரி நல்ல வழக்கறிஞர்களாக வருவார்களா என்கிற சந்தேகம் இருக்கிறது. ஆகவே, பட்டப்படிப்பு படித்ததற்குப் பிறகுதான் சட்டக் கல்லூரியில் படிக்க வேண்டுமென்று பழைய முறையை அரசு கொண்டுவருவது பற்றி ஆராயுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** 12வது வரை படித்துவிட்டு வழக்கறிஞர்களாக வர வேண்டுமென்று விரும்பி சட்டக் கல்லூரிக்கு வருகிறவர்கள் 5 ஆண்டுகள் சட்டப்படிப்பு படித்தாலேயே சிறந்த வழக்கறிஞர்களாக வருவார்கள் என்ற அடிப்படையில்தான் இந்த முறையைக் கொண்டு வந்திருக்கிறோம்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** சட்டக் கல்லூரியில் ஏற்படுகின்ற குறைபாடுகளைக் கவனிக்க முன்பு ஒரு காலத்தில் கவர்னிங் கவுன்சில் என்று ஒன்று இருந்தது. இப்போது அது ஏன் இல்லை? அதில் சீப் ஜஸ்டிஸ் தலைவராக இருந்தார். அட்வகேட்-ஜெனரல் போன்றவர்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள். அது அத்தியாவசியமானது தானே. அதை ஏன் புதுப்பிக்கக் கூடாது ?

(முற்பகல் 10-15)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இதுபற்றி குறிப்பு என்னிடத்தில் இல்லை. இருந்தாலும் பாடப்புத்தகங்கள், பாடத் திட்டங்கள், ஐந்தாண்டு இதுபோன்ற பொருள்களைப் பற்றி விவாதிக்கவும், உருவாக்கவும் தகுதி படைத்த அமைப்பு, பல்கலைக் கழகம்தான். அவர்களால் அமைக்கப்படுகின்ற பாடத்திட்டக் குழு இதைக் கவனிக்கிறது. அதில் நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் வல்லுநர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு அறிவுரை கூறுகிற வகையில் 'பார் கவுன்சில் ஆப் இந்தியா' இருக்கிறது. அதிலே இருக்கிறவர்களுடைய யோசனைப்படிதான் இந்த ஐந்தாண்டுக் கல்வி என்ற ஒன்றை நாம் கொண்டு வந்திருக்கிறோம். 3 வருட பட்டப் படிப்பான பி.ஏ., பி.எஸ்.சி. போன்றவைகளைப் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும்போது, சட்டக் கல்லூரியிலாவது சேரலாம் என்று வந்து சேருகிறவர்களையும் அப்படிப் படித்தவர்களையும் தான் நாம் கடந்த காலத்தில் பார்த்திருக்கிறோம். ஆனால் 12-வது படித்தவுடன் நான் எதிர்காலத்தில் இப்படித்தான் வருவேன் என்ற ஒரு வாழ்க்கை இலட்சியத்தோடு இந்த ஐந்தாண்டுச் சட்டக் கல்லூரியில் சேருகிறான். சட்ட வல்லுநராக வருவேன் என்று இந்த 1 வது, 2வது, 3வது, 4வது, 5வது ஆண்டுகளில் அவன் நினைக்கிறான். அப்படி நினைக்கின்ற ஒருவன் எப்படி தயார் ஆவான் என்று நாமே கற்பனை செய்து கொள்ளலாம். அப்படிப்பட்ட தலைசிறந்த சட்ட வல்லு



நர்கள் இந்தப் பாடத் திட்டத்தின் மூலமாக உருவானார்கள் என்ற நம்பிக்கை நமக்கும் வழக்கறிஞர் மன்றத்திற்கும் இருக்கிறது. ஏனென்றால் வழக்கறிஞராக வருவேன் என்ற நம்பிக்கையிலேயே படிப்பதால், தரத்திலும் வித்தியாசம் இருக்கிறது. ஒரு வருடம் லாபம் கூட.

## *M. L. Course.*

* 146 *Q.*—Thiru K. SUBBU : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that the Madras Law College has discontinued admission of students into the M.L. Courses ; and

(*b*) if so, the reasons therefor ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (இ) 1983-84 ஆம் கல்வியாண்டில் பி. எல். வகுப்பு மணவர்களின் தேர்வு முடிவுகள் வெளியிட தாமதம் ஏற்பட்டதால், 1984-85 ஆம் கல்வியாண்டில், மாணவர்கள் எம்.எல். வகுப்பில் சேர்க்கப்படவில்லை.

பட்ட மேற்படிப்பு வகுப்புகளுக்கு மாணவர்கள் சேர்ப்பதற்கான இட ஒதுக்கீடு பற்றி உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, அகில இந்திய அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமா என்பது பற்றி முடிவேதும் எடுக்கப்படாததால், 1985-86 ஆம் ஆண்டும் மாணவர்கள் சேர்ப்பது தற்காலிகமாக நிறுத்தப் பட்டுள்ளது.

**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, இட ஒதுக்கீடு என்பது குறிப்பிட்ட சதவீதம்தான் இருக்கிறது. இதைத் தவிர மற்றவர்களும் படிக்கிற வாய்ப்பு இங்கேதான் இருக்கிறது. இதிலே இருக்கிற பிரச்சினை என்னவென்றால், அங்கேயிருக்கிற சில ஆசிரியர்களுக்கும், 'டைரக்டர் ஆப் லீகல் ஸ்டடீஸ்' என்கிற அவருக்கும் கருத்து வேறுபாடு இருப்பதால்தான், இந்த கோர்ஸையே நீக்கி விடுவதற்காக இந்தக் காரியம் செய்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு ஆசிரியர்கள் மத்தியில் இருக்கிறது. இது உண்மையாக இருந்தால், வருத்தம் அளிக்கக்கூடியதாக இருக்கும். இதுமாதிரி இரண்டாண்டுகள் நீட்டிப்பதால் வேறு சிக்கலும் இருக்கிறது. எம். எல். போன்ற படிப்புகளுக்கு மற்ற புரபஷனல் கோர்சுகளுக்கு இருப்பதைப்போல இதிலும் ரிசர்வேஷன் போன்ற பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால் அங்கேயெல்லாம் இதுபோன்று கோர்ஸ்கள் தொடர்ந்து இருக்கும்போது, இந்த புரபஷன் மட்டும் எடுத்து விடுவது என்பது பொருத்தமல்ல. ஆகவே இனிமேலாவது அந்தக் குறைகளை நீக்கி, எம். எல். படிப்புக்கு அட்மிஷன் கொடுக்கப்பட்டு அதன்மூலம் மேற் பட்டப்படிப்பு படிக்கிறவர்களுக்கு வாய்ப்பு அளிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, காட்டுத் தீ என்பது பல நேரங்களிலும் பலவித காரணங்களினால் ஏற்படுகிறது. பல நேரங்களில் மக்கள் செய்கிற தவறுகளினாலும் காட்டுத் தீ உருவாகிறது. முதுமலை போன்ற வனப் பகுதிகளில் மற்ற மாநிலங்களினுடைய ஓரங்கள் இருக்கின்றன. மாடு மேய்க்கின்றவர்கள் அல்லது அவ்விடங்களைப் பயன் படுத்துகின்றவர்கள், அங்கேயுள்ள காய்ந்துபோன பொருட்களைப் பசுமையாக மாற்றுவதற்காக அவர்களே தீ வைத்து விடுகிறார்கள். இவர்கள் இவ்வாறு மற்ற மாநில ஓரங்களில் வைக்கின்ற தீ நம்முடைய காட்டு தீப்பகுதிக்குள்ளும் பரவிவிடுகிறது. இவ்வாறு அப்பகுதிகளில் புழக்கத்தில் இருக்கிற மக்கள் பல்வேறு காரணங்களுக்காக பயன்படுத்துகின்ற தீயினாலும் காட்டுத் தீ பரவுகிறது. ஆகவே காட்டுத் தீ என்பது சில நேரங்களில் இயற்கையாகவும், சில நேரங்களில் இதுபோன்ற காரணங்களினாலும் ஏற்படுகிறது. இவற்றைத் தடுப்பதற்கு பல முறைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. வனச் சிப்பந்திகள், காட்டுத் தீ ஏற்பட்ட உடனேயே அவற்றைத் தடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். காட்டுத் தீ பரவாமல் இருப்பதற்காக எல்லையோரங்களில் குழிகள் நீண்ட தூரம் போடப்பட்டிருக்கின்றன. கிராம மக்களும் தீ ஏற்பட்டால், தீ ஏற்பட்டவுடன், தீப் பிடித்த இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் பரவாமல் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு, தடுத்து விடுகிறார்கள். கத்தாழை போன்ற செடிகள் எல்லாம் வளர்க்கின்ற திட்டங்களும் இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. என்றாலும் காய்ந்துபோன புல் முதலியவைகளாலும் தீ பரவாமலிருப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கம்பி இல்லாச் சாதனங்கள் மூலமும் காட்டுத் தீ பிடித்திருக்கும் செய்தியை மற்ற பகுதிகளுக்குத் தெரிவித்து ஆங்காங்கே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, அவற்றைத் தடுப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்படி பல்வேறு திட்டங்கள் நடைமுறையில் இருந்துகொண்டிருக்கின்றன. வேறு சில முறைகளையும் பயன் படுத்த பரிசீலனைகள் இருந்து வருகின்றன. அவைகளும் நடைமுறைப் படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** தலைவர் அவர்களே, இயற்கையாக காட்டுத் தீ ஏற்படுவதென்பது ஒன்று. சமுதாய விரோதிகளும், தீய சக்திகளும் காட்டுத் தீயை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தால், அரசு அவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, காடுகளுக்குள்ளே தீப்பிடித்துவிட்டால், அது எப்படி எங்கே யாரால் ஏற்பட்டது என்பதுபற்றி கண்டுபிடிப்பது என்பது முடியவில்லை. நாம் வாழ்கிற



சமுதாயத்திலே தீ வைக்கிறவர்களையே கண்டுபிடிக்க முடியாத சூழ்நிலை இருக்கும்போது, (சிரிப்பு) காட்டுக்குள்ளே ஏற்படும் தீயின் காரணங்களைக் கண்டுபிடிப்பது சுலபமில்லை.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத்தினுடைய காடுகளுக்குள்ளே திருட்டுத்தனமாகப் புகுந்து, அங்கே இருக்கின்ற விலைமதிப்பற்ற யானைகளைக் கொன்றுபோட்டு விட்டுச் செல்கின்றவர்கள் தடயங்களை மறைப்பதற்காக இவ்வாறு தீ வைக்கிறார்கள் என்று பரவலாகப் பேசுகிறார்களே, அது உண்மையா என்று அரசாங்கத்திற்குத் தகவல் ஏதும் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-25)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவரவர்களே, இந்தக் கேள்வி காடுகளிலே தீ ஏற்படுவதைப் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் யானையைக் கொன்று, தந்தத்தை எடுத்துக் கொண்டு தீ வைத்ததைச் சொல்கிறார்கள். அது யானைக்குத் தீ வைப்பதுதான். அது காடுகளைத் தீ வைத்து அழிப்பதல்ல. யானைகளினுடைய தந்தங்களை எடுத்துக்கொண்டு அப்படித் தீ வைக்கின்ற சில பழக்கங்கள் இருக்கின்றன. அந்தக் குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்படுகிறார்கள். தனிக் கேள்வி போட்டால், தகவலை முழுமையாகத் தர முடியும்.

## வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்.

* 142 வினா.—திரு. எல். ஜெயச்சந்திரன் : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்திற்கு வரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை குறைந்து கொண்டு வருகிறதா ?

(இ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** (அ) தமிழகத்திற்கு வரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை 1984 ஆம் ஆண்டு வரை பொதுவாக கூடிக்கொண்டே வந்திருக்கிறது. ஆனால் 1935 ஆம் ஆண்டு, முதல் ஆறு மாத காலத்தில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை பொதுவாகவே குறைந்துள்ளது. அது இந்தியா முழுவதையுமே பாதித்த ஒரு நிலை.

[1986 ஏப்ரல் 4

(இ) தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கு திட்டங்கள் பல தீட்டி அவற்றை படிப்படியாகச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மத்திய அரசு உதவியும் அதிக அளவில் கிடைக்குமென்று நம்பி திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. எல். ஜெயச்சந்திரன் : தலைவரவர்களே, தமிழகத்தில் 1985 ஆம ஆண்டில்தான் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைந்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அகில இந்தியாவோடு நமது மாநிலத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, வட இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகள் குறிப்பாக தமிழகத்திற்கு வருவதில்லை. அதற்குப் பொதுவாக மூன்று காரணங்கள் இருக்கின்றன என்று நினைக்கிறேன் அதற்கு தமிழக அரசு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்னையில் ஒரு சர்வதேச விமான நிலையம் இருந்தாலும், சர்வதேச விமானங்கள் சென்னைக்கு வருவதில்லை. அது ஒரு முக்கிய காரணம். கீழ்திசை நாடுகளிலிருந்து இரண்டு விமானங்கள் வருகின்றன. ஏர் இந்தியா வருகிறது; சர்வதேச விமானங்கள் ஐரோப்பிய நாடுகளிலிருந்து, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து வருவதில்லை. இதனால்கூட வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருவது குறைவாக இருக்கிறது. இரண்டாவது வெளிநாட்டுப் பயணிகள் நமது மாநிலத்திற்கு வரும்போது, பிச்சைக்காரர்கள் தொந்தரவு அதிகமாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். மகாபலிபுரத்திலும் பிச்சைக்காரர்களின் தொந்தரவு அதிகமாக இருக்கிறது என்கிறார்கள். மூன்றாவது, மதுரை, கன்னியாகுமரி ஆகிய இடங்களுக்குச் செல்லும்போது வெளிநாட்டுப் பயணிகளுக்கு . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது கேள்வி நேரம்.

திரு. எல். ஜெயச்சந்திரன் : வெளிநாட்டுப் பயணிகள் தங்குவதற்கு நல்ல ஓட்டல் வசதி கிடையாது. (குறுக்கீடு) நமக்குத் தங்குவதற்கு வசதிகள் இருந்தாலும், வெளிநாட்டுப் பயணிகள் தங்குவதற்குண்டான அளவுக்கு கார் போன்ற வசதிகள் கிடையாது. அரசு இந்த மூன்று கருத்துக்களின் மீதும் கவனம் செலுத்த வேண்டும். அந்த இடங்களில் வெளிநாட்டுப் பயணிகள் தங்குவதற்கும், சர்வதேச விமானங்கள் வந்து இறங்குவதற்கும் . . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சீக்கிரம் கேள்வியை முடிக்க வேண்டும்.

திரு. எல். ஜெயச்சந்திரன் : அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். முன்னர் குறிப்பிட்ட அந்த மூன்று கருத்துக்களும் முக்கியமான கருத்துக்கள். அந்த மூன்று கருத்துக்களையும் மனதிலே கொண்டு மாநில அரசு மத்திய அரசை



1986 ஏப்ரல் 4]

வற்புறுத்தி இங்கு சென்னையில் சர்வதேச விமானங்கள் வந்து இறங்குவதற்கும் மற்ற இரண்டு கருத்துக்களுக்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவரவர்களே, சுற்றுலா என்பதைப் பொறுத்தவரை, வெளிநாட்டுப் பயணிகள் வருகிற இன்டர்நேஷனல் டூரிஸ்ட், டொமஸ்டிக் டூரிஸ்ட் என இரு வகையாகப் பிரித்து காரியங்கள் செய்யப்படுகின்றன. வெளிநாட்டுப் பயணிகள் வருவதைப் பொறுத்தவரையில், அதுவும் அகில இந்தியாவில் நம்முடைய நாட்டைத் தெரிந்து கொண்டிருக்கிற வெளிநாட்டுப் பயணிகள் இந்தியாவுக்கு வந்து அதிலே சிறப்பான இடங்களை, பார்க்க வேண்டிய இடங்களைக் கொண்டிருக்கிற தமிழ் நாட்டுக்கு வருகிறார்கள். இந்தியா முழுவதும் கடந்த ஆண்டிலே சுமார் 8 லட்சத்து 40 ஆயிரம் வெளிநாட்டுப் பயணிகள் வந்திருக்கிறார்கள் என்று கணக்கிடுகிறபோது நம்முடைய மாநிலத்திற்கு சென்ற ஆண்டு சுமார் 2 லட்சத்து 40 ஆயிரம் பயணிகள் வந்திருக்கிறார்கள் என்ற கணக்கு நம்மிடத்திலே தரப்பட்டிருக்கிறது. 'டொமஸ்டிக் டூரிசம்', நம்முடைய உள்நாட்டுச் சுற்றுலா வளர்க்கப்பட வேண்டுமென்பதற்காக மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் அதில் தீவிர அக்கறை செலுத்தி வருகிறார்கள். அதற்குக் காரணம் உள்நாட்டுச் சுற்றுலா வளர்ந்தால், இந்தியாவினுடைய ஒற்றுமையும், கலாச்சார உறவும் மக்களிடத்திலே மிகச் சிறந்த நேரடித் தொடர்பும் வளரும். அதற்கு உள்நாட்டு சுற்றுலா வளர்க்கப்பட வேண்டுமென்ற லட்சியத்தை நிறைவேற்ற வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த வகையில் இந்தியாவிற்குள்ளே தமிழகம் உள்நாட்டுச் சுற்றுலாவைப் பொறுத்தவரையில், மிகச் சிறந்த வளர்ச்சியைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டில் நம்முடைய உள்நாட்டுச் சுற்றுலாவின் வளர்ச்சியினுடைய சதவீதம் சுமார் 25லிருந்து 30 சதவீதமாக வளர்ந்திருக்கிறது. ஆகவே நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருவதற்கும், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருவதற்கும் மிகச் சிறந்த பணிகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். ஆனால் இன்டர்நேஷனல் ஏர்-போர்ட்டுக்கு அகில உலகத்திலிருந்து சுற்றுலாப் பயணிகள் வருகின்ற விமானத் தளம் தமிழகத்தில் சென்னையிலே அமைந்திருந்தாலும், வெளிநாட்டுப் பயணிகள் வருகின்ற விமானங்களை இந்த வழியாக இறங்குவதற்கு வழிவகை காண வேண்டுமென்று நீண்ட காலமாகவே நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதை இப்போதுதான் படிப்படியாக, கொஞ்சம் கொஞ்சமாக ஏற்றுக்கொண்டு சில விமானங்கள் இங்கே இறங்குவதற்கு அனுமதிக்கிறார்கள்.

வேண்டும், தொழில்களைப் பெருக்க வேண்டும், தொழிற்சாலைகள் வர வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், இந்த அரசு நல்ல காரியங்களை ஆற்றிக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## பட்டுப்பூச்சி.

* 149 வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் பட்டுப்பூச்சி வளர்க்கும் நிலையங்கள் தற்பொழுது எங்கெங்கு உள்ளன ?

(இ) புதியதாக எங்கெங்கு ஏற்படுத்த, அரசு திட்டமிட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜகதீசன் : (அ) மற்றும் (இ) விவர அறிக்கை @ தனியாக அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் தமிழகத்தில் பட்டுப் பூச்சி வளர்ப்பு நிலையங்கள் 48 இடங்களில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த 48 நிலையங்களில் உற்பத்தியாகின்ற பட்டுப பூச்சியினுடைய மதிப்பு எவ்வளவு, அதன் மூலமாக ஆண்டு வருமானம் அரசுக்கு எவ்வளவு கிடைக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜகதீசன்: தலைவரவர்களே, அந்த இடங்களில் எல்லாம் அரசாங்கத்தின் மூலமாக பட்டுப் புழு வளர்ச்சி நிலையங்கள் அமைத்திருக்கிறோம். அங்கே புதிது புதிதாகக் கண்டுபிடிக்கப்படுகின்ற பட்டுப் புழுக்களையும், பட்டுப் புழுக்களிலிருந்து பட்டையும் உற்பத்தி செய்கிறார்கள். அங்கு ஏறக்குறைய ஆண்டு ஒன்றுக்கு 10 லட்ச ரூபாய்க்கு மேலாக அரசுக்கு நிகர லாபம் கிடைக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, இதிலே ஒருங்கிணைந்த பழங்குடியினர் நலத் திட்டத்தின்கீழ் வடாற்காடு மாவட்டத்தில் இளம் பட்டுப் புழுப் பண்ணை அமைக்கவும், சேலம் மாவட்டத்தில் பட்டு முன்னோடி சேவை மையம் அமைக்கவும், அதுபோல் மதுரை, வடாற்காடு, பெரியார், திருச்சி மாவட்டங்களில் இளம் பட்டுப் புழு வளர்ப்பு மையங்கள் அமைப்பதற்கான பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது.. இந்தத் திட்டங்கள் எல்லாம் எப்போது தொடங்கப்பட்டன, அதனுடைய திட்ட மதிப்பீடு என்ன, எப்போது செயல்படத் தொடங்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

@ 480–482 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன் : தலைவரவர்களே, ஒருங்கிணைந்த பழங்குடியினர் நலத் திட்டத்தின் கீழ் இளம் பட்டுப்புழு வளர்ப்பு நிலையங்கள் வடாற்காடு மாவட்டத்தில் அமுதமலை, புதூர் நாடு ஆகிய இடத்திலும், சேலம் மாவட்டத்தில் கல்ராயன் மலையிலும் 1984-85-ல் அனுமதி வழங்கப்பட்டு நிலையங்கள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதுபோல, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செங்கல்பட்டு மாவட்டத்தில் விசிரம்தாங்கல், மதுரை மாவட்டத்தில் நாகபட்டி, வெல்வார்கோட்டை, வடாற்காடு மாவட்டத்தில் பாச்சூர், பெரியார் மாவட்டத்தில் ராமாபுரம், சடயபாளையம், புதுக்கோட்டை மாவட்டத்தில் கம்பாரவிடுதி, சேலம் மாவட்டத்தில் வாளவந்தி நாடு, மதுக்கரை வடக்கு நாடு, திருச்சி மாவட்டத்தில் உப்பிலியாபுரம், கலிங்கபட்டி, ராமசமுத்திரம் போன்ற இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் இப்போது கொடுத்த பட்டியல் 1984-85-லே அனுமதி அளிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்கள். 1984-85 முடிந்து 1985-86 முடிந்து 1986-87 இப்போது நடந்து கொண்டிருக்கிறது. அவைகள் அங்கே இப்போது பயன்தரத்தக்க வகையிலே, லாபம் தரத்தக்க வகையிலே நடைபெற்று இருக்க வேண்டுமே, அந்த வகையிலே நடைபெற்றிருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன் : பட்டுப்புழு வளர்ச்சிப் பண்ணை என்பது ஆங்காங்கே தட்டி அமைத்து முசுக்கொட்டைச் செடிகளை நட்டு, அதன் மூலமாகக் கிடைக்கிற இலையைக் கொண்டு, பட்டுப்புழு எந்த எந்தத் தன்மையில் வளர்கிறது என்று ஆராய்ச்சி செய்கிற நிலையமாகும். ஆகவே, இதற்குச் சில கால அவகாசம் பிடிக்கும்.

திருமதி வி. ஜெயலட்சுமி : தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டையிலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் மகாராஜபுரத்திலும் பாண்டியூரிலும் காமராஜர் மாவட்டத்தில் கல்குறிச்சியிலும் இத்தகைய பட்டுப்புழு வளர்ப்பு மையங்கள் அமைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் செயல்முறைப் பயிற்சி நிலையம் அமைந்திருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. நபார்டு வங்கி மூலமாக ஒரு ஆய்வு ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டபோது, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் பட்டுப்பூச்சி வளர்ப்பதற்கும் பட்டு வளர்ப்புத் தொழிலை மேம்படுத்தவும் நல்ல சூழ்நிலை இருப்பதாக அவர்களின் அறிக்கையிலேயே

குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று அறிகிறேன். அந்த அறிக்கையின் அடிப்படையில் கூட்டுறவு வங்கிகளானாலும் சரி, கிராமிய கூட்டுறவு வங்கிகளானாலும் சரி, நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. தற்போது இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் 2 அல்லது 3 மையங்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. எனவே மேலும் பல இடங்களில் இத்தகைய மையங்களை ஏற்படுத்தினால் நல்ல முறையில் பட்டுப்பூச்சியை வளர்க்கவும் பட்டு நூல் அதிகமாகத் தயாரிக்கவும் துணையாக இருக்க முடியும். காரணம் நீண்டகாலப் பணப்பயிர்களை வறட்சி காரணமாக அந்தப் பகுதிகளில் வளர்க்க இயலாது என்பதால் இரண்டொரு ஏக்கர் மட்டும் வைத்துக்கொண்டு பயிர் செய்யும் விவசாயிகளுக்குத் துணைத் தொழிலாக இது சொல்லப்பட்டிருக்கிறது என்பதால், அத்தகைய மையங்களை அதிகரித்து வேளாண்மை மக்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன் : தமிழகத்தைப் பொறுத்த மட்டில், எல்லா மாவட்டங்களிலும் பட்டு வளர்ச்சித் திட்டங்களை மேம்பாடு செய்ய வேண்டும் என்று நான் திட்டமிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக வறட்சியான மாவட்டங்களில், குறைந்த அளவுக்குத் தண்ணீர் வசதி உள்ள இடங்களில் இதுபோன்ற பட்டுப்புழுக்களை வளர்க்கிற திட்டத்தை அமுல்படுத்துகிறார்கள். அதன் மூலமாக விவசாயிகளுக்குச் சிறந்த புதிய வருவாய் கிடைக்க இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு ஹோசூர் போன்ற சில இடங்களில் மட்டும்தான் பட்டுப்புழு வளர்க்கும் பண்ணை இருந்தது. இராமநாதபுரம் போன்ற வறட்சி நிறைந்த மாவட்டங்களில்கூட இப்போது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே இன்னும் தேவை என்றால், அரசு அதை அபிவிருத்தி செய்யத் தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. இராமலிங்கம் : அமைச்சர் அவர்கள் எல்லா மாவட்டங்களிலும் பட்டுப்புழு வளர்ச்சி சிறப்பாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் வெளியிலிருந்து கக்கூன்களை வாங்கி நூல் எடுத்து முறுக்கேற்றி நெசவாளர்களுக்குக் கொடுக்கிற இயந்திரங்கள் எந்தெந்தப் பகுதிகளில் இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன். பெங்களூரிலிருந்து கக்கூன்களை வாங்கி நமது கக்கூன்களோடு கலந்து இணைத்து, நூலை எடுத்து முறுக்கேற்றித் தருவதாகப் பல புகார்கள் இப்போது வந்து கொண்டிருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? தரமான பட்டு வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆனால் தரமான பட்டுப்புழுவை இங்கே உற்பத்தி செய்யாமல் வெளியே இருந்து கக்கூன்களை வாங்கி வந்து இங்கே நூல் எடுத்து முறுக்கேற்றிக் கொடுத்து விடுகிறார்கள். அப்படி எத்தனை இடங்களில் செய்கிறார்கள்? அவர்களுக்கு இனியாவது அப்படிப்பட்ட இழப்பு இல்லாமல் அரசு பார்த்துக்கொள்ள முன்வருமா ?



மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன் : கர்நாடகா மாநிலத்தை ஒட்டியுள்ள சில இடங்களிலிருந்துதான் பட்டுப்புழு ஏராளமாக கர்நாடகா மாநிலத்திற்குப் போய்விடுகிறது. மற்ற இடங்களிலிருக்கும் பட்டுப் புழுவை இங்கேயே பயன்படுத்தி வருகிறோம். போதுமான அளவுக்கு இங்கே ரீலிங்மில் வசதியும் டிவிஸ்டர் வசதியும் இல்லை என்ற குறை இருக்கிறது. அதைப் போக்கத்தான் 7-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 600 இடங்களில் இப்படிப்பட்ட மையங்களை அமைக்கவும் இயந்திர சாதனங்களை அமைக்கவும் முடிவெடுத்திருக்கிறோம்.

### சைதாப்பேட்டை சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.

* 130 வினா.—திரு. சி. ஆர். கோலப்பா : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான நிலத்தை, ஒரு சிலர் ஆக்கிரமித்து, குடிசைகளை அமைத்துக் கொண்டுள்ளனர் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், ஆக்கிரமிப்புகளை அகற்ற, அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன் : (அ) ஆம்.

(இ) இது குறித்து காவல் துறையுடன் தொடர்பு கொண்டதில், நகரக் காவல் துறை ஆணையாளர் இந்த ஆக்கிரமிப்பினை அகற்ற நீதிமன்றம் மூலம் வழக்கு தொடருவது மூலமாக ஆணைகள் பெறப்பட்டால், ஆக்கிரமிப்பை அகற்றும் காலத்தில் காவல் துறை உதவி செய்ய முன்வரும் எனத் தெரிவித்துள்ளார்கள். நீதிமன்றத்தில் வழக்கு தொடங்குவதற்குத் தேவையான நிதி வசதி ஏதும் தற்போது சங்கத்தில் இல்லாத நிலைமையில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வது நிலுவையில் உள்ளது.

(முற்பகல் 11-15)

திரு. சி. ஆர். கோலப்பா : அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் தலைவராக இருப்பவர் அந்தக் குடிசைகளை அமைத்துக் கொண்டிருப்பவர்களிடம் பணத்தை வாங்கிக்கொண்டு அனுமதித்திருப்பதாகக் கூறப்படுகிறது. அப்படிப்பட்ட தலைவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ? அது உண்மையாக இருந்தால், அந்தப் பதவியிலிருந்து அவரை நீக்க அரசு ஆணை பிறப்பிக்குமா ? உடனடியாக அங்கேயுள்ள குடிசைகளை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

பிறகு வந்த செய்தியைச் சொல்லுகிறேன். மறுப்பு இருந்தால் அமைச்சர் அவர்கள் சொல்லட்டும். ஆனால் இதுவரை மறுப்புச் சொல்லவில்லை. ஆகவேதான் சொல்லுகிறேன். குறை சொல்ல வேண்டும் என்ற நோக்கத்திலே சொல்லவில்லை. இந்த ஊழியர்கள் தங்களை நிரந்தரம் ஆக்க வேண்டுமென்று கேட்டதற்கு, அதற்குத் தொடர்புடைய மேல் மட்டத்திலே இருக்கக் கூடிய அதிகாரிகள் 'அன்பளிப்பு' என்ற முறையில் சில தொகையைக் கேட்டிருக்கிறார்கள். லஞ்சம் என்று இதற்கு விளக்கம் சொல்வார்கள். பத்து இலட்சம் ரூபாய் தேவையென்று கேட்டிருக்கிறார்கள். அவர்கள் இதைத் தர முடியவில்லை என்று சொன்னதற்குப் பிறகு, அதற்கும் நாங்கள் வழிவகை செய்கிறோம் என்று சொல்லி, திருநெல்வேலி கிராம விவசாயச் சேவை கூட்டுறவு பணியாளர்கள் சங்கம் என்ற புதிய அமைப்பை இதற்காக உற்பத்தி செய்து, அந்த அமைப்பு மத்திய கூட்டுறவுச் சங்கத்திலிருந்து கடன் கேட்டதாக தஸ்தாவேஜுகள், பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு, கடன் வாங்கியதாகப் பதிவு செய்யப்பட்டு அந்தப் பணத்தை அந்த ஊழியர்களுக்குப் பட்டுவாடா செய்யாமல், எந்தக் காரணத்திற்காகக் கேட்டார்களோ அந்தக் காரணத்திற்காக அவர்களே அதை எடுத்துக்கொண்டார்கள் என்று குற்றம் சாட்டி ஒரு தீர்மானத்தை இப்போது அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். கடன் கேட்டதாகச் சொல்லப்பட்ட அந்தத் தொகை வேறு ஒரு காரியத்திற்காக, பதவி உயர்வுக்காக, பணி நிரந்தரத்திற்காக பேரம் பேசப்பட்டு அந்தத் தொகையைப் பெற்றிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பத்திரிகைச் செய்தியை வைத்துக்கொண்டு பேசுகிறாரா அல்லது அவர்கள் போட்ட தீர்மானத்தின் நகலை அவர்கள் கொடுத்து இவர் பேசுகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தீர்மானத்தைத்தான் படிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** பத்திரிகையில் வந்ததைப் படிக்கிறார்களா அல்லது அவர்களே கையெழுந்துப் போட்டுக் கொண்டு வந்து கொடுத்த தீர்மானத்தைப் படிக்கிறார்களா ?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அதைப்பற்றி விசாரித்தார்களா ?



**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நான் ஒரு தொழிற் சங்க வாதி. எனக்குப் பல்வேறு ரெப்ரசென்டேஷன்கள் வருவது வழக்கம் என்பது அமைச்சர் அவர்களுக்கும் தெரிந்தது. அந்தத் தொழிற் சங்கத்திலே ஒரு தீர்மானத்தைப் போட்டிருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** பத்திரிகையில் வந்த தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் படிக்கிறாரா அல்லது அவர்களே கையெழுத்துப் போட்டுக் கொண்டு வந்த தீர்மானத்தின் நகலை வைத்துக் கொண்டு படிக்கிறார்களா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லுகிறேன். பல்வேறு பத்திரிகைகள் வருகின்றன. நல்ல பத்திரிகைகளும் வருகின்றன, தவறான செய்திகளைப் போடுகின்ற பத்திரிகைகளும் வருகின்றன. பத்திரிகைச் செய்திகளை உறுப்பினர்கள் தெரிந்து சொல்வதில் தவறில்லை. அந்தச் செய்தி சரிதானா என்பதை ஆராய்ந்து, உண்மையாக இருக்கும் என்று உறுப்பினர்கள் கருதக்கூடியதைச் சொல்லுவது நல்லது. பத்திரிகையில் எதையாவது எழுதுவார்கள். அதையெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தால் சரியாக இருக்காது. ஏனென்றால் தவறான செய்திகளைப் போடுகின்ற பத்திரிகைகளும் இருக்கின்றன. ஆகவே அதைப் பற்றிப் பேசுகின்ற உறுப்பினர்கள் அதைச் சரிபார்த்து நேரிடையாக விசாரித்து அவர்கள் மனதார உண்மை என்று கருதினால் பேசலாம். இந்த மாதிரியான பெரிய குற்றச்சாட்டுக்களைச் சொல்லுகிறபோது, தலைவரிடம் காட்டி அனுமதி பெறலாம். முன்னதாகவே அமைச்சரிடமும் கொடுத்தால், அமைச்சர் பதில் சொல்ல வேண்டிய தகவல்களைக் கொண்டு வருவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, நான் இதை இங்கே பேச வேண்டுமென்ற நோக்கத்தோடு வரவில்லை. எனக்கு முன் பேசிய அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இருந்த ஆட்சியில் ஊழல்கள் மலிந்திருந்தன என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தவறு நடக்கின்றது என்று சுட்டிக்காட்டுவதைத் தவறு என்று நான் சொல்லவில்லை. தவறைச் சுட்டிக் காட்டினால்தான் அந்தத் தவறுகள் எங்கள் கவனத்திற்கு வரும். அதிகமான தகவல்கள் எங்களுக்குக் கிடைக்கும் நேரத்தில் அந்தத்

தவறுகள் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அது ஏதுவாக இருக்கும். அதிலே எங்களுக்குக் கருத்து மாறுபாடு இல்லை. ஆனால் பத்திரிகையில் வருவதையெல்லாம் ஏற்றுக்கொண்டு சொல்வது என்றால், மாண்புமிகு உறுப்பினருடைய தலைவரைப்பற்றி பத்திரிகைகளில் செய்திகள் வந்திருக்கின்றன, அதை அவர் அப்படியே ஏற்றுக்கொள்கிறாரா அல்லது அதிலே மாறுபட்ட கருத்து உண்டா என்று கேட்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நான் கூட்டுறவுத் துறையில் நடந்த ஊழலைப் பற்றிச் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் எங்கள் தலைவரைப் பற்றிச் சொல்கிறார்கள். அது சரியா? நான் பத்திரிகையில் வந்ததையும், எனக்கு வந்த தகவலையும் வைத்துத்தான் சொல்லுகிறேன். அவர் ஒப்புக்கொண்டால் அவருடைய தலைவரைப் பற்றி பத்திரிகைகளில் வந்ததை என்னாலே சொல்ல முடியும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்லுகிறேன். குறைபாடுகளைச் சொல்லுவதற்குத்தான் எதிர்க்கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள். குறைபாடுகளைச் சொல்லுவதிலே எந்தவிதமான தவறுமில்லை. அமைச்சரும் அதைத்தான் சொல்கிறார்கள். குறைபாடுகளைச் சொல்லுவதில் தவறு கிடையாது. பத்திரிகைகளில் வருவதைச் சொல்லும்போது, எந்தப் பத்திரிகை என்பது முக்கியமானது. நூற்றுக்கணக்கான பத்திரிகைகள் வருகின்றன. தவறான செய்திகளைப் போடும் பத்திரிகைகளும் இருக்கின்றன. ஆகவே பத்திரிகைகளில் வருவதையெல்லாம் உண்மையென்று நம்ப முடியாது. ஆகவே சொல்வதாக இருந்தால், மாண்புமிகு உறுப்பினருக்கு நேரிடையாக அவர்களிடமிருந்து விண்ணப்பம் கிடைத்திருக்க வேண்டும். அல்லது பத்திரிகையில் வருவதை ஆராய்ந்து பார்த்து உண்மை என்று தெரிந்த பிறகு, அந்தப் பிரச்சினையைப்பற்றிப் பேச வேண்டும். பத்திரிகையில் வருவதையெல்லாம் அப்படியே வைத்துக் கொண்டு பேசுவது சரியல்ல. அதற்காக அப்படிப்பட்ட குறைபாடுகளைப் பற்றிப் பேச வேண்டாம் என்று நானும் சொல்லவில்லை, அமைச்சரும் சொல்லவில்லை.

(முற்பகல் 12-00)

இன்னொன்று. பெரிய குற்றச்சாட்டு சொல்கின்றார்கள். ஒரு பெரிய அதிகாரி ரூ. 10 லட்சம் அளவுக்கு வாங்குகின்றார்கள் என்று குறை சொன்னால், அதை முன்னதாகவே சொன்னால், அமைச்சர் அவர்களுக்குப் பதில்



சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும் என்று சொல்கின்றார்கள். அது உண்மையா இல்லையா என்று அமைச்சர் அவர்கள் சொல்ல முடியும். இல்லாவிட்டால் அந்த நிலைமை தெரியாமல் இருந்தால், பதில் சொல்ல முடியாது. யாராவது ஒரு அதிகாரிபற்றிச் சொல்லி அது பத்திரிகையிலே வந்தால், அது தவறாகக் கூட இருக்கலாம். அது அவருடைய கண்ணியத்திற்குப் பாதகமாக இருக்கலாம். அந்த முறையைப்பற்றித்தான் நான் சொன்னேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் பேசுகின்றபோது அவர்களுக்குக் கிடைத்திருக்கின்ற தகவல்களை எடுத்து வைக்க உரிமை இருக்கின்றது என்று சொல்கின்றேன். ஆனால் அதே நேரத்திலே ஆதாரம் இல்லாமல் அவதூறு செய்யக்கூடாது என்பதையும் நான் உணர்கிறேன். அந்த அடிப்படையிலேதான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகவே இப்படி ஒரு பேச்சு கிளம்பியது. இரண்டு ஆண்டுகளாக அதைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்து, இப்போது அது 'கன்பர்ம்ட்' என்ற நிலையிலே எங்களுக்குத் தகவல் கிடைத்த காரணத்தினாலேயே, சொல்கிறேன். அப்படி ஒரு குறை இல்லாமல் இல்லை. அப்படி இருந்தால், அதைக் களையெடுக்க வாய்ப்பாக இருக்குமே என்றுதான் சொல்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** 'கன்பர்ம்' செய்யப்பட்ட ஒன்று என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதில்தான் 'பிராப்ளம்' வருகிறது. தங்களாலே 'கன்பர்ம்' செய்யப்பட்டது என்கின்றார்கள். உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே அப்படிச் சொல்கின்றார்கள். நான் ஒரு வாதத்திற்காகச் சொல்கிறேன். இந்தமாதிரி ஒரு குற்றச்சாட்டு சொல்லி, இது என்னாலே 'கன்பர்ம்' செய்யப்பட்டது என்று சொல்லிவிட்டால் அது 'கன்பர்ம்' ஆகிவிடாது. எதற்காக நான் இதைச் சொல்கிறேன்? மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்ச்சி வசப்படக்கூடாது. நாம் மேலவையிலே பல ஆண்டுகளாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இங்கே சொல்கின்ற நேரத்திலே, குறைகளைச் சொல்லி அதற்கு ஆதாரம் இருக்குமானால், அந்த ஆதாரத்தை மேலவைத் துணைத் தலைவர் அவர்களிடம் கொடுக்கலாம். அதை இங்கு அமர்ந்திருக்கும் மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் அமைச்சர் அவர்களிடம் கொடுப்பார்கள். அதற்குப் பின்னாலே அதைப் பற்றி அறிந்து பதில் கொடுப்பார்கள். என்னாலே 'கன்பர்ம்' செய்யப்பட்டது என்று சொல்வது 'அக்கூசி' என்று ஆகிவிடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆட்சியிலே இருக்கின்றவர்களுக்கு இருக்கக்கூடிய வசதிகள் எதிர்க் கட்சியிலே இருப்பவர்களுக்குக் கிடையாது. ஆதார பூர்வமாகத்தான் பேச வேண்டும் என்று சொல்லி, அதை வைத்துக்கொண்டுதான் சொல்ல வேண்டும் என்று சொல்கின்றார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டால், எதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அதற்கு ஆதாரம் கேட்க முடியாது என்றும் இங்கே சொல்லியிருக்கின்றார்கள். உறுப்பினர்கள் ஒன்றிரண்டு சொல்கிறபோது, அதற்கு ஆதாரம் இருக்கிறதா என்பதை எடுத்துச் சொல்லுங்கள் என்றும் அதற்கு ரெக்கார்ட்டு கொண்டு வாருங்கள் என்றும் சொன்னால், அது சரியாகாது.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள் பேசுகின்ற அத்தனை சொல்லுக்கும் பொறுப்பேற்றாக வேண்டும். அதுதான் விதிமுறை. அதுதான் சட்டம். அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். ஓர் அமைச்சர் ஒரு தகவலை இந்த மாமன்றத்திலே கொடுத்து அது தவறாக இருக்குமானால், அவர் மீது உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வரலாம். இந்த மாமன்றத்தில் தவறான தகவல் கொடுத்திருந்தால், எவ்வளவு பெரிய தண்டனை வேண்டுமானாலும் அந்த அமைச்சருக்குக் கொடுக்கலாம். அதற்கு இந்த மன்றத்திற்கு அதிகாரம் உண்டு. அமைச்சர் அவர்கள் எதைச் சொன்னாலும், அவர்கள் அந்தச் சொல்லுக்கு பொறுப்பேற்க வேண்டும். ஆக அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்கள் மட்டுமல்ல. எந்த உறுப்பினராவது ஒரு விஷயத்தை இங்கே சொல்லி அது உண்மைக்கு மாறான தகவலாக இருந்தால், அதற்கு அவர் பொறுப்பேற்க வேண்டும். அது 'மேட்டர் ஆஃப் பிரிவிலேஜ்' ஆக ஆகிவிடும். அமைச்சர்களுக்கு மட்டும்தான் பொறுப்பு என்பதில்லை. உறுப்பினர்களுக்கும் அந்தப் பொறுப்பு உண்டு. தவறான தகவலை இந்த அவையிலே சொன்னால், அவர் மீது நடவடிக்கை எடுக்க மன்றத்திற்கு உரிமை இருக்கிறது. அது அமைச்சருக்கும் பொருந்தும், உறுப்பினர்களுக்கும் பொருந்தும். இதில் நான் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிப்பது, அவர்கள் சொல்வது நிச்சயமாகத் தெரிந்தால்தான், சொல்லலாம். அப்படி சில சமயங்களில் அவர் உண்மை என்று கருதுவது தவறாகக்கூட இருக்கலாம். 'லீனியன்ட்'டாக இருக்கிறோம் என்பதற்காக உறுப்பினர் தவறாகச் சொல்லக்கூடாது, அதே சமயம் அவர் தீர



ஆலோசித்துப் பார்த்துத்தான் குறைபாடுகளைச் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்வதாக இருந்தால், அதற்கு அமைச்சருக்கு ஒரு வாய்ப்பு கொடுக்க வேண்டும். அதைத்தான் நான் சொல்கிறேன். அதிகாரிகள் பற்றி இங்கே பேசுவதே முடியாது என்ற சூழ்நிலை வந்தால், அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வாய்ப்பில்லாது போய்விடும். இந்தமாதிரி பிரச்சினைகள் எல்லாம் வரும். ஆகவே உறுப்பினர் தெரிந்து செய்யக்கூடாது என்றுதான் மாண்புமிகு அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்களும் சொல்கின்றார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை ஒரு பெரிய பிரச்சினையாக ஆக்கி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் அந்த உரிமைப் பிரச்சினைகூட செயல்படுவதாக இல்லை. அவையிலே அமைச்சர் மேல் உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டு, அதற்குத் தீர்ப்பு வழங்கி, அது செயல்படாத நிலைமையெல்லாம் கூட இருக்கின்றது. இது ஒரு பெரிய பிரச்சினை அல்ல. உரிமைப் பிரச்சினை தலைவர் அவர்களிடத்திலே கொடுத்து என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள்? ஒன்றும் கிடையாது.

(பிற்பகல் 12-05)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அதுமாதிரிப் பேசுவது நல்லதல்ல. உரிமைப் பிரச்சினையில் தீர்ப்பு வழங்குவது தலைவர். தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டுவது சரியல்ல. தலைவர் அவர்கள்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். தலைவர் அவர்கள் மீது குற்றம் சாட்டுவதில் பயனில்லை. இன்னும் ஒன்று, மசோதாவின் மேலே பேசுகிறோம். இதையெல்லாம் கூட்டுறவுத் துறை கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேசலாம். முன்னாடியே சொல்லியிருக்கிறீர்கள். எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் தகுந்த முறையில் தெரிந்துகொண்டு வருவார்கள். எனவே மசோதாவில் பேசுவது நல்லது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தனி அலுவலர்களுடைய பதவிக் காலத்தை நீட்டிக்கக்கூடாது என்பதற்காக ஒன்றிரண்டைச் சொல்கிறேன். மசோதா மீது நீண்ட நேரம் பேசுவதற்கு இருக்கிறோம். அதற்குரிய புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. இப்படி தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீட்டித்துக் கொண்டு போவதால், தனி அலுவலர்களுடைய ஆதிக்கம், அவர்களுடைய அராஜகம், ஊழல் நடவடிக்கைகள் மிக அதிகமாகப் போய்க்கொண்டிருக்கின்றன. அதை நான் மாத்திரம் சொல்லவில்லை. வருமானத்தை 'டாப்பி

பாட்டம்' பகிர்ந்துகொள்கிறோம் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். அவர்கள் இந்த ஆட்சிக்கு அவப் பெயரை ஏற்படுத்துகிறார்கள். அதனால் மிக விரைவில் அதை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று சொல்கிறேன். ஒரு சங்கத்தின் தீர்மானத்தை அதற்காகப் படித்தேன். அந்த லெட்டர் ஹெட் பேப்பரில் இருந்தால், படியுங்கள் என்று சொன்னார்கள். அதை நான் எடுத்துக்கொண்டு வரவில்லை. அதைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். ஆதாரம் இருக்கிறது. அந்தச் சங்கத்தின் தீர்மானத்தைச் சொல்கிறேன். "இணைப் பதிவாளரின் சுற்றறிக்கைப்படி திருநெல்வேலி மாவட்ட கிராம விவசாய சேவை கூட்டுறவு சங்கப் பணியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் மேற்படி சங்கத்திடமிருந்து கடனாகப் பெற்ற தொகை என்று சொல்லி எங்களது சங்க உறுப்பினர்களிடமிருந்து கடன் தொகையை வசூலிக்க முயலுவதாக அறிகிறோம். மேற்படி கடன் தொகை போலி தஸ்தாவேஜுகளின் அடிப்படையில் அதிகார துஷ்பிரயோகத்தின் மூலம் பெறப்பட்ட பினாமிக் கடன். அப்படி திரட்டப்பட்ட தொகை எங்கள் உறுப்பினர்கள் யாருக்கும் வழங்கப்படவில்லை. எனவே மேற்படி கடன் வசூல் முயற்சியை கைவிட வேண்டுகிறோம்" என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். நான் சொன்ன காரணத்திற்காக அவர்கள் தீர்மானம் போடப்பட்டிருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அப்படிப்பட்ட அவப் பெயர் எல்லாம் ஏற்படக்கூடிய அளவிலே இப்படித்தான் உண்மையிலே நடக்கிறது என்பதால், அப்படி நடக்காமல் தடுக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடியாக முயற்சி எடுக்க வேண்டுமென்ற வகையிலே தான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன். வேறு அதிகமாகச் சொல்ல வேண்டுமென்றல்ல.

மற்றொன்று, எனக்குக் கிடைத்த தகவல்படி, எண்ணெய் வித்து இணையத்திலே 12½ இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதைப்போல இந்த இலாக்காவிலே கூட்டுறவுக் கடைகள் இருக்கின்றன. அந்தக் கூட்டுறவுக் கடைகளுக்கு கோணிப் பைகளிலே, சாக்குகளிலே சரக்குகள் அனுப்பப்படுகின்றன. சரக்குகள் காலியான பிறகு, அந்த சாக்குகளின் சாதாரண மார்க்கெட் விலை 6 ரூபாய். 5 ரூபாய்க்குக் குறையாமல் அது விற்கிறது. ஆனால் சங்கத்திலே யாரோ ஒருவர் ஆதிக்கம் செலுத்தி, ஒரு ரூபாய்க்கு சங்கம் அத்தனையிலும் சாக்குகளை வாங்கி வெளியிலே 5 ரூபாய்க்கு அதை விற்கிறார் என்ற தகவல். ஒரு ரூபாய்க்கு 4 ரூபாய் வருவாய் என்றால், எத்தனை இலட்சம், ஒரு நாளில் அவருக்கு





வருவாய்? அப்படி ஒரு நிலைமை ஏன் வர வேண்டும்? ஏன் 'ஆக்ஷன் விடக்கூடாது? மார்க்கெட் விலை அளவுக்கு ஏன் விற்கக்கூடாது? இது உண்மையா, இல்லையா என்று அமைச்சரவர்கள் சொல்லட்டும். ஒரு ரூபாய்தான் போகுமென்றால், நானேகூட 2 ரூபாய்க்கு எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். நான் கூட ஏழை ஆசிரியர் பிரதிநிதியாக இருக்கிறவன். இதனால் வருமானம் பெருகி, வசதியாக இருக்க முடியும். ஒரு ரூபாய்க்கு வாங்கி, 5 ரூபாய்க்கு விற்கும் அளவுக்கு அங்கே நிலைமைகள் இருக்கிறதென்றால், இதை யார் துணையோடு செய்கிறார்கள் என்றால், தனி அதிகாரிகள் துணையோடுதான். அவர்களுடைய ஆதிக்கம் அதிகரித்துவிட்டது. அங்கே ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் இல்லை. ஆக இந்தக் கால நீட்டிப்பை உடனே முடிக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, ஒரே ஒரு விஷயம். கூட்டுறவுத் துறையிலே ஆடிட் டிப்பார்ட்மென்ட் என்று தனித் துறை ஆரம்பித்து 3 ஆண்டுகள் ஆகின்றன. அது தனித் துறையாக இயங்குகிறதா என்றால் இல்லை. அதில் பணியாற்றும் அலுவலர்கள் கூட்டுறவுத் துறையில் இருப்பதா அல்லது கூட்டுறவுத் தணிக்கைத் துறையில் இருப்பதா என்பதற்கு ஆப்ஷன் கொடுத்து, அதைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-10)

அவர்களும் ஆப்ஷன் தந்து தந்து அலுத்துப் போய் விட்டார்கள். தனியான அமைப்பாக அந்த அமைப்பு இயங்குகிறதா என்றால் இல்லை. தனியாக அதை இயங்க விட வேண்டும். இன்றைக்கு இன்ஸ்பெக்ஷனுக்குப் போகிற சி.எஸ்.ஆர். போன்ற அதிகாரிகளுக்கு எல்லாம் உரிய அதிகாரங்கள் தரப்படவில்லை. இன்ஸ்பெக்ஷனுக்குப் போகிறவர்களே அங்குள்ளவர்களிடம் போய் கெஞ்சிக் கெஞ்சி கணக்கைக் கொடு என்று கேட்கின்ற நிலை இருக்கிறது. அவர்களிடம் உரிய அதிகாரம் இல்லாததால், தயவுசெய்து கணக்கைக் கொடுங்கள் என்று அவர்கள் கேட்கிற நிலை இருக்கிறது. அவர்கள் கொடுக்கின்ற கணக்கில், சொல்கின்ற இடத்தில் இவர்கள் கையெழுத்துப் போடுகின்ற நிலை இருக்கிறது. அப்படி என்றால், வேறு யாரோ இதற்கு மறைமுகமாக உடந்தையாக இருக்கிறார்கள் என்று எங்களைப் போன்ற மக்கள் பிரதிநிதிகள் கருதுகிற நிலை இருக்கிறது. இந்நிலையைத் தவிர்க்க உடனடியாக கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலை இனியும் காலம் கடத்தாமல், நடத்த வேண்டுமென்று சொல்லி அமைகிறேன்.

திரு எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறைக்கு தனி அதிகாரிகள் நியமனத்திற்கு நாட்களை நீட்டிக்கும் அளவில் இந்தச் சட்ட முன்வடிவு குறித்து நான் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தவிர்க்க முடியாத நிலையில் தனி அதிகாரி களுடைய பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டிய அவசியம் இருக்கிற காரணத் தால நான் இதனை ஆதரிக்கிறேன் என்றாலும் கூட, தொடர்ந்து இதே நிலை நீடிக்க வேண்டுமென்ற கருத்து மட்டும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கொஞ்சமும இல்லை என்பதை நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக அரசினுடைய கொள்கைகளைத் தெரிந்துகொண்டதற்குப் பின்னாலே நடைமுறையில் இருக்கிற சில சிக்கல் களின் காரணமாக சில நேரங்களில் காலம் நீட்டிக்கப்படுகின்றது. ஏதோ திரும்பத் திரும்ப பேசியதையே இங்கேயும் பேசி ஒரு மோசமான நிலையை உருவாக்க எதிர்க் கட்சிக்காரர்கள் முனைவது ஆரோக்கியமான அரசியலுக்கு அழகல்ல. அது அரசியலில் இன்னும் பிரச்சினைகளை உருவாக்கத்தான் துணையாக இருக்க முடியும். தேர்தலைப்பற்றி இங்கே கேட்பதற்கு சில பேருக்கு தகுதி இருக்கிறதோ இல்லையோ, ஆனால் அதுபற்றிக் கேட்க திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு மட்டும் உரிமை கிடையாது. காரணம் தேர்தலை முதன் முதலாக ஒத்தி வைக்க ஆரம்பித்தவர்களே அவர்கள்தான். அவர்கள் காலத்தில் நடத்தப்பட வேண்டிய ஊராட்சித் தேர்தலை நடத்த பயந்துகொண்டு ஒத்தி வைத்தார்கள். அந்த முன்மாதிரிதான் ஓராண்டு ஈராண்டு என்று ஆகி, அதனைச் சீர்திருத்தும் பணியில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முயற்சி எடுக்க, இப்படிப்பட்ட காலதாமதம் வருவது தவிர்க்க முடியாததாகிவிட்டது. ஆகவே, நான் நிச்சயமாகச் சொல்கிறேன், தேர்தலைக் கண்டு நாங்கள் பயப்படவில்லை. உதாரணத்திற்கு ஒன்றை வேண்டுமானால் நான் இங்கே சுட்டிக் காட்டுவேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. காடுவெட்டி கண்ணப்பன் அவர்கள் இன்றையதினம் தேர்தலில் வெற்றி பெற்று ஊராட்சி ஒன்றியத் தலைவராகவும் உட்கார்ந்திருக்கிறார். இப்படிப் பட்ட தைரியம் நிச்சயமாக எதிர்க் கட்சியினருக்கு வராது. ஆக, எந்த நிலையிலும் நாங்கள் தேர்தலுக்கு பயப்பட மாட்டோம் என்பதை திட்டவட்ட மாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால்தான் நாங்கள் தேர்தலையே நடத்தினோம். நாங்கள் பயப்படுகிறோம் என்று நீங்கள் திரும்ப திரும்பச் சொல்லக் காரணம், தேர்தலில் நாங்கள் வெற்றி பெற்றோம் என்கிற செய்தியை



பரப்புவதற்காகத்தான். இந்த ஊராட்சித் தேர்தலைப் பொறுத்தவரையில், நாங்கள் நிச்சயமாகத் தோற்கவில்லை என்று பலமுறை எடுத்துச் சொல்லி யிருக்கிறோம். அதற்கு உதாரணம் ஒன்றைச் சொல்வேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சட்ட முன்வடிவுக்கு வாருங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : தேர்தலைக் கண்டு நாங்கள் பயப்படவில்லை என்பதற்கு ஓர் உதாரணம் சொல்கிறேன். அது மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்குப் புரிய வேண்டும் என்பதற்காகச் சொல் கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: குறிப்பாக அதனை அவர் புரிந்துகொள்வார்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: என்னுடைய பேச்சிலே எங்கேயும் தேர்தலை நடத்த பயந்துகொண்டிருக்கிறார்கள் என்ற வார்த்தையைப் பயன்படுத்தவே இல்லை. அவராகவே ஒரு வார்த்தையைக் கற்பனை செய்துகொண்டு இந்தப் பிரச்சினையைப்பற்றி பேசிக்கொண்டிருப்பது தேவையில்லாதது.

திரு. எஸ். ஆர். இராதா : நாங்கள் தேர்தலை நடத்த பயப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் ஒத்துக்கொண்டதற்கு நன்றி.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : நீங்கள் பயப்படுகிறீர்களா இல்லையா என்ப தல்ல பிரச்சினை. அதை விளக்க வரவில்லை. இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் "நீங்கள்தான் கலைக்கத் தொடங்கி னீர்கள்" என்று சொன்னார்கள். ஆனால் அத்தனை பஞ்சாயத்துக்களையும் கலைத்த பெருமை யாருக்குரியது என்பதை அவர் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-15)

திரு. எஸ். ஆர். இராதா: சிந்திப்பதற்காகத்தான் நான் பேசுகிறேன். எங்கே சிந்திக்காமல் போய் விடுவார்களோ என்றுதான் சிந்தனையைத் தூண்டுவதற்காகப் பேசுகிறேன். பயம் என்ற வார்த்தையை நான் அவருக் காகப் பயன்படுத்தவில்லை. அவர்கள்தான் பேசும்போது நான் 'யீல்டு' ஆக மாட்டேன் என்று சொல்கிறவர்கள். நான் யாருக்கு வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் 'யீல்டு' ஆவேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அரசுப் பள்ளிகள் சார்பாகவும், தனியார் பள்ளிகள் சார்பாகவும் பல்வேறு பகுதிகளில் இருந்து மனுக்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். எல்லாப் பள்ளிகளையும் உயர்த்தும் உத்தேசமில்லை. புதிதாக உயர்த்தும் உத்தேசம் இப்போதில்லை. பொது மக்களுடைய பிரதிநிதிகளுடைய வற்புறுத்தலின் காரணமாக ஏதாவது ஏற்படுத்தக்கூடிய நிலைமைகள் வந்தாலும் வரலாம். அது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது.

### பாடநூல்கள் அச்சிடுதல்.

*135 வினா—**திரு. ஆர். டி. சீத்தாபதி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், புத்தகங்கள் அச்சிட்டுத் தரும் பணியை, தனியார் அச்சகங்களிடம் அளிக்கிறதா?

(இ) ஆம் எனில், எத்தனை அச்சகங்களில் அச்சிடப்படுகின்றன?

(உ) தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனமே, அச்சகத்தை ஆரம்பிக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(இ) 175 அச்சகங்கள்.

(உ) ஆம்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** இப்படி தனியாரிடத்தில் அச்சடிக்கத் தந்திருக்கின்ற பாட நூல்கள் உரிய நேரத்தில் வருவதில்லை என்ற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படி புகார் வந்ததால், அரசு அவர்களுக்கு அச்சடிக்கத் தரும் பணியை நிறுத்தியிருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அச்சடிக்கத் தருகிறபோது குறிப்பிட்ட காலத்திலே நூல்களைத் தர வேண்டுமென்றுதான் தருகிறோம். அதிலே காலதாமதம் ஏற்படும்போது, அதற்குரிய நடவடிக்கையை தமிழ் நாடு பாடநூல் நிறுவனம் எடுத்து வருகிறது.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** 'தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனமே அச்சகத்தை ஆரம்பிக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?' என்று மூலக் கேள்வியில் நான் கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஏற்கனவே நான் 'ஆம்' என்று பதில் சொல்லியிருக்கிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** எனக்குச் சரியாக காதில் விழவில்லை என்பதால் திருப்பிக் கேட்டுவிட்டேன். அப்படி ஆரம்பிக்கும் எண்ணம் இருக்கிறது என்றால், அதற்கு ஆர்ஜிதம் செய்யக்கூடிய நிலம் சென்னை மாநகரத்திற்குள்ளே வருகிறதா அல்லது சென்னையையடுத்த புறநகர்ப் பகுதியிலே வருகிறதா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, அடையாறில் உள்ள தொழில் நுட்பக் கல்வி வளாகத்தில் 3 ஏக்கர் ஒதுக்க ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இன்னும் 2 ஏக்கர் நிலம் வேண்டும் என்று தமிழ் நாடு பாட நூல் நிறுவனம் கேட்டுக்கொண்டிருக்கின்றது. நிலம் கையகப்படுத்துகின்ற நிலை ஏறத்தாழ முடிகின்ற தருவாயில் இருக்கின்றது. மேற்கொண்டு கட்டிடங்கள் கட்டுவது, மெஷின்கள் வாங்குவது போன்ற பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. க. சுப்பு:** தலைவர் அவர்களே, மெஷின்கள் வாங்குவதுபற்றிய பேச்சுவார்த்தைகள் முடியும் நிலையில் இருக்கின்றன என்று சொல்கின்றார்கள். அதைப்பற்றிய விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, மெஷின்கள் வாங்குவதைப் பொறுத்தமட்டில், கிழக்கு ஜெர்மனியிலே இருக்கின்ற அச்சு இயந்திரத் தயாரிப்பாளர்களோடு பேசிக் கொண்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் முடிவு எடுக்கப்படவில்லை. முடிவு எடுத்தபிறகு தான், அதைப்பற்றி முடிவாகச் சொல்ல முடியும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் அச்சகத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அந்தத் திட்டத்திற்காக அரசு எவ்வளவு நிதி ஒதுக்கியுள்ளது? அந்த இடத்தில், அந்த அச்சகத்தை உருவாக்குவதற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி எவ்வளவு? இந்தத் திட்டம் எப்போது தொடங்கப்படும் என்று அரசு எதிர்பார்க்கிறது? தனியார் துறையிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற வேலைகளை கூடுமானவரையில் அரசு அச்சகத்திலேயே முடிக்க அரசு முன்வருமா?

திரு. க. மீனாட்சிசுந்தரம்: 'யீல்டு' ஆகாததும் ஆவதும் அந்தந்த நேரத்தின் தன்மையைப் பொறுத்தது. பேசுவதைப் பொறுத்தது. அப்படி 'யீல்டு' ஆவது என்பதை வைத்துத்தான் தகுதி வருகிறது என்றால், அதை நான் 'சேலஞ்ச்' ஆக எடுத்துக் கொள்கிறேன்.

திருமதி வி. ஜெயலட்சுமி: 'யீல்டு' ஆவது என்பது அந்தந்த நேரத்தைப் பொறுத்ததுதான்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இது ஒரு embarassing subjects.

திருமதி வி. ஜெயலட்சுமி: 'யீல்டு' ஆவது என்பது அந்தந்த உறுப்பினர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா பேசும்போது, யாருக்கு வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் 'யீல்டு' ஆவேன் என்று சொல்கிறார். அதில் எந்தவித பெருமையும் கிடையாது. மேலும் ஓர் உறுப்பினர் பேசும்போது குறுக்கிட்டால், அந்த உறுப்பினருக்குச் சங்கடமாகிவிடும். அதுவும் அவர் இஷ்டப்பட்டால்தான் குறுக்கிட முடியும். தேவையில்லாமல் அடிக்கடி குறுக்கிடும்போது, அவர்களால் அதை அனுமதிக்க முடியாது. காரணம் தலைவர் அவர்கள் 20 நிமிடம் ஓர் உறுப்பினருக்குக் கொடுக்கும்போது, குறுக்கீட்டிலேயே 10 நிமிடம் போய்விட்டால், அவரால் முழுமையாகக் கருத்துக்களைச் சொல்ல முடியாது. தொடர்ச்சி விட்டுப்போய் விடும், ஆகவே 'யீல்டு' ஆகமாட்டேன் என்று சொல்வதும் மரபுதான். அதையே ஒரு பெரிய 'issue' ஆக எடுத்துக்கொண்டு யாருக்கு வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் 'யீல்டு' ஆவேன் என்பது சரியாகவும் இல்லை, பெருமையாகவும் இல்லை. ஆகவே இந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: நான் அந்தப் பிரச்சினையை விவாதம் ஆக்க வேண்டாம் என்பதற்காகத் தான் அதைச் சொன்னேன். ஒரு கருத்தைச் சொல்லும்போது, குறுக்கீடு செய்வதன்மூலம், அந்தக் கருத்தை திசை திருப்புவதற்காக என்று அல்ல, மேலும் அந்தக் கருத்தை ஊக்கப்படுத்தத் தான் நான் குறுக்கிட்டு இருப்பேன், வேறல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அந்தப் பிரச்சினையைத் தாண்ட வேண்டும் என்பதற்காகக் குறுக்கிடவில்லை. இதற்காகக் கோபப்படக்கூடாது. பொதுவாகத்தான் சொன்னேன்.



தனி அதிகாரிகள் நியமனத்தைப் பொறுத்தவரையில், அவர்கள் தவறு செய்கிறார்கள் என்று சுட்டிக்காட்டினார்கள். தனி அதிகாரிகள் அத்தனை பேரும் உத்தமர்கள், நேர்மையானவர்கள், அப்படியே அவர்களைப் பூஜிக்கலாம் என்று நான் சொல்லமாட்டேன். எப்படி அரசியல்வாதிகள் தவறு செய்கிறார்களோ அதே மாதிரி தனி அதிகாரிகளும் தவறுகள் செய்கிறார்கள் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் இன்றைக்கு தனி அதிகாரிகள் செய்கிற அத்தனை தவறுகளும் அரசியல் வாதிகள் மீது சுமத்தப்படுகிற நேரத்தில், அந்தக் குற்றச்சாட்டிலிருந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்று சொல்கிற போது, இதற்கு முன்பு இருந்த அரசியல் வாதிகள் எந்த அளவு யோக்கியமாக நடந்துகொண்டார்கள் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். அப்படிச் சொன்னால் சிலருக்குக் கோபம் வரும். பல கூட்டுறவுச் சங்கங்களின் மீது, அதன் தலைவர்களாக இருந்தவர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் சொல்லப் பட்டு, அதன் விசாரணை இன்னும் கூட முடியவில்லை என்ற நிலையில் இருக்கின்றது. அதற்காகப் போடப்பட்ட பாரதி கமிஷன் பணிகள் இன்னும் முடியவில்லை. அதற்கான ஆவணங்களை இந்த மன்றத்திலிருந்துகூட இன்னும் அனுப்புகிறோம். அப்படிப்பட்ட நிலைமைதான் இன்னும் இருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: இந்த மன்றத்திலிருந்து அதற்கான ஆவணங்கள் அனுப்பப்பட்டன என்று சொன்னார். ஏற்கெனவே நடந்த ஊழல்கள் என்றும் சொன்னார். அவைகள் எப்படி நடந்த ஊழல்கள் என்றால், டெலிபோன் பில் கட்டவில்லை, கார் எடுத்துக்கொண்டு போனார், அதிலே 24 ரூபாய் இதிலே 54 ரூபாய் என்று இப்படிப்பட்ட ஊழல்கள் நடந்ததாகச் சொன்னார்கள். அது கடுகு போல. இப்போது உங்கள் ஆட்சியில் மலைபோல ஊழல் நடக்கிறது என்பதைச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் குறுக்கிட்டுச் சொன்னதால் சொல்கிறேன். அவர் சொல்லாமல் இருந்திருந்தால், பிரச்சினையை இத்தோடு விட்டிருப்பேன். அவர் கண்ணுக்குக் கடுகுபோல் தெரிகிறது. ஆனால் அடித்திருக்கிற கொள்ளை எனக்குத் தெரியும். ஆதாரத்தோடு சொல்ல முடியும். திட்டமிட்டு ஒரே நாளிலே ஒரு கூட்டுறவு மத்திய வங்கியில் 500 பிரோக்கள் வாங்குகிறார்கள். பேரம் பேசிக்கொண்டு வாங்குகிறார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரத்தை என்னிடம் கேட்டதுபோல, இதற்கு அவர் ஆதாரத்தை வைத்துக்கொண்டு பேச வேண்டும். இதுபோல் நானும் ஆதாரத்தோடு உங்கள்மீது பிரச்சினைகளைக் கொண்டுவரத் தயாராக இருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: அவர் தயாராக இருப்பதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தவறே செய்யவில்லை என்பது போல பேசுகிறார். ஊழலே செய்யாதவர்கள் போலவும், நேர்மையானவர்கள் போலவும் பேசுகிறார். இதை நாட்டிலுள்ளவர்கள் ஏற்றுக்கொள்வார்களா? நிச்சயமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இப்படி அடித்திருக்கிற கொள்ளைகள் இன்றைக்கும் பதிவில் இருக்கின்றன. நீங்கள் செய்திருக்கிற தவறுகள் மறைந்துவிடும் என்று நினைத்தால், நிச்சயமாக மறையாது என்பதை மட்டும் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொருவரைப்பற்றியும் தனிப்பட்ட முறையில் குற்றச்சாட்டு சொல்ல முடியும். ஆதாரமிருக்கிறதா என்றால் இருக்கிறது. காட்ட முடியுமா என்றால், காட்ட முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கிருக்கிற நிலைமை, தனி அதிகாரிகள் பதவிக்காலத்தை நீடிக்கிறோம் என்று சொன்னால், "நீடிக்கலாம்" அல்லது "நீடிக்க வேண்டாம்" என்று சொல்லலாம். அதை விட்டுவிட்டு ஊழல் செய்கிறார்கள் என்று சொன்னால், நிச்சயமாக நான் சொல்வேன், இந்த ஊழலிலே யார் ஈடுபட்டாலும், ஆட்சியில் உள்ளவர்கள் ஈடுபட்டாலும், கட்சியில் உள்ளவர்கள் ஈடுபட்டாலும், யார் ஈடுபட்டாலும், ஊழல் எந்த நிலையில் இருந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிற தைரியம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குத்தான் இருக்கிறதே தவிர, வேறு யாருக்கு இருந்தது? (கைதட்டல்).

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அவர் 'ஈல்ட்' ஆனதால் நான் பேசுகிறேன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, "ஊழல்" என்று முதல் நாள் சொல்லிவிட்டு, மறுநாள் "கே. பிளான்" என்று அதை வர்ணிக்கிற வழக்கம் எங்கள் கட்சியில் இல்லை.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் 'ஈல்ட்' ஆகிறேன் என்பதால், அவர் எழுந்துகொண்டிருக்கிறார். நானும் அனுமதிக்கிறேன். ஆனால் அவர் ஒரு நாள் 'கட்சி' என்று சொல்கிறார். ஒரு நாள் 'தொழிற்சங்கம்' என்று சொல்கிறார். ஒரு நாள் 'ஆசிரியர்' என்கிறார்.



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் குறுக்கீட்டை அனுமதிக்காமல் பேசலாம்.

திரு. எஸ். ஆர். இராதா: இப்படி அடிக்கடி மாறிக்கொண்டிருப்பது அரசியல் கட்சிக்கு ஆபத்தான ஒன்று. ஆசிரியர்கள் மேடைக்குப் போனால், "நான் ஆசிரியர், கட்சி கிடையாது" என்பதும், கட்சி மேடைக்குப் போனால் "நான் ஆசிரியர் கிடையாது, கட்சி" என்பதும், அதற்குப் பின்னால் "தொழிற் சங்கம்" என்பதும், நமக்குப் புரியாமல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் எதில்தான் நிற்கிறார் என்று முதலில் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: என்னுடைய மாவட்டக்காரராக இருந்தும், இதுவரை என்னைப்பற்றி அறியாதிருப்பதற்காக வருத்தப்படுகிறேன். நான் ஆசிரியராக இருந்து, தொழிற் சங்கத் தலைவராக ஆகி, இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொறடாவாக இருக்கிறேன். ஆசிரியர் சங்கத்திற்குத் தலைவராகவும் இருக்கிறேன். ஒருவர் எவ்வளவோ பொறுப்புகளில் இருப்பார்கள். அந்த அந்தப் பொறுப்பிலே இருக்கும் போது அந்த அந்தப் பணிகளைச் செய்கிறார்கள். அவ்வளவுதான். ஆனால் கட்சி விஷயங்களை ஆசிரியர் சங்கக் கூட்டங்களில் பேசுவதில்லை. இதுபோல் பல பொறுப்புகளில் பணியாற்றுவதென்பது அனைவராலும் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒன்றுதான். எங்களாலும் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒன்று. உங்களாலும் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒன்று. நீங்களும் கட்சியை வைத்துக்கொண்டு சங்கத்தை நடத்திக்கொண்டிருக்கிறீர்கள்.

திரு. எஸ். ஆர். இராதா: கட்சிக்காரர் என்பதால், மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் போன்ற நண்பர்கள் ஆசிரியர்களிடத்தில் எடுத்துச் சொல்லி, அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்பதை அடிக்கடி நினைத்துப்பார்த்துக்கொண்டு, அவர் இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரச்சினையைத்தான் எடுக்கிறாரே தவிர, நிச்சயமாக ஆசிரியர்களுக்காகவோ அல்லது மற்றவர்களுக்காகவோ இல்லை. அவர்கள் பிரச்சினைகளை எடுக்கமாட்டார் என்பதை நாட்டிற்குச் சொன்னதற்காக . . .

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இவர் என்னதான் இப்படிச் சொன்னாலும், ஆசிரியர் சமுதாயம் இவர் சொல்வதை ஏற்றுக்கொள்ளாது. ஆசிரியர் சமுதாயம் அவர்களின் பிரதிநிதியாக என்னை

ஏற்றுக் கொண்டுதான், அனைத்து ஆசிரியர்களும் சேர்ந்து சமீபத்தில் நடத்திய மிகப் பெரிய • போராட்டத்தின் போராட்டக் குழுவின் 13 பேர்களில் என்னையும் ஒருவனாக நியமித்திருக்கிறார்கள் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

The Hon. Dr. H. V. HANDE: May I suggest to the Hon. Deputy Chairman that, in view of the paucity of time, it would be better to go into the subject proper rather than exchanging compliments?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இன்னும் நான்கு உறுப்பினர்கள் பேசவேண்டியிருக்கிறது. அதன் பிறகு மாண்புமிகு அமைச்சர் பேசவேண்டியிருக்கிறது. இரண்டு மணியானாலும்கூட முடியாதுபோலிருக்கிறது. ஆகவே விரைவாக முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: நான் இந்த விஷயத்தைக் கூறிவிட்டு முடித்து விடுகிறேன். தனி அதிகாரிகள் நியமனத்தை வரவேற்கிறேன் என்ற முறையில் ஒரு பிரச்சினைபற்றி முன்னதாகவே தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு அவர் ஒரு கட்சிக்குப் போனதால் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கும் ஒரு ஆசை. ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இது மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரத்தின் சொந்தப் பிரச்சினை. உறுப்பினர் அவர்கள் கூட்டுறவு சங்கத்தைப்பற்றிப் பேசலாம்.

(பிற்பகல் 12.25)

திரு. எஸ். ஆர். இராதா: துணைத் தலைவரவர்களே, நான் அதைத் தெளிவுபடுத்துவதற்காகச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் எனது மாவட்டத்தைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். அதற்காக அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஒரே மாவட்டத்தில் இருக்கிற தகராறுதான் இது. இது அரசியல் ரீதியாக வந்தது. கலைஞர் அவர்களிடத்தில் ஏற்பட்ட தகராறு கூட அரசியல் ரீதியானதுதான். மாவட்டத்தில் இருக்கிற நண்பர்கள் என்றால், எல்லோரும் மாவட்டத்தில் நண்பர்களாகத்தான் இருப்போம். அது வேறு, அரசியலிலே தகராறு வருகிறது என்று சொன்னால், கொள்கை அடிப்படையிலே, சில



பிரச்சினைகளின் அடிப்படையிலேதான் தகராறு வருகிறது. ஆனால் இந்த தனி அதிகாரிகளைப் பொறுத்தவரையில், இன்றைக்கு அந்தக் கூட்டுறவு சங்கங்களினுடைய செயல் திறனை நம்முடைய அமைச்சர் அவர்கள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். • அதை இன்னும் அதிகமாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனி அதிகாரிகள் இன்றைக்கு எந்த அளவுக்குச் செயல்படுகிறார்கள் என்பது குறித்து என்னுடைய மனக் குறையை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அரசியல்வாதிகள் ஒரு பொறுப்பை ஏற்றுக்கொண்டு செயலாற்றுகிற நோத்தில் பல நடவடிக்கைகள் வருகின்றன. ஆனால் கூட்டுறவு சங்கங்களானாலும் சரி, நகராட்சிகளானாலும் சரி, வேறு இடங்களிலே போடுகிற தனி அதிகாரிகளானாலும் சரி, எந்தத் தனி அதிகாரியாவது அந்தப் பிரச்சினைகளில் அகப்படுகிறார்களா என்றால் அகப்படுவதில்லை, அவர்களுக்கு எல்லா வகையிலும் பாதுகாப்பு இருக்கிறது. எந்தத் தனி அதிகாரியாக இருந்தாலும், அவர்கள் தவறு செய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்குகிறார்கள். ஆனால் அரசியல்வாதிகள் வந்தால்தான், அவர்கள் அவசரத்திலே ஏதாவது செய்துகொண்டு, அதிகாரிகள் சொல்லி, அவர்களே மாட்டிக்கொண்டு—அதை செய்வதற்குத் துணையாக இருந்தவர்கள் பின்னாலே பார்த்தால் அவர்களே அதற்கு ஆதாரமாக அமைந்து—இப்படித் தவறு செய்கிற நிலைமைகள் எல்லாம் வந்துவிடுகின்றன. அதனால் நம்முடைய அமைச்சர் அவர்கள், தனி அதிகாரிகளாக இருக்கிறவர்கள் எந்த அளவுக்குச் செயல்படுகிறார்கள், கூட்டுறவுச் சங்கத்திலே எந்த அளவுக்குக் குறைபாடுகள் இருக்கின்றன என்று பார்க்க வேண்டும். அவைகள் கூட்டுறவு வங்கியானாலும், கூட்டுறவு பண்டக சாலைகளானாலும், தனி அதிகாரிகளுடைய செயல்திறன் எப்படி இருக்கிறது, அவைகள் வளர்ச்சியடையவில்லை என்றால் ஏன் வளர்ச்சியடையவில்லை, அவர்கள் எங்கெங்கே தவறு செய்கிறார்கள், எந்த வகையில் நடக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். வெறும் 'டையரி' யை மட்டும பார்த்து முடிவு செய்யும் நிலைமைக்கு வரக்கூடாது. கூட்டுறவுச் சங்கங்களினுடைய வளர்ச்சியைப் பார்க்க வேண்டும்; அவைகள் வளர்ச்சியடையவில்லை என்று சொன்னால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அளவுக்கு அந்தக் காலத்தை நாம் உருவாக்கிக் காட்ட வேண்டும். ஏனென்றால் தனி அதிகாரி என்றால், ஏதோ ஒரு பதவியின் காரணமாக ஒரு பெரிய நிலையிலே வாழ்ந்துவிட்டு, ஏதோ நடந்தால் நடக்கிறது, இல்லாவிட்டால் போகிறது என்ற அளவுக்கு அவர்கள் போகக்கூடாது. இன்றைக்கு அரசியல்வாதிகள் அந்தப் பொறுப்பை ஏற்கிறபோது மற்ற எதிர்க் கட்சிக்காரர்கள் எப்படி கேட்கி

றார்கள்? ஏன் வளர்ச்சி இல்லை, ஏன் அதைச் செய்யவில்லை என்று கேட்கிற உரிமை நமக்கு எப்படி இருக்கிறதோ, அதுபோல் தனி அதிகாரிகள் கூட கூட்டுறவு சங்கங்களிலே பொறுப்பு ஏற்கிற நேரத்தில், அவர்களைக் குறித்து கேட்கிற அளவுக்கு நிலைமையை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் சில நிலைமைகள் உருவாக்கப்படுமானால், தனி அதிகாரிகள் நல்லமுறையில் பணியாற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படும்; அவர்களுக்கு ஒரு பயன் இருக்க வேண்டுமென்ற அளவுக்கு நாமும் காரியம் ஆற்றுவோம். கூட்டுறவுச் சங்கத் தேர்தலைப் பொறுத்தவரையில், நிச்சயமாக இந்த அரசு நல்ல நோக்கத்தோடு சில விதிமுறைகளை இதுவரை கூட்டுறவுச் சங்கத்திலே இல்லாத அளவுக்கு உருவாக்க வேண்டும். ஊராட்சிமன்ற தேர்தலைப் பொறுத்தவரையில், புதிய விதிமுறைகளை உருவாக்கி, நகரசபைத் தலைவர் தேர்தல் என்று கொண்டுவந்து ஒரு சரித்திரம் படைத்திருக்கிற அளவுக்கு நம்முடைய ஆட்சி அமைந்து இருப்பதைப்போல், கூட்டுறவுத் துறையிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு இந்த அரசு புதிய விதிமுறைகளைக் கொண்டு வந்திருக்கிறது. அந்தப் புதிய விதிமுறைகளை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக விரைந்து செய்வார்கள் என்பதிலே எனக்கு நம்பிக்கையுண்டு. இங்கேகூட பேசும்போது சொன்னார்கள். அரசியல் சட்டத்தைக் கூட நான்கே நாட்களில் நிறைவேற்றி விட்டார்கள், அவசரத்தின் காரணமாக என்று சொன்னார்கள். அப்படி அவசரத்தின் காரணமாக நிறைவேற்றியதால்தான், பல தடவை அதை மாற்றி மாற்றி, இன்னும் உருப்படியான நிலைமைக்கு வராத அளவுக்கு மாற்றுகிற நிலைமை இருக்கிறது. அந்தமாதிரி ஆகிவிடாமல் அரசு இந்தச் சட்டத்தை, காலத்தைக் கருதாமல், நன்கு பார்த்து உருவாக்க வேண்டும். நிச்சயமாக நாம் நாட்டிலே ஒத்துக்கொண்டிருக்கலாம். நாம் தேர்தலுக்குப் பயப்படுகிறவர்கள் அல்ல. தேர்தலிலே நாம் திறமையானவர்கள் என்பதற்குச் சான்றாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட அவருடைய தொகுதியிலே முழுமையாக வெற்றி பெற்றிருக்கிற காரணத்தாலே, கூட்டுறவு சங்கத் தேர்தலிலே கூட எல்லா சங்கத்திற்கும் தேர்தல் நடத்த வேண்டுமென்ற முறையை அரசு எடுத்துக் கொள்ளக்கூடாது. விதிமுறைகளை அமல் செய்யும் நேரத்தில் எந்தெந்த கூட்டுறவுச் சங்கங்களிலே பிரச்சினைகள் இல்லையோ அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உடனடியாக தனித்தனியாகத் தேர்தல் நடத்த வேண்டும், அப்படித் தனித் தனியாக நடத்துகிற



நேரத்திலே, அரசியல்வாதிகளின் தலையீடு இல்லாத அளவுக்கு உண்மையான, தூய்மையான கூட்டுறவுவாதிகளாக இருக்கிறவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் ஒரு பக்கம் பார்த்தால் அரசியல்வாதியாக நடிக்கிறார்கள்; அந்தப் பக்கம் போனால் கூட்டுறவுவாதி; இன்னொரு பக்கம் போனால் வேறுவாதி, இப்படிப் பலமாதிரி மாறிக் கொண்டிருக்கிறவர்களுக்கு அரசு இடம் தராத அளவுக்கு ஒவ்வொரு கூட்டுறவு சங்கமாக இருந்தாலும், அதனுடைய குறைபாடுகளை நிவர்த்தி செய்து உடனடியாகத் தேர்தலை நடத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதுவரையில் இந்தக் கால அவகாசத்தை நான் ஏற்றுக்கொண்டு, இதை வரவேற்று அமைகிறேன்.

(பிற்பகல் 12-30)

திரு. எல். ஜெயச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டத்தை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்து அந்தத் தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை மேலும் ஒரு ஆண்டு காலத்திற்கு நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்தச் சட்ட முன்வடிவை நான் ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்லுவதற்கான வாய்ப்பு அளித்தமைக்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை முன்பு நீட்டிக்க வேண்டும் என்று கடந்த ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்ட முன்வடிவின்மீதும் நான் உரையாற்றினேன். அப்போதே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் இதற்கான தேர்தலை அரசு நடத்த இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதற்குப் பின்னாலே மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையில் உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஒரு காலகட்டத்திற்குள் நடந்து முடிந்துவிடும் என்று சொல்லி, கூட்டுறவு அமைப்புகளைப் பொறுத்தவரையில், அவைகளுக்கான தேர்தல்களும் நடக்கும் என்று காலத்தை மட்டும் குறிப்பிடாமல் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஆளுநர் உரையில் சொல்லப்பட்டவாறே, அண்மையில் தமிழகத்தில் நல்ல முறையில் உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை அரசு நடத்தி முடித்திருக்கிறது. அதைப் போலவே 3 நாட்களுக்கு முன்பு பேரவையில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போதும், வரும் ஓராண்டுக் காலத்திற்குள்ளாகவே கூட்டுறவு அமைப்புகளுக்கான தேர்தல்களை நடத்திவிடுவேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான்

அவருக்குப் பாராட்டு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவ்வாறே அவர்கள் நிச்சயமாக நடத்தி முடிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. என்றாலும் அதுகுறித்து ஒரு சில கருத்துக்களை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில், கூட்டுறவுத் துறையில் 431 தனி அலுவலர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய மாநிலக் கூட்டுறவு வங்கிகள், விற்பனைப் பண்டகசாலைகள், நிலவள வங்கிகள் ஆகியவற்றில் எல்லாம் இன்றைக்குத் தனி அதிகாரிகள்தான் பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் பணி நல்ல முறையில் நடைபெறுகிறதா, அவர்கள் சரியான முறையில் செயல்படுகிறார்களா என்று பார்க்கும்போது, பொதுவாக அவர்கள் நல்லமுறையில்தான் செயல்படுகிறார்கள். ஒரு சில இடங்களில் தவறுகள் நடக்கத்தான் செய்கின்றன. இல்லை என்று நான் சொல்லவில்லை. கூட்டுறவுத் துறையில் ஏழை எளிய மக்களுக்கு இந்த அரசும் அமைச்சர் அவர்களும் செயல்படுத்திவரும் திட்டங்களைப் பார்க்கிறபோது, அரசையும் அமைச்சர் அவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய கூட்டுறவு வங்கிகளை எடுத்துக்கொண்டால், 1984-85 ஆம் ஆண்டில் கூட்டுறவு விவசாயக் கடனுக்காக ஏறத்தாழ ரூ. 110 கோடி கொடுத்திருக்கிறார்கள். நடப்பு ஆண்டில் அதே காரியத்திற்காக இப்போது ரூ. 110 கோடி அளவுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதைப் போலவே நகைக் கடனை எடுத்துக்கொண்டால், கடந்த ஆண்டு ரூ. 96 கோடி கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆண்டைப் பொறுத்தவரையில், விவசாயிகளுக்கு நகைக் கடனுக்காக இதுவரை ரூ. 126 கோடி கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, விவசாயிகளுக்குக் கூட்டுறவுத் துறையின் மூலம் கொடுக்கப்பட்ட இந்தக் கடன் ரூ. 3,000 லிருந்து ரூ. 5,000 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்காகவும் நான் அரசையும் அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நிலைமை இவ்வாறு இருந்தாலும்கூட, கூட்டுறவு வங்கிகளும் மற்ற அமைப்புகளும் தமிழகத்தில் மேலும் நல்ல முறையில் செயல்படுவதற்கு தேர்தல்கள் நடைபெற்று, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பொறுப்புக்கு வந்தால், இன்னும் நன்றாகச் செயல்பட வாய்ப்பாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அண்மையில் கூட்டுறவுத் துறை பற்றிய பத்திரிகை ஒன்றில் படித்தேன். கூட்டுறவு வங்கிகள் ஆண்டில் 481 லட்சம் ரூபாய் லாபமாகச் சம்பாதித்துக் கொடுத்தன என்று பார்க்கும்போது, அது பாராட்டுக்குரியதாக இருக்கிறது. எனவேதான் சொல்கிறேன், அவர்கள் இப்போதும் நல்ல வகையிலேதான் பணி செய்து கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் கூட்டுறவு அமைப்புகளுக்கான தேர்தல்களை நடத்தியாக வேண்டும் என்று அனைத்து உறுப்பினர்களும் இங்கே கேட்பதற்குக் காரணம், எதையும் ஜனநாயக முறைப்படி செய்ய வேண்டும் என்பதுதான். மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் அந்தப் பொறுப்புக்கு வந்தால், அவர்களின் பணி இன்னும் நல்ல முறையில் நடப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்ற கருத்தில்தான் அனைவரும் இங்கே விரைவில் தேர்தல்கள் நடக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள், நாமும் அந்தக் கருத்தை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல், பெரும்பான்மையான கூட்டுறவு அமைப்புகள் நல்ல முறையில் செயல்படும்போது, சில இடங்களில் தவறுகள் நடக்கத்தான் செய்கின்றன. குறிப்பாக விற்பனைப் பண்டகசாலைகளில் தவறுகள் நடக்கத்தான் செய்கின்றன. ஆனால் தமிழக அரசும் சரி, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சரி, துறை அதிகாரிகளும் சரி, அப்படிப்பட்டவர்கள்மீது சரியான நடவடிக்கை எடுத்துத்தான் வருகிறார்கள். சூப்பர் மார்க்கெட் பற்றிச் சொல்லும்போது கோவையில் உள்ள சிந்தாமணி, திருச்சியில் உள்ள சூப்பர் மார்க்கெட் போன்றவைகள் எல்லாம் சிறப்பாகவும் நல்ல முறையிலும் செயல்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அதற்காக நாம் அவைகளைப் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறோம். மற்ற மாவட்ட சூப்பர் மார்க்கெட்டுகள் நல்ல முறையில் பணியாற்றவில்லை என்று நான் சொல்ல முன்வரவில்லை. ஆனால் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள சூப்பர் மார்க்கெட் நட்டத்தில் நடந்து கொண்டிருக்கிறது. கூட்டுறவு வங்கிக்கு ஏறத்தாழ 1 கோடி ரூபாய் அளவுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே அதை மூடிவிடலாமா என்ற நிலைகூட வந்தது. எப்படியாவது அதைச் சரி செய்து, நல்ல முறையில் செயல்பட வைக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் முறையிட்டேன். அது நல்ல முறையில் நடக்காததற்கு என்ன காரணம் என்று தனி அலுவலர் அவர்களையும், மேலவை உறுப்பினரான என்னையும், அதைப் போலவே மற்றவர்களையும், அழைத்துப் பேசி, என்ன செய்தால் அது நல்லமுறையில் செயல்படும் என்று ஆலோசனை செய்து, அதற்கான வழிவகைகளைக் கண்டு சொன்னார்கள். எப்படியானாலும் கடலூர் கூட்டுறவு சூப்பர் மார்க்கெட்டை

மூடி விடாதீர்கள் என்றும், என்னதான் நட்டம் இருந்தாலும், அது எதனால் ஏற்படுகிறது என்று ஆராய்ந்து பார்த்து தக்க நடவடிக்கை எடுப்போம் என்று சொன்னேன். அமைச்சர் அவர்களும் அதற்கு ஏற்பாடு செய்து, தனி அலுவலரும் நல்ல முறையில் பொறுப்பேற்று, விரைவில் நன்றாகச் செயல்படச் செய்வேன் என்றார்கள்.

(பிற்பகல் 12-35)

ஒருவர் கூட்டுறவுத் துறையில் கையாடல் செய்தால், அல்லது வேறு ஏதாவது தவறு செய்தால், அவர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியாத அளவிற்கு கூட்டுறவுச் சட்டம் இருக்கிறது. உடனடியாக நடவடிக்கை எடுக்க கூட்டுறவுச் சட்டம் இடம் தரவில்லை. ஒருவர் கையாடல் செய்தால், அதை உடனடியாக விசாரித்து அவரைக் கைது செய்து, பணி நீக்கம் செய்யக் கூடிய அளவிற்கு கூட்டுறவுத் துறை சட்ட விதிமுறைகள் இல்லை. ஆகவேதான் அங்குள்ளவர்கள் தவறுகள் செய்கிறார்கள். ஆகவே அந்தச் சட்டத்தை உடனடியாக மாற்றி, யார் கையாடல் செய்தாலும், உடனடியாக சட்டப்படி அவர்மீது நடவடிக்கை எடுத்து, அந்தப் பணத்தை மீண்டும் பெற, வழிவகை செய்ய வேண்டும். இதிலே காலதாமதம் ஆகக்கூடாது. இப்போதுள்ள சட்டமானது இதற்கு வழிவகுக்கவில்லை என்பதைக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நில்வள வங்கியைப் பொறுத்த வரையில், அவைகள் நல்ல முறையில் செயல்களைச் செய்துகொண்டிருக்கின்றன. இருந்தாலும் விவசாயிகளுக்கு டிராக்டர்கள், உபகரணங்கள், கடன்கள் ஆகியவை வழங்குவதில் காலதாமத மாகிறது. கடனைக் கொடுப்பதற்கு அவர்கள் விதிக்கும் நிபந்தனைகளால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதனால் காலதாமதமாகிறது. இதைப் போக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இதைப் போன்ற பல்வேறு பிரச்சினைகள் கூட்டுறவுத் துறையிலே இருக்கின்றன. கூட்டுறவுக் கொள்கை பற்றிய விவாதத்தின்போது, அவற்றைப் பற்றியெல்லாம் பேசிக்கொள்ளலாம். இருந்தாலும் நான் கூறியவற்றை யெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக விரைவிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையைச் சார்ந்த 600 இளநிலை ஆய்வாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். முன்பு ஒரு முறை இதைப் பற்றிப் பேசியபோது, மாண்புமிகு



அமைச்சர் அவர்கள், நிச்சயமாக அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படு வார்கள் என்று கூறினார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூட கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ஆம் தேதியன்று ஆசிரியர்களின் பணி நிரந் தரம் பற்றிப் பேசும்போது தெரிவித்த ஒரு கருத்தை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இப்போது கொண்டு வருகிறேன். எந்த ஒரு அரசு ஊழியராக இருந்தாலும், ஒரு வருடத்திற்கு மேலாக பணி புரிந்து, நிரந்தரம் செய்யப்படாமல் இருந்தால், அவர்களின் பணி நிரந்தரம் செய்யப்படும் என்ற உறுதிமொழியை இதே மாமன்றத்திலே அளித்தார்கள். ஏறத்தாழ 10 ஆண்டுக் காலம் வேலை செய்த 600 இளநிலை ஆய்வாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்களுடைய பணியை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று நான் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எத்தனையோ அரசு ஊழியர் களுக்குப் பணி நிரந்தரம் செய்ததைப் போலவே இதே துறையில் உள்ள அமைச்சுப் பணியாளர்களை நிரந்தரம் செய்ததைப் போல, இவர்களுடைய பணியையும் நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கூட்டுறவுத் துறையில் உள்ள பல்வேறு திட்டங்களுக்கு வாழ்த்துக் கூறி, இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து அமைகிறேன்.

திரு. ப. மாணிக்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவை நான் ஆதரிக்கவில்லை, எதிர்க்கிறேன். இந்தச் சட்டத்தை உருவாக்குவதற்காக பல ஆண்டுக் காலமாக, பல இடங்களுக்கு நேரிடையாகச் சென்று, பல அனுபவங்களைக் கவனித்து, செலக்ட் கமிட்டி இந்தச் சட்டத்தைத் தயாரித்தது. ஆறு மாதங்களுக்கு மேல் போகாமல் அல்லது ஓராண்டிற்குள் இந்தச் சட்டத்திற்குரிய விதிகள் இயற்றப்பட்டு, இந்தச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படும் என்று 1983 ஆம் ஆண்டில் வாக்குறுதி கொடுக்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து இவ்வளவு நாட்கள் இந்தச் சட்டத்திற்குரிய விதிகளை உருவாக்குவதற்குத் தேவைதானா என்பது தெரியவில்லை. காரணம், நம்முடைய மாநில அரசில் உள்ள சட்டத் துறை இம்மாதிரியான சட்டங்களையும், விதிகளையும் உரு வாக்குவதில் நல்ல அனுபவம் பெற்றிருக்கிறது. ஏற்கெனவே உள்ள விதி களை வைத்துக்கொண்டு, இடைக்காலத்திலே ஏற்பட்டுள்ள புதிய அம்சங் களை கவனத்திலே எடுத்துக்கொண்டு, செலக்ட் கமிட்டி கடந்தகால அனுபவங் களை வைத்துச் சொன்ன பல யோசனைகளை வைத்துக்கொண்டு, இந்த

விதிகளைத் தயாரிக்க இவ்வளவு அவகாசம் தேவைதானா? ஏற்கெனவே 9 வருடம் 10 மாதம் என்று இருந்ததை 10 வருடம் 10 மாதம் என்று இப்போது தனி அதிகாரிகளின் பதவிக் காலம் நீட்டிக்கப்படுகிறது. 1983 நவம்பருக்குப் பிறகு இப்போது வந்து மீண்டும் ஓராண்டுக்கு நீட்டிப்பு கேட்பது என்பது நியாயமற்றது, அவசியமற்றது. நான் நோக்கம் கற்பிக்க விரும்பவில்லை. ஆறு மாதங்களுக்குள் விதிகளை வகுத்து நடைமுறைப்படுத்துவோம் என்று கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் அப்படி என்ன கஷ்டம் இருக்கிறது? அல்லது கூட்டுறவுத் துறையில் அப்படி என்ன தவிர்க்க முடியாத நிலைமைகள் வந்துவிட்டன? எனவே இந்தக் காரணங்கள் ஒழுக்கமற்ற காரணங்கள், காலதாமதமின்றி இந்த விதிகள் வகுக்கப்பட

(பிற்பகல் 12-40)

வேண்டும். அரசு 3 மாதம் நீடிப்பு தேவை என்று சொன்னால், அது நியாயம் என்று ஏற்றுக்கொள்ள முடியும். ஒரு வருடம் என்று சொன்னால், இனிமேல் விதிகளைப் புதிதாக எழுதப் போகின்றார்களா? அப்படி என்றாலும், விதிகளை எழுத ஒரு வருடம் தேவைப்படாது. எனவே இந்தத் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை ஒரு ஆண்டுக்காலம் நீடிப்பது கூட்டுறவுத் துறையினுடைய உணர்வுகளை அழித்துவிடும், பல இடங்களிலே நிர்வாகத்திலே சுத்தம் இருக்கலாம். சில இடங்களிலே சுத்தமற்றவர்கள் இருக்கலாம். அந்த அனுபவத்திலே நாம் போகவில்லை. அதைப்பற்றி தெளிவாகவே விவாதம் நடந்துவிட்டது. எனவே அனுபவம் பலவிதம் இருக்கின்றது. இந்த நிர்வாகத்திலே அழுக்கு, அந்த நிர்வாகத்திலே அழுக்கு இல்லை; அந்தக் காலத்திலே இல்லை, இந்தக் காலத்திலே இல்லை என்பதல்ல. அதற்குள்ளே போக வேண்டாம். ஆற்று நீரிலேகூட மாசு இருக்கின்றது. ஓடுகின்ற நீரிலேகூட பாசி படிந்திருக்கின்றது. அதுபோல இதிலே மட்டும் எப்படி இருக்காது? ஆனால் புதிய விதிகள் இயற்ற ஒரு ஆண்டு தேவையா? தேவையில்லை. அதனாலேதான், இதை நான் சொல்லிக்கொள்கிறேன். தனி அதிகாரிகளுடைய காலத்தை நீட்டிப்பது பற்றி நான் சொல்கின்றபோது, எனக்கு அதிகாரிகள் மீது கோபமோ வெறுப்போ இருக்கிறது என்பதல்ல. கூட்டுறவுத் துறை என்கின்ற உணர்வு அழிந்துகொண்டிருக்கின்றது. அது ஆபத்தானது. அதனாலேதான் இந்தச் சட்ட முன்வடிவிலே ஒன்றை வலியுறுத்த விரும்புகிறேன். ஒரு வருடம் என்று சொல்லியிருந்தாலும், அதற்கு முன்கூட்டியே



விதிகளைத் தயாரித்து அதன் அடிப்படையிலே தேர்தலை நடத்த அரசு முன்வர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அப்படிக் கொண்டுவந்தால், நான் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நடந்த விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய நல்ல கருத்துக்களையெல்லாம் எடுத்து வைத்திருக்கிறார்கள். நல்ல கருத்துக்களுக்கு இந்த அரசாங்கம் என்றைக்கும் செவி சாய்க்கும் என்பதை நான் இந்த நேரத்திலே பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுடைய முதலமைச்சர் அவர்களைப் பொறுத்த அளவுக்கு, தனி அதிகாரிகளை இன்னும் நீடிப்பது சரியா தவறா என்று கேட்டால், இந்த அரசாங்கத்தினுடைய சரியான கொள்கை, சரியான பதில் அது சரியில்லை என்பதுதான் என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் இன்றைக்கு காலத்தை நீடித்துக் கொடுப்பதற்குக் காரணமே இனி வருகின்ற காலங்களில் தவறுகள் நடக்காமல் இருப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பதுதான். புதிய விதிமுறைகளைச் சரியான முறையில் அமைக்க வேண்டுமென்ற கருத்தில்தான் இந்தக் கால நீடிப்பு கேட்கிறோமே தவிர, அந்த அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீடிக்க வேண்டும் என்பதற்காக அல்ல. அப்படி நீடிப்பது சரி என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வாதிடாது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தனி அதிகாரிகள் பதவிக்கால நீடிப்பு ஒரு வருடம் என்று கேட்டாலும்கூட, எவ்வளவு வேகமாகத் தேர்தலைச் சந்திக்க முடியுமோ அவ்வளவு வேகமாக அதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிய நேரத்திலே ஒன்றைச் சொன்னார்கள். நாங்கள் தேர்தலைச் சந்திக்கவே பயந்துகொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அவர்களுக்கு நான் ஒன்று மட்டும் சொல்லிக்கொள்கிறேன். எங்களுடைய முதலமைச்சரைப் பொறுத்தவரையில், லாப நஷ்டங்களைப் பார்க்கக்கூடிய உணர்வோடு இல்லை. பொதுமக்களுக்கு எது சரியாக இருக்குமோ, அவர்களுக்கு நன்மையாக இருக்குமோ அதுதான் நடக்க வேண்டும் என்ற கொள்கைக்குச் சொந்தக்காரர்களாக இருக்கின்றார்கள். முதலமைச்சர் அவர்கள் அப்படி இருந்துகொண்டிருக்கின்றார்கள் என்பதை

இந்த நேரத்திலே நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெளிவாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அடிப்படையிலேதான் நிச்சயமாக விரைவில் தேர்தலை நடத்துவோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு வருட காலம் நீடிப்புக் கேட்டாலும்கூட, ஒரு வருடத்திற்குள்ளாகவே தேர்தல் நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் முனைப்போடு எடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நான் சட்டமன்றப் பேரவையிலே சொன்னதைத்தான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் தவறுகள் நடப்பதாகச் சொன்னார்கள். 26 ஆயிரம் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழகத்திலே இருக்கின்றன. அதிலே எத்தனையோ அதிகாரிகள் இருக்கின்றார்கள். அவர்கள் எல்லோரும் சரியாக இருக்கின்றார்களா என்று பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு சில இடங்களிலே தவறாக நடந்துகொண்டிருக்கலாம். அப்படி இருந்தால், அந்தத் தவறுகளை முறையாக ஆதாரங்களோடு எங்கள் மத்தியிலே சொன்னால், உங்களை வைத்துக்கொண்டே அதுபோன்ற அதிகாரிகளை 'சஸ்பெண்ட்' செய்யவும் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். அதிகாரிகள் எல்லாம் எங்களுக்குச் சொந்தக்காரர்கள் அல்ல. அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகுதான் அல்லது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்த பிறகுதான் உண்டாக்கப்பட்ட அதிகாரிகள் அல்ல. அன்று காங்கிரஸ்காரர்கள் அதிகாரிகளை உண்டாக்கிவிட்டுப் போயிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் வந்த திராவிட முன்னேற்றக் கழக

(பிற்பகல் 12-45)

ஆட்சிக் காலத்தில் அதிகாரிகள் வந்திருக்கிறார்கள். ஆனால் எங்களுடைய காலத்தில் வந்தவர்கள் குறைவாகத்தான் இருப்பார்கள். எனவே இந்த அரசுக்கு அதிகாரிகள் வேண்டியவர்கள், அவர்கள் செய்யும் தவறுகள் பின்னாலே போகுமென்று யாரும் எண்ண வேண்டாம். எங்கே தவறு நடந்தாலும், அதை சரியான முறையில் ஆதாரத்தோடு சொன்னால், நிச்சயமாக நடவடிக்கை எடுப்போமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இங்கே சொல்லுகிற நல்ல கருத்துக்களை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். இன்னும் ஒன்றைச் சொல்லுவேன். இன்றைக்கு தனி அதிகாரிகள் இருக்கிறார்கள். அரசாங்கம் டார்கெட்டை 'பிக்ஸ்' பண்ணிச் சொன்னவுடனே, அதைச் செய்ய முயற்சி எடுக்கிறார்கள். அரசாங்கம் ஏழைகளுக்கு உதவி





செய்ய வேண்டுமென்று சட்டங்களைப் போட்டு, சொன்னாலும், போர்டில் இருப்பவர்கள் 'பை-லா' வைத் திருத்த வேண்டுமென்று சொல்லி, தள்ளிக் கொண்டு போகிறார்கள். அரசாங்கம் சொல்கிற நல்ல காரியங்களைக்கூட ஏற்றுக்கொள்கிற சக்தியில்லாதவர்கள்தான் போர்டில் நிறைந்திருக்கிறார்கள். அதிகாரிகள் இருப்பது தவறு என்றாலும், அரசாங்கம் சொல்லும் காரியங்களைச் செய்வதற்கும், ஏழைகளுக்குச் செய்ய வேண்டுமென்ற உணர்வுகளைப் பிரதிபலிக்கவும் அதிகாரிகள் இருப்பது சரியாகத்தான் இருக்கிறது. அர்பன் வங்கிகளில் சாதாரண மக்களுக்குக் கடன் கொடுக்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்ன பிறகும், 6 மாதங்களுக்குப் பிறகுதான் 'பை-லா' வைத் திருத்தம் செய்தார்கள். அதற்கு முன்னரே நகைக் கடன் மாத்திரம் கொடுத்து வந்தார்கள். அவர்கள் பயந்துகொண்டு, கொடுத்தால் வருமோ, வாராதோ என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைக்கு அரசாங்கத்தின் எண்ணங்களை அதிகாரிகள் சரியாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள், அதிகாரிகளுடைய திறமைகளைப் பார்க்க வேண்டுமென்று சொன்னார்கள். திறமை இல்லாதவர்களை வேலைக்கு வைப்பதில்லை. சரியில்லை என்றால், அவர்களை மாற்றிவிட்டு, வேறு அதிகாரிகளைப் போடுகிறோம். கூட்டுறவுத் துறையைப் பொறுத்த வரையில், ஒரு தனித் தன்மை உண்டு. இந்தத் துறையிலே தவறு நடக்கிறது என்றால், இந்தத் துறை சரியாக வேலை செய்யவில்லை என்றால், அது தெரிந்துவிடும். ஏனென்றால் பொது மக்களோடு பின்னிப் பிணைந்த துறை இது. இதிலே எல்லோருக்கும் அக்கறை இருப்பதுபற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இந்த துறையிலே எல்லோருக்கும் அக்கறை அதிகமாக இருக்கும். பொருளாதாரத்தில் இந்தத் துறை மூலமாக விடிவுகாலம் வருமென்று நாம் நினைக்கிறோம். இந்தத் துறை சிறப்பாக இருக்க நல்ல கருத்துக்களைச் சொல்ல வேண்டும். தவறுகள் இப்படி நடக்கின்றன என்று சொல்லும்போது, நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம் என்று இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி அவர்கள் பேசும் போது, காரசாரமாகப் பேசினார்கள். நல்ல யோசனைகளைக் காரசாரமாகச் சொன்னார்கள். நல்லவைகளை ஏற்றுக்கொள்கிறோம். தனி அதிகாரிகளைக் கொண்டு வந்ததே காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களும், திருமதி ஜெயலட்சுமி அவர்களும்தான் இங்கே சண்டை போட்டவர்கள். ஆனால்

அந்தத் தனி அதிகாரிகளைக் கொண்டு வந்ததே காங்கிரஸ் கட்சிதான். அப்படிப்பட்டவர்கள் நியாயம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நீங்களேதான் அதை எங்கள் கையிலே கொடுத்திருக்கிறீர்கள். இப்போது நாங்கள் அதை ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறோம். காங்கிரஸ்காரர்கள்தான் இதை முதலிலே ஆரம்பித்து வைத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஊரிலே இருக்கும் சொசைட்டிகூட சரியாக இல்லை, போர்ட் இருந்தபோதே. ஏன் சொல்கிறேன் என்றால், போர்ட் இருந்தாலும் தவறு நடக்கும், அதிகாரிகள் இருந்தாலும் தவறு நடக்கும். தவறு நடக்கக்கூடாது என்ற மனோபாவம் இருந்தால்தான், தவறு நடக்காமல் இருக்கும். அதிகாரிகள் இருந்தால் தவறுகள் நடக்கும் என்று சொல்லும் வாதத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. போர்ட் இருந்த இடங்களிலும் தவறுகள் நடந்திருக்கின்றன. நடவடிக்கை எடுக்கிறோம். 'சூப்பர்சீட்' செய்கிறோம். தவறுகளைக் களைவது என்றால், ஆளுங் கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும், மாறுபட்ட கருத்து கிடையாது. தவறுகளைச் சுட்டிக் காட்டும் பொறுப்பை உறுப்பினர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். எனவே அப்படிச் சுட்டிக் காட்டும்போது, சரியான நேரத்தில், நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் நெசவாளர்கள் பிரச்சினையைச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். நெசவாளர்களைப்பற்றிச் சொல்லிய நேரத்தில், அவர்கள் வேலை வாய்ப்புப் பிரச்சினைகளையும் சொன்னார்கள். சட்டத்திலே எவ்வளவு சாதகம் செய்ய முடியுமோ அதைப் பார்த்துச் செய்ய முடியும் என்று அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தறிகளின் அடிப்படையிலேதான் காசுக் கடன் கொடுக்கிறோம். ஒரு தறிக்கு 2500 ரூபாய் என்று கொடுக்கிறோம். 100 தறிகள் என்றால் 2,50,000 ரூபாய். 10 தறிகள் ஓட்டுபவர், ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் கேட்டால், என்ன செய்வது? ஆர். பி. அய். 'நபார்ட்' விதிமுறைக்குட்பட்டு அதைச் செய்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று ரிபேட் பங்கிலி

(பிற்பகல் 12-50)

ருந்து லோனாகக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறோம். ஒருசில இடங்களில் அதனை நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள்.



தனியாக தங்களுக்கென்று வங்கி வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் சொன்னார். அப்படி வந்தாலும், அது ரிசர்வ் வங்கி மற்றும் நபார்ட்டின் கட்டுப்பாட்டின்கீழ் தான் இருக்கும். உதாரணத்திற்கு இன்டஸ்ட்ரிசுக்கு என்று தனியாக வங்கி ஒன்று ஆரம்பித்தார்கள். அதனை தனிப்பட்ட வங்கியாக ஏற்றுக்கொள்ளவில்லை. மத்திய வங்கியாகத்தான் ரிசர்வ் வங்கி அதனை ஏற்றுக்கொண்டிருக்கிறது. பொதுவாகவே நம்முடைய நாட்டில் யாரும் தனியாக வங்கி ஆரம்பித்து பணத்தைச் செலவு செய்ய முடியாது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசும்போது, விதிகளை வகுப்பதில் இன்னும் ஏன் காலதாமதம் ஆகிறது என்று கேட்டார். கூட்டுறவுத் துறை என்று சொல்லும்போது, அதைக் கேட்கின்றவர்களுக்கு அது ஒரே துறைதான் என்று தெரிய வரலாம். ஆனால் இன்றைக்கு இத்துறையிலே 12 ரெஜிஸ்ட்ரார்கள் இருக்கிறார்கள். ஹேண்ட்லூம்ஸ், ஆயில்ஸ் இப்படி. ஒவ்வொன்றுக்கும் தனித் தனி ரெஜிஸ்ட்ரார்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு துறையின் அலுவல் முறையும் வெவ்வேறு விதமாக இருக்கிறது. ஆக, ஒவ்வொரு துறையின் இயல்புக்கு ஏற்ப மாற்றம் செய்கிறார்கள். அப்படி மாற்றம் செய்து கொடுக்கப்பட்ட விதிகள் சட்டத் துறைக்கு அனுப்பப்பட்டு, அவர்கள்தான் அதனை இறுதியாகச் சரிபார்க்க வேண்டும். ஆகவே தான் இம்மாதிரி நிலைமையே தவிர, வேண்டுமென்றே நாங்கள் இப்படிச் செய்யவில்லை. இங்கே மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி பேசும்போது, ஆளும் கட்சிக்குச் சாதகமாக இவ்வாறு செய்யப்படுவதாகச் சொன்னார்கள். மகாத்மா காந்தியால் கூட செய்ய முடியாது என்று சொல்லும் அளவுக்கு எப்படி எல்லாம் முடியுமோ அப்படி எல்லாம் சிர் செய்து, ஓட்டைகளை எல்லாம் அடைத்து, மிகவும் நல்ல முறையில் ஒரு சட்டத்தை, முழுமையான ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறோம். அதற்காக விதிகளையும், சட்டங்களையும் நாங்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு சட்டம் வந்ததற்குப் பிறகு, அரசாங்கம் நினைத்தால் கூட, ஓராண்டு, ஈராண்டுக்குப் பிறகு கால நீட்டிப்பு போன்ற காரியங்களைச் செய்ய முடியாது. மேலும் உறுப்பினர்களாக இருப்பவர்கள்தான் இதிலே பொறுப்புக்கு வர முடியும். அப்படிப்பட்ட குறைகளற்ற ஒரு சுதந்திர அமைப்பாக இருக்கும் வகையில், விதிகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு சட்டம் கொண்டு வந்ததற்குப் பிறகு அதற்குக் காரணமாக இருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை எல்லா உறுப்பினர்களும் பாராட்டுவார்கள்.

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்] [1986 ஏப்ரல் 4

மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் பேசும்போது, ஊராட்சி ஒன்றியத் தேர்தல் ரிசல்டைக் கண்டு பயந்துதான் தேர்தலை நடத்தவில்லை என்று இங்கே சொன்னார்கள். எந்தக் காலத்திலும் எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தலைக் கண்டு பயந்தவர்கள் அல்ல. நாடாளு மன்றத தேர்தலின்போது நாங்கள் எல்லா இடங்களிலும் தோற்றோம். ஆனால் தொடர்ந்து வந்த சட்டமன்றத் தேர்தலின்போது மக்கள் எங்களைத் தான் பெருவாரியாகத் தேர்ந்தெடுத்தார்கள், ஏற்றுக்கொண்டார்கள். ஆக, தேர்தலைக்கண்டு பயப்படுகிறவர் அல்ல எங்கள் கட்சியின் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

'காமன் குட் பண்ட்' பற்றி இங்கே சொன்னார்கள். ஊனமுற்றவர்களுக்கு மற்றும் குடிநீர் சப்ளை வேண்டி உதவி செய்வது, பள்ளிக்கூடங்கள் கட்டுதல் போன்ற நல்ல காரியங்களுக்குத் தான் இதிலிருந்து செலவு செய்கிறார்களே தவிர, விளம்பரங்களுக்குச் செலவு செய்வதில்லை. மேலும் இப்போது விளம்பரம் மிகவும குறைந்திருக்கிறது. அதற்கென்று ஒரு 'டார்கெட்' இருக்கிறது. அதன்படி தான் விளம்பரம் செய்ய முடியும். விளம்பரம் செய்வதையும் இப்போது நாங்கள் சீர் செய்திருக்கிறோம். ஒவ்வொரு துறையும் விளம்பரத்திற்காக இவ்வளவு தான் செலவு செய்யலாம் என்று நிர்ணயித்திருக்கிறோம். அந்த அடிப்படையில்தான் செலவு செய்கிறார்கள். 'காமன் குட் பண்டி' லிருந்து இதற்காகச் செலவு செய்வதில்லை. இதில் எங்காவது தவறு நடந்திருப்பதாக எழுதிக் கொடுத்தால், நடவடிக்கை எடுக்கப்படும்.

அடுத்து, நெல்லை மாவட்டப் பிரச்சினைபற்றிச் சொன்னார்கள். பணம் வாங்கும்போது, கையெழுத்துப் போடாமல் யாரும் பணம் வாங்க முடியாது. அதுபற்றியும் எழுதிக் கொடுத்தால், அதுபற்றி சரி பார்ப்பதில், நடவடிக்கை எடுப்பதில் எங்களுக்கு எந்தவிதத் தயக்கமும் இல்லை. கூட்டுறவு சம்பந்தமாகப் படித்து வருகின்றவர்களுக்கு விவசாயச் சேவை மையங்கள் போன்ற அமைப்புகளில் புதிதாக ஏற்படுகின்ற பணியிடங்களில் வாய்ப்பு நல்கி, வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். இந்த அரசைப் பொறுத்த வரையில் எங்காவது தவறு நடந்திருந்து, அதனை மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களேயானால், உடனடியாக நடவடிக்கை எடுக்க எந்த நேரத்திலும் நாங்கள் பின்வாங்க மாட்டோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட



1986 ஏப்ரல் 4] [திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்]

(பிற்பகல் 12-55)

குற்றச்சாட்டுக்களை என்னிடம் தனியாகக் கொடுத்தால்கூட, நான் அத்தகைய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன். அப்படித் தெரிகிற ஒன்றிரண்டு வழக்குகளில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். யார் நல்ல கருத்துக்களைச் சொன்னாலும், நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயங்கியது கிடையாது என்பதை நான் இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சாக்கு விவகாரம் பற்றிச் சொன்னார்கள். அப்படிக் கொடுப்பதே இல்லை. டெண்டர் முறை வைத்திருக்கிறோம். அதைத் தவிர தனியாக 'நெகோசியேட்' செய்வது கிடையாது. ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்று சில இடங்களில் இருக்கலாம். அப்படி குறிப்பிட்ட குறைபாடுகளைச் சொன்னால், அப்படிப்பட்ட அதிகாரிகளை 'சஸ்பெண்ட்' செய்யக் கூட தயாராக இருக்கிறோம். ஆகவே சாக்குகள் டெண்டரில்தான் கொடுக்கப்படுகின்றன என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று உத்தரவே போட்டிருக்கிறோம். அதே போன்று, இரண்டு ரூபாய்க்கு, ஐந்து ரூபாய்க்கு என்று சரக்குகள் பற்றித் தனியாக 'நெகோசியேட்' செய்வதாகச் சொன்னார்கள். தனிப்பட்ட வியாபாரிகளுக்குக் கொடுப்பதாகச் சொன்னார்கள். அப்படிப்பட்ட தவறுகளைச் சுட்டிக்காட்டினால், அதைக் களையத் தயாராகவும் முனைப்போடும் இருக்கிறோம்.

ஆடிட்டர்கள் பற்றிச் சொன்னார்கள். ஆடிட்டர் ஆடிட் செய்யப் போகிறார் என்றாலே, அதிகாரத்தோடுதான் போக வேண்டும். சி. எஸ். ஆர். (ஆடிட்) வந்தால், அதிகாரிகள் பயப்படக்கூடிய நிலைதான் இருக்கிறது. அவர்களுக்கு அதிகாரம் குறைக்கப்பட்டுவிட்டது என்று திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் சொன்னார்கள். இன்னும் சொல்லப்போனால், முன்பு ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் வேலை செய்த சி. எஸ். ஆர். இப்போது ஆடிட்டுக்காகப் போனால், அவர்களே பார்த்து பயப்படக்கூடிய நிலையில்தான் ராஜ கம்பீரமாகத்தான் போகிறார். ஆகவே அவர்களுக்கு அதிகாரம் குறையவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆடிட்டில் இளநிலைப் பணியாளர்களுக்கு 'அட்ஹாக் ரூல்ஸ்' தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் மேல்

(முற்பகல் 10-30)

இரண்டு வகையான கருத்துக்களை உலக சுகாதார நிறுவனம் சொல்லியிருக்கிறது. ஆகவே, அதிகாரபூர்வமாக நாம் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. நம்முடைய நாட்டிலே சித்தா, ஆயுர்வேதம் போன்ற மருத்துவங்கள் இருக்கின்றனவே, அந்த எல்லைக்குள்ளே இது வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, சில பேர் குணம் அடைவதாகவும் சில பேர் இந்த முறையினால் குணம் அடையவில்லை என்றும் சொன்னார்கள். சிலர் சில வேளைகளில் மரணம் கூட அடைகிறார்கள். எல்லா முறையிலும் சில வேளைகளில் மரணம் ஏற்படுவதும், குணம் அடையாமல் இருப்பதும் தவிர்க்க முடியாததுதான். அக்குபஞ்சர் சிகிச்சை முறை ஏன் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதற்கான காரணங்களையும் இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இங்கே இருப்பவர்களுக்கு இந்த முறை பழக்கமில்லாத முறை, ஆகவே இது ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று நான் கருதுகிறேன். இப்பொழுது கூட ஆங்கில மருத்துவப்படிப்பு படித்தவர்கள் தமிழ் மருத்துவ முறையை வரவேற்பதில்லை. ஆகவே இவர்களுடைய கருத்துக்களை கேட்டுக்கொண்டிருப்பதை விடுத்து, அக்குபஞ்சர் சிகிச்சை முறையானது சீனா போன்ற பெரிய நாடுகளில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது என்கிற உண்மையை உணர்ந்து, டபிள்யூ.எச்.ஓ. என்ன காரணங்களைச் சொல்லியிருக்கிறதோ அதனை ஏற்று தமிழ் நாட்டிலே இதை தீவிரமாக நடைமுறைப்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தமிழக அரசைப் பொறுத்தவரையில், இதுபற்றிச் சொல்ல வேண்டுமென்றால், உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்வேன். இந்திய மருத்துவ முறைகளான சித்தா, யுனானி, ஆயுர்வேதா போன்ற மருத்துவத்தில் பணியாற்றுகின்ற மருத்துவர்களின் கருத்துக்களைக் கேட்டுக்கொண்டு இதுபற்றி நாங்கள் முடிவு செய்வது கிடையாது. நாம் என்ன கருதுகின்றோமோ அந்த அடிப்படையில், அந்தந்தத் துறைகளில் பணியாற்றும் சம்பந்தப்பட்ட துறையினர் என்ன சொல்கிறார்களோ அதாவது எத்தனை நோயாளிகள் இந்த முறையினால் குணம் அடைந்திருக்கிறார்கள் என்பது போன்றவற்றின் அடிப்படையில் நாம் இதனை முடிவு செய்கிறோம். 80 லட்சம் ரூபாயிலிருந்து இன்றைக்கு 3½ கோடி ரூபாய் ஒதுக்கும் அளவுக்கு இதிலே நாம் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். மற்ற மாநிலங்கள் இந்த





சிகிச்சை முறையை இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், இதுபற்றி சென்று பார்த்து வாருங்கள் என்று சொல்லி 2 பேரை அனுப்பியிருக்கிறோம். ஆனால் இந்த முறையை பெரிய அளவில் பின்பற்றி 'ரிஸ்க்' எடுக்கக் கூடாது.

Unless we quantify the cure, unless we know exactly where the pitfalls are and unless we are absolutely certain that there is no other sequellant, we cannot take a risk.

மேலும் இந்த முறையைப் பின்பற்றுவதன் காரணமாக, மற்ற நோய்கள் வராமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும் இருக்கிறது. அதுதான் இதிலுள்ள பிரச்சினை. ரொம்பவும் இந்த முறையின் மூலம் குணம் அடைய முடியும் என்றும் சொல்ல முடியாது. இதனைப் புறக்கணிக்கக் கூடாது என்ற அடிப்படையில்தான், இரண்டு பேரை அனுப்பியிருக்கிறோம். ஆனால் உள்ளபடியே நல்ல ரிசல்ட் இந்த முறையின்மூலம் கிடைக்கிறது என்று தெரிந்தால், குணம் அடைகிற நோயாளிகளின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து, புள்ளிவிவரத்தை அடிப்படையாக வைத்து, அதன் பிறகு இதனை நல்ல முறையில் நடைமுறைப்படுத்துவதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

## அரசு மருத்துவமனைகள்.

*138 வினா.—செல்வி ஆ. லீலாவதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—6—1985 அன்றுள்ளபடி, தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள் எத்தனை?

(இ) அவற்றில், எத்தனை மருத்துவமனைகளில், ஊடுகதிர்ப்படம் எடுக்கும் (X-Ray) உபகரணங்கள் உள்ளன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) 489.

(இ) 148.

செல்வி ஆ. லீலாவதி: இந்த எக்ஸ்ரே கருவியை மற்ற மருத்துவமனைகளிலும் விஸ்தரிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: 17 ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவமனைகள், மாவட்டங்களைப் பொறுத்தவரையில் இருக்கின்றன. இந்த 17-லும் எக்ஸ்ரே பிரிவுகள் இருக்கின்றன. 121 தாலுக்கா மருத்துவமனைகளில் 88

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்] [1986 ஏப்ரல் 4

நிலைப் பணியாளர்களுக்கும் சட்ட விதிகள் போடப்பட்டு தயாராக இருக்கின்றன. தணிக்கைத் துறையில் 2500 பேர் பணியாற்றுகிறார்கள். ஆகவே நிறைய நல்ல காரியங்கள் செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. இராதா அவர்கள் நல்ல கருத்துக்களைச் சொன்னார். இருக்கிற அதிகாரிகளின் திறமையை ஊக்குவிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னார். அப்படித்தான் நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். அதிகாரிகளுடைய 'ப்ராக்ரஸ்' பார்த்துத்தான் அவர்களை நியமிக்கிறோம். இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டுமென்றார்கள். அப்படி நல்ல காரியங்களை திறமையாகச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

உறுப்பினர் திரு. எல். ஜெயச்சந்திரன் அவர்கள் நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய மாவட்டத்தில் உள்ள பிரச்சினைகளைப்பற்றிச் சொன்னார்கள். அந்த 'சூப்பர் மார்க்கெட்' நலிந்து போயிருக்கிறது. அதற்குப் புத்துயிர் அளிக்க வேண்டுமென்பதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த நல்ல காரியங்களை மிகச் சிறப்பாகச் செய்வோம் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இளநிலை ஆய்வாளர்கள்பற்றி இங்கே சொன்னார்கள். அவர்கள் மீது அனுதாபத்துடன் நடந்து சட்டத்திற்குட்பட்டு காரியங்களைச் செய்வோம் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் பேசும்போது, விதிகளை வகுக்க என் தாமதம் என்று கேட்டார்கள். நான் முதலிலேயே சொன்னேன். உறுப்பினருடைய கருத்து நல்ல கருத்துத்தான். தேர்தலை நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். நல்ல முறையில் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும். தேர்தல்கள் விரைவில் நடத்தப்பட்டு கூட்டுறவுத் துறையில் பொதுமக்கள் பிரதிநிதிகள் விரைவில் பங்கேற்பார்கள் என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை இந்த அவை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், வணக்கம்.



1986 ஏப்ரல் 4]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1986) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1986) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 16-4-1986 புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-00)

இடங்களில் எக்ஸ்ரே பிரிவுகள் இருக்கின்றன. அதுபோல் நான்—தாலுக்கா மருத்துவமனைகள் 123-ல் 13 இடங்களில் இந்த வசதி இருக்கிறது. படிப்படியாக நோயாளிகள் வருவதை அடிப்படையாக வைத்தும், நிதி நிலைமையை அடிப்படையாக வைத்தும் உறுப்பினர் சொல்வதுபோல் பேஸ்ட் புரோகிராம் என்ற அடிப்படையில் இதனை நடைமுறைப்படுத்த அரசு ஏற்பாடு செய்யும்.

**செல்வி ஆ. லீலாவதி:** பல மருத்துவமனைகளில் எக்ஸ்ரே எக்யூப்மென்ட் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றது என்று சொல்கிறார்கள். அது உண்மைதானா? 'லேப் டெக்னிசியன்ஸ்' எண்ணிக்கை குறைவாக இருப்பதனால் இப்படி அவைகள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அப்படி என்றால், எத்தனை மருத்துவமனைகளில் இவ்வாறு எக்ஸ்ரே எக்யூப்மென்ட் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றது.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** எந்த ஒரு துறையாக இருந்தாலும், 100 இடங்களில் வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்துகிறோம் என்றால், அவைகளில் ஒன்றிரண்டு இடங்களில் இம்மாதிரி உபகரணங்கள் பழுதடைவது போன்ற காரணங்களால் பணிகள் தடைபடுவது மாதிரி நிலைமைகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாக ஆகிவிடுகிறது.

(முற்பகல் 10-35)

நம்முடைய துறையும் அவ்வப்போது ஆட்களை அனுப்பி கண்காணித்து வருகிறது. மாவட்டத் தலைமையிடங்களில் உள்ள அதிகாரிகளும் மாவட்டங்களில் உள்ள மருத்துவ மனைகளைக் கண்காணித்து அறிக்கை தர வேண்டும். இவர்களைக் கண்காணிக்க துறையில் இயக்குநர் இருக்கிறார். அவர் திடீர் சோதனைகள் நடத்துகிறார். அதுபோல, அமைச்சரும் சென்று பார்க்கிறார். இதில் லாப் டெக்னிசியனுக்கும் இதற்கும் சம்பந்தம் கிடையாது. லாபைப் பொறுத்தவரையில், யூரின், பிளட் போன்றவைகளைச் சோதனை செய்கிறார்கள். எக்ஸ்ரே-டெக்னிசியன்கள் என்பவர்கள் வேறு. அவர்கள் இல்லாவிட்டால் அந்த வேலையை டாக்டர்களும் கூட செய்வார்கள். பல இடங்களில் அவைகள் நன்றாக நடைபெறுகின்றன. கடந்த ஆண்டு இந்துஸ்தான் போட்டோ பிலிம் கிடைக்காமல் சில இடங்களில் எக்ஸ்ரே பிலிம் தட்டுப்பாடு இருந்தது. அதனால் கஷ்டம் ஏற்பட்டது. இந்த ஆண்டு அதுகூட சரியாகிவிட்டது. ஏதாவது ஒரு இடத்தில் இம்மாதிரி குறைகள் இருந்து அவை கவனத்திற்குக் கொண்டு வரப்படும்போது, உடனடியாக நடவடிக்கை எடுத்து வருகிறோம்.



**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, 1986-87லே ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்றவைகளை அரசு மருத்துவமனைகளாக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்ததா? அதை ஏற்று இந்த ஆண்டு எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களை மருத்துவமனைகளாக மாற்றம் செய்ய அரசு உத்தேசம் செய்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே இப்படியொரு திட்டம் போடப்பட்டு, அது இப்போது நிறைவேற்றப்படுகிறது. ஆரம்ப சுகாதார மருத்துவமனைகள் அவற்றின் லொக்கேஷன், விஸ்தரிப்பு நிலை போன்றவைகளைக் கருத்தில் கொண்டு, மேம்படுத்தப்பட வேண்டுமென்பது திட்டம். அதன் அடிப்படையில் தாலுக்கா மருத்துவமனை ரொம்ப தூரத்தில் இருந்தால், இருக்கிற 4, 5 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒன்றை மேம்படுத்த வேண்டுமென்பது திட்டம். எப்போதோ போடப்பட்ட இந்தத் திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்தான் செயல்படுகிறது. மூன்றாண்டுகளுக்கு முன்பு 15 இடங்களும், அடுத்த ஆண்டு 15 இடங்களும், சென்ற ஆண்டு 12 இடங்களும் என்று சொல்லி, அவைகள் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன. இந்த மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை, எக்ஸ்ரே டிபார்ட்மெண்ட், லாபரெட்டரி போன்றவைகள் வைக்கப்பட்டு வருகின்றன. இதுபோல் 42 இடங்களில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இன்னொரு திட்டத்தை இந்த ஆண்டு கொண்டு வருகிறோம். பல கிராம ஆஸ்பத்திரிகளை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்ற வேண்டுமென்று மத்திய அரசும், பிளானிங் கமிஷனும், மருத்துவத் துறை அமைச்சர்கள் மாநாடுகள் மூலமாக மத்திய நல்வாழ்வுத் துறையும் சொல்லி வருகின்றன.

The importance should be shifted. Presently, the existing Primary Health Centres are improved to the standard of Taluk Headquarters Hospitals. Instead of that, the importance should be shifted to going in for more P.H.Cs. இன்னும் ஆரம்ப சுகாதார நிலையங்களை அதிக எண்ணிக்கையில் கொண்டு வரவேண்டுமென்று சொல்லப்படுகிறது. கிராம மருத்துவ மனைகளையும் ஆரம்ப சுகாதார நிலையங்களாக ஆக்கி, பிறகு அவற்றை விஸ்தரிக்க வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. அகில இந்தியாவிலும் உள்ள நிதி நிலைமைக்கு ஏற்ப இவைகளைச் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கேற்றபடி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(ஈ) செயல் முறை பயிற்சி நிலையங்கள் :—

| | | |
|---|---|---|
| 1. | திருவில்லிபுத்தூர் (படிக்காசு வைத்தான் பட்டி) | .. இராமநாதபுரம் மாவட்டம் |
| 2. | நாஞ்சிக் கோட்டை | .. தஞ்சாவூர் மாவட்டம் |
| 3. | செங்கம் | .. வட ஆற்காடு மாவட்டம் |
| 4. | திருநெல்வேலி | .. திருநெல்வேலி மாவட்டம் |
| 5. | கோணம் | .. கன்னியாகுமரி மாவட்டம் |
| 6. | மணிகண்டம் | .. திருச்சி மாவட்டம் |

(இ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் நலத்திட்டத்தின் கீழ் வட ஆற்காடு மாவட்டத்தில் இளம்பட்டு புழு வளர்ப்பு பண்ணை அமைக்கவும் சேலம் மாவட்டத்தில் பட்டு முன்னோடி சேவை மையம் அமைக்கவும் அனுமதி அளிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செங்கல்பட்டு, மதுரை, வடஆற்காடு, பெரியார், புதுக்கோட்டை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் இளம்புழு வளர்ப்பு மையங்கள் அமைத்திடுவதற்கான கட்டுமானப்பணிகள் நடைபெற்றுவருகின்றன.

## இணைப்பு II.

(456 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

## L.A.Bill No. 30 of 1986

(As passed by the Assembly)

*A Bill further to amend the Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officer.) Act, 1976.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-seventh Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement*—(1) This Act may be called the Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Second Amendment Act, 1986.

(2) It shall come into force at once

2 *Amendment of section* 4, *President's Act* 25 *of* 1976—In the Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officer Act, *1976* (President's Act 25 of 1976), in section 4, in sub-section (1), for the words " nine years and ten months", the words "ten years and ten months" shall be substituted.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008.
14354?
D

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-1.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Velo Book Company, No. A, Annaji Rao Street, Erode 1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Culcutta 17.

---

©TAMIL NADU LEGISLATIVE COUNCIL SECRETARIAT—PUBLISHED UNDER RULES 196 AND 199 OF THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

## தவணைத்தாள்.

சே எண் : 143547 ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

2916

S.F. 259A-6—1,00,000—30-1-84.